D
V211,31'P01
P01.9.1.
223950

## உள்ளடக்கம்

### 1-9-2001


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii–vii |
| Governor and Council of Ministers | ix–xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii–xvi |
| பேரவை உறுப்பினர்கள் (அகரவரிசைப்படி) | xvii–xxvii |
| **1. வினாக்கள்–விடைகள்–** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1–24 |
| **2. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்**–தொடர்ச்சி | |
| ***கோரிக்கை எண் 15 — காவல் துறை*** | 25–204 |
| ***கோரிக்கை எண் 16 — தீயணைப்புப் பணிகள்*** | |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 25, 32, 38, 42–43, 44, 45, 46–47, 48, 49–50, 51, 52, 53, 54, 55, 58, 59–61, 62, 63 65–66, 67, 68, 74, 83–84, 86, 90–91, 100, 109, 110, 117, 147, 150–196 |

பக்கங்கள்

**2. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்**–தொடர்ச்சி

**கோரிக்கை எண் 15 — காவல் துறை**
**கோரிக்கை எண் 16 — தீயணைப்புப் பணிகள்**
தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. இ. புகழேந்தி | 27, 34, 38 – 44, 46 – 49, 53 – 60, 63 |
| திரு. ஆஸ்டின் | 28, 64 – 69, 75, 77 |
| திரு. லா. சந்தானம் | 78 – 79, 81 – 82, 85, 86 – 89 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 63, 91 – 103, 108, |
| திரு. எச். ராஜா | 47, 104 - 108, 109, 129, 130 |
| திரு. ஜி. பழனிசாமி | 41 – 42, 110 – 119 |
| * திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 28, 119 – 129, 130 |
| * திருமதி டி. யசோதா | 131 – 141 |
| திரு. ஐ. கணேசன் | 29, 35, 141 – 150 |

**3. அறிவிப்பு–**

உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல் 131

**4. பே[illegible]ப்பெற்ற ஏடுகள்** 205-206


தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223780
சென்னை-600 008



P01.9.1

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – டாக்டர் சி. ரங்கராஜன்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை, இலஞ்ச ஒழிப்பு, சிறுபான்மையினர் நலன் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

2. **நிதி மற்றும் சட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

   நிதி, திட்டமிடல், தேர்தல், சட்டமன்றம், சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், சட்டமியற்றல், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

3. **கல்வி அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

   கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

4. **மின் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

   மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

7. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

9. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

குடிசைத் தொழில்கள் உள்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர்-கிராமத் தொழில் வாரியம்.

10. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. தனபால்:**

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.



11. வருவாய்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம், கடவுச் சீட்டு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு.

12. பொதுப் பணித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு பாசனம் உள்பட பாசனம்.

13. செய்தி—விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, வனம், சுற்றுச் சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

14. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

15. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி இரா. சரோஜா:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

16. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு, அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

17. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

18. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

19. மீன் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:

மீன் வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு.

20. தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:

தொழிற்சாலைகள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.

21. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

22. வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:

வணிக வரிகள்.



23. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்பு திட்டமிடல், குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

24. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

25. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்.

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- Dr. C. RANGARAJAN

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| **1. Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police, Prevention of Corruption, Minorities Welfare and Information Technology. |
| **2. Minister for Finance and Law** | .. | **The Hon. Thiru C. Ponnaiyyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| **3. Minister for Education** | .. | **The Hon. Dr. M. Thambidurai:**<br>Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians overseas, Refugees and Evacuees. |
| **4. Minister for Electricity** | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Electricity, Non-conventional Energy Development. |
| **5. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:**<br>Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

7. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

8. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Anwer Rhazza:**

Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes, Census and Wakfs.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

10. **Minister for Co-operation, Food Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics.

11. **Minister for Revenue** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan, Passport, Prohibition and Excise, Molasses.



12. **Minister for Public Works** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Public Works, Highways, Irrigation including Minor Irrigation.

13. **Minister for Information and Publicity and Forests and Environment** .. **The Hon. Thiru S.S. Thirunavukkarasu:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Forests, Environment and Pollution Control.

14. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanandham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.

15. **Minister for Tourism** .. **The Hon. Tmt. R. Saroja:**

Tourism and Tourism Development Corporation.

16. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru V. Subramanian:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

18. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru S.P. Shanmuganathan:**

Handlooms and Textiles.

| | | |
|---|---|---|
| **19. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru K.P. Rajendra Prasad:** Fisheries and Animal Husbandry. |
| **20. Minister for Industries** | .. | **The Hon. Thiru R. Vaithilingam:** Industries, Iron and Steel Control, Mines and Minerals. |
| **21. Minister for Milk and Dairy Development** | .. | **The Hon. Thiru C. Shanmugavelu:** Milk and Dairy Development. |
| **22. Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru C.Ve. Shanmugam:** Commercial Taxes. |
| **23. Minister for Housing and Urban Development** | .. | **The Hon. Thiru A.K. Selvaraj:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority. |
| **24. Minister for Transport** | .. | **The Hon. Thiru Nainar Nagendran:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports. |
| **25. Minister for Backward Classes** | .. | **The Hon. Tmt. Valarmathi Jebaraj:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities. |



# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

## மாற்றுத் தலைவர்கள் #

*திரு. பி.ஆர். சுந்தரம்*

*திரு. அ. பாப்பா சுந்தரம்*

*திரு. ப. இராஜரெத்தினம்*

*திரு. சோ. பாலகிருஷ்ணன்*

*திருமதி டி. யசோதா*

*திரு. லா. சந்தானம்*

## முதன்மைச் செயலாளர்

*திரு. செ.சு. ஜானகிராமன்*

## செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

*# 20—8—2001 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட்., | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம்., | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல்., | .. | தலைமை நிருபர் |
| திரு: தி. உமாபதி, பி.ஏ., | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ., | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 8. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 9. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 10. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 11 | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 12. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன். திரு. | .. | திருச்செந்தூர் |
| 13. | அன்பழகன், திரு. ஆ.கு.சீ. | .. | பெரணமல்லூர் |
| 14. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 15. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 16. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 17. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 18. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி—2 |
| 19. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 20. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |

| | | | |
|---|---|---|---|
| 21. | ஆறுமுகம், திரு. கே. | - | செங்கல்பட்டு |
| 22. | ஆறுமுகம், திரு. த. | - | திருவொற்றியூர் |
| 23. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - | அண்ணா நகர் |
| 24. | ஆஸ்டின், திரு. | - | நாகர்கோவில் |
| 25. | இரவிராஜ், திரு. கோ. | - | திருத்தணி |
| 26. | இராசேந்திரன், திரு. சி. | - | திருவோணம் |
| 27. | இராசேந்திரன், திரு. சோ. | - | கோவில்பட்டி |
| 28. | இராமசாமி, திரு. கே.ஆர். | - | திருவாடானை |
| 29. | இராமசாமி, திரு பி.சி. | - | மொடக்குறிச்சி |
| 30. | இராமச்சந்திரன், திரு. எஸ். | - | கலசப்பாக்கம் |
| 31. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | - | கம்பம் |
| 32. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | - | சாத்தூர் |
| 33. | இராமு, திரு. ந. | - | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 34. | இராம் பிரபு, திரு. இரா. | - | பரமக்குடி (செ.வ.) |
| 35. | இராஜசேகர், திரு. மா. | - | ராஜபாளையம் (செ.வ.) |
| 36. | இராஜரெத்தினம், திரு. ப. | - | பெரம்பலூர் (செ.வ.) |
| 37. | இராஜா, திரு. டி.கே. | - | திருப்பத்தூர் |
| 38. | இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. | - | பத்மநாபபுரம் |
| 39. | இராஜேந்திரன், திரு. பி.ஜி. | - | ஆலங்குளம் |
| 40. | இலட்சுமணன், திரு. கே.என். | - | மயிலாப்பூர் |
| 41. | இளவழகன், திரு. ப. | - | அரியலூர் |
| 42. | இளையகண்ணு, திரு. கா.தி. | - | ஏற்காடு (ஆ.வா.) |
| 43. | இன்பத் தமிழன், திரு. இரா.தா. | - | ஸ்ரீவில்லிபுத்தூர் |



| | | | |
|---|---|---|---|
| 44. | ஈஸ்வரன், திரு. ரா. | - | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 45. | உசேன், திரு. எஸ்.ஏ.எம். | - | திருவல்லிக்கேணி |
| 46. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | - | தஞ்சாவூர் |
| 47. | உமாதேவன், திரு. கே.கே. | - | திருப்பத்தூர் |
| 48. | உலகரட்சகன், திரு. பி.எஸ். | - | செய்யாறு |
| 49. | ஏழுமலை, திரு. வெ. | - | செஞ்சி |
| 50. | கணபதி, திரு. ந. | - | வானூர் (செ.வ.) |
| 51. | கணேசன், திரு. ஐ. | - | எடப்பாடி |
| 52. | கணேசன், திரு. ஆர்.டி. | - | தேனி |
| 53. | கண்ணன், திரு. ஏ.எஸ். | - | பொன்னேரி (செ.வ.) |
| 54. | கந்தசாமி, திரு. க.ரா. | - | சத்தியமங்கலம் |
| 55. | கந்தசாமி, திரு. கா. | - | குன்னூர் (செ.வ.) |
| 56. | கருணாகரன், திரு. கே.சி. | - | சிங்காநல்லூர் |
| 57. | கருணாநிதி, திரு. மு. | - | சேப்பாக்கம் |
| 58. | கருப்பசாமி, திரு. சொ. | - | சங்கரநயினார்கோவில் (செ.வ) |
| 59. | கருப்பணன், திரு. கே.சி. | - | பவானி |
| 60. | கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. | - | குளத்தூர் (செ.வ.) |
| 61. | கலாவதி, திருமதி கு. | - | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 62. | கனகதாரா, செல்வி. சி. | - | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 63. | கனிதா சம்பத், திருமதி எஸ். | - | திருப்போரூர் (செ.வ.) |
| 64. | காசாம்பு பூமாலை, திருமதி பூ. | - | சங்கராபுரம் |
| 65. | காமராஜ், திரு. மே.ப. | - | தாரமங்கலம் |
| 66. | கார்த்தி, திரு. மு. | - | சேலம்—2 |

67. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
68. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
69. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
70. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
71. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ.- ஆண்டிமடம்
72. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
73. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
74. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
75. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
76. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
77. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
78. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
79. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
80. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
81. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
82. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
83. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
84. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
85. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
86. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
87. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
88. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
89. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
90. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)



91. சாமி, திரு. ஆர். - மேலூர்
92. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
93. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
94. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
95. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
96. சிவசாமி, திரு. செ. - திருப்பூர்
97. சிவசுப்பிரமணியன், திரு. டி.என் - கரூர்
98. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
99. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
100. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
101. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
102. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
103. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
104. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
105. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
106. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
107. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
108. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
109. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
110. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
111. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
112. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
113. செல்வராஜ், திரு. ஆ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
114. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்

115. செல்வி முருகேசன், திருமதி . - காங்கேயம்
116. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
117. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
118. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
119. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
120. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
121. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
122. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. - ஆண்டிப்பட்டி
123. தமிழ்மொழி ராஜதத்தன் திருமதி ஆர். - மேல்மலையனூர்
124. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
125. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
126. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
127. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
128. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
129. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
130. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
131. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
132. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ்.. - காஞ்சிபுரம்
133. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
134. துரைமுருகன், திரு. - காட்பாடி
135. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
136. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
137. நடராஜன், திரு. அ. - குத்தாலம்



138. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி
139. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
140. நடராஜன், திரு. வது. - இளையான்குடி
141. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
142. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
143. நளினி மனோகரன், திருமதி - போளூர்
144. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
145. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
146. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
147. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
148. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
149. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி—I
150. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
151. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
152. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
153. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
154. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
155. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
156. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
157. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
158. பாப்பா சுந்தரம், திரு. அ. - குளித்தலை
159. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
160. பாரிமோகன், திரு. கி. - தர்மபுரி
161. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி

162. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர் .. தொண்டாமுத்தூர்

163. பாலசுப்பிரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்

164. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்

165. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி

166. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி

167. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

168. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்

169. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

170. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திக்குளம்

171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

172. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)

173. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு

174. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)

175. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)

176. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)

177. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு

178. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்

179. மணி, திரு. டி. .. விளவங்கோடு

180. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்

181. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்

182. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை

183. மல்லிகா, திருமதி சி. .. முசிறி

184. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி



185. மில்லர், திரு. அ. .. கூடலூர்

186. முரளிதரன், திரு. கே.வி. .. தளி

187. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)

188. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்

189. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்

190. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

191. மோகன், திரு. ப. .. சின்னசேலம்

192. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

193. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

194. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

195. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிச்செட்டிப்பாளையம்

196. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்

197. ராமச்சந்திரன், திரு. கே. .. ஆரணி

198. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்

199. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்

200. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி

201. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி

202. ராஜா, திரு. எச். .. காரைக்குடி

203. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்

204. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்

205. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்

206. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

207. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

208. ஷியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி
209. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்
210. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு
211. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
212. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்
213. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
214. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்
215. விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்கா நகர்
216. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை
217. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி
218. வீரபாண்டியன், திரு. ஜெக. .. மயிலாடுதுறை
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
220. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்—I
221. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
222. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
223. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
224. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி
225. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
226. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
227. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்
228. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.)
229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
230. ஜெயராமன், திரு. வி. .. பொள்ளாச்சி



231. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
232. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி
233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
234. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)
235. (வெற்றிடம்) .. சைதாப்பேட்டை

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 16, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 செப்டம்பர் 1, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்

எனநான்கே ஏமம் படைக்கு."

வீரம், மானம், சிறந்த வழியில் நடக்கும் நடக்கை, தலைவரால் நம்பித் தெளியப்படுதல் ஆகிய நான்கு பண்புகளும் காவல் படைக்குச் சிறந்தவையாகும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, திரு. இரா.தா. இன்பத் தமிழன் மற்றும் திரு. செ.மா. வேலுசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**30–**

### நியாயவிலைக் கடைகள்

***1904–திரு. இரா.தா. இன்பத் தமிழன்:**
**திரு. செ.ம. வேலுசாமி:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

மண்ணெண்ணெய் அளவு சரியாகவும், அரிசி தரம் வாய்ந்ததாகவும் நியாய விலைக் கடைகளில் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மண்ணெண்ணெய் சரியான அளவில் வழங்கவும், நியாய விலைக் கடைகளுக்கு தரமுள்ள அரிசியை வழங்கவும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டாள் திருநாச்சியார் அவதரித்த பூமி திருவில்லிப்புத்தூரில் என்னை மக்களுக்கு அடையாளம் காட்டி, எதிரிகளை வீழ்த்துவதற்கு கழகத் தொண்டனாகிய என்னை இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றத்தில் அமர வைத்த எங்கள் அன்னை மாண்புமிகு தமிழக நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி வணக்கங்களை திருப்பாதத்தில் சமர்ப்பித்து, என்னைத் தேர்ந்தெடுத்த திருவில்லிப்புத்தூர் வாக்காளப் பெருமக்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் அம்மா அவர்கள், பொது விநியோக முறை சிறப்பாக நடைபெற எடுத்த நடவடிக்கைக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, கூட்டுறவுத் துறையில் தவறு செய்தவர்களின் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலும் மற்ற அமைப்புகளிலேயும் நடைபெற்ற தவறுகளுக்கு நடவடிக்கை எடுக்கத் தீவிர முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.மா. வேலுசாமி.

**திரு. செ.மா. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, ஆன்றோர்கள் இருந்த அவையிலே அமர வைத்து அழகு பார்க்கும் அற்புதத்தாய், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய பொற்பாத மலர்களை வணங்கி





உரையாற்றுகின்றேன். வாக்களித்த பல்லடம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளியவர்கள், வாழ்க்கையில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களின் வாழ்வு மலர அத்தியாவசியப் பொருளான அரிசியை, 100 நாட்களுக்குள் நல்ல அரிசியை போதுமான அளவு ரேசன் கடைகளில் விநியோகம் செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் ரேசன் கடைகளில் கொடுக்காமல் கைவிடப்பட்ட கோதுமை, ரவை, மைதா போன்றவைகளை மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் விநியோகிக்கப் பரிசீலிக்கப்படுமா என்பதையும், அதேபோன்று, அதிகமான எண்ணிக்கையுள்ள குடும்ப அட்டைகள் கொண்ட கடைகளைப் பிரித்து மகளிர் சுயநிதிக் குழு மூலம் நடத்துவதற்கு பரிசீலிக்குமா என்பதையும் தூரமாக உள்ள கிராம மக்கள் பயன்பெறும் வகையிலே பகுதி நேர ரேசன் கடைகளை இன்னும் அதிகப்படுத்த பரிசீலிக்குமா என்பதையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களை, தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேரக் கடைகளைக் கூடுதலாக அமைப்பது குறித்து அறிவிக்கப்பட்ட அரசினுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்கிற கோரிக்கைகள் வருமானால் அதை இந்த அரசு பரிசீலிக்கும். மகளிருக்கு அதிகப்படியான நியாய விலைக் கடைகளை நடத்துகின்ற உரிமையை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு கேள்வி என்ன சொன்னீர்கள்?

**திரு. செ.மா. வேலுசாமி:** மகளிருக்கு சுயநிதி...

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** நிறுத்தப்பட்ட கோதுமைப் பொருட்களை ரேசன் கடைகளிலே வழங்க வேண்டும் என்கின்ற அந்தக் கோரிக்கையிலேயும் ரவை, மைதா போன்றவற்றை கடந்த மாதத்தி லேயிருந்து 5,000 டன்னை மத்திய அரசுத் தொகுப்பிலேயிருந்து வாங்கி ரேசன் கடைகளில் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு மன்றத்திற்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் அளவினைச் சரியாகக் கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். யார் ஆட்சியிலே இருந்தாலும் சரி, கீழ்மட்டத்திலே இந்த ரேசன் கடைகளிலே அளவு குறைவாகக் கொடுப்பதென்பது, தடுக்க முடியாத நிலைதான் இன்றைக்கும் இருந்துகொண்டு வருகிறது. எனவே, அதனைத் தடுக்கும் பொருட்டு, மண்ணெண்ணெயை—இப்போது பாமாயில் எல்லாம் கடைகளிலே வழங்கப்படுவது போல—ஒரு plastic pouch—ல் போட்டு, 5 லிட்டரோ, 10 லிட்டரோ அந்த pouch மூலமாகவும், அதைப்போல, அரிசியினை கடைகளிலே பொன்னி அரிசியை 20 கிலோ, 25 கிலோ pocket போட்டு துணியால் செய்த பை போட்டு, சீல் போட்டு வழங்குவதுபோல, ரேசன் கடைகள் மூலமாக அரிசியை துணிப் பையிலும், மண்ணெண்ணெய், அந்த அளவு குறையாமல் plastic pouch—லேயும் போட்டு வழங்கினால் இதைத் தடுக்க முடியும் என்று கருதுகிறேன். இந்த முறையை ரேசன் கடைகளிலே கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது உணவு மானியத்திற்காக 1500 கோடியிலிருந்து 1600 கோடி வரை செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அதனாலே, இந்த யோசனைகள் தேவையான நேரத்திலே பரிசீலிக்கப்படும் என்பதனையும், அதே நேரத்திலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நியாய விலைக் கடைகளிலே கொடுக்கப்படுகின்ற அரிசியும், மண்ணெண்ணெயும் சரியான தரத்திலேயும், சரியான எடையிலேயும், சாதாரண மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்று தக்க உத்தரவுகள் வழங்கி, இப்போது முறையாக அதைச் செயல் படுத்துவதற்குத் தீவிரப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசு சார்பிலே மண்ணெண்ணெய் கிராமப் புறங்களிலே இருக்கின்றவர்களுக்கு மூன்று லிட்டர் அளவும், அதுபோல, அரிசி 20 கிலோ என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மண்ணெண்ணெய் மூன்று லிட்டர் அளவுக்கு வழங்கப்படுகிறது. ஆனால், அரிசியைப்



பொறுத்தளவிலே பல்வேறு கிராமங்களிலே ஒரு சிலர் அதை வாங்குவதில்லை என்கிற எண்ணத்தோடு 80 சதவிகிதம்தான் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அரிசி வழங்கப்படுகிறது. அரிசி ஏற்கெனவே நம்மிடத்திலே நிறைய கையிருப்பு இருக்கிறது என்று அரசு தெரிவித்திருக்கிறது. வறட்சியின் காரணமாக பல்வேறு கிராமங்களிலும், அதிலும் அமைச்சர் சொன்னதுபோல, நல்ல தரமான அரிசி வழங்குவதாக எல்லா இடங்களிலும் சொல்கிறார்கள். தரமான அரிசி என்கிற காரணத்தினால் எல்லோரும் இப்போது கூட்டுறவு விற்பனை கடைகளிலேதான் வாங்குகின்ற நிலைமையிருக்கிறது. எனவே, இந்த 20 கிலோ அரிசி என்பதை முழுமையாக எல்லா இடங்களுக்கும் வழங்குவதற்கு அரசு முன் வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி, புரட்சித் தலைவியினுடைய தலைமையிலே அமைந்ததற்குப் பின்னாலே தீவிர முயற்சிகளை மேற்கொண்டு தரமான அரிசியை மட்டுமே ரேசன் கடைகளிலே வழங்குகிற அந்தச் சூழ்நிலை ஏற்பட்டதற்குப் பின்னாலே, இன்றைக்கு அந்த அரிசியினுடைய offtake என்று சொல்லக்கூடிய, பொது விநியோக கடைகளுக்கு வழங்குகின்ற அந்த அரிசியினுடைய அளவு படிப்படியாக உயர்ந்து மே மாதத்திலே ஒரு இலட்சத்து 68 ஆயிரம் டன் வாங்கப்பட்ட off take—னுடைய நிலை உயர்ந்து, ஆகஸ்ட் மாதத்திலே ஒரு இலட்சத்து 85 ஆயிரம் டன்னாக, ஏறக்குறைய 20 ஆயிரம் டன் கூடுதலாக offtake தமிழகத்திலே உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், தரமான அரிசி வழங்குவதினாலேதான், அந்த அரிசியை வாங்குகின்ற மக்கள் எண்ணிக்கையும் கூடி, இந்த offtake—ம் கூடியிருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கிறேன். அதேநேரத்தில் முழுமையான offtake கொடுக்க வேண்டுமென்கிற மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைபடி, 100 சதவிகிதம் offtake கொடுக்கின்ற அந்த உத்தரவு ஏற்கெனவே அமலில் இருக்கிறது. அப்படி எங்கேயாவது தவறு இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மூலமாக மண்ணெண்ணெய் சரியான அளவிற்கு கொடுக்க வேண்டுமென்ற காரணத்திற்காக, பல்வேறு இடங்களில் bunk—

கள் தொடங்கப்பட்டிருந்தன. தமிழகத்திலே எத்தனை bunk-கள் இதுவரை நடந்து கொண்டிருக்கின்றன? அதை கிராமப் புறங்களிலே கூட்டுறவுத் துறை மூலம் விரிவுபடுத்த அரசு திட்டம் வகுத்திருக்கிறதா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெயினுடைய அளவு சரியாக வழங்க வேண்டும் என்பதற்காக 100 சதவிகிதம், சரியாக போய்ச்சேர வேண்டும் என்பதற்காக bunk-களை உருவாக்க வேண்டுமென்று உருவாக்கி, இதுவரை 269 bunk-கள் தமிழ்நாட்டிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதனையும், 7 bunk-கள் இன்னும் ஒரு மாத காலத்திலே தொடங்க தயாரான நிலையிலே உள்ளன என்பதனையும், மேலும் Part-II Scheme-லே இந்த வருடம்கூட கூடுதலாக bunk-கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி.

*முற்பகல் 10–10*

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தரமான அரிசி ரேசன் கடைகளில் வழங்குவதை நாம் அறிவோம். நாட்டு மக்களும் நன்றாக அறிவார்கள். என்னுடைய சங்கரன்கோவில் தொகுதியிலே மேலநல்லூர் ஒன்றியத்தில் நடுவுகுறிச்சி கிராமத்திலுள்ள ரேசன் கடையில் கடந்த ஆட்சியில் வழங்கப்பட்ட அந்த புழுத்துப்போன அரிசி, 15 குவிண்டால், 20 குவிண்டால் என்று ஒவ்வொரு ரேசன் கடைகளிலும் இருப்பதை நாங்கள் நேரிடையாகப் பார்வையிட்டோம். பொறுப்பேற்ற நம்முடைய அரசு, அந்த அரிசியை மாற்றிக் கொடுக்கவேண்டும். அங்குள்ள ரேசன் கடைகளில் வாங்கிச் செல்கின்ற அந்த மக்கள் எல்லாம் அந்த ஆட்சியில் வழங்கப்பட்ட புழுத்துப்போன அரிசிகளையெல்லாம் முன்னாள் முதலமைச்சருக்கு அனுப்பச் சொல்லுங்கள் என்று அந்த மக்கள் எல்லாம் என்னிடத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது. மாற்றிக் கொடுக்கப்படுமா என்று கேளுங்கள்.



**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் கொடுத்த கோரிக்கையை நான் சொல்கிறேன். இருந்தாலும் அந்த அரிசிகளெல்லாம் மாற்றப்படுமா, மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு வழங்கிய தரமில்லாத அந்த அரிசியை Non-issuable அரிசியை எதுவாக இருந்தாலும் பார்த்துத்தான் எடுத்துக் கொண்டு போக வேண்டுமென்று அதிகாரிகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அப்படி தரமில்லாத அரிசி இருக்கும் என்று சொன்னால் அவற்றையெல்லாம் தனியாக அடுக்கி வைக்க வேண்டுமென்று அரசு தனியாக உத்தரவு போட்டு அப்படிப்பட்ட அரிசி தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. தற்போது தரமுள்ள அரிசியே வழங்கப்படுகிறது என்பதையும் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் வழங்கப்படுகின்ற பொருள்களின் தரங்களையும், எடை அளவுகளையும் சரி பார்த்து பரிசோதிப்பதற்கு மக்கள் பிரதிநிதிகளான எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி உண்டா? ஆம் எனில், நுகர்பொருள் வாணிபக் கிட்டங்கிகளில் பரிசோதனை நடத்துவதற்கு உரிமை உண்டா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுப் பொருள்களைப் பாதுகாத்து வைத்திருக்கிற அந்த கிட்டங்கிகளிலே சட்டமன்ற உறுப்பினர்கூட அனுமதியில்லாமல் நுழையக் கூடாது என்பதுதான் விதி என்பதை நான் இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊசி முனையிலே ஒட்டகம் நுழைந்தாலும், அளவிலே குறைவை ஏற்படுத்துபவர்கள் சொர்க்கத்திற்கு போகமுடியாது என்பது ஆன்றோர் வாக்கு. இப்போது எல்லா நியாய விலைக் கடைகளிலும் அளவு குறைத்துதான் கொடுக்கிறார்கள் என்பது யாரும் மறுக்க

முடியாத உண்மை. இதற்குக் காரணம், கிட்டங்கிகளில் இருந்து மூட்டைகளை அனுப்பும்போது ஒவ்வொரு மூட்டையிலும் ஐந்து கிலோ, ஏழு கிலோ அரிசியைக் குறைத்துத்தான் அனுப்புகிறார்கள் என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. கடை ஊழியர்களிடத்திலே கேட்டால், நாங்கள் குறைப்பது உண்மை. காரணம், ஏழு கிலோ அரிசிக்கு பணம் கட்டுவதற்கு நாங்கள் எங்கே போவது? எங்களுக்கு குறைத்து அனுப்புகின்ற இந்த நிலையை நாங்கள் நுகர்வோருக்கு மாற்றி அந்தக் குறையை அவர்களிடத்திலேயிருந்து சரிபடுத்துகிறோம். எனவே, வேறு வழியில்லை என்று சொல்கிறார்கள். கிட்டங்கிகளிலிருந்து செல்கின்ற அரிசி மூட்டைகளை சரியாக அனுப்ப, அளவோடு அனுப்ப, ஆவன செய்ய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிற இந்தக் கோரிக்கை கடந்த நூறு நாட்களுக்கு முன்னால் அதிக அளவில் இருந்தது என்பது உண்மை. அந்த நிலையைக் குறைக்க புரட்சித் தலைவி அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு அப்படிப்பட்ட நிலையில்லாமல் சரியான அளவிலே ரேசன் கடைகளுக்கு மூட்டைகள் போவதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தவறு செய்பவர்களை கண்டிக்கிற வகையில் ஏறத்தாழ 1587 நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமானால், இந்த ஆட்சி அமைந்ததற்குப் பிறகு, 25 பேர்கள் மீது கள்ளக் கடத்தல் என்ற அளவிலே தடுப்புக் காவல் சட்டத்தில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உங்கள் மூலம் மேலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குள், சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லக்கூடாது என்ற விதி இருப்பதாகச் சொன்னார்கள். அந்த விதி எப்போது பிறப்பிக்கப்பட்டது? சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லக்கூடாது என்ற விதி அதிலே இருக்கிறதா? அந்த விதி எந்த ஆண்டு எப்போது முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய பதிலிலேயே தெளிவாகக் குறிப்பிட்டேன். உணவுப் பொருட்களை பாதுகாக்கிற அந்த கிட்டங்கிகளுக்குள்ளே செல்வதற்கு அனுமதி பெற்றுத்தான் யாரும் செல்ல வேண்டும், சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும்கூட. மற்றவர்கள் போகக்கூடாது. that is prohibited area என்று பெயர். சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், அவசியம் ஏற்பட்டு, போக வேண்டுமென்று சொன்னாலும்கூட, தக்க அதிகாரிகளிடத்திலே தக்க அனுமதிகளைப் பெற்று, தக்க அதிகாரிகளுடைய அனுமதியோடுதான் உள்ளே போக வேண்டுமென்பது விதி என்பதனை ஏற்கெனவே சுட்டிக் காட்டியிருக்கிறேன் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தங்க. தமிழ்ச்செல்வன்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு புழுத்த அரிசியை நீக்கிவிட்டு நல்ல அரிசியை இன்று மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதேநேரத்திலே, பாமர மக்கள், பாட்டாளி மக்கள், உழைப்பாளிகள் வாங்கி தங்களது பசியைப் போக்கக்கூடிய ரேசன் அரிசியை கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிலே இரயில் மூலம் கடத்தி, கொள்ளை புரிந்தார்கள். அந்த வழக்கினுடைய தன்மை என்ன? அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் இரயிலிலே கடத்தப்பட்ட அந்த அரிசி கடத்தல் வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு மேலேயும் அதிலே நடந்திருக்கிற உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சி.பி.சி.ஐ.டி., enquiry–க்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதிலே விரைவிலே முழு உண்மைகள் வெளிவரும் என்பதனை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதியிலே இருக்கிற மக்கள் பல நேரங்களிலே ரேசன் கடைகளிலே சரியான முறையிலே அரிசி விநியோகிக்கப்படவில்லை, மற்ற பொருட்களும் விநியோகிக்கப்படவில்லை என்று புகார்கள் கூறுகிறார்கள். அந்த நேரத்திலே அந்தக் கடைகளிலே போய் பார்க்க வேண்டிய பொறுப்பும் சட்டமன்ற உறுப்பினருக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தக் கடைகளுக்குப் போய் அவற்றைப் பரிசோதனைப் பண்ணுவதற்கான உரிமம் வழங்கக்கூடிய முறையிலே, தேவைப்பட்டால் சட்டத்திலேகூட திருத்தங்கள் கொண்டுவந்து, அந்த உரிமம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நியாய விலைக் கடைகளினுடைய பொருட்களைத் தரமாக வழங்குவது குறித்து மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் இதற்கு தக்க ஒரு ஆலோசனைக் குழுவை, அங்கே இருக்கிற பொதுமக்கள் பங்களிப்பு உட்பட, அவர்களோடு அமைக்க வேண்டும் என்கின்ற எண்ணத்திலே ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். அதை இந்த அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊழலின் ஊற்றுக்கண்ணாகவும், கள்ள மார்க்கெட்டுக்குப் பெயர்போன இடமாகவும் பொது விநியோகத் துறை மாறியிருக்கிறது. நீண்டகாலமாக நீடித்துக்கொண்டிருக்கிற இந்த விஷயத்திலே அளவு குறைவதற்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்டதுபோல் Civil Supplies Corporation–லேயிருந்து ரேசன் கடைகளுக்கு விநியோகிக்கப்படுகிற பொருட்களின் அளவு குறைத்து அனுப்பப்படுமானால், அதன்மீது உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

இரண்டாவதாக, இந்த மண்ணெண்ணெய் மாத்திரமல்ல, சர்க்கரை போன்று இருக்கக்கூடிய அத்தியாவசியப் பொருட்கள் எல்லாமே அளவு குறைத்து கொடுக்கப்படுகிறது. இவற்றைக் கண்காணிப்பதற்காக மக்கள் கண்காணிப்புக் குழுக்களை ஒவ்வொரு பகுதியிலும் அமைப்பதற்கு அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, நான் இதற்குச் சரியான பதிலைச் சொல்லி விட்டேன். மீண்டும் மீண்டும் சொல்கிறேன். புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நிச்சயமாக தரமான அரிசியையும், சரியான எடையிலேயும் விநியோகம் செய்வதிலே அதிக அக்கறை கொண்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டியில் 36 வார்டுகள் இருக்கின்றன. கடந்த ஆட்சியிலே இரண்டே இரண்டு மண்ணெண்ணெய் bunk–கள் தந்திருக்கிறார்கள். ஊட்டி நகரத்தில் அனைத்து மக்களும் பழையபடி மண்ணெண்ணெயை அந்தந்த நியாய விலைக் கடைகளிலேயே கொடுக்கவேண்டும் என்று கோருகிறார்கள். காரணம் என்னவென்றால், அவர்கள் அந்த மண்ணெண்ணெயை Auto rickshaw–களிலே 6 கிலோ மீட்டர் அளவிற்கு எடுத்துக்கொண்டு போகும்போது 30 ரூபாய், 40 ரூபாய் அதிக அளவிலே செலவு செய்யப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே, முன்பு இருந்தபடி அந்தந்த நியாய விலைக் கடைகளிலேயே மண்ணெண்ணெய் வழங்கப்படவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுவதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த முறையிலேயே பழையபடி நியாய விலைக் கடைகளிலேயே மண்ணெண்ணெய் மீண்டும் வழங்க உத்தரவிடுவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

*முற்பகல் 10—20*

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய கிட்டங்கிகளில் பொருள்களைப் பார்ப்பதற்கான அனுமதியில்லை என்ற விதி இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதிலுரையிலே குறிப்பிட்டார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் தகவல் உரிமை பெறும் சட்டத்தையே இங்கே அவையிலே

நிறைவேற்றியிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல விதி இருக்கிறதா? எப்போது அந்த விதி பிறப்பிக்கப்பட்டது எந்தத் தேதி என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Warehousing Corporation என்கிற ஒரு அமைப்பு உருவாக்குகிற காலத்திலேயே அது prohibited area, பாதுகாக்கப்பட வேண்டிய ஏரியா என்று தெளிவாக விதிகள் இருக்கின்றன. அங்கே அனுமதியின்றி யாரும் போகமுடியாது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் போவதற்கு அனுமதியில்லை என்பதனைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ஜெயராமன்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களினுடைய ஜீவாதாரமாக இருப்பது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள். கடந்த 5 ஆண்டுகாலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளினுடைய தலைவர்களாக இருந்தவர்கள் பல்வேறு முறைகேடுகளைச் செய்து பினாமிகள் பெயரில் இலட்சக்கணக்கான ரூபாயைக் கடனாகப் பெற்று இருக்கிறார்கள். தற்போது புதிதாய் அரசுப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு அந்த முறைகேடுகளைக் களைய வேண்டும் என்பதற்காகத் தனி அதிகாரிகளை நியமித்திருக்கிறது. அப்படி தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டதற்கு பிறகு, இன்றுவரையிலே 100% Verification என்று யார் யாரெல்லாம் பினாமி பெயரிலே எந்தெந்த வங்கிகளினுடைய தலைவர்கள் கடன் வாங்கியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயராமன், கேள்வி மண்ணெண்ணெய் மற்றும் அரிசி பற்றியது.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி சம்பந்தமானதுதான். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே அப்போது 5 ஆண்டுகாலம் தலைவர்களாக இருந்தவர்கள் யார் யார் பினாமி பெயரிலே இலட்சக் கணக்கான ரூபாய்களைக் கடனாகப் பெற்றிருக்கிறார்கள் என்பதற்கான முழுமையான 100% verification-ஐ நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் அரசு உடனடியாக மேற்கொள்ளுமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள நான் விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தக் கேள்விக்கு ஏற்கெனவே நான் பதில் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலே இந்த அரசு அமைந்ததற்குப் பின்னாலே அப்படிப்பட்ட தவறுகளை யார் செய்தாலும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கின்ற அடிப்படையிலே அதற்கான பணிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. 100% verification என்று சொல்லக்கூடிய அந்தப் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டது. அதன் அடிப்படையிலே வருகிற அறிக்கையின் அடிப்படையிலே, தவறு செய்தவர்கள் மீது இந்த அரசு தயவு தாட்சண்யம் இன்றி நடவடிக்கை எடுக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 31, திரு. ப. இராஜரெத்தினம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**31–**

## அரசு அலுவலகக் கட்டடம்

***1732–திரு. ப. இராஜரெத்தினம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

பெரம்பலூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் இதர அரசு அலுவலகங்கள் விரைவில் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம், இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தின் கொடையாய், கற்பகச் செல்வமாய், ஞாலப் புதுமையாய், நம்மனோர் மகிழ நாற்றிசையும் கூடிப் போற்றிப் புகழ்ந்திட ஆற்றல் சால் அறிவு மேதையாய் தோன்றி, தமிழகத்திலே அரசுப் பொறுப்பேற்றிருக்கின்ற என்னைப் பெற்றெடுத்த தெய்வம், இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, உங்களுடைய

பொன்னான பாதத்தை வணங்கி, எங்களுடைய பெரம்பலூர் மாவட்டம் 1995 ஆம் ஆண்டிலே, இன்றைக்கு அரசுப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற எங்களுடைய அன்னை புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்திலே புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டிருந்த நிலையிலேகூட கடந்த 6 ஆண்டுகாலமாக மாவட்ட நிர்வாகத்திற்கென்று எந்த அலுவலகமும் கட்டப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அலுவலகம், காவல் துறை அதிகாரிகளினுடைய அலுவலகம், நீதிமன்ற வளாகம் என்று பெரம்பலூர் மாவட்டத்திலே எந்த அலுவலகமுமே கட்டப்படாத ஒரு சூழ்நிலையைக் கருத்திலேகொண்டு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? தற்சமயம் அந்த மாவட்ட அலுவலகங்களைக் கட்டுகின்ற பணி குறித்தான கோப்புகள் அங்கே மாவட்ட நிர்வாக அலுவலகத்திலேயிருந்து சென்று இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்களுடைய நிர்வாகத்திலே இருக்கிறது. இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் வருகின்ற அருள்மிகு மதனகோபால்சுவாமி திருக்கோவிலுக்குச் சொந்தமான இடம் 125 ஏக்கர் பெரம்பலூரிலே விளாமுத்துார் என்கின்ற இடத்திலே இருக்கிறது. நம்முடைய அரசின் சார்பிலே 100 ஏக்கர் போதுமானது என்று கருதி, அதற்கான தேவையைக் கருதி, இன்றைக்கு மாவட்ட நிர்வாகம் வாயிலாக அந்த ஆணையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே பெரம்பலூர் மாவட்டம் நல்ல மாவட்டம் என்கின்ற பெருமையைப் பெற்றிட, கடந்த ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்ட மாவட்டம் என்ற அந்த மாவட்ட மக்களின் பேச்சு இருப்பதாலே, அந்த நிலையை மாற்றுகின்ற வகையிலே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தை வருவாய்த் துறைக்கு மாற்றி உடனடியாக பெரம்பலூர் மாவட்டத்தினுடைய நிர்வாக அலுவலகங்களைக் கட்டித்தர போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்களின் வாயிலாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியின்போது திருச்சி மாவட்டம் 3–ஆகப் பிரிக்கப்பட்டு பெரம்பலூர் மாவட்டம் தனி மாவட்டமாக உருவாக்கப்பட்டது. அரசு ஆணை எண்



32, அதற்குப் பின்னால் 5–8–1996–ல் பெரம்பலூர் மாவட்டத்தில் மாவட்ட பெருந்திட்ட வளாகம் கட்ட இடம் தேர்வு செய்ய முதன்மை ஆணையாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையாளரை தலைமையாகக் கொண்டு குழு அமைக்க ஆணையிடப்பட்டது. சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை காரணமாக பெருந்திட்ட வளாகக் குழு நிலத்தைத் தேர்வு செய்ய இயலாத நிலை இருந்தது. மாவட்ட ஆட்சியர் அவர்கள் 500.36 ஏக்கர் நிலம் பெருந்திட்ட வளாகம் அமைத்திட செங்குளம், துரைமங்கலம் மற்றும் எலும்பூர் கிராமங்களில் தெரிவு செய்து அறிக்கையினை அனுப்பியதை ஏற்று பெருந்திட்ட வளாகக் குழுவின் பரிந்துரை இல்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் நிலத்தை கையகப்படுத்த அரசு, ஆணை எண் 191–ல் அனுமதி வழங்கியது.

மேற்படி துரைமங்கலம், மஜரா, தவில்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளிடமிருந்து ஆட்சேபணை வரப்பெற்றதால், இந்நிலங்களை கையகப்படுத்தும் பணி தவிர்க்கப்பட்டு, அதற்கு மாற்றாக பெரம்பலூர் தெற்கு கிராமத்தில் மதனகோபாலசுவாமி கோயிலுக்குச் சொந்தமான புல எண் 221–ல் 40.19.0 hectare நிலம் தேர்வு செய்து மாவட்ட ஆட்சியர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மாவட்ட ஆட்சியர் தேர்வு செய்துள்ள இடம் இந்து அறநிலையத் துறையைச் சார்ந்ததால் அத்துறையின் இசைவு எதிர்நோக்கப்படுகிறது.

பெரம்பலூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தற்காலிகமாக செயல்பட 1995–96–ல் ரூபாய் 37.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் இதர அரசு அலுவலகங்கள் விரைவில் கட்ட 11–வது நிதிக் குழுவிலேயிருந்து நிதி பெறவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாவட்டங்கள் பிரித்தல், மாவட்டங்களுக்குண்டான அலுவலகங்கள் அமைக்கக்கூடிய கேள்வி என்ற காரணத்தினால் இதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய தருமபுரி மாவட்டம் என்பது மிகவும் பின்தங்கிய...

[2001 செப்டம்பர் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரம்பலூர் மாவட்டத்திற்குரிய பதில்தான் அமைச்சரிடம் இருக்கும். நீங்கள் தனிக் கேள்வி போட்டால் அவர் பதில் சொல்லமுடியும்.

**திரு. ஜி.கே. மணி:** மாவட்டத்தைப் பிரிப்பதால், அதற்கு அளவு கோலைச் சொல்கிறேன். நீண்டகாலமாக, கடந்த 5 ஆண்டுகாலம்கூட இந்த மாமன்றத்திலே அந்த மாவட்டத்தினுடைய சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், நிர்வாக வசதிக்காகவும் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, கடந்த 5 ஆண்டுகாலம் வற்புறுத்தினோம். அப்படி எங்களுடைய நிறைவேற்றப்படாத கோரிக்கை புதிதாக ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனே, பின்தங்கிய தருமபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது என்ற செய்தி அறிந்து நாங்கள் எல்லாம் மகிழ்ச்சியுறுகிறோம், வரவேற்கிறோம். அதேநேரத்திலே, அந்த மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கக்கூடிய அளவுகோல் என்ற வகையிலே, அந்த மாவட்டத்தினுடைய வருவாய் நிலப்பரப்பு, எல்லைகள் எல்லாம் சரியாகக் கொண்டு சமச்சீர் அளவிலே 5 தொகுதியிலே உள்ளடக்கக்கூடிய வகையிலே ஆழமாகச் சிந்தித்து, அதற்கு ஒரு குழுவையும் அமைத்து, பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை வைப்பது மாத்திரமல்ல; அதை முறையாக நீங்கள் செய்து முடிக்க முன்வருவீர்களா என்றும் கேட்க விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே பரவலாக பெரிய மாவட்டங்கள் இருக்கின்றன. 5 தொகுதிகள் என்ற அளவிலோ அல்லது ஒரு நாடாளுமன்றப் பகுதியில் 6 சட்டமன்ற தொகுதிகளை உள்ளடக்கிய ஒரு பகுதி என்ற அளவிலோ மாவட்டங்களை நிருவாக வசதிக்காக, பொருளாதார மேம்பாட்டிற்காக பிரிக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாவட்டங்களைப் பிரிக்கும்போது, அதனுடைய சாத்தியக்கூறுகளை ஆராயும்பொருட்டு, வருவாய்த் துறையிலிருந்து குழு அங்கு வருகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய கோரிக்கைகளைக் கூறுவார்களேயானால் அதனையும் பரிசீலித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, செல்வி க. பாலபாரதி, மாண்புமிகு செய்தி—விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.



2001 செப்டம்பர் 1]

**32–**

## சுத்திகரிப்பு நிலையம்

***1435–செல்வி க. பாலபாரதி:**

*மாண்புமிகு செய்தி—விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திண்டுக்கல்லில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்காத தோல் தொழிற்சாலைகளை மூடிவிட அறிவிப்புக் கொடுத்துள்ளதால், சுத்திகரிப்பு நிலையம் அமைக்க கால அவகாசம் கொடுக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி—விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல்லில் உள்ள தோல் தொழிற்சாலைகளை மூடிவிட அறிவிப்பு, வாரியத்தால் கொடுக்கப்படவில்லை. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தத் கோரி முகாந்திரக் கடிதம் (show cause notice) மட்டுமே அனைத்துத் தொழிற்சாலைகளுக்கும் கொடுக்கப் பட்டுள்ளது. ஆகவே, இதுகுறித்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்த, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் ஒரு நாளைக்கு 2 கோடியே 20 இலட்சம் மதிப்புள்ள தோல் உற்பத்தி செய்யப்படுகிறது. மாதத்திற்கு கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் விற்பனை வரியாக மாநில அரசாங்கத்திற்குக் கிடைத்து வருகிறது. மத்திய அரசாங்கம் ஆண்டிற்கு 7,000 கோடி ரூபாய் அன்னியச் செலாவணியாக, வருமானத்தினை, திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே மேற்கு வங்க மாநில அரசாங்கத்தைப்போன்று தோல் பதனிடக் கூடிய தொழிற்சாலை நிறுவனங்களிலிருந்து மாதா மாதம் நிதியைப் பெற்று இந்தச் சுத்திகரிப்பு நிலையத்தை நவீனப்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் பகுதியில் 63 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. இந்த 63 தோல் பதனிடும்

தொழிற்சாலைகளில், 61 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகம் TALCO மற்றும் திண்டுக்கல் Tanners N.E.O. Control System Private Limited மூலமாக அமைக்கப்பட்ட பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். இரண்டு தொழிற்சாலைகள் மட்டும் தனியாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துள்ளன. இப்போது சுத்திகரிப்பு நிலையத்தின் திட்ட மதிப்பீடாக 500 இலட்சங்கள் என வரையறுக்கப்பட்டுள்ளன. டால்கோ நிறுவன உறுப்பினர்களின் பங்குத் தொகையாக 155 இலட்சங்களும், மத்திய அரசின் மானியமாக 120 இலட்சங்களும் மாநில அரசின் மானியமான 125 இலட்சங்களும் மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி I.D.B.I–யிடமிருந்து கடனாக ரூபாய் 100 இலட்சங்களும் பெற்று, இந்நிலையத்தைக் கட்டி முடித்துள்ளார்கள். இந்நிலையம் 1996 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மேலே குறிப்பிட்ட 61 தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் நாள் ஒன்றுக்கு 2,533 கிலோ லிட்டர் கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. இந்த 61 தொழிற்சாலைகளில் 41 தொழிற்சாலைகள் கிழக்கிந்திய முறையினையும், (E.I. Tanning) மற்றும் 14 தொழிற்சாலைகள் குரோம் பதனிடும் முறையையும் பின்பற்றுகின்றன. இந்த 61 தொழிற்சாலைகளில் தற்போது 47 தொழிற்சாலைகள்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மீதமுள்ள 14 தொழிற்சாலைகளில் 11 தொழிற்சாலைகள் இயங்கவில்லை. 3 தொழிற்சாலைகள் வாரியத்தின் உத்தரவுப்படி மூடப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகேசன்

**திரு. ஆ.கு. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையமானது இல்லாமல் சேலம் மாவட்டத்தில் சுமார் 55 Sago தொழிற்சாலைகள் மூடப் பட்டுள்ளன. கடந்த ஆண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகேசன், இதற்கு தனிக் கேள்வி போட்டால்தான் முடியும். திண்டுக்கல் பற்றிய கேள்விக்குத் தான் அவர் பதில் வைத்திருப்பார். திரு. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரசாயனக் கழிவு நீரால் விவசாய பூமிகள் பாதிக்கப் பட்டுள்ளன. அவ்வாறு பாதிக்கப்பட்ட பூமிகளுக்கு உரிய நஷ்டயீட்டுத் தொகையைக் கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றத் தீர்ப்பு இருப்பதாகவும், அது இதுவரை கொடுக்கப்படவில்லை என்றும் இந்தப் பகுதியிலுள்ள





விவசாயிகளிடமிருந்து புகார் வந்திருக்கிறது. ஆகவே, அந்த விவசாயிகளுக்கான நஷ்டயீட்டுத் தொகையை அல்லது இழப்பீட்டுத் தொகையைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அந்த நஷ்டயீட்டுத் தொகையை இந்த அரசு முன்னின்று அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. வில்வநாதன்.

*முற்பகல் 10–35*

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய, மாநில அரசுகள் தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரை எவ்வளவுதான் கடுமையான சட்டத்தைக்கொண்டு தடை போட்ட போதிலும், பாலாற்றுப் படுகையிலே அந்தக் கழிவு நீர் கலப்பதைத் தடுக்க முடியவில்லை. அதனால் குடிப்பதற்கு ஏற்ற நீராக உள்ள அத்திப்பட்டு, திருப்பாற்கடல் போன்ற பகுதிகளிலிருந்து எடுக்கப்படுகின்ற குடிநீர் மாசுபடுவதோடு, வடாற்காடு மாவட்டத்தின் பெரிய ஏரியான காவேரிப்பாக்கம் ஏரி, பாசனத்திற்கு லாயக்கற்ற நீராக மாறிவருகிறது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, திருப்பாற்கடல், அத்திப்பட்டு படுகைகளிலிருந்துதான் அரக்கோணம் ராஜாளிக்கும், காஞ்சிபுரம் நகரத்திற்கும் குடி தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறு கழிவு நீரால் பாலாற்றுப் படுகை மாசுபடுவதைத் தடுக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, திருப்பாற்கடல், அத்திப்பட்டு ஆகிய பகுதிகளில் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் அந்த ஆற்றில் கலப்பதால் அங்கே மாசு ஏற்படுகின்றது, அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்று கேட்டார். எந்தத் தொழிற்சாலை கழிவுநீரை அந்த ஆற்றிலே விடுகின்றதோ, அந்தத் தொழிற்சாலைக்கு முதலிலே Show cause notice கொடுத்து, அந்த notice அடிப்படையில் அவர்கள் சுத்திகரிப்பு நிலையத்தை

ஏற்படுத்தவில்லையென்றால், இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு பூதாகரமான பிரச்சினை. பல இடங்களில் இந்தப் பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு விவசாயிகள், தொழிலாளர்கள், தொழிற்சாலைகளிலே வேலை செய்யக்கூடியவர்கள் இவர்களுக்கெல்லாம் ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு சுத்திகரிப்பு நிலையங்கள் வேண்டும் என்பது நம்முடைய கொள்கை.' ஆனால், சுத்திகரிப்பு நிலையங்களை எல்லோரும் ஏற்படுத்தமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. காரணம், இது சிறு தொழிலில் வருகிறது. கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் போன்றவற்றை சிறிய முதலீடு வைத்து இந்தத் தொழில்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான், இந்தச் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்த மத்திய, மாநில இரண்டு அரசுகளுமே மானியங்களை வழங்குவதாக ஒரு கொள்கை வகுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் மாநில அரசும், மத்திய அரசும் மானியங்கள் வழங்க வேண்டும் என்பது ஒரு முடிவு. மாநில அரசு எவ்வளவு வழங்குகிறதோ, அந்த அளவுக்கு மாநில அரசு வழங்கிய பிறகுதான் அதைத் தொடர்ந்துதான் மத்திய அரசு வழங்கும் என்ற நிபந்தனையை விதித்திருக்கிறது. பல இடங்களில் மாநில அரசு வழங்கவில்லை என்றால் மத்திய அரசு வழங்குவதில்லை. இதனால் பல இடங்களில் திட்டமிடப்பட்டவகையில் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்த முடியவில்லை. அதனால்தான் சில இடங்களில் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இதிலே தொழிலாளர்களைப் பார்ப்பதா, விவசாயிகளைப் பார்ப்பதா என்பது ஒரு பிரச்சினை. இருவரும் இரண்டு கண்கள். எனவே, விவசாயிகளுக்கும் பாதகம் இல்லாமல், தொழிலாளர்களுக்கும் வேலையிழப்பு ஏற்படாமல் இந்தப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு உரிய முறையில் மானியங்களை வழங்க துரித நடவடிக்கையை மாநில அரசு எடுக்குமா? மாநில அரசு கொடுத்தால்; மத்திய அரசு வழங்கும் என்ற நிலையில் இதுகுறித்து கவனம் எடுத்துக் கொள்ளப்படுமா? இதுகுறித்து ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு ஏற்கெனவே உத்தேசிக்கப்பட்ட வகையில் ஒரு முத்தரப்பு மாநாடு அல்லது எந்த வகையிலாவது உரியவர்களை அழைத்துப் பேசி, ஒரு முடிவுக்கு வர அரசு செயல்படுமா; நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, மாநில அரசு 25 சதவிகிதமும், மைய அரசு 25 சதவிகிதமும் அந்தத் தொழிற்சாலைகளில், சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதற்கு மானியங்கள் கொடுக்கப்படுகின்றன. அந்த மானியத்தைப் பயன்படுத்தி எத்தனையோ சுத்திகரிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, மாநில அரசு கொடுத்தாலும், மத்திய அரசு கொடுக்கவில்லையென்றால் நிச்சயமாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி, மாநில அளவிலே நாங்கள் எங்களுடைய subsidy-யைக் கொடுத்துவிட்டோம், நீங்களும் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, நிச்சயமாக அந்தத் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு நாங்கள் உதவி செய்யத் தயாராக இருக்கிறோம் என்று கூறிக்கொள்கிறேன். மேலும், இதுசம்பந்தமாக, ஒரு முத்தரப்பு கமிட்டியை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார். இது ஒரு நல்ல ஆலோசனை. நிச்சயமாக அப்படிப்பட்ட ஒரு கமிட்டியை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கி, அந்தத் தொழிற்சாலைகளிலே வேலை செய்பவர்கள் பாதிக்கப்படக்கூடாது, தொழிற்சாலையையும் மூடக்கூடாது, அதேநேரத்திலே, விவசாய மக்களும் பாதிக்கப்படக் கூடாது என்ற வகையிலே, நல்ல ஆலோசனையை அந்தக் கமிட்டியின் மூலம் பெற்று, அதன்படி செய்ய மாநில அரசு தயாராக இருக்கிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, திரு. என். ரெங்கநாதன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**33—**

**மீன்பிடித் துறைமுகம்**

***2292—திரு. என். ரெங்கநாதன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் அல்லது தரங்கம்பாடியில் மீனவர்களின் நலன் கருதி, மீன்பிடித் துறைமுகம் அமைக்க நில அளவை செய்யப்பட்டதா?

[2001 செப்டம்பர் 1

(ஆ) இல்லையெனில், மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தரங்கம்பாடியில் மீன்பிடித் துறைமுகம் கட்டும் நடவடிக்கை இல்லை. பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் கட்ட ஆவன செய்யப்பட்டு வருகிறது.

**திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயை வணங்குகிறேன், தமிழ்த் தாயை வணங்குகிறேன், என் தலைவி முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். பூம்புகார் தொகுதி 25 கி.மீ. நெடுந்தொலைவு கொண்ட கடற்கரைப் பகுதியைக் கொண்டதாகும். 13 மீனவ கிராமங்கள் உள்ளன. சுமார் 20,000–க்கும் மேற்பட்ட மீனவ வாக்காள மக்களைக் கொண்ட பகுதியாகும். 1,000 விசைப் படகுகளும், 3,000–க்கும் மேற்பட்ட பாய்மரப் படகுகளையும் கொண்ட பகுதியாகும். தினசரி 10,000–க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குச் சென்று வருகின்றனர். எங்கள் பகுதியில் மட்டும் சுமார் 500 டன் பல்வேறுபட்ட மீன்கள் கிடைக்கின்றன. தினசரி 100–க்கும் மேற்பட்ட வேன்களில் மீன்களை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரெங்கநாதன், கேள்வியாகக் கேளுங்கள். மற்றவைகளைப்பற்றி பிறகு பேசலாம்.

**திரு. என். ரெங்கநாதன்:** மீன்கள் வெளியூர்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் விற்பனைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. எனவே, மீனவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, பூம்புகாரில் மீன் பிடித் துறைமுகம் அவசியம் அமைத்துத் தர வேண்டுமாய், மாண்புமிகு அம்மா அவர்களையும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள்



2001 செப்டம்பர் 1]

எடுக்கப்பட்டு, அதற்கான இடங்களை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பெங்களூரில் உள்ள மத்திய கடலோர ஆய்வு மைய இயக்குநரால் தல ஆய்வுகள் செய்யப்பட்டு, பின்னர் மீன் வளப் பொறியியல் பிரிவினரால் உத்தேச மதிப்பீடு ரூ.40 கோடிக்குத் தயார் செய்யப்பட்டு, ஆணையாளர் மற்றும் மீன் வளத் துறை இயக்குநரால், பெங்களூரில் உள்ள மத்திய கடலோர ஆய்வு மைய இயக்குநரின் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவருடைய கருத்துக்கள் கிடைக்கப்பெற்றதும், கடலின் தன்மையை அறிய, பூண்டி நீரேற்றும் மற்றும் நீரமுத்த மையத்தின்மூலம் மாதிரி ஆய்வு செய்து, அதனடிப்படையில் திட்ட மதிப்பீடு இறுதியாகத் தயார் செய்து, மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, மீன் பிடித் துறைமுகம் கட்டும் கட்டுமானப் பணிகளைத் தொடங்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 34, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**34–**

## பேருந்து முன்பதிவு

***1581–திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டில் அரசு விரைவுப் பேருந்துகள் முன்பதிவகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போதிலிருந்து செயல்படும்?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் முன்பதிவகம் ஏற்கெனவே செங்கற்பட்டில் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு நகரிலே விரைவுப் பேருந்தினுடைய முன்பதிவு அலுவலகம் புறவழிச் சாலைகள் இயங்குவதற்கு முன்பாக 24 மணி நேரமும் இயங்கி வந்தது. தற்போது கல்பாக்கம்–பெங்களூர் செல்கிற விரைவுப் பேருந்திற்கு 10 இருக்கைகள் மட்டுமே மாலையிலே முன்பதிவு செய்யப்படுகின்றன. அதேபோன்று, மாலையிலே சென்னையிலேயிருந்து, மதுரை செல்கின்ற ஒரு பேருந்திற்கு மட்டும் 10 டிக்கெட்டுகள் பதிவு செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள். இந்த விரைவுப் பேருந்து நிலைய முன்பதிவு அலுவலகம் 24 மணி நேரமும் இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து உண்மையானதுதான். அவர் கூறிய கருத்தை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விரைவுப் பேருந்து முன்பதிவு அலுவலகம் அங்கே இருப்பதற்கான முக்கியத்துவம் என்னவென்றால், இந்தப் பகுதி சுற்றுலா தலங்கள் அமைந்திருக்கிற ஒரு பெரிய பகுதியாகும். அதேபோன்று, மறைமலைநகர், மதுராந்தகம் போன்ற பகுதிகளிலேயெல்லாம் மிகப் பெரிய தொழிற் பேட்டைகள் இருக்கின்றன. குறிப்பாக, தென் மாவட்டங்களிலிருந்து வருகிறவர்கள் மகாபலிபுரம், திருக்கழுக்குன்றம், திருப்போரூர் மற்றும் கோயில் நகரங்களாக இருக்கின்ற காஞ்சிபுரம், திருத்தணி, திருப்பதி போன்ற நகரங்களுக்குச் செல்கின்ற வழியிலே அந்த நகரம் இருப்பதால், இதை 24 மணி நேரமும் இயங்குகின்ற அலுவலகமாக இயக்குவதற்கு உடனடியாகப் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்தேன். அதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 15 – காவல் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 16 – தீயணைப்புப் பணிகள்**

– – –

### (அ) கோரிக்கை எண் 15 – காவல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001–2002–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 15, காவல் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காவல் துறை பற்றிய 15–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1102,58,85,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 150, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 606, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 830, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தூர் நகரில் காவலர் குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1272, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் பழுதடைந்துள்ள காவலர்கள் குடியிருப்புகளுக்குப் பதிலாக புதிய குடியிருப்புகள் கட்டித் தருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2444, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1135, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்துக் காவல் நிலையங்களிலும் காலியாகவுள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1246, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவலர்கள் தமது கருத்துக்களை அரசுக்கு எடுத்துரைக்க அமைப்பு ஒன்று உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1519, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் பணிபுரியும் காவல் துறைக் காவலர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான சம்பளம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 798, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1436, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை நகரத்தில் உள்ள நகரக் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து வடக்கு மற்றும் தெற்கு காவல் நிலையங்கள் என அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1618, திரு. வி.கே. லட்சுமணன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 662, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**THIRU J. HEMACHANDRAN:** Hon. Speaker Sir, "To discuss the need to open new Police Stations at Swamiyarmadam and Kumarapuram in Kanyakumari district" I move–

"That the sum of Rs. 1102,58,85,000/– allocated under Demand No. 15 - Police be reduced by Rs. 100/–."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1354, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 93, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 550, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1808, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1471, திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகர்கோவில் தொகுதி, தெங்கம்புதூரில் ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 326, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 336, திரு. க. முருகவேல் ராஜன்.

***திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1059, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1517, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 710, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 849, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1094, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 15, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 60, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 106, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 621, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு நகரில் மகளிர் காவல் நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1180, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1218, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1251, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

***திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் தொகுதி, அரூரில் பெண்கள் காவல் நிலையம் ஒன்று (அனைத்து மகளிர் காவல் நிலையம்) தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 511, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கன்னிவாடி, செம்பட்டி காவல் நிலையங்களுக்குப் பதிலாக சத்திரப்பட்டி, கீரனூர் காவல் நிலையங்களைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 735, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவல் துறையை நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 465, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், மூலனூர் காவல் நிலையத்திற்குப் புதிய அலுவலகம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 518, திரு. து. நெப்போலியன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி, அம்பத்தூர் நகராட்சி, புதூரில் ஒரு புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1102,58,85,000–ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

*முற்பகல் 10–50*

## (ஆ) கோரிக்கை எண் 16 – தீயணைப்புப் பணிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16– தீயணைப்புப் பணிகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.55,69,74,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 193, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 296, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1440, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் மற்றும் கீழ்பெண்ணாத்தூர் தீயணைப்பு நிலையங்களுக்கு கட்டடங்கள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 593, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 832, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தூர் நகரில் தீயணைப்பு நிலையக் கட்டடம் ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1274, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு அதிக அளவு தீயணைப்பு வண்டிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1137, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்திலுள்ள தீயணைப்புத் துறையில் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1520, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேச்சேரி பேரூராட்சிக்கு ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 792, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூரிலுள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு நவீனக் கருவிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1364, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 99, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 547, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 452, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் நகரில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு விபத்து ஊர்தி (ஆம்புலன்ஸ்) வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 349, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை, மதுரை, திருச்சி, கோவை போன்ற பெருநகரங்களில் தீயணைப்புத் துறைக்கு ஹெலிகாப்டர்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1069, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1511, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 709, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 850, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1093, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 17, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 61, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 105, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 625, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் தீயணைப்புத் துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 484, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதியில் கள்ளிமந்தயத்தில் புதியதாக ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 462, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம் வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூரில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 719, திரு. எஸ்.கே. வேதரத்தினம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1444, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவெறும்பூரில் தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1473, திரு. எஸ்.நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலியில் ஒரு தீயணைப்பு நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வெட்டுத் தீர்மானம் எண் 808. திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் தொகுதி, கீழ்வேளூரில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டிக்கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,69,74,000–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மற்றும் தீயணைப்புப் பணிகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு இந்த மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவை பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம். திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாக கடலூர் சட்டமன்றத் தொகுதியிலிருந்து இந்த மாமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றுகின்ற பெரும் வாய்ப்பிற்கு முழுமுதற்காரணமான எங்கள் குடும்பத் தலைவர், ஓய்வு அறியா சூரியன், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எங்கள்

---

@ 207 முதல் 293 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



மாண்புமிகு பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும். ஆருயிர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், எனது தொகுதி மக்களுக்கும், உழைத்த கண்மணிகளுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கை விவாதத்திலே கலந்து கொண்டு, கருத்தினைக் கூறுவதற்கான வாய்ப்பினை அளித்ததற்கு நன்றி கூறி, என்னுடைய விவாதத்தைத் தொடங்குகின்றேன்.

மக்களுடைய உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடிய சட்டம்–ஒழுங்கினைப் பாதுகாக்கக்கூடிய மிகப் பெரிய பொறுப்பினைக் கடமையாகக் கொண்டிருக்கின்ற இலாக்கா காவல் துறை. அவர்கள் முறையாக இயங்குவதும், அவர்கள் இயக்கப்படுவதற்கான நிலையையும் வகுப்பது குறித்து அனைத்து வகையிலேயும் மிகப்பெரிய பொறுப்பினைப் பெற்றிருப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். கடமையும், பொறுப்பும் இணைகின்றபொழுது சட்டம்–ஒழுங்கு சரியாக பராமரிக்கின்ற சூழ்நிலைகள் மாநிலத்திலே உருவாகி, மக்கள் அமைதி நிலையை அடைவார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் எங்களுடைய தலைவர், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலங்களிலே எல்லாம் காவல் துறையை மிகச் சிறப்பாகக் கவனமுடன் பேணிப் பாதுகாத்து, அதற்கான பணிகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்துவந்திருக்கிறார்கள் என்பது கண்கூடாகும்.

முதன்முதலாக, தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் 1969–ல் ஆர்.ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ். அவர்களுடைய தலைமையில், இந்தியாவிலேயே முதல் முறையாக காவல் துறையினுடைய நிலைமைகளை ஆய்வு செய்து பரிந்துரைக்க ஒரு கமிஷனை அமைத்தார். அதுமட்டுமின்றி, 133 பரிந்துரைகளை அன்றைக்கு வழங்கி, அதிலே 115 பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தப் பட்டது.

அதைப்போல, 1989 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக எங்களுடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள், முன்னாள் தலைமைச் செயலர், சபாநாயகம் ஐ.ஏ.எஸ். அவர்களுடைய தலைமையில் இரண்டாவது போலீஸ் கமிஷனை அமைத்து, அவர்கள் தந்த 112 பரிந்துரைகளில் 102 பரிந்துரைகள் மீது முடிவு எடுத்து, அதிலே அன்றைக்கு ஆட்சியில் இருந்த நிலை வரை 79 பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்பட்டன. அதுமட்டுமல்லாது, தொடர்ந்து கலைஞர் அவர்கள் காவல் துறையினுடைய நிலையை மேம்படுத்துவதற்காக பணியாற்றுகின்ற விதமாகவும் அவர்கள் செயல்பட்டிருக்கின்ற விதமாகவும் ஒரு ஒப்பீடு மூலம் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

*முற்பகல் 10–55*

1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை அன்றைக்கு நடைபெற்ற அந்த ஆட்சியில் ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு 1716 கோடி ரூபாயாகும். அதற்குப் பிறகு 1996–லிருந்து தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் 2001–ல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் அந்த ஆட்சியில் காவல் துறைக்காக செய்யப்பட்ட மொத்த ஒதுக்கீடு 3988 கோடி ரூபாய் ஆகும். அந்தவகையிலே மட்டுமல்லாது, அவர்களுக்கான ஊதியங்கள், மத்திய அரசின் ஐந்தாவது ஊதியக் குழுவினுடைய பரிந்துரைக்கு ஏற்ப, காவலர்களுடைய ஊதியம் 1996 ஆம் ஆண்டில் ரூ. 2750 ஆகும். அதற்குப் பின் மத்திய அரசு, ஊதியத்தை ரூ. 3050 ஆக நிர்ணயித்துள்ளதால் தமிழகக் காவலர்களுடைய ஊதியத்தையும் ரூ. 3050 ஆக உயர்த்தி வழங்க உத்தரவிடப்பட்டது.

தமிழகக் காவலர்களில் முதல் நிலை, இரண்டாம் நிலை என இரண்டு காவலர்கள் நிலை உள்ளன. இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு, மத்திய அரசுக் காவலர்களுக்கு வழங்குகின்ற சம்பளமான ரூ. 3050–ஐயும், முதல்நிலைக் காவலர்களுக்கு ரூ.3200–ஐயும் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அரசு வழங்கியிருக்கிறது. மத்திய அரசு காவலர்களுக்கு இணையாக இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு ஊதியத்தை உயர்த்தி வழங்கப்பட்டது தமிழக வரலாற்றிலேயே அதுதான் முதல் முறையாகும். இப்படியெல்லாம் காவலர்களுடைய நடவடிக்கையில் ஆக்கமும், ஊக்கமும் இருக்க வேண்டுமென்ற நிலையோடு பணியாற்றி அந்தத் துறையை மிகச் சிறப்பாக, செம்மையாகச் செயல்படுத்திக்கொண்டு வந்திருந்தார் என்பதற்கு ஆதாரம்தான். மானியக் கோரிக்கை குறிப்பிலேகூட குறிப்பிடுகிறபோது, ஐந்தாண்டுகளில் சாதிக் கலவரங்களில் இறந்தவர்களுடைய புள்ளிவிவரக் கணக்கைக் குறிப்பிடுகிறபோதுகூட, பக்கம் 26–லே மிகத் தெளிவாக ஒவ்வோர் ஆண்டாக, சிறந்த நிர்வாகத்தின் காரணமாக காவலர்களின் அயராத அந்தப் பணியின் காரணமாக 1996–ல் இறந்தவர்களின் எண்ணிக்கை 50. 1997–98ல் 30. 1999–ல் 22, 2000–ல் 18, 2001–ல் 15 இந்த மூன்று மாதத்தையும் சேர்த்து. ஆக, காவல் துறை மிகச் சிறப்பாக அன்றைக்குச் செயல்பட்டுக்கொண்டிருந்த அந்த நிலையில் ஆட்சி மாறியது. பிறகு நான் குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள், எதிர்க்கட்சி என்ற காரணத்திற்காக ஒன்றைச் சொல்கிறோம் என்று யாரும் தவறாகக் கருதக் கூடாது. குறைகள் இருப்பின், பிழைகள் இருப்பின், தவறுகள் இருப்பின் அவற்றை நீக்கிக்கொண்டு, சரியான முறையில் செயல்படுவதற்கான ஒரு நிலையைப் பெற வேண்டுமென்பதை, ஆளுங்கட்சிக்கு எடுத்துரைக்கின்ற



விதமாகத்தான். எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஜனநாயக் கடமையை ஆற்றுவதற்கு எங்களை அனுப்பியிருக்கிறார்கள்.

நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆளுங்கட்சியினுடைய தோழமைக் கட்சியின் எங்களுடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. பழனிசாமி அவர்கள் மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசினார்கள். அந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பேசுகிறபோது அவர் குறிப்பிட்டார். மிகத் தெளிவாகவே என்ன குறிப்பிட்டார் என்றால், திருவாரூர், நாகப்பட்டினம் பகுதிகளில் தொடர்ந்து தீ பிடிக்கின்ற நிலையைச் சொல்கிறபோது, 20 நாட்களாகப் புகார்கள் கொடுக்கப்பட்டு ஒரு நடவடிக்கையும் இல்லை, கேட்டாலும் சரியான பதில் இல்லை, கள்ளச் சாராயவாதிகளைக் காட்டுகிறார்கள். ஆனால் ரோட்டிலே நடந்து செல்லுகின்ற அக்கம்பக்கத்தில் இருக்கிற அப்பாவிகள் 50 பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள் காவல் துறை. இப்படியே போனால் என்ன செய்வது என்ற கேள்வியை உங்கள் தோழமைக் கட்சியில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் கேட்டார்கள். அதைத் தொடர்ந்து திரு. ஞானசேகரன் அவர்களும் கேட்டார். வேலூரிலே மூன்று மாதங்களாக தீ பிடிக்கிறது. ஆனால் என்ன நிலைமை தெரியுமா? புகார்கள் சரியாக விசாரிக்கப்படவில்லை, நாங்கள் சொல்கிறோம். அதுமட்டுமல்ல உளவுத்துறை என்ன செய்கிறது? ஆளுநர் உரையிலே அவர் பேசுகின்றபோது சி.பி., சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதே அதனுடைய நிலைமை என்ன என்றெல்லாம் இங்கே கேட்டார். ஆகவேதான் அந்தக் கருத்துக்களையெல்லாம் எடுத்துவைத்துப் பார்க்கின்றபோது கடந்த 3 மாத காலமாக காவல் துறையினுடைய நடவடிக்கைகள், நிர்வாகப் போக்குகள், எந்த அளவிற்குச் சரியாக இல்லாத வகையிலே, சீர்கேடு அடைந்துகொண்டு இருக்கின்ற நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது என்பதற்காக இவற்றை நான் எடுத்துக் கூறினேன். இன்னொன்று இந்த காவல் துறைக்கு இந்த அரசு...

*முற்பகல் 11–00*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகின்றபோது ஆளும் கட்சியினுடைய தேர்தலிலே கூட்டணி வைத்திருக்கிற கட்சிகள் எல்லாம்கூட காவல்துறையிலே. கடந்த 20 நாட்களாக நாகை, திருவாரூர் மாவட்டங்களில் தீ விபத்துக்கள் ஏற்பட்டபோது அரசு இதை கவனித்துக்கொள்ளவில்லை என்று நாங்கள் குற்றஞ்சாட்டியது போன்று அவர் சொன்னார். எதிர்க் கட்சிகளுக்கு,

பொறுப்பான எதிர்க் கட்சிகளுக்கு, ஆளும் கட்சியினுடைய கவனத்தை திருப்பி அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதுதான் அந்தக் கட்சியினுடைய பிரதான கடமையாகும். நான் இன்னொன்றையும் சொன்னேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னால் தமிழகத்தில் என்றும் இல்லாத அளவுக்கு தீ வைப்புச் சம்பவங்கள் போன்ற துயரமான சம்பவங்களை ஏற்படுத்துகிறார்கள். இது ஒரு அரசியல் காரணமாகக்கூட இருக்கும் என்றும் நான் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அதை ஞாபகப்படுத்துவதற்காகத்தான் சொல்கிறேன். இதற்கு முன்பாக இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் தமிழகத்தில் நடைபெறவில்லை. ஆனால் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்குப் பிறகு தமிழகத்திலே அமைதி நிலவக் கூடாது என்பதற்காக, மக்களிடத்திலே அமைதி இருக்கக்கூடாது என்பதற்காக இது போன்ற ஒரு சதி நடக்கிறது என்பதை தெரிவித்து இதை காவல் துறையினரும், வருவாய்த் துறையினரும் சேர்ந்து புலனாய்வு செய்ய வேண்டும் என்றுதான் என்னுடைய கருத்துக்களை வலியுறுத்தி இருக்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கடமையாற்றுகின்ற நிலையையும், அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து ஈர்க்கின்ற நிலையையும் இங்கே எடுத்து வைத்தார்கள். அந்த கவனத்திற்குள் இருக்கின்ற செய்தியைத்தான் நான் சொன்னேன். மாற்றி நான் சொல்லவில்லை. வேறு அரசியல் காரணங்களுக்கோ உள்நோக்கங்களுக்கோ போய் என்னுடைய காலத்தை நான் விரயமாக்க விரும்பவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் நடைபெற்ற தீ விபத்துகள் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். காவல் துறை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்திருக்கிறது என்று குறிப்பிட்டார். எனது பதிலை நான் அளிக்கும்போது எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல இருக்கிறேன். இருப்பினும் இது மிகக் கடுமையான குற்றச்சாட்டாக இருக்கிறது என்பதால் இதை மட்டும் இப்பொழுது நான் விளக்கிக்கூற விரும்புகிறேன். கடந்த இரண்டு மாதங்களாக திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் தொடர்ச்சியாக தீ விபத்துகள்



மற்றும் தீ வைப்புச் சம்பவங்கள் நடந்துள்ளன. இதுகுறித்து காவல்துறைக்கு வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் நிர்வாக இயந்திரம் முடுக்கிவிடப்பட்டு கண்காணிப்புப் பணி, வாகன தணிக்கை மற்றும் கிராம மக்கள் ஒத்துழைப்புடன் விழிப்புக் குழு ஏற்படுத்தி ரோந்துப் பணி மேற்கொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னையிலிருந்து காவல்துறைத் தலைவர், Inspector General of Police (Law and Order) திருவாரூரில் முகாமிட்டு மாவட்ட நிர்வாகத்தின் பல்வேறு பிரிவுகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டார். தீ விபத்து குறித்த தகவல் வந்தவுடன் அனைத்து இனங்களிலும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, வருவாய்த் துறை மற்றும் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் சூழ்நிலைக்கேற்ப உடனுக்குடன் நடவடிக்கை எடுத்துள்ளனர். தீ விபத்துக்கான காரணங்களை கண்டறிய நுண்ணறிவுப் பிரிவு காவல்துறை துணைத் தலைவரின் D.I.G (Intelligence) தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட நிர்வாகத்தின் கடுமையான முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளால் தற்போது விபத்துகள் பெரிதும் குறைந்து உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மாண்புமிகு திரு. அசோகன் அவர்கள்கூட அன்றைக்கு இந்த விளக்கத்தைத்தான் எதிர்பார்த்தார்; கேட்டார். இன்னொன்று; நம்முடைய அரசின் சார்பாக பல செய்திகள் பல செயல்பாடுகள் நடவடிக்கைகள் இருக்கின்ற சூழ்நிலையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒருமுறை பத்திரிகையாளர்களிடம் கூறுகின்றபோது சொன்னார். திறமையான ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்குத் தமிழ்நாட்டில் பற்றாக்குறை. திறமையான ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு பற்றாக்குறை என்கின்றபோது திறமையில்லாதவர்கள் ஏராளமாக இங்கே இருக்கிறார்கள் என்ற பொருள் அதிலே பொதிந்து கிடக்கின்றது. நான் குறிப்பிட விரும்புகிறேன். மிகப்பெரிய ஒரு காவல்துறை 200க்கும் மேற்பட்ட ஐ.பி.எஸ். அதிகாரிகள் இருக்கலாம். இப்படிப்பட்ட வாசகங்களின் மூலமாக அவர்களுடைய செயல்பாடுகளிலே அவர்களுடைய வேகத்தை அவர்களுடைய பணியினுடைய ஊக்கத்தை, ஆக்கத்தை இது பெருமளவிற்கு தடை செய்யக்கூடிய ஒன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996–இல் அவருடைய தானைத் தலைவர், முதல்வர் பொறுப்பு ஏற்றவுடன், தமிழக காவல்துறையின் ஈரலே கெட்டுவிட்டது; 75 சதவீதம் கெட்டுவிட்டது என்று கூறினாரே; (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது மட்டும் காவல் துறையினரின் பணி ஆர்வம் குறைந்திருக்காதா? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இப்படிச் சொல்லுவார் என்று எனக்குத் தெரியும். இதை நான் எதிர்பார்த்தேன். ஏனென்றால்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. புகழேந்தி உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது குறிப்பிட்டபோது. சமுதாயத்தோடு இணைந்து செயல்படுகிற முறையில் காவல்துறையில் ஒரு நோய் ஊடுருவி இருக்கிறது. அந்த நோயைப் போக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஈரல் கெட்டு இருக்கிறது என்ற கருத்து பேசப்பட்டது. ஈரல் கெடுவதுகூட ஒரு நோய்தான். ஆகவே, அதனுடைய நோக்கம், நோயைக் களைவதற்காகச் சொல்லப்பட்டது. இப்போது திறமையை வளர்ப்பதற்காக முதலமைச்சர் சொல்லியிருக்கிறார் எனில், அதை ஏற்றுக்கொள்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், மானியக் கோரிக்கை விவாதங்களிலும், மற்றவற்றிலும் குறிப்பிடுகின்றபொழுதுகூட மிகத் தெளிவாகச் சொன்னார்கள். 1991–96–ஆம் ஆண்டிலே நடைபெற்ற அந்த ஆட்சியின் சூழ்நிலைகளின் காரணமாக, சீர்கெட்டுப் போயிருந்த ஒரு ஈரல் என்ற நிலையிலே அதைக் குறிப்பிட்டு, இறுதியாக தன்னுடைய காவல் துறை மானிய விவாதத்திலே சொல்லுகின்றபொழுது, பெருமளவிற்கு மாறியிருக்கிறது; ஆகவேதான் சாதிக் கலவரங்களிலே காவல் துறையினர் மிகத் திறமையாக ஈடுபட்டு இந்த நாட்டில் அதனுடைய இழப்பு விகிதத்தைக் குறைத்து இருக்கிறார்கள்; நான் அவர்களைப் பாராட்டுகிறேன் என்றுதான் எங்களுடைய தலைவர் மிகத் தெளிவாகச் சொன்னார்.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, சாதிக் கலவரங்களின்போது ஏற்பட்ட மரணங்கள் குறித்து, இரண்டாவது முறையாக இங்கே குறிப்பிட்டு இருக்கிறார். முதன்முறையாக அவர் பேசுகின்றபோது, 1997–லே சாதிக் கலவரங்களினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 93; பின்னர் 1998–இல் 30; 1999–இல் 22; 2000–இல் 18 என்று குறைந்துகொண்டே வந்தது. அது அவர்களுடைய ஆட்சியின் திறமையை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது என்று கூறுகிறார். இதில் சாதிக் கலவரங்களினால் ஏற்பட்ட மரணங்களை மட்டும் காவல் துறையினர் இந்தக் குறிப்பில் தந்திருக்கிறார்கள். 1998–ஆம் ஆண்டு கோவையிலே தொடர் வெடிகுண்டு விபத்துகள் ஏற்பட்டனவே, (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது 60–க்கும் மேற்பட்டவர்கள் இறந்துபோனார்களே, அப்போது 400–க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தார்களே, அப்போது அந்த மரணங்களைத் தடுப்பதற்கு அவர்களுடைய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மரணங்கள் குறைந்துகொண்டு வந்திருப்பதால், உளவுத் துறை மிகவும் திறமையாகச் செயல்பட்டதாக அவர் கூறுகிறார். 1998–லே இந்த வெடிகுண்டு விபத்துகள் நடைபெறுவதற்கு முன்பாக அவர்களுடைய உளவுத்துறை தூங்கிக்கொண்டு இருந்ததா? (மேசையைத் தட்டும் ஒலி) என்ன செய்து கொண்டு இருந்தது?

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுப்பி இருக்கிற அந்தக் கேள்வி, ஆளும்கட்சிக்கு ஒருவிதமான விளக்கமும், எதிர்க் கட்சிக்கு ஒருவிதமான விளக்கமும் தரக்கூடியது அல்ல. தீவிரவாதிகளால் திட்டமிட்டுச் செய்யப்படுகிற சதிச் செயல்கள் தமிழ்நாட்டிலே மட்டுமல்ல: இந்தியாவிலே எந்தப் பகுதியாக இருந்தாலும், எந்தக் காவல்துறையும்கூட கண்காணிக்க முடியாத அளவுக்கு ஒரு பெரிய விபரீதமான சூழ்நிலையை ஏற்படுத்திவிடுவதை நாம் நாடெங்கும் காண்கிறோம். உலகம் முழுவதும்கூட, அதேநிலைதான். ஆகவே, நடைமுறையில் ஏற்படுகிற சாதிக் கலவரம் போன்ற பழக்கவழக்கத்தால் ஏற்படுகிற அவைகளைத் தடுப்பதிலேதான் காவல்துறை முழு வெற்றி பெறமுடியும். தீவிரவாத செயல்களையும் ஓரளவுக்கு அதனால் ஏற்படுகிற விளைவுகளையும் சேர்த்துத்தான் தடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அது எல்லோருக்கும் பொதுவானது என்பதை நான் பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி, சாதிக் கலவரப் பட்டியலைத்தான் சொன்னார். மதக் கலவரப் பட்டியல் என்று தனியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொள்கை விளக்கப் புத்தகத்திலேயும்கூட குறிப்பிட்டு இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மதக்கலவரம் எங்கேனும் ஏதேனும் அரும்புமானால்கூட, அதை அந்த வகையிலே கண்டுகொள்கிற ஒரு வழக்கம் அரசுக்கு இருப்பதில்லை. இருக்கவும் கூடாது.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். உளவுத் துறையைப் பற்றிச் சொன்னார்கள். 1991–96ஆம் ஆண்டுக் காலத்தில் சென்னையிலே ஆர்.எஸ்.எஸ். அலுவலகம் குண்டு வைத்து தகர்க்கப்பட்ட நேரத்தில், உங்களிடம் இருந்த உளவுத் துறை என்ன செய்து கொண்டு இருந்ததோ, அதைத்தான் அந்த நேரத்திலே உளவுத் துறை செய்து கொண்டு இருந்திருக்கும் என்றுகூட நான் கருதுகிறேன்.

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் நடைபெற்ற வெடிகுண்டு விபத்து, கோயம்புத்தூர் வெடிகுண்டு விபத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகச் சிறிய அளவில் நடந்த விபத்தாகும். ஆர்.எஸ்.எஸ். கட்டடம் தகர்க்கப்பட்டபோது, 3 பேர்தான் உயிர் இழந்தார்கள். ஆனால், கோவை வெடிகுண்டு சம்பவம் அப்படிப்பட்டதல்ல. அதுமட்டுமல்ல; அப்போது ஆர்.எஸ்.எஸ். கட்டடத்தில் அந்த வெடிகுண்டுச் சம்பவம் நடைபெற்றபோது, இதில் தீவிரவாத அமைப்புகள் செயல்பட்டு இருக்கக்கூடும்; இது தமிழ்நாட்டை மட்டுமல்லாது, பிற மாநிலங்களையும் இணைக்கின்ற, பிற மாநிலங்களிலும் செயல்படுகின்ற தீவிரவாத கும்பல்கள், இதில் ஈடுபட்டு இருப்பார்கள் என்று கருதி, நாங்களாகவே அந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு விட்டோம். ஆனால் கோயம்புத்தூர்



தொடர் வெடிகுண்டு விபத்துக்களில், சம்பவங்களில், 60–க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டார்கள்; 400–க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தார்கள்; பல ஆயிரம் கோடிக்கணக்கான சொத்துக்கள் நாசப்படுத்தப்பட்டன. ஆனாலும், அவர்களுடைய அரசு சி.பி.ஐ. விசாரணைக்குக் கோரிக்கை வைக்கவில்லை; உத்தரவிடவில்லை. திரும்பத் திரும்ப எதிர்க்கட்சியில் இருந்த நாங்கள் அன்றைக்கு இதை சி.பி.ஐ. விசாரணைக்கு விட வேண்டும்; ஏனென்றால், மாநில உளவுத் துறைக்கு இதைப்பற்றி எதுவும் சரியாகத் தெரியவில்லை. ஆகவே, பெரிய தீவிரவாத அமைப்பு இதற்குப் பின்னால் இருக்கின்றது; சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று திரும்பத் திரும்ப கோரிக்கை வைத்தும்கூட, அவர்களுடைய அரசு அதை ஏற்கவில்லை. அதற்காக நான் உயர் நீதிமன்றத்தில்கூட வழக்குத் தொடர்ந்தேன். ஆனால், மாநில அரசு அதை எதிர்த்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.எஸ்.எஸ். அலுவலக வெடிகுண்டு சம்பவத்தில் 11 பேர் கொல்லப் பட்டார்கள் என்கின்ற தகவலை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி**: Speaker Sir, ...*(குறுக்கீடு)*

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...*(குறுக்கீடு)*

**திரு. பரிதி இளம்வழுதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை வெடிகுண்டு வழக்குத் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை பற்றி கோரினோம் என்று... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. புகழேந்தி பேசிக்கொண்டு இருக்கிறார். நடுவில் இவருக்கு தாங்கள் அனுமதி அளித்து இருக்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. புகழேந்தி, விளக்கம் சொல்லுங்கள் *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

**திரு. பரிதி இளம்வழுதி**: கமிஷன் போடப்பட்டது...*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. புகழேந்தி, நீங்களே, விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர் திறமையானவர், அவரே விளக்கம் சொல்லுவார். (குறுக்கீடுகள்)

**திரு. பரிதி இளம்வழுதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சி.பி.ஐ. என்ன வானத்திலிருந்து குதித்தவர்களா, தேவதூதர்களா என்று முதல்வர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. புகழேந்தி, நீங்கள் பேசுங்கள் (குறுக்கீடுகள்). நான் உங்களுடைய நேரத்திலேதான் கழிக்க வேண்டியிருக்கும்.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் நான் பதிலுக்குப் பதில், வார்த்தைக்கு வார்த்தை என்று சொல்லிக்கொண்டிருக்க விரும்பவில்லை. ஏனென்றால் பல்வேறு விபத்துக்களை, பல்வேறு செய்திகளை, பல்வேறு தகவல்களை, சூழ்ச்சிகளை, சூதுகளைப் பேசலாம். அதற்கெல்லாம் இப்போது நேரமில்லை. ஆனால் நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ளவும், கேட்டுக்கொள்ளவும் விரும்புகிறேன். என்னுடைய limit எனக்குத் தெரிந்து, நான் உரையாற்றுகிறேன். ஒரு Commission என்கின்றபோது, அதுகுறித்த தகவல்களையோ அல்லது விசாரணைக்குட்பட்ட பொருள்களையோ பேச முடியாது, பேசக் கூடாது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். எங்களுடைய இயக்கமும், எங்களுடைய மாண்புமிகு பேராசிரியர் அவர்களும் அதைத்தான் எங்களுக்குச் சொல்லித் தருகிறார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, நடைபெற்ற சம்பவம், அந்தச் சம்பவம் குறித்து, நள்ளிரவில் நடைபெற்ற அந்தச் சம்பவம் குறித்து, கைது குறித்து, மத்திய தேசிய மனித உரிமைக் கமிஷனில் புகார் கொடுக்கப்பட்டு, அங்கே விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அதைப் போல, வேளச்சேரியிலே வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுடைய இல்லத்திலே அசம்பாவிதங்கள் நடைபெற்றது; காவல் துறை குறித்து புகார் மனு மாநில மனித உரிமை ஆணையத்தில் கொடுக்கப்பட்டு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேயர் இல்லத்தில் எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை என்பதை உறுதியாகக் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மனித உரிமைக் கமிஷனுடைய முடிவுக்குப் பிறகு, விசாரணைக்குப் பிறகு வரலாம். அது குறித்து, எதற்காக நான் எழுப்பினேன் என்றால் அந்த மத்திய ஆணையத்திடமும், மாநில மனித உரிமை ஆணையத்திடமும், அரசு, இந்த அரசு மனு போட்டு நிறுத்துங்கள் என்று கேட்டு, நாங்கள் கமிஷன் போட்டிருக்கிறோம் என்று சொல்லி, இவர்கள் 7 ஆம் தேதி போடுகிற கமிஷன்; அது 2 ஆம் தேதி நடைபெறுகின்ற விசாரணை உத்தரவு; ஆகவே, நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது; நாங்கள் விசாரித்தே தீருவோம் என்று தேசிய மனித உரிமைக் கமிஷன் கொடுத்து, இன்றைக்குச் செய்தி கொடுத்தது. மாநில அளவிலே இருப்பதிலே நீதிமன்றத்திற்குச் சென்று இறுதி முடிவு சொல்லக்கூடாது என்று தடை வாங்கி இருக்கலாம்.

*முற்பகல் 11–15*

நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசு மத்திய, மாநில மனித உரிமை ஆணையத்தினுடைய முடிவுகளை ஏற்குமா, ஏற்காதா அல்லது அந்தக் கமிஷன்களை எப்போதுமே ஒப்புக் கொள்ளாதா, ஏற்றுக்கொள்ளாதா என்பதும் அவசர அவசரமாகச் சென்று போட்டதன் காரணமாக ஏற்கெனவே இங்கே போடப்பட்டிருக்கின்ற அந்தக் கமிஷன்மீது பாதிக்கப்பட்ட எங்களுக்கு, எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டது குறித்து போடப்பட்ட அந்தக் கமிஷன்மீது–ஊர்வலத்தில் நடைபெற்ற சம்பவங்களைக் குறித்து–ஊர்வலத்தில் யாருமே தாக்கப்படுகின்ற இடத்திலேபோய் தகராறு செய்யமாட்டார்கள். D.G.P. அலுவலகத்திலே, அத்தனை பேர் இருக்கின்ற இடத்திலே ஏதோ தகராறு நடந்தது; நாங்கள் செய்தோம் என்று சொன்னதற்கு (மணியடிக்கப்பெற்றது) – நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை– விசாரிக்கக்கூடிய ஒரு நிலையை இன்றைக்கு உருவாக்குகிறபோது–நான் கேட்க விரும்புவது, இந்தக் கமிஷன்கள்மீது எப்படி நம்பிக்கை வரும்? நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது; மாநிலத்திலே ஒரு நபர் கமிஷன் போடப்பட்டிருப்பதற்கு ஏற்கெனவே கூறுகள் சொல்லப் பட்டதா என்ற ஒரு ஐயம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிற காரணத்தால், நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரபூர்வமாக அரசு அமைத்திருக்கின்ற விசாரணைக் கமிஷன்களைக் குற்றம் கூறுவது, குறை கூறுவது, அந்தக் கமிஷன்களுக்கு உள்நோக்கம் கற்பிப்பது என்பது, The Commission of

Inquiry Act–ன்படி குற்றமாகும். சட்ட விரோதச் செயலாகும். மாண்புமிகு உறுப்பினர் இதைச் சட்டமன்றத்திற்குள் பேசுவதால், தப்பித்துக்கொள்கிறார். வெளியே பேசினால் கம்பி எண்ண வேண்டிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. புகழேந்தி (குறுக்கீடு)

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பிரச்சினைகளில் சட்டத்திற்கு மாறாக ஒரு கருத்தைத் தெரிவித்தால், அதற்காகத் தண்டிக்கப்பட வேண்டிய நிலைமை வரும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏற்கெனவே, அரசியலில் சில கருத்துகளை வலியுறுத்திச் சொல்வதற்காக சில தண்டனைகளை ஏற்றுக்கொள்வதற்குத் தயார் என்ற அடிப்படையிலேதான், இந்தக் கமிஷன் எங்களுக்கு நியாயம் வழங்காது என்ற கருத்தை முன்னாள் முதலமைச்சர் கலைஞர் தெரிவித்திருக்கிறார்களே தவிர, வேறல்ல. ஏற்றுக்கொள்வதாகவும், ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் சொல்ல, தனி மனித உரிமையில் நிச்சயமாக இடமிருப்பதாக நான் கருதுகிறேன். நீங்கள் விசாரணை செய்து தருகிற முடிவை உலகமே ஏற்றுக் கொள்ளட்டும். பாதிக்கப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்வதா; அல்லவா என்பது அவர்களைப் பொறுத்தது. அந்தக் கருத்தைத்தான் முன்னாள் முதலமைச்சர் தெரிவித்து, அந்த அடிப்படையிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்தார். அப்படித் தெரிவிக்கிற உரிமை நீண்டகாலமாக இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் கமிஷன்கள், இன்னும் தங்கள் பணியை முடிக்கவில்லை. இன்னும் தங்கள் அறிக்கைகளைக் கொடுக்கவில்லை. அதற்கு முன்பாகவே, முடிவு இப்படித்தான் இருக்குமென்று அவர்களாகவே முடிவு செய்து கொண்டு, அவர்களாகவே எண்ணிக்கொண்டு, யூகத்தின்பேரில், இப்படியெல்லாம் விமர்சிப்பது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிவு தவறாகத்தான் இருக்கும் என்ற கருத்தை நாங்கள் சொல்லவில்லை. முடிவு சரியாகக்கூட இருக்கலாம். ஆனால், நாளைக்கு என்ன முடிவு வரும் என்பதற்கான அடிப்படையை எண்ணிப்



பார்க்கிறபோது, ஒருவேளை எங்களுக்கு நியாயம் கிடைக்காமல் போகலாம் என்ற ஐயம்தான் எங்களுக்கு இருக்கிறது. ஆகவே, நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையே தவிர, முடிவு தவறாகத்தான் இருக்கும்; குற்றமாகத்தான் இருக்கும் என்று அந்த முறையில் நாங்கள் யாரும் பேசவில்லை. இன்னும் சொல்லப்போனால், கமிஷனைக் குறை சொல்லக்கூட நாங்கள் தயாராக இல்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் எங்கள்மீது பொய் வழக்குகளை ஜோடித்துவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் தனி நீதிமன்றங்களை அமைத்து, அவர்களே தேர்ந்தெடுத்த நீதிபதிகளை, தனி நீதிமன்ற நீதிபதிகளாக நியமித்து, அன்றைய முதலமைச்சரும், சட்ட அமைச்சரும், இங்கே எதிரில் உட்கார்ந்திருக்கிற திரு. துரைமுருகன் அவர்களும், அன்றைக்கு அமைச்சராக இருந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், இன்னும் பலரும், இங்கே உட்கார்ந்திருக்கிற மேயர் ஸ்டாலின் அவர்களும்கூட அன்றைக்கு என்னென்ன பேசினார்கள்? வழக்குகளைக் குறிப்பிட்டு, தீர்ப்பு இப்படித்தான் இருக்கும்; ஜெயலலிதா சிறைக்குச் செல்வார்; 30 ஆண்டுகள் சிறைக்குச் செல்வார்; அவர்கள் அதிலிருந்து தப்பிக்கவே முடியாது என்றெல்லாம் நீதிமன்றம் எவ்வாறு தீர்ப்பளிக்க வேண்டும் என்று இவர்கள் direction கொடுத்தார்களே, கோடிட்டுக் காட்டினார்களே, அதைப்போல நாங்கள் செய்யவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிற கருத்து, வெளியிலே பேசப்படுகிற, மேடையிலே பேசப்படுகிற, பொதுக்கூட்டங்களிலே பேசப்படுகிற அந்தக் கருத்துகளை வைத்து ஒரு முடிவைச் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு பேராசிரியர் அவர்கள்– (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் பொதுக்கூட்ட மேடையில் ஒன்று பேசிவிட்டு, சட்டமன்றத்தில் வேறு கருத்தைப் பேசக்கூடியவர்கள் அல்லர். எங்களுக்கு இரட்டை நாக்கு கிடையாது. எங்கே இருந்தாலும், ஒரே கருத்தை ஆணித்தரமாகச் சொல்வோம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேராசிரியர் அவர்களுடைய கவனத்திற்காகச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டமன்றத்திலேயே அப்படிப் பேசப்பட்டிருக்கிறது. சட்டமன்றத்திலேயே விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிற சூழ்நிலையிலேயே முதலமைச்சர் அவர்களுடைய பெயரைக் குறிப்பிட்டு அவர் தண்டிக்கப்படப்போவது உறுதி, உள்ளே போகப்போவது உறுதி என்றெல்லாம் சட்டமன்றத்திலே பேசப்பட்டு இருக்கிறது. அவைக்குறிப்பிலே இருக்கிறது. அதைத்தான் தங்களுக்கு நான் ஞாபகப்படுத்துகிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் என்ன பேசினாலும், நீதிமன்றங்கள் மூலமாகத்தான் முடிவெடுக்கப்படுகின்றன. யார் என்ன பேசினாலும் கடைசியில் நீதிமன்றங்கள் மூலமாக -(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உறுப்பினர்கள் அமர்ந்துகொண்டு பேசக்கூடாது.

**பேராசிரியர் க. அன்பழகன்**: நீதிமன்ற முடிவுகள் வருவதைக் கருதி sub–judice என்ற அடிப்படையில் பல கருத்துகளை இங்கே பேச முடியாத நிலைமையிருக்கிறது என்பதைத் தாங்கள் குறிப்பிட்டீர்கள். அந்த அடிப்படையில் நீதிமன்றங்கள் எந்தவகையிலே தீர்ப்பு அளிக்கக்கூடிய நிலைமை எதிர்காலத்தில் ஏற்பட்டாலும், அதற்கு எல்லோருமே கட்டுப்பட்டவர்கள் என்ற முறையில் இந்த அவையில் எந்தவகையிலேயும் sub–judice என்ற வகையான எந்தக் கருத்தையும் நாங்கள் தெரிவிக்க விரும்பவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, sub–judice ஆக இருக்கிற ஒரு விஷயத்தைப்பற்றி, நீதிமன்றத்திற்கு முன்பு இருக்கின்ற ஒரு வழக்கைப்பற்றி இங்கே எதுவும் பேசக்கூடாது என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அடிக்கடி கூறுகிறார். ஆனால், தாங்களே குறிப்பிட்டபடி கடந்த ஆட்சியின்போது தனி நீதிமன்றம் விசாரித்துக் கொண்டிருக்கிற வழக்குகளைப்பற்றி தீர்ப்பு இப்படித்தான் இருக்கும்; ஜெயலலிதாவுக்கும், அவருடைய அமைச்சரவை சகாக்களுக்கும் தண்டனை வழங்கப்படுவது உறுதி; ஜெயலலிதா சிறைக்குச் செல்வது உறுதி என்றெல்லாம் இந்த அவையிலே பேசப்பட்டதே, அப்போது அன்றைய முதல்வர் பக்கத்திலேயே அமர்ந்திருந்த மாண்புமிகு பேராசிரியர் அவர்கள், இது sub–judice, இதைப்பற்றி இங்கே பேசக்கூடாது என்று ஏன் அவருக்குச் சுட்டிக் காட்டவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. துரைமுருகன் அவர்களே, உட்காருங்கள். பேராசிரியர் விளக்கம் சொல்லட்டும். உட்காருங்கள். சட்டமன்ற நடைமுறை விதிகள், உரையாற்றுகையில் உறுப்பினர்கள் கடைபிடிக்கவேண்டிய அந்த விதிகளில், 92–வது விதி, நீதி விசாரணையில் இருக்கும் எப்பொருளின்மீதும் தம் கருத்தைச் சொல்லவோ, அப்பொருள்பற்றிக் குறிப்பிடவோ கூடாது என்பதுதான். ஆகவே, அதை நீங்கள் இப்போது கடைப்பிடியுங்கள். கடந்த காலத்திலே கடைப்பிடிக்கா விட்டாலும், இப்போதாவது கடைப்பிடியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணைக் கமிஷன் ஒரு விஷயத்தைப்பற்றி விசாரித்துக் கொண்டிருக்கும்போது, அதைப்பற்றி இந்த அவையில் கூறக் கூடாது என்று சட்டப் பேரவை விதியில் இருக்கிறது. விசாரணைக் கமிஷனில் விசாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் விஷயத்தைப் பற்றியே இங்கே பேசக்கூடாது என்றிருக்கும்போது, விசாரணைக் கமிஷன் நடத்தும் நீதிபதிகளுக்கே இவர்கள் உள்நோக்கம் கற்பித்து, களங்கம் கற்பித்துப் பேசுவது எவ்வகையில் நியாயம்? (மேசையைத் தட்டும் ஒலி) அது முறையற்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கங்களைச் சொன்னார்கள். நான் அதன் உள்ளே போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. புகழேந்தி அதற்கு உள்ளே இல்லை, குறுக்கீடுகள் சேர்க்காமல் 10 மணித்துளிகள் பேசியிருக்கிறீர்கள். இன்னும் 5 மணித்துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் கம்பி எண்ணவேண்டி வரும் என்று ஒரு வார்த்தையை இங்கே பயன்படுத்தியிருக்கிறார்கள். நானும் ஒரு வழக்கறிஞன்தான். நானும் நீதிமன்றத்திலே பணியாற்றக்கூடியவன்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை. இல்லை. சட்டமன்றத்திலேயிருந்து இப்போது பேசுவதைப் பற்றி குறிப்பிடவில்லை. வெளியிலே பேசினால் என்றுதான் குறிப்பிட்டார்கள்.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேர்மையாக இருக்கின்ற இந்தக் கலைஞரின் தம்பிக்கு கம்பி எண்ணுகின்ற நிலைமை என்றைக்குமே வராது. ஆனால் காலம் பதில் சொல்லும், யார் கம்பி எண்ணப்போகிறோம் என்று. *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக, பத்திரிகைத் துறையிலே இருக்கக் கூடிய அந்தப் பத்திரிகையாளர்கள் சூழ்நிலைகள். நீங்கள் சொல்வதைப் போல் அந்தக் கமிஷன் இருப்பதற்குள்ளே நான் போகவில்லை. ஆனால் நேற்றைக்கு, மறைந்த தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மூப்பனார் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்துகின்ற அந்த நிலையில் ஓர் அதிகாரி, பல செய்தியாளர்களைத் தள்ளிக் கொண்டுபோய் ஓர் அறையிலே வைத்து, பூட்டி சாவியை வைத்துக்கொண்டு, ஒரு மணி நேரம் கழித்து அந்தக் கட்சியினுடைய செய்தித் தொடர்பாளர் திரு. கோபண்ணா அவர்கள் கேட்டுக்கொண்டதற்குப் பிறகும்கூட, திறந்து விடாமல் அவரை மட்டும் விட்டு பிறகு வெளியிலே விட்டிருக்கிறார்கள் என்றால், நான் தயவுசெய்து கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், தொடர்ந்து பத்திரிகையாளர்களுக்கு நிலைமைகள் என்று வருகின்றபோது, அவர்களுக்கு இந்த ஆட்சியிலே ஏதோ சீருடை வழங்குகின்ற ஒரு நிலையைக்கூடச் சொன்னார்கள்; அதைவிட கவச உடை வழங்கலாம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து பத்திரிகையாளர்களுக்கு எவ்வித அநீதியும் இழைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று, மறைந்த பெரியவர் மூப்பனார் அவர்களின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றபோது, நானும் அங்கே சென்றிருந்தேன். எல்லா பத்திரிகையாளர்களும் அங்கேயே இருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்றதாக எனக்குத் தெரியவில்லை; என் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. அப்படி ஏதாவது நடைபெற்றிருந்தால் புகார் வந்தால் அதைப்பற்றி விசாரிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11–25*

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணைக்கு ஒப்புக்கொண்டதற்கு என்னுடைய நன்றி. இன்னொன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். குறுகிய காலமாக, கடந்த 3 மாத காலமாக காவலர்கள், அதைப்போல ஆய்வாளர்கள், துணை



ஆய்வாளர்கள், இன்னும் மாவட்ட அளவிலே இருக்கின்றவர்கள், பல்லாயிரக்கணக்கான பேர் கடமை வீரர்களாக காக்கிச் சட்டை அணிந்துகொண்டு, இரவு பகலாக பாடுபடுகின்ற அந்தச் சூழ்நிலையை திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்போதுமே எண்ணிப் பார்த்து, அவர்களுடைய குடும்ப நலன், அவர்களுடைய பிள்ளைக் குட்டிகள், மற்றுமுள்ள அனைவருடைய நலனும், படிப்பு வசதியிலிருந்து மருத்துவ வசதியிலிருந்து அனைத்தும் செய்கின்ற ஒரு நிலையை, எப்போதுமே கலைஞர் அரசு செய்துகொண்டிருந்தது. உயர் அலுவலர்களுக்கும் அந்த வசதிகள் செய்து தரப்படுகின்றன. இந்த 3 மாத காலமாக பத்திரிகைகளிலே பேட்டி தருகின்ற, அதுவும் பேட்டி தருகின்றபோது, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சொல்கிறேன். Contradictions – முரண்பாடுகள் வருகின்ற காரணத்தால், அரசின் நிலையும் அவர்களுடைய நிலையும், துறையின் நிலையும் வேறுவிதமாகப் போவதற்கு மக்களுக்கு ஐயம் ஏற்படுவதற்கு வழிவகை கண்டு விடுகிறது. ஆகவே, அந்தப் பேட்டி கொடுப்பது குறித்துகூட நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஊர்வலம், ஊர்வலம் என்றால் வேறு ஒன்றும் அல்ல. பிள்ளையார் ஊர்வலத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அனுமதி மறுக்கப்பட்ட நேரத்திலே மாநகரக் காவல் துறை ஆணையாளர் சொல்கிறார், விநாயகர் ஊர்வலம் நடந்தால் அதில் சமூக விரோத சக்திகள் புகுந்து கலகம் செய்யத் திட்டமிட்டிருப்பதாக போலிஸிற்கு தகவல் வந்திருக்கிறது என்கிறார். அதைச் சொல்லியதற்குப் பிறகு, அது உண்மையாக இருந்தால் அந்தத் தகவல், பிறகு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அழைத்துப் பேசி இராமகோபாலன் அவர்களிடம், சட்டம்–ஒழுங்கு கெடாமல் அமைதியாக ஊர்வலத்தை நடத்துவோம் என்று அவர்களிடம் எழுதி வாங்கிக்கொண்டு, பிறகு அனுமதி அளிக்கிறார்கள், இரண்டு நாள் கழித்து. நான் கேட்க விரும்புகிறேன், ஏற்கெனவே மாநகர ஆணையருக்கு வந்த தகவல் உண்மையா? பொய்யா? உண்மை என்றால்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் எந்த முரண்பாடும் இல்லை. மாநகரக் காவல் துறைத் தலைவருக்கு வந்த தகவல் உண்மைதான். அதன்பேரில் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுத்து அந்தச் சமூக விரோதிகளை எல்லாம் அவர்கள் ஏற்கெனவே அப்புறப்படுத்திவிட்டார்கள்; கைது செய்துவிட்டார்கள். மற்றபடி இந்த ஊர்வலத்தில் வருபவர்களே, அவர்களுக்காக வகுக்கப்பட்ட பாதையை விட்டு வேறு பாதையில் செல்லக்கூடும், வேறுவிதமான பிரச்சினைகளை எழுப்பக்கூடும் என்ற தகவல் வந்ததால், அவர்களையும் அழைத்து எந்தப் பிரச்சினைக்கும் இடம் தராமல், நீங்கள் ஊர்வலத்தை நடத்துவீர்களா என்று கேட்டதற்கு

அவர்கள் ஒப்புக்கொண்டதன்பேரில் அனுமதி அளிக்கப்பட்டது. எந்த அசம்பாவிதமும் இல்லாமல் வெற்றிகரமாக காவல் துறையினர் இந்த ஊர்வலத்தை நடத்திக் காட்டிவிட்டார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினரால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை போலும்! (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கலைஞருடைய ஆட்சியில் இப்படியெல்லாம் எழுதி வாங்கிக் கொள்ளாமலேயே இந்தப் பிள்ளையார் ஊர்வலங்கள் அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடந்திருக்கிறது என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன். இதிலே இன்னொன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. புகழேந்தி, இன்னும் இரண்டு மணித்துளிகளில் உரையை முடியுங்கள்.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆரோக்கியமான விவாதம்தானே? இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசில் ஆளும் கட்சிக்கு என்கிற ஒரு நிலை வருகின்றபோது காவல் துறை சாதகமாக இருக்கின்ற சூழ்நிலையைப் பார்த்து நம்முடைய மக்கள் ஐயப்படுகின்ற அளவிற்குக் கொண்டுபோய் இருக்கலாமா? அப்படி என்றால் மக்களுக்குக் காவல் துறை மீது நம்பிக்கை வருமா? நான் கேட்க விரும்புகிறேன். இது ஒரு பெரிய செய்தியா என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், அதன் உள்ளே ஆழமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இராஜரத்தினம் ஸ்டேடியத்திற்குப் போகிறார். காவல் துறை அலுவலர்கள் எல்லாம் அங்கே இருக்கிறார்கள். அந்த விழா, நியாயமானது, ஏற்றுக்கொள்ளக்கூடியது. ஆனால் சீருடை அணிந்த ஒரு காவலர் மாண்புமிகு முதல்வர் அவர்களை மூன்று முறை--காக்கிச் சட்டை போட்டுக்கொண்டு சீருடையோடு இருந்து--வாழ்க, வாழ்க என்று குரல் கொடுப்பது--அவர் அந்தக் காக்கிச் சட்டை இல்லாமல் குரல் கொடுப்பது என்பது வேறு--ஆனால் உயர் அலுவலர்கள் இருக்க, இதுவொரு தவறான முன்னுதாரணம் அல்லவா? நாங்கள் அப்படிச் சொல்வதாலே எங்களுக்குப் பதவி உயர்வு வரும் என்றுகூட அவர்கள் கருதி, எல்லோரும் அப்படிச் செயல்பட்டால் காக்கிச் சட்டைக்குள் புகுந்த பிறகு, கடமை வீரன்; சாதி இல்லை, மதம் இல்லை, அரசியல் இல்லை, எந்த நிலையும் இல்லை, கடமைதான் முக்கியம் என்று இருக்கின்ற அந்த நிலையிலே இதுவரை சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற அந்தத் தோழர்கள் பல பேர் காவல் துறையிலேகூட மனம் புண்படும்படியான ஒரு நிகழ்வு



அது. இவையெல்லாம் மக்களிடம் ஓர் ஐயப்பாட்டை உருவாக்குவதற்கான சூழ்நிலைகள். அந்த முன்மாதிரிகள் தொடரக் கூடாது என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-30*

அதைப்போல உயர் அலுவலர்கள். உயர் அலுவலர்கள் என்றால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியதைப்போல திறமை உள்ளவர்களாக இருக்கக்கூடியவர்கள்கூட இருக்கலாம். காவல் நிலையத்தில் 2 நாட்களுக்கு முன்பாக ஓர் ஆய்வாளர் – ஒரு துணை ஆய்வாளர் நிலையிலே உள்ளவர்--மண்ணெண்ணெயைத் தன்மீது ஊற்றிக்கொண்டு, தன்னுடைய மேலதிகாரி–உதவி கமிஷனர்–மூலமாக mental torture–மிக அதிகமான மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கிறேன் என்று தன்னைத் தானே கொளுத்திக் கொள்ளக்கூடிய அளவு முயன்று, அது தடுக்கப்பட்டு, அவர் குடும்பம் எல்லாம் அழுதிருக்கிறது. இப்படிப்பட்டவர்களை நாம் வைத்திருக்கிறோம். இப்படிப்பட்டவர்கள் எப்படி மக்களுடைய நண்பர்களாக இருப்பார்கள்? மக்களின் நண்பனாகப் பழக வேண்டிய காவல் துறை, மக்களுடைய நம்பிக்கையை இழந்து போகின்ற அளவுக்கு இப்படிப்பட்ட செயல்பாடுகள், அந்தச் சூழ்நிலைகள் எல்லாம், யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அதைப்போலவேதான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. புகழேந்தி, ஏறத்தாழ 40 மணித் துளிகள் ஆகிவிட்டன. இன்னும் இரண்டு நிமிடங்களில் உங்களுடைய பேச்சை முடியுங்கள்.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றை இறுதியாகச் சொல்வதற்கு முன்பாக, ஒன்றைக் குறிப்பிட வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் சொல்வதற்கு முன்பாக நான் முடித்து விடுகிறேன். இந்த ஆட்சியினுடைய சட்டம்–ஒழுங்கு நிலைமைகள் பற்றி எல்லாம் குறிப்பிட வேண்டும். காலம் இல்லை என்பதால் ஒன்றை மட்டும் சொல்கிறேன். சட்டம்–ஒழுங்கு நிலைமைகள் பற்றி நானும் குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் குறிப்பிடுகிறோம். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிற திரு. பரிதி இளம்வழுதியாக இருந்தாலும், திரு. ரங்கநாதனாக இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு டாக்டர் பொன்முடியாக இருந்தாலும், முன்னாள் அமைச்சருடைய தம்பி தேவராஜன் அவர்களாக இருந்தாலும்,

எங்களுடைய தலைவர், அதைப்போல, எங்களுடைய வணக்கத்திற்குரிய மேயர் ஆகிய அத்தனை பேர்கள் மீதும் தொடர்ந்து பல வழக்குகள். நான் குறிப்பிட விரும்புகிறேன்; தவறான நிலையிலே போடப்பட்ட...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுபவர்கள் எல்லாம் எப்போது கைது செய்யப்பட்டார்கள், எதற்காகக் கைது செய்யப்பட்டார்கள் என்ற விரிவான விளக்கங்களை ஏற்கெனவே இந்த அவையில் அளித்திருக்கிறேன் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை.

இன்னொன்று, என்னுடைய கருத்துக்கு இறுதியான நிலையாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினரும், என்னுடைய மரியாதைக்குரியவரும், இன்னும்கூடச் சொல்லப் போனால், மூத்தவர், முதிர்ந்தவர், இங்கே உறுப்பினராக இருக்கக் கூடிய அண்ணன் லத்தீப் அவர்கள், 26–8–1996 அன்று ஒன்றைப் பேசினார். இதே அவையில் பேசி, பதிவு செய்யப்பட்டது. அப்போது சொன்னார்: "What is the contribution of the Jayalalithaa Government? It is only to damage the image, change the image and tarnish the image of all public men in this State and elsewhere. Administration has been thrown into the dustbin" என்று கூறியிருக்கிறார். இதுதான் அவருடைய contribution என்றெல்லாம் சொல்லி, போலீஸ்காரர்கள், காவல் துறையைச் சார்ந்தவர்கள் இப்படியே போய்க் கொண்டிருப்பது நல்லதல்ல என்ற ஒரு கருத்தைச் சொன்னார். அதை நான் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சூழ்நிலையில்தான், அதை மாற்றியமைக்க, எங்களுடைய அன்புத் தலைவர் அன்றைக்கு சில கருத்துக்களைச் சொன்னார்கள் என்பதையும் சொல்லி, தந்தை பெரியார் அவர்கள் 1948 ஆம் ஆண்டு ஒரு முறை அன்றைய அரசால் கைது செய்யப்பட்டபோது அன்றைக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள், எழுதினார்கள், 'அடக்கு முறையைக் கையிலே ஆயுதமாக வைத்துக்கொண்டு இருக்கிற சர்க்கார், தலைவர்கள் கைது செய்யப்பட்டதற்குப் பிறகு, நாட்டின் நிலைமைகளைத் திரும்பிப் பார்க்க வேண்டும், நாட்டின் நிலைமைகளைத் திரும்பிப் பார்க்க வேண்டும் என்றுதான்'...



**திரு. ம. அப்துல் லத்தீப்**: பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அவர் பேசி முடித்து விடட்டும்.

**திரு. இ. புகழேந்தி**: 'நாட்டின் நிலைமையைத் திரும்பிப் பார்க்க வேண்டும் என்று தெரிந்தால், அந்த அரசு தன்னை மாற்றிக்கொள்ளும்; தன் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்' என்று சொன்னார்கள். தந்தை பெரியார் அவர்கள் அன்றைக்குக் கைது செய்யப்பட்டபோது அண்ணா அவர்கள் சொல்லிய அந்த வார்த்தை, இன்றைக்கும் தலைவர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்படுகின்றபோது, பேரறிஞர் அண்ணாவே சொல்லியதைப் போல அந்த நிலையே எங்களுக்கு உருவாகியது. (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. புகழேந்தி, பேச்சை முடித்துவிடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின். (குறுக்கீடுகள்) திரு. புகழேந்தி அவர்களே, உங்களுக்கு வழங்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. உச்சகட்டத்தோடு முடியுங்கள். (குறுக்கீடுகள்) கடைசி வாக்கியத்தோடு முடியுங்கள்.

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட ஒன்றைப் பற்றி நான் இங்கே விளக்கம் கூற விரும்புகிறேன். இராஜரத்தினம் ஸ்டேடியத்தில் நடைபெற்ற விழாவின்போது சீருடை அணிந்த காவலர், மாண்புமிகு முதல்வர் வாழ்க என்று கோஷமிட்டார் என்று கூறுவது உண்மைக்குப் புறம்பான செய்தி. அப்படி எதுவும் நடைபெறவில்லை. வேண்டுமென்றே பத்திரிகைகளில் அத்தகைய தவறான செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் இங்கே சில கருத்துகளைத் தெரிவித்ததாகக் கூறினார். இந்த அரசாங்கத்தைத் தூக்கி குப்பைத் தொட்டியில் எறிய வேண்டும் என்று அவர் பேசியதாகக் கூறினார். பெரியவர் லத்தீப் என்ன கூறினாலும் அதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. எங்களுக்கு மக்கள் தீர்ப்புதான் மகேசன் தீர்ப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் ஏற்கெனவே தி.மு.க. அரசை குப்பைத் தொட்டியில் தூக்கி எறிந்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே யாரைக் குப்பைத் தொட்டியில் தூக்கி எறிய வேண்டும்; யாரை அரியணையில் அமர்த்த வேண்டும் என்பது (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்குத் தெரியும். மக்கள் எங்களுக்கு நற்சான்றிதழ் கொடுத்திருக்கிறார்கள்; ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். அதுவே எங்களுக்குப் போதுமானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. புகழேந்தி, கடைசி வாக்கியத்தோடு உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்**: பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அவர் பேசி முடித்து விடட்டும்.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தாய்ப்பாக ஒன்றைச் சொல்லி நான் முடிக்க விரும்புகிறேன். இந்த ஆட்சியிலே–இதுவும் ஒரு எதிர்க்கட்சியினுடைய கடமை என்ற முறையில் சொல்கிறேன்–மதுரை அருகில் முடக்கத்தான்பாண்டி கொலை, ராமநாதபுரம் மாவட்டத்தில் ஜான்பாண்டியன் கட்சியைச் சேர்ந்த 2 பேர் கொலை, நாகர்கோயிலில் ஈவ் டீஸிங்கில் ஒரு மாணவி தற்கொலை; நாகர்கோயிலிலே ராகிங் செய்து இரண்டு பள்ளி மாணவிகள்மீது ஆசிட் வீச்சு, ரயிலில் வழிப்பறியிலிருந்து தப்பிக்க 2 பெண்கள் கீழே குதித்து சாவு, பொய் வழக்குக்குப் பயந்து ரமேஷ் குடும்பத்தோடு தற்கொலை, காட்பாடி வெடிவிபத்தில் 24 பேர் பலி (குறுக்கீடு) ஏர்வாடி மனநலக் காப்பகத் தீ விபத்து, (குறுக்கீடு) கலைஞர் கைதின்போது 67 பேர் சாவு, ஆகவே...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: எல்லாவற்றுக்கும் முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பல சம்பவங்களைப் பட்டியல் போட்டு இங்கே கூறினார். எந்தவொரு ஆட்சிக் காலத்திலும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுவது சகஜம்தான். குற்றங்களே நடைபெறாத ஆட்சி இல்லை. அந்தக் குற்றங்களின் விகிதத்தைத்தான், விகிதாச்சாரத்தைத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். மற்றபடி, அவர் கூறுகின்றபோது பொய் வழக்குகளுக்குப் பயந்து ரமேஷ் குடும்பம் தற்கொலை என்று இங்கே குறிப்பிட்டார். ரமேஷ் என்பவர்மீது எந்தவிதமான பொய் வழக்குகளும் போடப்படவில்லை. ரமேஷுடைய



சாவு தற்கொலை இல்லை என்பதைக்கூட இப்போது காவல் துறையினர் கண்டுபிடித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ரமேஷுனுடைய குடும்பம் ஏன் மரணம் அடைய நேர்ந்தது என்பதைப் பற்றி எங்களைவிட அவர்களுடைய கட்சியில் உள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விரும்பினால், அவர்கள் அந்த உண்மைகளை வெளியிடலாம். இல்லையேல் உண்மை வெளிவந்தே தீரும். ஒருநாள் அதற்கு பதில் சொல்லவேண்டிய காலம் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. புகழேந்தி, உங்களுக்கு வழங்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) திரு. ஆஸ்டின். (குறுக்கீடு) அனைவரும் உட்காருங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அண்ணன் லத்தீப் அவர்கள் பிறகு பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்போது விளக்கம் சொல்லலாம் (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி**: பேரவைத் தலைவர் அவர்களே,...

***திரு. துரைமுருகன்**: Point of Order, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அவருக்கு ஏற்கெனவே நிறைய நேரம் வழங்கப்பட்டுவிட்டது. 50 மணித்துளிகள் ஆகிவிட்டன.

**திரு. துரைமுருகன்**: நான் அந்தப் பேச்சுக்குப் போகவில்லை. Point of Order, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் எதிர்க்கட்சியிலே பேசுகிறார். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறார்கள். நீங்கள் அவர் பேச்சை அனுமதிப்பதற்கும், போதும் என்று நிறுத்துவதற்கும் உங்களுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் ஒவ்வொரு முறையும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகிறபோது, ஒரு நூறு பேர் எழுந்துகொண்டு, 'ஆ', உட்கார், உட்கார், என்று சொல்வது (குறுக்கீடு) This attitude... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. துரைமுருகன் அவர்களே, உட்காருங்கள். இதெல்லாம் Point of Order இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) எல்லோரும் அமருங்கள். திரு. துரைமுருகன், உங்களுக்கு விளக்கம் சொல்கிறேன்.

**திரு. துரைமுருகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் இந்தக் கூட்டத் தொடரில் கண்ணியத்தோடு நடந்துகொண்டிருக்கிற இந்த அவைக்கு இது சரியாக இருக்காது என்பதுதான் என்னுடைய கணக்கு. அவர்கள் வேண்டுமானால் 100 பேர் இருக்கலாம். நாங்கள் 10 பேராக இருக்கலாம். ஆனால், குரல் கொடுக்க முடியாது என்பதல்ல. ஆனால், சபாநாயகர் அவர்கள் அதை விரும்புகிறாரா, முதலமைச்சர் அதை விரும்புகிறாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: முதலமைச்சர் அவர்கள் விரும்பாத காரணத்தினால்தான் பின்னால் திரும்பி அமரச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அதை நான் விரும்பவில்லை. அவ்வப்போது ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு ஆத்திரமூட்டும் வகையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகின்றபோது (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் குரல் எழுப்புகிறார்கள். அப்போதெல்லாம் தவறாமல் நான் எழுந்து நின்று எல்லோரையும் கட்டுப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறேன். அதையும் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய ஆட்சி இருந்தபோது, அவர்கள் அறுதிப் பெரும்பான்மை பலத்தோடு இந்த அவையில் வீற்றிருந்தபோது, 160–க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருந்தபோது, எங்களுடைய உறுப்பினர்கள் வெறும் 4 பேர் இருந்தபோது, இப்படிக் கூச்சல் போட்டு அவர்களைப் பேச விடாமல் தடுக்கவில்லையா? மாண்புமிகு உறுப்பினர், தான் அமைச்சர் என்பதைக்கூட மறந்து அவரும் எழுந்து கூச்சல் போடவில்லையா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–40*

**திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. துரைமுருகன், இதையெல்லாம் காலம் காலமாக நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.



**திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இவர்கள் ஒரு 160 பேர் இருந்தார்கள். 4 பேர்கள் அண்ணா தி.மு.க.–விலே இருந்தார்கள், அப்போது இவர்கள் கூச்சல் போடவில்லையா என்று கேட்டார்கள். ஆனால், நாங்கள் கூச்சல் போடாமல் அமைதியாக இருந்தபோதுதான், நான்கு பேரிலே ஒருவர் வந்து வீரபாண்டி ஆறுமுகம் மூக்கிலே குத்திவிட்டார். அதையும் நாங்கள் பொறுத்துக் கொண்டுதான் இருந்தோம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார். அப்படி செயல்பட்ட உறுப்பினர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினராக இருக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஆஸ்டின்.

**திரு. இ. புகழேந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: முடித்துக்கொள்ளுங்கள். திரு. புகழேந்தி, போதும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அண்ணன் லத்தீப் அவர்கள் இப்போது விளக்கம் சொல்ல வேண்டுமா? நீங்கள் பேசும்போது சொல்லலாமே! (குறுக்கீடு) சரி! சொல்லிவிடுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் நான் முந்தையதினம் பேசியபோது பயன்படுத்தியதாக சில வார்த்தைகளைச் சொன்னார்கள். அது இந்த அவையிலே பேசப்பட்டதாகவும் அவர்கள் சொன்னார்கள். பேசியவன் நான் இங்கே உட்கார்ந்து இருக்கிறேன். அவையிலே எல்லோரும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அன்றைக்கு இருந்தார்கள், கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்படி நான் பேசியிருந்தால் தயவுசெய்து தங்களை நான் வேண்டிக்கொள்வது...

**திரு. இ. புகழேந்தி**: பேரவைத் தலைவர் அவர்களே, அது 1996–ல் பேசியது, பழைய சம்பவம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பழைய சம்பவத்தைச் சொல்கிறார் அவர்.

**திரு. ம. அப்துல் லத்தீப்**: பழைய சம்பவமா? உங்களோடு சேர்ந்து அப்போது எவ்வளவோ பேசியிருப்பேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின்மீது நடைபெறக்கூடிய விவாதத்திலே பங்கெடுத்துக் கொண்டு எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்காக எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே இரண்டு கவன ஈர்ப்பு அறிவிப்புகள் இந்தத் துறை தொடர்பாக தங்களிடத்திலே கொடுக்கப்பட்டு, அவற்றிற்கு இன்னும் வாய்ப்பு வராத காரணத்தால் அதைப் பற்றி முதலிலே நான் குறிப்பிட்டு விட்டு, இரண்டாவதாக மானியக் கோரிக்கை பற்றிப் பேசுகிறேன்.

ஏற்கெனவே இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தின் மூலமாக உடல் திறன் தேர்வும், எழுத்துத் தேர்வும் முடிந்துவிட்டது. நேர்முகத் தேர்வுக்காக 1, 2, 3 ஆகிய தேதிகளில் தனித்தனியாக அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறைக் கண்காணிப்பாளர்களுடைய மாநாட்டைச் சென்னையிலே நடத்திய காரணத்தால் அந்தத் தேர்வு வாரியத்தின் மூலமாக நடைபெற வேண்டிய அந்த நேர்முகத் தேர்வு ஒத்திவைக்கப்பட்டு, 16, 17, 18 ஆகிய தேதிகளில் நடத்தப்படும் என்று அவர்களுக்குத் தனியாக அழைப்பு அனுப்பாமல் பத்திரிகைகள் மூலமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனவே, எழுத்துத் தேர்வை முடித்துவிட்டு நேர்முகத் தேர்விற்குக் காத்திருந்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கிட்டத்தட்ட 50, 60 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் 15, 16 ஆகிய தேதிகளில் தூத்துக்குடிக்குச் சென்று, அங்கே அந்த நேர்முகத் தேர்விலே கலந்துகொள்ளச் சென்றபோது ஏற்கெனவே 6, 7, 8 ஆகிய தேதிகளில் அந்தத் தேர்வை முடித்துவிட்டோம், நீங்கள் வராத காரணத்தால் உங்களுக்கு absent போட்டுவிட்டோம் என்று திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்கள். முறைப்படி தேர்வு தள்ளி வைக்கப் பட்டிருந்தால் அதிகாரிகள் அவர்களுக்குத் தனியாக அழைப்பு அனுப்பியிருக்க வேண்டும். ஆனால், பத்திரிகைகளில் கொடுத்த அந்தத் தேதியில்கூட நடத்தாமல் அதற்கு முன் தேதியில் தேர்வை நடத்திவிட்டு



இன்றைக்கு அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு, தனியாக ஒரு நேர்முகத் தேர்வை பாதிக்கப்பட்டவர்களுக்கு நடத்தி இந்தப் பட்டியலோடு அதைச் சேர்க்க வேண்டும் என்று நான் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்து இருந்தேன். அதை நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே eve–teasing வழக்குகள் இப்போது அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே மேய்க்கா மண்டபம் பக்கத்திலே சரிதா, சபிதா என்ற இரண்டு மாணவிகள் tuition படிக்கச் செல்கின்றபோது ஒரு இளைஞரால் அன்றைக்குத் திராவகம் வீசப்பட்டு, அவர்களுடைய முகம் வெந்து போன நிலைமைகள் எல்லாம் பத்திரிகைகளிலே பார்த்தோம். அந்தக் குற்றவாளிகூட அந்போது கைது செய்யப்படாமல் அவர் கோர்ட்டிலே வந்து சரணடைந்து....

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கிறார். மாணவிகள் மீது ஆசிட் ஊற்றிய அந்த இளைஞர் கைது செய்யப்பட்டார். அவர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த மாணவிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நல்லவிதத்தில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்புகூட, மாவட்டக் கலெக்டரோடு தொடர்பு கொண்டு அந்த மாணவிகளின் நிலையைப் பற்றி விசாரித்தபோது அவர்கள் இப்போது நன்றாக இருக்கிறார்கள், சகஜ நிலைக்குத் திரும்பிவிட்டார்கள் என்று தெரிய வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆஸ்டின்**: மாண்புமிகு முதலமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. ஏற்கெனவே மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள், இந்தச் சம்பவம் நடந்தவுடன் அவர்களைச் சென்று பார்த்தபோது, பழைய நிலைக்கு அவர்களுடைய முகம் வருவதற்காக அரசின் மூலமாக plastic surgery செய்து கொடுக்கப்படும் என்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் இரண்டு நாட்களுக்கு முன்பு, மாவட்டக் கலெக்டரோடு தொடர்பு கொள்ளப்பட்டது. அந்த

மாணவிகளுக்கு plastic surgery தேவைப்பட்டால், அவர்களை அரசு செலவில் சென்னைக்கு அழைத்து வந்து அவர்களுக்கு இங்கே அந்த plastic surgery–ஐச் செய்யலாம் என்பதற்காகத்தான் கலெக்டரிடம் விசாரித்ததற்கு, கலெக்டர், இப்போது அவர்கள் நன்றாக இருக்கிறார்கள். சாதாரண நிலைக்கு அவர்கள் திரும்பிவிட்டார்கள். ஆகவே, plastic surgery செய்யவேண்டிய அவசியம் எதுவுமில்லை என்பதைத் தெரிவித்துள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆஸ்டின்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போன்று, கடந்த 10, 15 நாட்களுக்கு முன்பாக ஆசாரிப்பள்ளம் பகுதியிலே அமுதா என்ற ஒரு பெண் eve–teasing கொடுமையினால் தற்கொலை செய்து இறக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிலே, காவல் துறையினர் ஒன்றிரண்டு பேரைக் கைது செய்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, வழக்கிலே சம்பந்தப்படாத, குற்றத்திலே சம்பந்தப்படாத ஒரு பெண்மணியும் அங்கே கைது செய்யப்பட்டிருக்கிறார். eve–teasing கொடுமை என்று சொல்கிறபோது, ஒரு பெண்ணுக்கு இழைக்கக்கூடிய கொடுமை. அதைச் செய்யக்கூடிய அந்தச் சமூக விரோதிகள்தான் கைது செய்யப்பட வேண்டும். அந்த செல்லம்மாள் என்பவர் நாகர்கோவில் தொகுதிக்கு உட்பட்டவர். சம்பவம் நடந்த இடம் ஆசாரிப்பள்ளம் பகுதி. ஆசாரிப்பள்ளம் குளச்சல் தொகுதிக்குட்பட்ட பகுதி. இவருடைய வீட்டிலே அவர் அங்கே வாடகைக்குக் குடியிருந்து வருகிறார். ஒரு மாத காலத்திற்கு முன்பாக இவர் அங்கே சென்று, அவர் வீட்டைக் காலி பண்ண வேண்டுமென்று வற்புறுத்திய ஒரு பகையை வைத்துக்கொண்டு இந்தப் புகார் கொடுக்கப்பட்டு, அவரும் இந்த வழக்கிலே சேர்க்கப்பட்டிருக்கிறார். அவர் ஒரு ஓய்வுபெற்ற மாவட்டக் கல்வி அதிகாரியினுடைய மனைவி. மரியாதையான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரும் இந்த வழக்கிலே தவறாக சேர்க்கப் பட்டிருப்பதைப் போல எனக்குத் தகவல் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை விசாரித்து, அந்தப் பெண்ணுக்கு அநீதி இழைக்கப்பட்டிருந்தால் அதிலிருந்து அவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் தங்களை மெத்தப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பிலே இறுதியிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு வாசகத்தைச் சொல்லியிருக்கிறார்கள். 'நாட்டிலேயே குடிமக்களுடன் நட்பாக உள்ள படை தமிழ்நாடு காவல் படைதான் என்ற நிலை ஏற்படுவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்'



என்று சொல்லியிருக்கிறார்கள். சட்டம்–ஒழுங்கைக் காப்பாற்றி பொதுமக்களுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டியதுதான் காவல் துறை. ஆனால், இன்றைக்கு நிலைமை, பொதுமக்கள் காவல் துறையினரிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் போராடக்கூடிய நிலைமை உருவாகிவிட்டதோ என்று இன்றைக்கு நாட்டிலுள்ள மக்கள் ஐயப்பாடு எழுப்பக்கூடிய நிலைமை காவல் துறையிலே ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றிரண்டை மட்டும் நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்றத்திலே அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்வதற்கு முன்பாக, ஏதோ ஒரு வழக்கிலே கைது செய்யப்படுகின்றார். கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுவதற்கு முன்பு விவரங்களைச் சரியாகத் தெரிந்து வைத்துக்கொண்டு பேசினால் நன்றாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதிமீது தி.மு.க ஆட்சி இருந்தபோது ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. எங்கள் ஆட்சி வந்த பிறகு அந்த வழக்குப் பதிவு செய்யப்படவில்லை. அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே, தேர்தல் நேரத்தில், தி.மு.க. ஆட்சியில் இருந்தபோதுதான், மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கில்தான் பரிதி இளம்வழுதி அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆஸ்டின்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வழக்குப் பதிவு செய்த காலத்தை இங்கே குறிப்பிடவில்லை. கைது செய்யப்பட்டார். (குறுக்கீடு) கைது செய்யப்பட்டு ஜாமீனைக் கேட்பதற்கு நீதிமன்றத்திற்கு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ ஒரு வழக்கில் கைது செய்யப்பட்டார் என்று கூறுகிறார். அதற்காகத்தான் நான் குறிப்பிட்டேன். தி.மு.க. ஆட்சியிருந்தபோதே பதிவு செய்த வழக்கில்தான் அவர் கைது செய்யப்பட்டார். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. ஆஸ்டின்**: கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு அவர் அழைத்து வரப்படுகின்றார். நீதிமன்றத்திலே வைத்து காவல் துறையினால் அவர்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அன்றைக்கு செய்திகள் வந்திருந்தன. ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கே...

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எந்தச் சம்பவமும் நடைபெறவில்லை என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன்.

**திரு. ஆஸ்டின்**: அந்த வழக்குத் தொடர்பாக தவறான தகவலை நீதி மன்றத்திலே சொல்லி, அதனால் நீதிமன்ற அவமதிப்பு வழக்காக, கமிஷனர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டு, நீதிமன்றத்திலே அவர் சென்று, அதற்காக மன்னிப்பு கேட்கக்கூடிய நிலை இன்றைக்குத் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. ஒரு காவல் துறையினுடைய அதிகாரியே நீதிமன்றத்துக்குச் சென்று மன்னிப்பு கேட்கக்கூடிய நிலை ஏற்பட்டால், எப்படி அவர்மீது நாட்டு மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் என்பதை கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஆஸ்டின், ஏற்கெனவே இது பற்றிப் பேசி, முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். அதற்குள் போகாதீர்கள். (குறுக்கீடு) திரு. ஆஸ்டின், அவர்களைப் போய் ஏன் சிரமப்படுத்துகிறீர்கள்?

**திரு. ஆஸ்டின்**: ** (கூச்சல், குழப்பம்)

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிற வழக்குகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசுவதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி, இதுபற்றி இனியும் பேசக்கூடாது என்ற ஆணையை பேரவைத் தலைவர் அவர்கள் இடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஆஸ்டின் அவர்கள் இந்த வழக்கு சம்பந்தமாக, பரிதி இளம்வழுதியைப் பற்றிக் குறிப்பிட்டோ அல்லது மற்றபடி ரங்கநாதனைக் குறிப்பிட்டோ பேசிய அந்தக் குறிப்புகள் எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு)

**திரு. ஆஸ்டின்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) விசுவாசத்தைப் பற்றி நானும் சொன்னால் நிறைய வரும் (கூச்சல், குழப்பம்). அதைப்பற்றிப் பேசவேண்டிய தேவையில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வேறு விஷயத்துக்குப் போங்கள்.

**திரு. ஆஸ்டின்**: நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய வழக்குகளைப் பற்றிப் பல்வேறு விவாதங்கள் இந்த மன்றத்திலே நடைபெற்றிருக்கின்றன. இப்போது மட்டுமல்ல. நீங்கள் பழைய குறிப்புகளை எடுத்துப் பார்த்தாலும் கூட, சில வழக்குகள் தவறாகப் பதிவு செய்யப்பட்டிருந்தால் அது பற்றிய கோரிக்கையை இந்த மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு காலகட்டங்களிலே ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்று பார்க்காமல் வைத்திருக்கிறார்கள். வழக்குக்குள் நான் போகவில்லை. எதற்காக வழக்குப் போடப்பட்டதோ, அவர்கள் செய்தது சரியா, தவறா என்பதை நான் குறிப்பிடவில்லை. அந்த முறையைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன். 12 மணிக்கு மேல் அவரைக் கைது செய்தார்கள். வழக்கை ஒருவர்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஆஸ்டின் அவர்களே, தொடர்ந்து இதைப்போலப் பேசுவதாக இருந்தால், நான் அனுமதிக்க முடியாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 92(1) தெளிவாகக் கூறுகிறது. 'நீதி விசாரணையில் இருக்கும் எப்பொருளின்மீதும், தம் கருத்தைச் சொல்லவோ, அப்பொருள் பற்றிக் குறிப்பிடவோ கூடாது' என்று 92-வது பிரிவிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவை அதை ஏற்கவேண்டும். அதற்கான ஆணையை பேரவைத் தலைவர் அவர்கள் இடவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அவை விதிகளின்படி திரு. ஆஸ்டின் பேசியது தவறு. வேறு விவரங்கள் ஏதாவது பேசுவதாக இருந்தால், இன்னும் மூன்று மணித்துளிகள் தருகிறேன்.

**திரு. ஆஸ்டின்**: உங்கள் தீர்ப்பை நான் ஏற்கிறேன். ஆனால், ஏற்கெனவே ஆளுநர் உரையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கான விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அப்போது இதே விதி சுட்டப்பட்டதா என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பிறகு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பரசுராமன் என்பவர் கைது செய்யப்பட்டார். (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வழக்குக்குள் இருக்கிற பிரச்சினையை திரு. ஆஸ்டின் பேசக்கூடாது. தொடர்ந்து தாங்கள் இதேபோன்ற குறிப்புகளை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று

தெரிகிறது. திரு. ஆஸ்டின் அவர்களே, பேச்சை முடியுங்கள். (கூச்சல், குழப்பம்) அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம். திரு. சந்தானம் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, அனுமதி கிடையாது. வழக்குக்குள் இருக்கக்கூடிய பிரச்சினையைப் பேசிக்கொண்டிருப்பதை நான் அனுமதிக்க முடியாது.

**திரு. லா. சந்தானம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. துரைமுருகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டாம் என்று சொல்லவில்லை. பிடிக்கவில்லை என்றால் எடுத்துவிடுங்கள்.

**திரு. லா. சந்தானம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: எனக்கு பிடிக்கும், பிடிக்காது என்பதல்ல.

**திரு. லா. சந்தானம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை...

**திரு. துரைமுருகன்**: கைது செய்யப்பட்டார் என்றுதான் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அவர் வழக்குக்குள்ளே போகிறார். ** என்று வழக்குக்குள்ளே போகிறார்.

**திரு. துரைமுருகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, அவர் வழக்குக்குள்ளே போனால் நீக்குங்கள். ஆனால், ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று சொல்லக்கூடாது என்றால் என்ன ஜனநாயகம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: கைது செய்யப்பட்டார் என்று சொல்வதை நான் அனுமதிக்கிறேன். அதிலே ஒன்றும் பிரச்சினையில்லை. அதைச் சொல்கிறபோது, ஆட்சியின் மேலே ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி...

**திரு. துரைமுருகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, பரிதியைப் பற்றிச் சொன்னார். முதலமைச்சர் விளக்கம் கொடுத்தார். நீங்கள் இரண்டையும்தான் எடுக்கவேண்டும். ஆனால், நீங்கள் அதை எடுத்துவிட்டு, முதலமைச்சர் சொல்வதை மட்டும் வைத்துக் கொண்டால், அதற்கொரு முடிவே இல்லாமல் போய்விடும். (கூச்சல், குழப்பம்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். பரிதி கைது செய்யப்பட்டார் என்று ஆரம்பித்தார். பின்னர், ரங்கநாதன் கைது செய்யப்பட்டார் என்று ஆரம்பித்தார். பிறகு, பரசுராமன் கைது செய்யப்பட்டார் என்று ஆரம்பிக்கிறார். அந்த வழக்குகளின் விவரத்திற்குள் போகக்கூடாது. கைது செய்யப்பட்டார் என்ற தகவலைச் சொல்வதற்கு திரு. ஆஸ்டின் தேவையில்லை. அதைப் பத்திரிகைகளிலே நாம் படித்திருக்கிறோமே!

**திரு. துரைமுருகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, '1942–இல் Quit India Movement–ல் காந்தி கைது செய்யப்பட்டார்' இதில் என்ன அர்த்தம்? கைது செய்யப்பட்டார் என்று சொல்லக்கூடாது என்றால் என்ன நியாயம்? sub–judice–ஆக இருந்தால் எடுத்துவிடுங்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. (கூச்சல், குழப்பம்)

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) (கூச்சல்).

***திரு. பி.கே. சேகர்பாபு**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமியின் தம்பி தேவராஜ் கைது... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சேகர்பாபு சொல்வது (குறுக்கீடு) பேராசிரியர் உட்காருங்கள். துரைமுருகன், சேகர்பாபு சொல்வது அன்றைக்கு அவர் கன்னிப் பேச்சிலே பேசிக்கொண்டு வருகிறபோது, முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த ஆற்காடு வீராசாமியினுடைய தம்பி தேவராஜ் கைது செய்யப்பட்டார் என்று சொன்னவுடனேயே 'தொட்டால் சுருங்கியைப் போல' கோபித்துக் கொண்டு போய்விட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நானும் உங்களைக் கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பார்த்தேன். அதற்கே கோபித்துக் கொண்டு போய்விட்டீர்கள்.

**திரு. துரைமுருகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் 'தொட்டால் சுருங்கி' என்றெல்லாம் கிடையாது. (கூச்சல்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: எந்த விவரமும் சொல்லாமல், என்ன காரணம், அது விதிமுறைக்கு உட்பட்டதா, என்ன என்றே விவரம் சொல்லாமல் நீங்கள் கோபித்துக் கொண்டு போய்விட்டீர்கள். நான் உங்களை அழைத்து அழைத்துப் பார்த்தேன்.

**திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபாநாயகருக்கு ஒரு பணிவான வேண்டுகோள் விடுக்கிறேன். அன்றைக்கு நாங்கள் ஒன்றைச் சொன்னோம். அதை எடுத்துவிட்டீர்கள். அதாவது என்ன சொல்லவந்தேன் என்றால், கலைஞருக்கு பிரஷர் வந்த அன்றைக்கு 200/190 என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: முழு விவரங்களுக்குள் போகாதீர்கள். சேகர்பாபு அன்றைக்குப் பேசியது விதிமுறைக்கு என்ன மாறுபட்டது?

**திரு. துரைமுருகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, அதைச் சொன்னவுடனேயே, பிரஷர் என்று சொன்னவுடனேயே குறிப்பிலிருந்து எடுத்துவிடுகிறேன் என்று சொன்னீர்கள். எடுத்துவிடுகிறேன் என்று சொன்னவுடனே, நான் உங்களோடு தகராறு வேண்டாம் என்று உட்கார்ந்துவிட்டேன். ஆனால், சேகர்பாபு என்ன செய்தார் என்றால், அந்த வழக்கை எடுத்துச் சொன்னார். (குறுக்கீடு) இருங்கள், நான் சொல்லி விடுகிறேன். நாங்கள் அப்போது கேட்டோம். தலைவருக்கு பிரஷர் 200/190 என்று சொன்னதே வழக்குக்கு உட்படும் என்று எடுத்துக் கொள்கிறபோது, அவர் கைது செய்யப்பட்டார் என்றும், அவர் தம்பி ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டார் என்றும் பேசுகிறார்களே, அவரை அனுமதிக்கிறீர்களே என்று கேட்டோம். நீங்கள் அனுமதித்தீர்கள். நாங்கள் போய்விட்டோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வழக்கு இல்லை என்று அவர் விளக்கம் சொல்ல முன்வந்தார்.

**திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுக்கு கௌரவம் கொடுத்து இந்த அவையில் நிற்காமல், சொல்லிவிட்டு வெளியே போனோம். ஆனால், நாங்கள் போய்விட்ட பிறகு நீங்கள் எங்களைப் பற்றி ஒருமாதிரியாகச் சொன்னீர்கள். இப்போது என்ன சொல்கிறீர்கள்? 'தொட்டால் சுருங்கி' என்று சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: 'தொட்டால் சுருங்கி' என்பது தவறான வார்த்தையா?

**திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் ஒரு ஆற்றல் மிக்க பேச்சாளர், அற்புதமான தமிழ் அறிஞர், எனக்கு அதிலே மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், உவமானங்களே சில நேரங்களிலே பலம். சில நேரங்களிலே பலவீனம். அந்த இடத்திலே உட்கார்ந்து தாங்கள் அடிக்கிற



கமெண்ட்ஸ், பல நேரங்களிலே பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கிவிடும் என்பதை மட்டும் பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களை 'மாடு' என்றுகூடச் சொன்னீர்கள். இதைவிட ஒரு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. துரைமுருகன் அவர்களே, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். 'உவமை என்பது உயர்ந்ததன்மைத்தே' என்ற தொல்காப்பிய இலக்கணத்தை, நானும், பேராசிரியர் அவர்களும் படித்திருக்கிறோம். பேராசிரியரிடத்திலே நீங்கள் கேளுங்கள். ஒரு உவமை சொல்வது ஒரு கருத்தை விளக்குவதற்குத்தானே தவிர, நேரடியாக நீங்கள் அதைப் பொருத்திப் பார்க்கக்கூடாது. அந்தவகையிலே பொருத்திப் பார்க்கக்கூடாது.

"மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து"

என்று வள்ளுவர், முயற்சி உடையவனுக்கு மாட்டைத்தான் உதாரணம் சொல்கிறார். இதிலே என்ன தவறு?

**திரு. துரைமுருகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும்கூடச் சொல்லலாம். உதாரணம் என்று சொல்லி, எதற்கு நாங்கள் பயந்து விட வேண்டும்? நாங்கள் பயந்து விடவில்லை. சில மிருகங்களைப் பார்த்தால் நாம் ஒதுங்கிப் போய்விடுவோம். அப்படியும்கூடச் சொல்லலாம். ஆனால், இது உவமானம் ஆகாது. (குறுக்கீடு) எனவே, உவமானங்களை இரண்டு பக்கமும் சொல்லலாம். வாதத்திற்காகவும் சொல்லலாம். எனவே, இப்போது நாங்கள் சொன்னதையும், மிருகங்களோடு ஒப்பிட்டு, நாங்கள் பயந்து விடவில்லை என்று சொன்னேனே, அதுவும் சபைக் குறிப்பிலே இருக்கக்கூடாது. அதையும் எடுத்துவிடுங்கள். எனவே, மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு நான் தெரிவிப்பது, நீங்கள் வேண்டுமானால் தொல்காப்பியம் எல்லாம் படித்திருக்கலாம். ஆனால், நான் படிக்கவில்லை. ஏனென்றால், தமிழே படித்து, டாக்டர் பட்டம் வாங்கினீர்கள். (குறுக்கீடு) நான் பி.ஏ., (பொருளாதாரம்), எம்.ஏ., (பாலிடிக்ஸ்) படித்திருக்கிறேன். எனக்கு உங்கள் அளவிற்குத் தமிழ் தெரியாதிருக்கலாம், ஆனால், சொல்லுகின்ற மரபை ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. துரைமுருகன், தவறாக நான் எதையும் சொல்லவில்லை.

**திரு. துரைமுருகன்**: எனக்கு மைக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மைக் உங்களுக்கு முன்னாலே இருக்கிறது. பேசுங்கள்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பழமொழியையொத்த ஒரு பழமொழி. 'மாடு' என்று சொன்னதற்குச் சொன்னார்களே, 'ஊர் சிரித்தது' என்று சொன்னால், ஊர் சிரித்தது என்று பொருள் அல்ல. ஊரிலுள்ள மக்கள் சிரித்தார்கள் என்று பொருள்.

**திரு. ஆஸ்டின்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஆஸ்டின், உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Electricity Minister சொன்ன அந்தத் தமிழை நானும் படித்திருக்கிறேன். அது இடவாகு பெயர் என்று சொல்கிறார் அவர். அந்த இலக்கணம் எனக்கும் தெரியும். அது அல்ல, நாங்கள் கேட்பது. நீங்கள் அதைக்கூட இன்றைக்குச் சொன்ன காரணத்தினாலேதான் எடுத்துக் கேட்டேன். வேறு அல்ல. எனவே, உவமானங்கள் பேசுவது, இரு பக்கமும் வரும். பழமொழியும் சில நேரங்களிலே வரும். எனவே, சொல்கிற கருத்து புண்படுத்தாமல் இருக்கவேண்டும். அதிலே தாங்கள் கைதேர்ந்தவர்கள். எனவே, புண்படுத்தாமலும் பேசத் தெரியும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீங்கள் கூறிய உவமானத்தில் அவரைப் புண்படுத்தும்படியாக என்ன இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: எதுவும் இல்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: 'தொட்டால் சிணுங்கி' என்று சொன்னீர்கள். 'தொட்டால் சிணுங்கி' என்று சொன்னால் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் மிகவும் sensitive–ஆன மனிதர் என்றுதானே பொருள்? (மேசையைத் தட்டும் ஒலி) அது நல்ல குணம்தானே? (மேசையைத் தட்டும் ஒலி)

*நண்பகல் 12–00*

**திரு. துரைமுருகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொல்வதுபோல் அந்தக் கருத்தில் சொல்லியிருந்தால் அது வேறு.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அவர் ஏற்கெனவே (குறுக்கீடு) திரு. துரைமுருகன் அவர்கள் ஏற்கெனவே sensitive–ஆக இருந்து, ஒரு முறை புரட்சித் தலைவர் அவர்களை எதிர்த்துப் பேசுகின்றபோது ரொம்ப sensitive–ஆகப் பேசி, மயக்கம்போட்டு விழுந்து, புரட்சித் தலைவர் அவர்கள் அவருடைய நெஞ்சைத் தடவிவிட்டு அவருடைய காரிலேயே மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த விவரமெல்லாம் தெரியும். Sensitive–ஆகத்தான் இருக்கிறீர்கள். அதற்காகத்தான் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. திரு. ஆஸ்டின் அவர்கள் அந்த வழக்கிற்குள்ளே போக வேண்டாம். இரண்டு மணித்துளிகளில் வேறு விவரங்களைப் பேசி முடிப்பதற்கு அனுமதி அளிக்கிறேன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்**: தலைவர் அவர்களே,...

**திரு. பி.ஆர். சுந்தரம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. பரிதி இளம்வழுதி**: தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை, திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்**: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே ஒரு விதியைச் சொல்லி...

**திரு. பி.ஆர். சுந்தரம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஆஸ்டின் பேசி முடித்தவுடனே தருகிறேன். (குறுக்கீடு) அவர் பேசி முடித்தவுடனே தருகிறேன்.

**திரு. ஆஸ்டின்**: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்டமன்ற விதியை இங்கே குறிப்பிட்டு விசாரணையிலே இருக்கக்கூடிய, வழக்கிலே இருக்கக்கூடிய subject–ஐப் பற்றி இங்கே பேசக் கூடாது என்று சொன்னார்கள். நாங்கள் ஒத்துக்கொள்கின்றோம். அவற்றை எல்லாம் சபைக் குறிப்பிலே ஏற்றக் கூடாது என்று சொன்னார்கள். ஆனால், இதற்கு முன்பு நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்றபோது காங்கிரஸ் சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் இங்கே பேசுகின்றபோது, ** என்றெல்லாம் இரண்டு, மூன்று நிமிடங்கள் பேசினார்கள். அவையெல்லாம் சபைக் குறிப்பிலே ஏற்றப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஆஸ்டின் அவர்களே, இவையெல்லாம் விசாரணைக் கமிஷனுக்கு உட்பட்ட பிரச்சினைகள். தொடர்ந்து இதேபோலப் பேசிக்கொண்டிருக்கிற காரணத்தால் அவையெல்லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. சந்தானம் பேசுங்கள்.

**திருமதி டி. யசோதா**: தலைவர் அவர்களே,...

**திரு. பி.ஆர். சுந்தரம்**: தலைவர் அவர்களே,...

**திரு. பரிதி இளம்வழுதி**: தலைவர் அவர்களே,...அது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை, இல்லை. அவர் சொன்னது நீக்கப்பட்டுவிட்டது. அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) அவர் சொன்ன கருத்துக்கள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டுவிட்டன. மேலும், அதற்கு விளக்கம் சொன்னால் அதுவும் நீக்கப்பட்டுவிடும். திரு. சந்தானம், பேசுங்கள்.

**திரு. லா. சந்தானம்**: பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. பி.ஆர். சுந்தரம்**: தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிஷம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சந்தானம் அவர்கள் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) இல்லை. அவர் பேசி முடிக்கட்டும் (குறுக்கீடு)

**திரு. லா. சந்தானம்**: காவல் துறை, தீயணைப்புப் பணிகள் என்கின்ற மானியக் கோரிக்கைகளில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சந்தானம், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் ஏதோ சொல்ல விரும்புகிறார்.

**திரு. பி.ஆர். சுந்தரம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்கள் தாங்கள் இங்கே பேசிய உவமையைப் பற்றி விளக்கமாகக் கூறினார்கள். (குறுக்கீடு) இதற்கு முந்தைய ஆட்சியில் ஒரு சட்டமன்றக் கூட்டத் தொடரில் விவசாயிகளுக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு' 1000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று நாங்கள், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் மறியல் போராட்டத்திலே ஈடுபட்டிருந்தோம். அந்த நேரத்திலே முதலமைச்சர் அவர்கள் பின்புறமாக அன்றைக்கு சட்டமன்றத்தைவிட்டு வெளியே சென்றுவிட்டார்கள். நாங்கள்,



அப்போது அவர்கள் வந்தபோது, முதலமைச்சரான நீங்கள் எங்களுக்குப் பதிலே கூறாமல் பின்புறமாகச் சென்றுவிட்டீர்களே என்று கேட்டபோது அப்போது அந்த முதல்வர் அவர்கள் இந்த அவையிலே, 'துஷ்டனைக் கண்டால் தூர விலகு' என்று எங்களைப் பார்த்து, சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து, ஒரு கமென்ட் அடித்தார்கள், முன்னாள் முதலமைச்சர் அவர்கள். அதை நாங்கள் எடுத்துக் கூறினோம். அதை இங்கேயே எடுத்துக் கூறினோம். அப்போது, அதற்குப்பிறகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: எல்லாம் அவைக் குறிப்பிலே இருக்கிறது. (குறுக்கீடு) திரு. சந்தானம் பேசுங்கள். (குறுக்கீடு) சந்தானம் பேசுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி**: பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் உங்களைச் சொல்வது (அமைச்சரின் இருக்கையைக் காட்டி) வேறு. அவர்கள் அங்கிருந்து சொல்வது (தலைவர் அவர்களின் இருக்கையைக் காட்டி) வேறு. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை, இல்லை, உட்காருங்கள். இதை நீங்கள் சொன்ன காரணத்தினாலே ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. எல்லா உறுப்பினர்களையும் நான் மதிக்கிறேன். எல்லோருடைய கருத்துக்களையும் நான் மதிக்கிறேன், தவறாக எந்தக் கண்ணோட்டத்திலும் சொல்லவில்லை. (குறுக்கீடு) அந்த விஷயத்தை விட்டுவிடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. இன்னொரு பிரச்சினை. திரு. துரைமுருகன் சொன்ன காரணத்தினாலே சொல்கிறேன். என்னையேகூட வம்புக்கு இழுத்து உங்களுடைய கட்சிப் பத்திரிகைகளிலே சில செய்திகளெல்லாம் வருகின்றன. இன்றைக்குக் காலையிலேகூட ஒரு கேலிச்சித்திரம் வந்திருக்கிறது. அதைப்பற்றி ஒன்றும் இல்லை. நான் இப்போது லாவணிக் கச்சேரி பாடுவதோ, உங்களோடு அரசியல்வாதம் பண்ணுவதோ இந்தப் பீடத்திலிருந்துகொண்டு செய்வது முறையல்ல. அப்படி நீங்கள் ஏதாவது வம்புச் சண்டைக்கு வரவேண்டுமென்று எதிர்பார்த்தால் என்னைக் கீழே இறக்கி விட்டுவிட்டு பிறகு ஏதாவது சண்டை போட வேண்டுமே தவிர, இந்தப் பீடத்திலிருக்கும்போது நீங்கள் விவகாரம் பண்ணக்கூடாது. நான் எல்லோரையும் மதிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம், பேசுங்கள்.

**திரு. ஆஸ்டின்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்துவிடுகிறேன் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை, நீங்கள் முடித்து விட்டீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முடித்துவிட்டீர்கள். திரு. சந்தானம் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. சந்தானம், பேசுங்கள்,

**திரு. லா. சந்தானம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்புப் பணிகள் என்கின்ற மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியினைச் சொல்லிக்கொள்கிறேன்.

காவல் துறை என்பது மனிதனுடைய உயிரையும், உடமைகளையும் பாதுகாக்கின்ற மிக முக்கியமான துறை என்கின்ற காரணத்தினால் சங்க காலத்திலே குறிப்பிடுகின்றபோதும், 'நெல்லும் உயிரன்று, நீரும் உயிரன்று, மன்னன் உயிர்த்தே மலர்தலே உலகம்' என்று குறிப்பிடுவார்கள். ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவும் நீரும் முக்கியமாக இருந்தாலும்கூட, அவன் சமுதாயத்திலே நல்லவிதமாக நிம்மதியோடு வாழ்வதற்கு அந்த நாட்டை ஆட்சி செய்கின்ற மன்னன் மிக அவசியம் என்று குறிப்பிடுவார்கள். அன்றைக்கு மன்னர்கள் ஆண்ட காலத்திலே மன்னர்கள். இன்றைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆளுகின்ற காலத்திலே அமைச்சர்களாக, முதலமைச்சராக இருக்கின்றவர்கள் இந்தத் துறையினுடைய பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். இந்தத் துறை, நமக்கு ஏற்படுகின்ற, மக்களுக்கு ஏற்படுகின்ற துயரங்களையும், துன்பங்களையும் தீர்க்கின்ற துறையாக இருக்கின்ற இந்தத் துறைக்கு இன்றைய நிலையிலே, நம்மை காப்பாற்றுபவர்களுக்கு அவர்கள் நம்மைக் காப்பாற்றுவதற்குப் பணிபுரிகின்ற நேரத்தில். அவர்களுக்கு ஏற்படுகின்ற இடர்பாடுகளிலிருந்து காப்பாற்றுவது யார் என்ற ஒரு கேள்வி ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள் நேர்மையாகக் கடமையை ஆற்றுகின்றபோது பல்வேறு வழிகளில் தடுக்கப்படுகிறார்கள், அவமதிக்கப் படுகிறார்கள். அத்துமீறலுக்கு ஆட்படுத்தப்படுகிறார்கள் என்கின்ற நிலையெல்லாம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன.

*பிற்பகல் 12-05*

மனித உரிமையைப் பற்றி நாம் பேசுகிறோம். நம்மைக் காவல் துறை தாக்கினால் அது மனித உரிமை என்று நாம் கூக்குரல் இடுகிறோம். ஆனால், அந்தக் காவல் துறையைச் சார்ந்தவர்களும் மனிதர்கள்தானே என்கின்ற உணர்வு இன்றைக்கு இல்லாத அளவிலே அவர்கள் தாக்கப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் எங்கே சென்று மனித உரிமையைக் கோருவது என்கின்ற நிலை இப்போது இருக்கிறது.



தன்னுடைய கடமையை ஆற்றிய மூன்று காவல் துறை அதிகாரிகள், தமிழக அரசின் பணியிலிருந்து மத்திய அரசுப் பணிக்கு வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இன்றைக்கு அவர்களுடைய கூட்டணிக் கட்சியிலே இருக்கின்ற முதலமைச்சர், ஹரியானாவினுடைய முதலமைச்சர் சௌதாலா அவர்கள்கூட தமிழகத்து முதலமைச்சருடைய கோரிக்கை நியாயமானது, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் எழுதிய கடிதத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதை இன்றைக்கு தேசிய முன்னணி கூட்டத்திலேகூட முன்வைக்க இருக்கின்றேன் என்று தெரிவித்த செய்தியை நாம் அறிகிறோம்.

அந்த அளவிற்கு காவல் துறையைப் பற்றிப் பேசுகிறவர்கள், காவல் துறைக்குப் பல்வேறு நன்மைகளைச் செய்தோம் என்று சொல்லிக்கொண்டு இருக்கின்றவர்கள் அந்தக் காவல் துறை நிம்மதியாக, நிறைவாகச் செயல்பட முடியாத அளவிற்கு பல்வேறு முட்டுக்கட்டைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று சொன்னால் அவர்கள் மக்கள் அளித்த வாக்கை ஏற்றுக் கொண்டு இன்றைக்கு நடக்கின்ற அரசை மதிக்கின்றார்களா என்பதை நான் இந்த அவைக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நமது உயர் நீதிமன்றம், சென்னை உயர் நீதிமன்றத்திற்குக்கூட அவர்களுடைய நேர்மை, ஒழுக்கம், நியாயம், இறையாண்மைக்கு எல்லாம் ஊறு விளைவிப்பதைப்போல்கூட இன்றைக்கு மத்திய அரசிலே இருக்கின்ற வழக்கறிஞர், உச்ச நீதிமன்றத்திலே வாதாடுகிறார். ஒரு வழக்கை தமிழக உயர் நீதிமன்றம் விசாரித்தால் அதிலே நேர்மை கிடைக்காது, அதற்குக் காரணம் என்ன குறிப்பிடுகிறார்கள் என்று சொன்னால், அது ஒரு முதலமைச்சரைப் பற்றிய வழக்கு. அவர்கள் இப்போது ஆளுகின்ற நிலையிலே இருக்கின்ற காரணத்தினால் அங்கு விசாரணை செய்தால் நீதி கிடைக்காது, அதை வேறு மாநிலத்திற்கு மாற்ற வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள் என்று சொன்னால், உண்மையிலேயே நான் ஒரு தமிழன், நான் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவன் என்கின்ற முறையிலே நான் மிகுந்த கவலையடைகின்றேன், வருத்தமுறுகின்றேன். இந்த மாநிலத்தில் இருக்கின்ற நீதிபதிகள் எல்லாம் தவறானவர்களா? இந்த மாநிலத்திலே இருக்கின்ற நீதிபதிகள் எல்லாம் நேர்மை இல்லாதவர்களா?

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியிலே நடைபெறுகிற போராட்டங்கள் அல்லது வன்முறைச் செயல்கள், கைதுகள் இவற்றைப் பற்றி நீதிமன்றத்திலே வழக்குத் தொடுக்கப்பட்டதற்குப் பின்னர் இந்த அவையிலே பேசுகிறபோது

sub–judice என்று எல்லோருமே ஏற்றுக்கொண்டு அப்படிப் பேசக்கூடாது என்ற மரபைக் காப்பாற்றி வருகிறோம். நீதிமன்றங்களில், நீதிமன்றங்களைப் பற்றி நீதி அடிப்படையிலேயும், முறை அடிப்படையிலேயும் ஏதோ வாதங்கள் நடைபெறுமேயானால் அவற்றைக் குறித்து நமக்கு ஆளுக்கொரு கருத்துகூட இருக்கலாம். வெவ்வேறு கருத்து இருக்கலாம். ஆனால், இந்த மன்றத்தில், சட்டமன்றத்தில் நீதிமன்ற விவகாரங்களைக் குறித்து, அந்த விவகாரங்களுக்குட்பட்ட செய்திகளைக் குறித்து நாம் வாதிக்க அனுமதி உண்டா? ஏனென்றால் sub–judice என்பது அதையும் சேர்த்துதான். ஏற்கெனவேகூட ஒரு காவல் துறை ஆணையர் ஒருவர் நீதிமன்றத்திலே போய் அவர் தெரிவித்த கருத்தைச் சொல்கின்றபோது, தாங்கள் இவையெல்லாம் நீதிமன்றத்தினுடைய விவகாரங்களுக்குள் உள்ளே சென்றதாக ஆகிவிடும் என்ற கருத்தை இங்கே தெரிவித்தீர்கள். இது அதைவிட இன்னும் ஆழமானது. அனுமதித்தால் எல்லோரையும் அனுமதிக்க வேண்டும், இல்லையென்றால் அதை அனுமதிக்கக் கூடாது.

*பிற்பகல் 12–10*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் கூறியது வேறு நோக்கோடு கூறியுள்ளார்கள். தமிழகத்தில் உள்ள உயர் நீதிமன்ற நீதிபதிகள் எல்லாம் தவறானவர்கள்: நல்லவர்கள் அல்ல என்ற ஒரு கருத்தை அகில இந்திய அளவிலே பிரதிபலிக்கக்கூடிய அளவிற்கு உச்ச நீதிமன்றத்திலே ஒருவர் சொல்கிறபோது தமிழர்கள் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறதே, தமிழ் உணர்வு உள்ளவர்கள் அதை தடுத்துக் கேட்க வேண்டாமா என்ற பொருளோடுதான் அவர் கேட்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வழக்குக்கு உள்ளே அவர் போகவில்லை. (குறுக்கீடுகள்) வழக்குக்கு உள்ளே அவர் போகவில்லை. (குறுக்கீடுகள்) வேறு மாநிலத்திற்கு மாற்ற வேண்டுமென்று சொல்வது சரியா என்றுதான் கேட்கிறார்.

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரியோ, தவறோ எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. என்னுடைய கவலையெல்லாம் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் வாதாடிய பிரச்சினையை, அது சரியோ, தவறோ, இந்த மன்றத்தில் அதைப் பற்றி விளக்கங்கள் பேசி, அது சரி, தவறு எனறு சொல்ல நமக்கு



உரிமையுள்ளதா? இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாடு உயர் நீதிமன்றத்திலே இருக்கிற நீதிபதிகள் அனைவரையும் குறித்துக் குற்றஞ் சாட்டினார்கள் என்று யாரேனும் நிரூபிக்க முடியுமா? அல்லது யாரேனும் ஒரு நீதிபதியைக் குற்றஞ்சாட்டி யாராவது பேசியிருப்பாரேயானால் அது அனைவர் மீதும் சாட்டப்பட்டதாக நாம் சொல்ல முடியுமா? இந்த அவை அப்படி நீதிமன்றத்திற்குள்ளே நடைபெற்ற பிரச்சினை பற்றி விவாதிக்க தாங்கள் அனுமதிக்கிறீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளில் வந்திருப்பதை பேராசிரியர் அவர்கள் தெளிவாகப் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞர் கூறிய, வழக்கு பற்றிய பொருள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் பேசவே இல்லை. உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதிகளினுடைய நேர்மையைச் சந்தேகிக்கின்ற அளவிற்கு, அதுவும் தமிழ் நீதிபதியினுடைய நேர்மையைச் சந்தேகப்படக்கூடிய அளவிற்கு, உச்ச நீதிமன்றத்திலே பேசுகிற பேச்சை தமிழ் உணர்வு உள்ள யாரும் ஏற்பார்களா என்கிற தொனியில்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் கேட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வழக்கிற்கு உள்ளே போகவில்லை.

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் நீதிமன்றத்தில் கையாளப்பட்ட முறைகளைப் பற்றித்தான் பேசப்பட்டதாக நான் படித்தேனே தவிர, தனிப்பட்ட நீதிபதியைப் பற்றி யாரும் பேசியதாக எனக்குத் தெரியவில்லை. இன்ன முறைகளைக் கையாள வேண்டுமென்று கேட்டதாக நான் தமிழ் ஏடுகளிலே படித்தேன். ஆகவே, அதற்குமேல் நீதிமன்ற விவகாரத்திலே இந்த அவையில் வாதிக்க தாங்கள் அனுமதிக்கலாமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இந்தப் பிரச்சினைக்குள்ளே போக வேண்டாம். திரு. சந்தானம் அவர்களே, இந்தத் தகவலோடு விட்டுவிடுங்கள்.

**திரு. லா. சந்தானம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வழக்கிற்கு உள்ளே போகவில்லை. நீதிமன்றத்தினுடைய நடவடிக்கைகளை நான் குறை சொல்லவில்லை. ஆனால் ஒரு தமிழன்

என்கிற முறையிலே, மத்திய அரசினுடைய ஒரு வழக்கறிஞர், மூத்த வழக்கறிஞர் அரசு சார்பிலே வாதாடுகிறபோது, தமிழகத்தின் மக்களுடைய உணர்வுகளைப் பாதிக்கின்ற அளவிற்கு இருந்ததே என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்பினேன். அது அந்தத் தமிழ் உணர்வோடு சுட்டிக் காட்டப்பட்ட ஒரு செய்தியே தவிர வேறல்ல. ஆனால் நான் அப்படிச் சொல்லுகின்ற நேரத்தில் இன்னும்கூட அந்த வாதத்தினை எடுத்துக்கொண்டு, கடந்த காலத்திலே ஆட்சி அதிகாரத்திலே நீங்கள் போட்ட வழக்குகள் எல்லாம் உண்மைக்குப் புறம்பானதுதான் என்கின்ற அந்த வாதத்தின் மூலமாகவே (மேசையைத் தட்டும் ஒலி) நிருபிக்கப்படுகின்றன. உண்மைக்குப் புறம்பாக நீங்கள் ஆட்சி, அதிகாரத்தைப் பயன்படுத்தி வழக்குகளைப் போட்டு, உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி தண்டனையையும் வாங்கிக் கொடுத்திருக்கிறீர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதானே உங்கள் வாதத்திலிருந்தே வெளிப்படுகின்றது என்கிற உண்மையை நான் இந்த அவைக்கு எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் அந்தக் கருத்தை அவருடைய சொந்தக் கருத்தாக அவர் கொண்டிருப்பதிலே எனக்கு எந்த மாறுபாடும் கிடையாது. இந்தச் சட்டமன்றத்தில் அப்படி ஒரு கருத்தை நீதிமன்றம் குறித்து, ஓர் உறுப்பினர் பேசி, அதை பதிய வைக்க தாங்கள் அனுமதிப்பது sub–judice வகையில் திட்டவட்டமாக sub–judice ஆகும். ஏனென்றால் நீங்கள் பல முறை இங்கே சொன்ன காரணத்தால் சொல்கிறேன். நீதிமன்றத் தீர்ப்பு சரியோ, தவறோ, அது அப்பீலுக்கு உரியது. ஆனால் நீதிமன்றத் தீர்ப்புக் குறித்து இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் பேசிய அந்த வார்த்தையோடு சேர்த்து இணைத்துக் காண்கிறபோது, அது திட்ட வட்டமாக நீதிமன்றத்தில், அதனுடைய உரிமையில் தலையிட்டதாகக் கருதப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சந்தானம், காவல் துறை மானியக் கோரிக்கைக் குறித்துப் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்**: உங்களுடைய ஆட்சிக் காலத்தில் அதிகாரத்தைப் பயன்படுத்தி, நீதியை வளைத்து, இப்படியெல்லாம் சில பேருக்கு—



**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அவருடைய கருத்து என்றிருப்பதிலே எந்த ஆட்சேபணையும் இல்லை என்று பேராசிரியர் அவர்களே சொல்லி விட்டார்கள். திரு. சந்தானம் அவர்கள் அவருடைய கருத்தைச் சொல்கிறார். அவ்வளவுதான்.

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கருத்து என்பதிலே எனக்கு எந்தவித மாறுபாடும் இல்லை. சட்டமன்றத்திலே அதைப் பதிவு செய்யலாமா என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சந்தானம், நீதிமன்ற வழக்குக்குள்ளே போக வேண்டாம்.

**திரு. துரைமுருகன்**: இல்லை, இல்லை. தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்த வேண்டாம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் தவறாக எதையும் சொல்லவில்லை. நடந்ததைத்தான் சொல்லி இருக்கிறார்கள். ஒரே ஒரு உதாரணத்தை சொல்கிறேன். கடந்த ஆட்சியின்போது, ஆட்சியாளர்கள், நான் ஆட்சியில் இருந்தபோது நிலக்கரியை இறக்குமதி செய்ததில் ஊழல் புரிந்துவிட்டேன் என்று என் மீது குற்றஞ்சாட்டி வழக்குப் போட்டார்கள். அவர்கள் அமைத்த தனி நீதிமன்றத்தில், அவர்கள் நியமித்த தனி நீதிமன்ற நீதிபதி, அந்த வழக்கை விசாரித்து, நான் குற்றமற்றவள் என்று தீர்ப்பளித்து என்னை விடுவித்து விட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களே நியமித்த நீதிபதியின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள அன்றைய ஆட்சியாளர்களுக்கு மனமில்லை. அவர்களே போட்ட நீதிபதி, அவர்களே போட்ட நீதிமன்றம். ஆனால் அந்த நீதிபதி கொடுத்த தீர்ப்பை ஏற்றுக்கொள்ள அன்றைய அரசு விரும்பவில்லை. Trial Court–லேயே நான் குற்றமற்றவள் என்று, நிரபராதி என்று விடுவிக்கப்பட்டுவிட்டேன். அதன் பிறகு, அன்றைய அரசு உயர் நீதிமன்றத்தில் அப்பீல் செய்தது. உயர் நீதிமன்றத்திலும் தனி நீதிமன்றத்தின் தீர்ப்பு சரிதான் என்று uphold செய்யப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தனி நீதிமன்றத்தின் தீர்ப்பு உயர் நீதிமன்றத்தில் உறுதிசெய்யப்பட்டது. நான் குற்றமற்றவள், நிரபராதிதான் என்று உயர் நீதிமன்றமும் கூறியது. அதையும் ஏற்க மனமில்லாமல் அன்றைய

ஆட்சியாளர்கள் உச்ச நீதிமன்றத்திற்குப் போனார்கள். உச்ச நீதிம்ன்றத்தில் இதுவரை வரலாற்றிலேயே நடந்திராத வகையில், வழக்கை விசாரித்த தனி நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை, அந்தத் தீர்ப்பு சரிதான் என்று உயர் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை இரத்து செய்து விட்டு மீண்டும் வழக்கை விசாரிக்க வேண்டுமென்று ஓர் உத்தரவைப் பெற்றார்கள். அந்த உத்தரவை எப்படிப் பெற்றார்கள்? செல்வாக்கைப் பயன்படுத்திப் பெற்றார்களா என்ன என்று அவர்கள்தான் விளக்கம் கூற வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–15*

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம், வழக்குகள், மேல் முறையீடுகள், அதற்கான நியாயங்கள், நியாய தவறுகள் அப்படிப்பட்டவற்றைப் பற்றி என்னால் விவாதிக்க முடியாது. நான் வழக்கறிஞரும் அல்ல. நீதிமன்றப் படிக்கட்டுகளில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்காகத் தண்டிக்கப்பட்ட காலகட்டத்தில் ஏறி, இறங்கியது தவிர எனக்கு வேறு தெரியாது. ஆனால், உண்மை என்னவென்றால், நீதிமன்றங்கள் மூலமாகத்தான் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. எதுவாக இருந்தாலும் தொடர்ந்து நீதிமன்றங்களிலேதான் மேல்முறையீடுகள் செய்யப்படுகின்றன. ஆகவே, நீதிமன்றங்களில் வழங்கப்படுகின்ற முடிவுகள் பற்றி யார் வேண்டுமானாலும் அதை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்த்து வாதாடலாம். மேல்முறையீடு செய்யலாம். ஒருவேளை தண்டிக்கப்பட்டால் விடுதலை பெறலாம். ஒரு வேளை வேறுவிதமாக முடிவுகள் இருந்தாலும்கூட பெறலாம். அதிலே எனக்கு எந்த மாறுபாடும் கிடையாது. ஆனால் நீதிமன்ற விவகாரங்களை சட்டமன்றத்தில் இந்த அளவுக்கு வாதிக்கப் படுவதைத் தாங்கள் ஏற்கிறீர்களா? அந்த வாதங்கள் அனைத்தையும் படித்துப் பார்த்து, அவை இடம்பெறலாம் என்றால்தான் அனுமதிக்கலாம். இவை இடம்பெறலாம் என்று சொன்னால் எல்லோரும் எல்லாம் பேசலாம். இடம்பெறக் கூடாது என்றால் கூடுமான வரையில் அந்த வாசகங்களைப் பார்த்து, இந்த அவைத் தலைவர் என்ற முறையில் இந்த அவையினுடைய உரிமையைப் பாதுகாப்பதற்குத் தாங்களே நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய மூத்த வழக்கறிஞர் இந்த வழக்கிலே எவ்வாறு ஆஜரானார் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியாக இருக்கிறது.



**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அவரவர்களுடைய பொறுப்பு. அவரவர்களுக்கு என்னென்ன விதமான அதிகாரங்கள் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியாது. அவர்களைக் கேட்டால்தான் அதற்குப் பதில் சொல்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: கடந்த ஆட்சிக் காலத்தினுடைய சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்தால், நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறபோதே, இன்றைய முதலமைச்சர் அவர்கள் மேலே குற்றம் சாட்டப்பட்ட அந்த நிலையிலேயே இங்கே பேசப்பட்ட விவாதங்கள், எடுத்து வைக்கப்பட்ட கருத்துகள் அனைத்தும், அவர்கள் தண்டிக்கப்பட்டே தீரப்போகிறார்கள். அவர்கள் குற்றம் செய்திருக்கிறார்கள் என்று பல முறை பலபேரால் பேசப்பட்டு அவைக் குறிப்பில் ஏற்றப் பட்டிருக்கின்றன. இப்போது அது தொடர்பான ஒரு விவரத்தை மேலோட்டமாக திரு. சந்தானம் அவர்கள் சொல்லுவதில் எந்த தவறும் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

**திரு. லா. சந்தானம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இங்கே குறிப்பிட்ட இதே கருத்தை, இதே அவையில் சட்டமன்ற உறுப்பினராக இருந்து அத்தனையையும் கேட்டுக் கொண்டிருந்தவன் என்கின்ற நிலையிலேதான் இதிலே எந்தவிதத் தவறும் இல்லை என்கின்ற அளவில் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். *(குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கேஸில் தோற்றுப்போனால் அப்பீல் போவது என்பது வழக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. துரைமுருகன், அவர் பேசி முடிக்கட்டும், உட்காருங்கள்.

**திரு. லா. சந்தானம்**: இந்த அவையிலே ஏதோ இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு சட்டம்–ஒழுங்கு கெட்டுவிட்டது என்பதுபோல் இரண்டு பேர் பேசியிருக்கிறார்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. துரைமுருகன், உட்காருங்கள். திரு. சந்தானம் பேசி முடித்ததும் உங்களை அழைக்கின்றேன்.

**திரு. லா. சந்தானம்**: கடந்தகால ஆட்சியில் பல்வேறு நிலைகளில் சட்டம்–ஒழுங்கு எப்படி எல்லாம் இருந்தது என்பதை நானும் அறிந்திருக்கிறேன். இந்த அவையிலே பேசியிருக்கிறேன். சட்டம்–ஒழுங்கைக் காப்பாற்றுவதற்காக அமைக்கப்பட்ட சிறப்பு. *(குறுக்கீடு)*

*பிற்பகல் 12–20*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே 1998 ஆம் ஆண்டு, ஏப்ரல் 6 ஆம் தேதி, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர் அன்றைய ஆளும் கட்சி உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசியதை இங்கே உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். "'Your days are numbered' என்று சொன்னார்கள். உடனே, அறிஞர் அண்ணா அவர்கள், 'My steps are measured' என்று சொன்னார்கள். என்னுடைய அடிகள் அளவோடு எடுத்து வைக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட முறையில் நம்முடைய மரியாதைக்குரிய அம்மையார் அவர்கள், அதே கருத்தோடு நாட்கள் எண்ணப்படுகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஆம், நாட்கள் எண்ணப்படுகின்றன, எதற்காகத் தெரியுமா? கோடி, கோடியாக மக்கள் பணத்தைக் கொள்ளையடித்து, இன்றைக்கு நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய அந்த வழக்குகளின் முடிவுகள் வருவதற்கு நாட்கள் எண்ணப்படுகின்றன. (ஆளும்கட்சி உறுப்பினர்கள் மேசையைத் தட்டும் ஒலி) அந்த முடிவுகளின்படி அம்மையார் அவர்கள் உள்ளே போவதற்குரிய நாட்கள் எண்ணப்படுகின்றன" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இந்த அவையிலே பேசியது அவைக் குறிப்புகளில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீதிமன்றத்திலே வழக்கு இருக்கும்போதுதான் பேசப்பட்டிருக்கிறது. திரு. சந்தானம் அவர்கள் பேசலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. லா. சந்தானம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுகின்ற இடமாக அமைந்திருப்பது சிறைக் கூடங்கள். கடந்தகால ஆட்சியிலே, இதே சென்னை மத்தியச் சிறையிலே கைதிகள் எல்லாம் பெரிய கலவரத்தை ஏற்படுத்தி, அங்கிருந்த நேர்மையான ஒரு சிறை அதிகாரியைக்கூட சிறைக்குள்ளேயே தீ வைத்துக் கொளுத்தினார்களே, அன்றைக்கு இந்த மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கு என்ன ஆனது என்பதை இந்த அவைக்கு நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகள். இங்குகூட சொன்னார்கள். ஜாதிக் கலவரம் என்பது குறைந்திருக்கிறது—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சந்தானம், இன்னும் 3 மணித் துளிகளில் முடித்து விடுங்கள்.



**திரு. லா. சந்தானம்**: ஏதோ, கடந்த காலத்தில்தான் ஜாதிக் கலவரங்கள் எல்லாம் நடந்தன, 1996–லிருந்து 2001 வரை அப்படியில்லை என்று ஒரு பத்திரிகை எழுதியிருந்தது. '1991–லிருந்து 1996 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஆட்சியிலே ஜாதிக் கலவரங்கள் நடந்திருக்கின்றன. அதற்குப் பின்னர் 1996 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, ஜாதிக் கலவரங்கள், வன்முறைச் சம்பவங்கள் இல்லாது, அமைதியாக இருந்தது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதெல்லாம் என்ன பத்திரிகை தர்மம். இங்கு சொல்கின்றபோதுகூட, 228 பேர்களுக்கு, மேலாக ஜாதிக் கலவரங்கள் மூலமாக சென்ற ஆட்சிக் காலத்திலே 1996–லிருந்து 2001 வரை கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி, காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதான கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதற்கு மேலாக, கடந்த காலங்களிலே இந்த நாட்டிற்கு உழைத்த நல்லவர்கள் பெயர்கள், போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் மாவட்டங்களுக்கெல்லாம் வைக்கப்பட்டிருந்தன. அதையெல்லாம் கூட, சென்ற அரசால் காப்பாற்ற முடியவில்லை. ஜாதிக் கலவரங்களை அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை என்கின்ற காரணத்தாலே, அந்தப் பெயர்களையெல்லாம் எடுக்கின்ற ஓர் அவலம். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்ல வேண்டிய கடமை எனக்கு. அந்த விவரம் தெரிந்த காரணத்தாலே தோன்றுகிறது. தலைவர்களின் பெயர்களை எடுக்கவேண்டுமென்பது நோக்கமல்ல. அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றபோது, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மூப்பனார் அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் எல்லோருமாகக் கலந்துகொண்டு – அ.இ.அ.தி.மு.க. சார்பிலும் சில பேர் வந்திருந்ததாகத்தான் என்னுடைய நினைவு– எல்லோருமாகச் சேர்ந்து, இந்தப் பெயர்களை வைத்ததன் காரணமாக, ஏற்கெனவே இருப்பதன் காரணமாகக்கூட, மாவட்டங்களின் பெயர்கள் உட்பட, சமூக அடிப்படையிலே ஒரு போட்டி எண்ணத்தை உருவாக்கி, மாறுபாட்டை வளர்த்து விடுகிறது. அதனாலேயே கலவரங்கள் தோன்றுகின்றன. இல்லையானால், இன்னும் பல சமூகத் தலைவர்களின் பெயர்களை வைக்க வேண்டுமென்று தொடர்ந்து கேட்டு, போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஆகவே, அந்தப் பெயர்களை எடுத்துவிடலாம் என்று அனைத்துக் கட்சித் தலைவர்களாலும் மேற்கொள்ளப்பட்ட முடிவை,

அன்றைய அரசு ஏற்றுக்கொண்டது என்பதுதான் என்னுடைய நினைவு. தவறாக இருக்குமானால், உண்மை வேறாக இருக்குமானால், அதையும் நான் ஏற்றுக்கொள்ளத் தயார்.

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சந்தானம், இரண்டு மணித் துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. லா. சந்தானம்**: பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு சிவகாசியிலே ஒரு பேருந்துக்குப் பெயர் வைத்ததன் மூலமாக ஏற்பட்ட கலவரத்திலே மூன்று பேர் காவல் துறையினுடைய துப்பாக்கிச் சூட்டிலே இறந்து விட்டார்கள். அதன் மூலமாகத்தான் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டது. அவற்றையெல்லாம் அன்றைக்கு இருந்த அரசு சாமர்த்தியமாக அந்தக் கலவரங்களை நிறுத்தி வைத்து, இந்த நாட்டுக்கு உழைத்த நல்லவர்களுடைய பெயர்களையெல்லாம் நிலை நிறுத்தியிருக்கலாம். பேராசிரியர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்குக் கலந்து கொண்டது. ஆனால் இதிலே உடன்பாடு இல்லையென்று சொல்லி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அன்றைக்குக் கூட்டத்திலேயிருந்து வெளியே வந்து விட்டார்கள் என்பதும் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. துரைமுருகன், விட்டு விடுங்கள், அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சந்தானம் அவர்களின் நிலை அப்போது என்னவாக இருந்தது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சந்தானம், இரண்டு மணித் துளிகள்.

**திரு. லா. சந்தானம்**: எனவே நேரத்தின் அருமை கருதி பல்வேறு விவாதங்களுக்குள் நான் செல்லவேண்டியிருந்தாலும், அவற்றுக்கெல்லாம் நேரமில்லை என்கின்ற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, உங்களது துறையைச் சேர்ந்த நண்பர்கள், பணியாற்றுகின்றவர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து நான் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.



1996–லே உங்களுடைய அரசு சார்பிலே 1100 சப்–இன்ஸ்பெக்டர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். அந்த 1100 சப்–இன்ஸ்பெக்டர்களிலே ஏறக்குறைய 500 பேர் சட்டம்–ஒழுங்குப் பிரிவிலே வேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மீதமுள்ள 600 பேர் இன்றைக்கு ஆறு ஆண்டுகள் தாண்டியும்கூட அவர்களுக்கு அந்த வாய்ப்பு அளிக்கப்படவில்லை. ஆனால் 1999–லே தேர்வு செய்யப்பட்ட 1000 பேர் அவர்கள் நேரடியாகவே சட்டம்–ஒழுங்குப் பிரிவுக்குச் சென்றுவிட்டார்கள். நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிற நிலையிலே இருக்கிறோம். எனவே, இந்த அரசு கருணையுள்ளத்தோடு எங்களுக்கும் அந்தச் சட்டம்–ஒழுங்குப் பிரிவிலே பணி செய்வதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

அதேபோல 35 ஆண்டு காலமாக, ஏறக்குறைய காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே காவலர்களாகப் பொறுப்பேற்றவர்கள், எங்களுக்கு இந்த சப்–இன்ஸ்பெக்டர் வேலைக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை; நாங்கள் ஓய்வு பெறுகின்ற நேரத்திலாவது அந்தப் பெருமையோடு ஓய்வு பெறவேண்டும்; எனவே எங்களுடைய கோரிக்கைகளையும் கவனிக்க வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறார்கள். அதேபோல காவல் துறையிலே தனித்து இயங்கி வருகின்ற அமைச்சுப் பணியாளர்கள், எங்களைக் காவல் பணியாளர்களாக ஏற்று நடத்தவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள், அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு 34 புதிய கட்டடங்கள் தீயணைப்புத் துறை மூலமாகக் கட்டவிருக்கிறோம் என்கிற செய்தியை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். எனது தொகுதியான உசிலம்பட்டியில் இருக்கிற தீயணைப்பு நிலையத்திற்கு உரிய கட்டடம் இல்லை. எனவே அருள்கூர்ந்து அந்த 34 கட்டடங்களிலே என்னுடைய தொகுதியில் இருக்கிற தீயணைப்பு நிலையத்திற்கும் ஒரு கட்டடம் வழங்கவேண்டுமென்று அன்போடு கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள். (குறுக்கீடு) லத்தீப் அவர்களே, உங்களுக்கு ரொம்பப் பிடித்தமான ஒருவர் ஏதோ கேட்கிறார்.

**திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வழக்கைப் பற்றிப் பேசுகிறபோது, அந்த வழக்கில் அப்பீல், மேல் அப்பீல் போனார்கள். பிறகு கடைசி

நேரத்தில் எப்படி யார் யாரைப் பிடித்து, எப்படியெல்லாம் நீதி வாங்கினார்கள் என்று நீதிமன்றத்தையும், நீதிபதியையும் குறை சொல்கிற அளவுக்கு 'influence' பண்ணும் அளவுக்கு நீதிமன்றத்தைக் குறை சொல்கிற அளவுக்குப் பேசினார்கள். அது இந்த மன்றத்திற்கு ஏற்புடையதுதானா? இந்த அவையில் இருக்கலாமா? அது நீதிமன்றத்தில் தலையிடுவது ஆகாதா? நீதிமன்றத்தைப் பழித்தது இந்தத் துறை என்று ஆகாதா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திரு. ஸ்டாலின் பேசிய பேச்சைப் படித்துக் காட்டினார்கள். அது இருக்கலாம் என்றால், இதுவும் இருக்கலாம். திரு. லத்தீப் பேசுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ..*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு முறை டான்சி வழக்கில் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. தங்கராசு அவர்கள் என்னை விடுவித்தார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்பொழுது தி.மு.க.–வினர் இது வாங்கப்பட்ட தீர்ப்பா, வழங்கப்பட்ட தீர்ப்பா என்று ஊர் முழுவதும் சுவரொட்டிகளை ஒட்டினார்கள். அன்றைக்கு நீதிபதியையே கொச்சைப்படுத்தினார்கள். அதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களுக்கு ஏற்புடையதுதானா என்று அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–30*

**திரு. துரைமுருகன்**: தலைவர் அவர்களே, நான் இப்பொழுதும் சொல்கிறேன். வெளியிலே என்ன பேசினார்கள், ஏது பேசினார்கள் என்பதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கப்பட்ட தீர்ப்பைப்பற்றி இந்த மாமன்றத்தில் சொல்வது சரியாக இருக்குமா என்றுதான் நான் கேட்டேனே தவிர, வெளியிலே எத்தனையோ பேச்சு பேசுகிறார்கள். நீதிபதியைப்பற்றி வெளியிலும் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு எந்த உள்நோக்கமும் கற்பித்து எதையும் நான் இங்கே பேசவில்லை. நான் சொன்னதெல்லாம் கடந்த தி.மு.க. ஆட்சியின்போது, அவர்களே அமைத்த ஒரு தனி நீதிமன்றத்தில், அவர்களே நியமித்த ஒரு தனி நீதிமன்ற நீதிபதி



ஒரு வழக்கில் என்னை விடுவித்தார்; நிலக்கரி வழக்கில். ஆனால் அவர்கள் அதை ஏற்கவில்லை. அதன்பின்னர் உயர் நீதிமன்றத்திற்கு அவர்கள் அப்பீல் செய்தார்கள். மேல்முறையீடு செய்தார்கள். உயர் நீதிமன்றமும் என்னை விடுவித்தது சரிதான் என்று தீர்ப்பு அளித்துவிட்டது. அதன்பிறகு அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்கள். உச்ச நீதிமன்றத்தில் அந்த இரண்டு தீர்ப்புகளையும் இரத்து செய்து மீண்டும் அதே வழக்கு விசாரணை நடைபெற வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. அந்த உத்தரவு எப்படி வழங்கப்பட்டது என்பது குறித்து தி.மு.க.–வினர்தான் விளக்கம் கூறவேண்டுமென்று நான் சொன்னேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீதிபதியைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: அவர்களுக்குக் குற்ற உணர்வு இருப்பதால் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது. அதனால்தான், அதையே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள், பேசிக்கொண்டிருக்கிறார்கள். *(குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி)*

**டாக்டர் க. பொன்முடி**: தலைவர் அவர்களே, பதில் சொல்வதற்கு விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. பொன்முடி, அனுமதி இல்லாமல் பேசக்கூடாது, உட்காருங்கள். திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிற்கும், வீட்டிற்கும் தேவையான இரண்டு முக்கியமான துறைகள் குறித்த இந்த மானியக் கோரிக்கை விவாதத்தில் நானும் கலந்து பேசுவதற்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். போலீஸ் துறை நாட்டுக்கு இன்றியமையாத துறை. எனவே போலீஸ் இல்லாமல் நாட்டில் அமைதியை நிலை நிறுத்துவது இயலாத ஒன்று என்ற நிலையில் போலீஸ் துறையை நாம் செம்மையாக வழி நடத்துவது மிக முக்கியமான ஒன்று. போலீஸிடம் அணுகுமுறையை வைத்துக் கொள்ளும்போது, தீயிடம் எப்படி நாம் அணுகு முறையை வைத்துக் கொள்வோமோ, அந்த மாதிரியாகத்தான் அதோடு நாம் நம் அணுகுமுறையை வைத்துக்கொள்ளவேண்டும். தீ தேவை, எல்லாவற்றிற்கும், பல காரியங்களுக்கு, சமைப்பதற்கு உள்பட தீ தேவை. தீ இல்லாமல் சமைக்க முடியாது. அதேநேரத்தில், இவ்வளவு பயனுள்ள தீயோடு கொஞ்சம் பழகலாம், அதைத் தொட்டு மகிழலாம்

என்று யாராவது தீயைத் தொட்டால், தீ கையைச் சுட்டுவிடும். எனவே சுடாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்; அதேநேரத்தில் தீயினுடைய பயன் நமக்குக் கிடைக்கும் வகையில் எவ்வளவு தூரத்தில் இருக்க வேண்டுமோ, அவ்வளவு தூரத்தில்தான் இருக்க வேண்டும்; வெகுதூரம் விலகியும் போகக்கூடாது; நெருங்கியும் இருந்து விடக்கூடாது. எனவே தீயைப்போல், இந்தத் துறையை நாம் பயன்படுத்த வேண்டும்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் துணிச்சல் உள்ளவர், தெளிவானவர், அறிவுப்பூர்வமானவர். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில் எத்தகைய சோதனைகள் வந்தாலும், அந்தச் சோதனைகளை மிக உறுதியோடு இருந்து சாதனைகளாக மாற்றக்கூடிய ஒருவர் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் நன்கு அறிவேன். அவர்களை நான் கேட்டுக்கொள்வது, தயவுசெய்து நம்முடைய மாநிலத்தினுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட போலீஸ் துறையின் தனித் தன்மையைக் காப்பாற்றுவதில் யாருக்கும் நீங்கள் எப்பொழுதும், எந்தச் சூழ்நிலையிலும் விட்டுக் கொடுக்கக்கூடாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் அவர்களிடத்திலே நான் வைக்கிற விண்ணப்பம் ஆகும். ஏனென்றால் இது யாருக்கும் தனிப்பட்ட முறையில் செய்யப்படுகிற ஒன்று அல்ல. நம்முடைய அரசமைப்புச் சட்டத்தையே காக்கக்கூடிய ஒன்று. அதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காட்டி வருகிற உறுதியை நான் வியந்து பாராட்டுகிறேன். அதற்கு யாரும் தடையாக இருக்கக்கூடாது.

*பிற்பகல் 12–35*

அவர்களுடைய அந்த உறுதிக்குக் குறை ஏற்படுத்த யாரும் முயலக்கூடாது. அப்படிச் செய்தால், அது அரசமைப்புச் சட்டத்திற்கே ஊனம் ஏற்படுத்துவது மட்டுமல்ல, இங்கே மாநிலங்களுடைய அதிகாரங்களைப்பற்றிப் பேசியபொழுது, வெளிப்படுத்தப்பட்ட உணர்வுகள்; அதனடிப்படையிலே நம் மாநிலங்களுக்கு உறுதி செய்யப் பட்ட ஒரு அதிகாரம்; அந்த அதிகாரத்தில் மத்திய அரசு உட்பட, தேவையில்லாமல் தலையிடுவதை ஒருக்காலும் நாம் அனுமதிக்க முடியாது என்பதை மிக உறுதிபட நாம் நிலைநிறுத்தி வருகிறோம். அதைத் தொடர வேண்டுமென்றுதான் நாம் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறோம். நீங்கள் எடுத்த முடிவை, மேற்கொண்ட நிலையை நாங்கள் மட்டுமல்ல, வெளி மாநிலங்களிலே இருக்கக்கூடிய மாநில



முதலமைச்சர்கள் பலர் இதனை ஆதரித்து இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுப்பதற்கும் இல்லை; மறப்பதற்கும் இல்லை. எனவே, அதிலே உறுதியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

ஒரு உண்மையை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். போலீஸ் காரர்களும் நம்முடைய சமுதாயத்தின் அங்கங்கள். அவர்களும் மனிதர்கள் தான். எனவே அவர்களும் வாழும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்குரிய சலுகைகள், தேவைகள் மறக்கப்படக் கூடாது; மறுக்கப்படக்கூடாது. அதிலே மிக முக்கியமான ஒன்று, போலீஸ்காரர்கள் என்றால், சமுதாயத்திலே ஒருவிதமான யூகம் இருக்கிறது. அந்த யூகம் தேவையில்லை. போலீஸ்காரர்களிலும் தவறு செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் மறுப்பதற்கு இல்லை. அதை நானும் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். ஆனால் அதேநேரத்திலே, நம்மவர்களிலே, போலீஸ்காரர்கள் அல்லாதவர்களிலேகூட தவறு செய்யக்கூடியவர்கள் இருக்கிறோம். நாம் தவறு செய்கிறோம் என்பதற்கு, அதற்கு திருத்தங்கள் செய்வதற்காகத்தான் போலீஸ் துறையே இருக்கிறது என்பதை நாம் ஒரு காலத்திலும் மறந்து விடக்கூடாது. எனவேதான், போலீஸுக்கும், பொது மக்களுக்கும் ஒரு இணக்கமான சூழ்நிலையை எப்பொழுதும் நாம் உருவாக்கியிருக்க வேண்டும்.

இந்தக் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிற கணக்குப்படி, போலீஸ் காரர்கள் ஏறக்குறைய 98000 அல்லது 1 இலட்சம் பேர் இருக்கிறார்கள். 6 கோடி மக்களுக்கு 1 இலட்சம் போலீஸ்காரர்கள் ஒவ்வொரு ஆளையும் பின்தொடர்ந்து பாதுகாப்புத் தர முடியுமா அல்லது ஒவ்வொருவரையும் கண்காணிக்க முடியுமா? முடியாது. ஆனால் போலீஸ்மீது இருக்கக்கூடிய ஒரு பயம் என்று நான் சொல்லமாட்டேன். போலீஸ் இருக்கிறது என்ற ஓர் உணர்வு மக்களிடத்தில் இருக்கவேண்டும். சட்டத்தை நிலைநாட்டக்கூடிய ஒரு பொறுப்பு போலீஸுக்கு இருக்கிறது. சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றக்கூடிய பொறுப்பு அவர்களுடைய பொறுப்பு. எனவே, குற்றம் செய்தால் அதனைத் தண்டிக்கக்கூடிய உரிமையும் கடமையும் போலீஸுக்கு உண்டு என்ற ஒரு பொதுநோக்கு மக்களிடத்தில் இருக்கவேண்டும். போலீஸ் என்ன செய்வான் என்று நினைத்தால் சட்டமும் இல்லை; ஒழுக்கமும் இல்லை. ஒவ்வொரு ஊரிலும் காவல் நிலையம் இருக்கலாமே தவிர, அந்த ஊரில் 10000 பேர் இருக்கிறார்கள் என்றால், 10000 போலீஸ்காரர்கள் இருக்க முடியாது. இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான

கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, பல போலீஸ் நிலையங்களிலே தேவையான அங்கீகரிக்கப்பட்ட sanctioned strength என்று சொல்வார்களே, அந்த எண்ணிக்கை எந்த போலீஸ் நிலையத்திலும் இல்லை, அவர்களுக்கு வசதியும் இல்லை. உதாரணமாக, என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், வாணியம்பாடி, ஆம்பூர், ஆலங்காயம், அதோடு ஜவ்வாது மலையில் இருக்கக்கூடிய சத்திரம் போன்ற பகுதிகளையெல்லாம் எடுத்துக்கொண்டால், எவ்வளவு போலீஸ்காரர்கள் அங்கே தேவையோ அல்லது அங்கீகரிக்கப்பட்டதோ அவ்வளவு போலீஸ்காரர்கள் இல்லை என்பதுதான் நிலை. *50* சதவீதமாவது இருக்க வேண்டும். குறிப்பாக, என்னுடைய தொகுதியில், ஜவ்வாது மலைப் பகுதி, ஆலங்காயப் பகுதி, இந்தப் பகுதிகளெல்லாம் காட்டுப் பகுதிகள், மலைப் பகுதிகள். அங்கே பல குற்றங்கள் நிகழ்வதற்கு முகாந்திரங்கள் இருக்கின்றன, வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் போலீஸ்காரர்கள் குற்றவாளிகளைக் கண்டு அஞ்சக்கூடிய நிலை தொடர்ந்து இருப்பது, எந்தவகையிலும் ஏற்புடையதல்ல என்பதை நான் அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், அவர்களுடைய எண்ணிக்கை அவ்வளவு குறைவாக இருக்கிறது. குற்றவாளிகள் எல்லாவகையிலும் மேம்பட்டுத் திகழ்கிறார்கள். எல்லாவகையிலும் அவர்களுடைய அராஜகம் நடக்கும்போது, மலைப் பகுதியிலே, தூர தேசத்திலே இருக்கக்கூடிய போலீஸ்காரர்கள், *30* பேர் இருக்கவேண்டிய இடத்தில் *3* பேர் இருந்தால், அவர்கள் எப்படி குற்றவாளிகளைச் சந்திக்க முடியும் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெயருக்கு போலீஸ் நிலையங்கள் இருக்கின்றனவே தவிர, போலீஸ் நிலையங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற கடமைகளை அவர்கள் நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை இல்லாமல் இன்றுவரையிலும் இருக்கிறது.

*பிற்பகல் 12–40*

கடந்த ஆட்சி, இந்த ஆட்சி என்ற விவாதத்திற்கு நான் போக விரும்பவில்லை. ஏனென்றால், இப்போதுதான் இந்த ஆட்சி வந்திருக்கிறது. கடந்த ஆட்சிதான் நேற்றையதினம் வரை இருந்தது. எனவே, அவர்கள் அதிலே கவனம் செலுத்தவில்லை. எது எதற்கோ என்னுடைய பெயரைக்கூட இங்கே குறிப்பிடுகிறார்கள். நான் எத்தனை தடவை இந்த விஷயங்களைப்பற்றி இங்கே பேசியிருக்கிறேன்? ஆனால் போலீஸ் நிலையங்களுக்கு உரிய முறையில் தளவாடங்களை, போலீஸ்காரர்களை, அதிகாரிகளை நியமிப்பதில் கடந்த ஆட்சி தவறிவிட்டது என்பது என்னுடைய மனக்குறை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து கவனம் செலுத்தி உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். உதாரணமாக, ஆலங்காயம் ஒரு பேரூராட்சி...(குறுக்கீடு)



**திரு. பரிதி இளம்வழுதி**: Speaker Sir,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. பரிதி, உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

**திரு. பரிதி இளம்வழுதி**: அவர் சொன்னதால் சொல்கிறேன்.....

**திரு. ம. அப்துல் லத்தீப்**: என்னப்பா, இதைச் சொல்லக்கூடாதா அப்பா, திரு. பரிதி, உட்காரப்பா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இதை நான் அனுமதிக்கவில்லை, அண்ணன் திரு. அப்துல் லத்தீப் பேசலாம். (குறுக்கீடு) திரு. பரிதி, உங்களை நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு)

**திரு. ம. அப்துல் லத்தீப்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்காயம் ஒரு பேரூராட்சி. அந்தப் பேரூராட்சியில் போலீஸ் நிலையம் இருக்கிறது. ஆனால் அதற்குக் கட்டடம் இல்லை. ஒரு வாடகைக் கட்டடத்தில் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ரிமாண்டு கைதிகளை அவர்கள் அடைத்து வைப்பதற்குக்கூட, அவர்கள் உட்காருகிற அலுவலகத்திலேதான் அடைத்து வைக்க வேண்டும். அவர்களோடுதான் இவர்கள் இருக்க வேண்டும்; இவர்களோடுதான் அவர்கள் இருக்க வேண்டும். அது ஒரு சிறிய கட்டடம், பழுதடைந்த கட்டடம்; இந்தநிலை அங்கே நீடித்துக் கொண்டிருக்கிறது. அது ஒரு பெரிய ஊர். குற்றங்களும் பெரிய அளவிலே நடக்கின்ற பகுதி. எனவே, தயவுசெய்து அந்த போலீஸ் நிலையத்திற்கு உரிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, கைதிகளை அடைத்து வைப்பது. கைதிகளை அடைப்பது, குற்றவாளிகள் யாராக இருந்தாலும், சமுதாயத்தினுடைய பொது நன்மைக்காக அவர்கள் அடைத்து வைக்கப்படத்தான் வேண்டும். அவர்கள் யாராக இருந்தாலும் அடைத்து வைக்கப்படத்தான் வேண்டும். ஆனால், அப்பாவிகள் அடைத்து வைக்கப்படுவது சமுதாயத்திற்கே மிகப் பெரிய ஓர் அவமானம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த காலத்திலே அப்பாவிகள் பலர் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். நான் அன்றைக்கும் சொன்னேன்; இன்றைக்கும் சொல்கிறேன். என்னுடைய வேண்டுகோள் இதுதான். வெறுமனே ஆண்டுக்கணக்கில் கைதிகளை விசாரணை இல்லாமல் அடைத்து வைக்காதீர்கள். விசாரணை செய்யுங்கள், அதிலே குற்றம் செய்ததற்கான முகாந்திரங்கள் இருந்தால் வழக்குகளை துரிதப்படுத்தி அவர்களுக்கு உரிய தண்டனை வழங்குங்கள். அதுதான்

என்னுடைய வேண்டுகோள். ஆனால், அப்பாவிகளை வருடக்கணக்காக நீங்கள் சிறைச் சாலைகளிலே அடைத்து வைக்காதீர்கள். அவர்களிலே ஒரு சிலராவது அப்பாவிகள் இருந்தால், – பெரியவர்கள் சொல்லுவார்கள்; அப்பாவிகள் விடும் பெருமூச்சு அணுகுண்டைவிட அபாயகரமானது. – அவர்களுடைய பெருமூச்சுக்கு ஒரு வலு உண்டு. அது அதல பாதாளம் வரையிலே பாயும். எனவே, அப்பாவிகளை அடைத்து வைக்காதீர்கள். அப்படி அடைத்து வைக்கப் பட்டிருப்பவர்கள் யாராக இருந்தாலும், முறையாக உங்களுடைய ஆட்சியிலே விசாரணை செய்து, அவர்கள் அப்பாவிகளாக இருந்தால், உடனடியாக விடுதலை செய்யுங்கள் என்று நான் அன்பு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அதேநேரத்திலே, பாளையங்கோட்டையிலே ஒரு கொலை நடந்தது. அந்த விவரங்களுக்குள் நான் செல்ல விரும்பவில்லை. மசூதியில் ஒருவர் நோன்பு திறந்து கொண்டிருந்தார். அவர் கொலை செய்யப்பட்டார். அதனால் சில பிரச்சினைகள் உருவானது. எங்களைப் போன்றவர்கள் எல்லாம்கூட அங்கே சென்றிருந்தோம். அதற்குப்பிறகு என்ன நடந்தது என்றால், அவருடைய மகனையே, கொலை செய்யப்பட்ட அந்த நபருடைய மகனையே, சொந்த மகனையே, மொய்தீன் பிச்சை என்ற பெயருடைய அவனையே கைது செய்தார்கள். என்ன காரணம் என்று கேட்டால், ஏதோ குடும்பச் சண்டையில் இவர் ரமலான் மாதத்தில் மசூதியில் வந்து நோன்பு திறந்து கொண்டிருக்கும்போது, அவன்தான் வந்து கொலை செய்தான் என்று ஒரு விவரம் தரப்பட்டது. எல்லோரும் அதற்கு ஒரு விசாரணை கோரினார்கள். அரசு அதற்காக சி.பி.சி.ஐ.டி., விசாரணையைத் தொடங்கியது; தொடங்கி, அதனுடைய அறிக்கை அரசுக்குத் தரப்பட்டிருப்பதாக போலீஸ் துறையே சொல்கிறது. அந்த அறிக்கையினுடைய முடிவு என்ன? அதை நாங்கள் – மக்கள் – தெரிந்துகொள்ள வேண்டும். அவனே கொலையாளியா? அல்லது வேறு சூழ்நிலைகள் அங்கே உருவானதா? என்ன உண்மை என்பதை நாங்கள் தெரிந்து கொண்டாக வேண்டும். எனவே, தயவுசெய்து நான் மாண்புமிகு முதலமைச்சரைக் கேட்டுக்கொள்வது, அந்த சி.பி.சி.ஐ.டி., விசாரணையின் – பாளையங்கோட்டை மசூதியில் நடந்த அந்தக் கொலை சம்பந்தமாகத் தொடங்கப்பட்ட அந்த சி.பி.சி.ஐ.டி., விசாரணையின் – முடிவு என்ன என்பதை, அது எந்த முடிவாக இருந்தாலும், அது மக்களுக்குத் தெரிய வேண்டுமென்பது எங்களுடைய வேண்டுகோள். எனவே, தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனை வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 12–45*

போலீஸ்காரர்கள் எங்களிடம்கூட சில கோரிக்கைகளை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்ல வேண்டுமென்று சில மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், முதலமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை போலீஸ்காரர்களுக்கு இருக்கிறது. எனவே, அவர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். போலீஸ் துறையிலே, நிர்வாகத் துறையிலே இருக்கக்கூடிய Ministerial Staff–ஐ common category–யிலே கொண்டு வரவேண்டுமென்று அவர்கள் பல நாட்களாக, ஒவ்வோராண்டும் இந்தக் கோரிக்கைகளை வைப்பதுண்டு. இந்த ஆண்டும் அந்தக் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். எனக்கு ஒரு தகவல் தரப்பட்டிருக்கிறது. 1993–லே அவர்கள் மாண்புமிகு இன்றைய முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, விண்ணப்பம் கொடுத்ததாகவும், D.G.P. அலுவலகத்திலேயே நடந்த ஒரு விழாவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு பேசியபோது, அந்த விண்ணப்பத்தைப் பெற்று, 'இதை நான் ஆவன செய்கிறேன்; உங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறேன்' என்று 1993–லே அப்போதும், கோயம்புத்தூரில் நடந்த ஒரு விழாவில் 1996–ல், அந்த இரண்டு விழாக்களிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை ஏற்றுக்கொண்டதாகவும், ஆனால் பிறகு வந்த ஆட்சி அதைக் குறித்து கவனிக்கவில்லை என்றும் என்னிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் வேண்டிக்கொள்வது, போலீஸ்காரர்களும் கொஞ்சம் நிம்மதியாக இருக்கவேண்டும். போலீஸ்காரர்கள் என்றால் ஏதோ அவன் மனிதப் பிறவி அல்ல என்று நாம் நினைக்கக்கூடாது. அவர்களும் மனிதர்கள்தான். நமக்குள்ள நிறை, குறை அங்கேயும் இருக்கிறது. ஆனால், அவர்களிடத்திலே நாங்கள் வேண்டிக்கொள்வது, (மணியடிக்கப்பெற்றது) தயவுசெய்து, அவர்களிடத்திலே வேண்டிக்கொள்வது, ஆட்சிகள் வரும், ஆட்சிகள் போகும்; நீங்கள் அரசியல்வாதிகளாக மட்டும் இருக்கக்கூடாது. உங்களுடைய நன்மைகளை உத்தேசித்தே நான் சொல்கிறேன். உங்களிடத்திலே நாங்கள் எதிர்பார்ப்பது, தயவுசெய்து நீங்கள் அரசியலில், இப்பக்கம், அப்பக்கம் என்று உங்களை நீங்கள் இனம் காட்டிக் கொள்ளக்கூடாது. சட்டம் என்ன சொல்லுகிறதோ, அதன்படிதான் நீங்கள் நடந்து கொள்ளவேண்டும். அப்பாவிகளைத் தண்டிப்பதில் நீங்கள் ஆர்வம் காட்டக்கூடாது. எனக்காக நீங்கள் வருங்காலத்தில் பாதிக்கப்படக் கூடாது என்பதுதான் அரசியல்வாதியான என்னுடைய வேண்டுகோளாகவும் இருக்கிறது.

எனவேதான், நிதானமாகவும், நிர்பட்சமாகவும் அவர்கள் இருக்கவேண்டும் என்பது நம்முடைய வேண்டுகோளாக இருந்தாலும், போலீஸ்காரர்கள்மீது நமக்குப் பகை கூடாது. அதேநேரத்தில், அவர்களுடைய கோரிக்கைகளையும் நாம் ஏற்று, அவர்களுக்கும் சில சலுகைகளைச் செய்ய வேண்டுமென்ற நிதானமும் நமக்கு இருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

நல்லவேளை, மறுபடியும் யாராவது குறுக்கிடு அதுவெல்லாம் வரக்கூடாது என்பதற்காகத்தான் எந்தப் பிரச்சினையையும் தொடாமல் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால், என்னுடைய நேரத்தை எடுத்துக்கொள்வார்களே என்பதற்காக சில கோரிக்கைகளை வைக்கவேண்டும். அதற்கும் இடம் இல்லாமல், என்னுடைய நேரத்தை யாரும் எடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் பேசவேண்டிய கருத்துக்களை எல்லாம் பேசாமல், இந்தப் பிரச்சினைகளை மட்டும் நான் எடுத்து வைக்கிறேன். இங்கே ஒரே ஒரு பிரச்சினையை மட்டும் வைக்கிறேன். நான் எந்தச் சட்டத்திற்கு உள்ளேயும் போக விரும்பவில்லை; அதேநேரத்தில், எந்த வழக்குக்கு உள்ளேயும் போகு விரும்பவில்லை. வழக்குமன்றத்திற்கும் போகவில்லை. வழக்குமன்றத்திற்குப் போகக்கூடிய உரிமை படைத்தவன்தான் நான். நானும் ஒரு கோர்ட்டினுடைய அங்கம்தான். அதனால் என்னுடைய அதிகாரம் என்ன, என்னுடைய கடமை என்ன, என்னுடைய வரையறை என்ன, நான் மேற்கொள்ள வேண்டிய முறை என்ன என்பதையெல்லாம் நன்றாக அறிந்துதான் சொல்கிறேன். Fair comments என்று சொல்லுவார்கள். நியாயமான விமர்சனங்கள் தடுக்கப்படவில்லை.

*பிற்பகல் 12–50*

எனவே, இந்த சட்டசபையிலேகூட நாம் பேசும்போது, வழக்குகளின் உள்ளே சென்று, வழக்குகள் நடக்கின்ற முறை குறித்தும், மாண்புமிகு நீதிபதிகள் தெரிவிக்கின்ற கருத்து குறித்தும், அவர்கள் இறுதியாக அளிக்கின்ற தீர்ப்பு குறித்தும்கூட விமர்சனம் செய்யலாம். ஆனால் வெளியிலே அல்ல. அந்த மேல்முறையீடுகள் நாம் செய்யும்போது, அதிலே நாம் விமர்சனம் செய்யலாம். அப்படியென்று சொன்னால், நீதிமன்றத் தீர்ப்புகளைப் பற்றி பத்திரிகைகளும் விமர்சனம் செய்யக்கூடாதா? உரியவர்களும் விமர்சனம் செய்யக்கூடாதா? Fair comments அந்த வளாகத்திற்குள்ளே இருந்து நியாயமான விமர்சனங்கள் செய்வது தேவை. ஒன்றை நாம் மறந்து விடக்கூடாது. இந்த அவையிலேதான் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன. நீதிமன்றத்திற்கான மானியத்தை



நாம்தான் கொடுக்கின்றோம். ஜெயிலுக்கான மானியத்தை நாங்கள்தான் கொடுக்கின்றோம். எனவே மானியம் கொடுக்கின்ற உரிமை, அதிகாரம் படைத்த இந்த அவை நீதிமன்றத்தினுடைய செயல்பாடு குறித்தும், அதைத் தொடர்ந்து எழுகின்ற விமர்சனங்கள் குறித்தும் வாய்மூடி மௌனிகளாக இருந்தால், நாம் மானியம் கொடுக்கின்ற அதிகாரம் நமக்கு இல்லை என்பதை மறந்து விடக்கூடாது. *(மணியடிக்கப்பெற்றது)* நீ எப்போது மானியம் கொடுக்கிறாயோ, அப்போதே விமர்சனம் செய்கிற, நியாயமான விமர்சனம் செய்கிற, முறைக்கு உட்பட்ட, முறையான விமர்சனங்களைச் செய்வது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை பாராளுமன்ற விவாதங்களிலும், இந்த அவையிலும் இத்தனை நாள் நடந்த விவாதங்களிலேயிருந்தும் நாம் தெரிந்துகொள்ளலாம். எனவே, ஒரு முறை வேண்டும், ஒரு வரையறை வேண்டும். ஆனால் அதேநேரத்தில் எதைப்பற்றியும் பேசக் கூடாது என்று சொல்வது அண்மையிலே – நான் மிகுந்த வருத்தத்தோடு சொல்கிறேன். – நம்முடைய மாநிலத்தில் நீதிமன்றங்கள் குறித்தும், சில குறிப்பிட்ட நீதிபதிகளைக் குறித்தும் பத்திரிகைகளில் வந்த விமர்சனங்கள், அதனுடைய இறையாண்மையை, அதனுடைய மாண்பை உயர்த்துவதாக அமையவில்லை என்பது என்னுடைய கருத்து. அரசியல் கருத்துக்களை நீதிமன்றத்திலே உட்கார்ந்துகொண்டு நீதிபதிகளே வெளிப்படையாக பேசுவது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல. என்னைப் பொறுத்தவரையிலே, as an Officer of the Court, நான் சொல்கிறேன், இது முறையற்றது. வரையறையை மீறியது. எனவே, அவர்களிடத்தில் தன்னடக்கம் இருக்க வேண்டும். restraint இருக்க வேண்டும். அந்த restraint இல்லாத சில கருத்துக்கள் நீதிமன்றத்திலே சொல்லப்படுவது, அவர்களை ஒரு அரசியல்வாதிகளாகக் காட்டுவதற்கு வழிவகுப்பது, அது அவர்களுக்கு ஏற்புடையதல்ல, நமக்கும் ஏற்புடையதல்ல. இதைச் சொல்வதற்கு எனக்கு உரிமை இல்லையா? *(மணியடிக்கப்பெற்றது)* இதை ஆய்வு செய்வதற்கு இந்த அவைக்கு உரிமையில்லை என்று சொன்னால், I am not prepared to grant any money for the administration of such Courts where political views are expressed. அதனாலேதான், இந்த நீதிமன்றங்களைப் பற்றி, do not get too much touchy. இங்கே சொன்னார்கள், sensitization ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு அண்ணன் லத்தீப் அவர்களே, 15 மணித் துளிகள்தான் என்று நீங்களே ஒத்துக்கொண்டீர்கள். 20 மணித் துளிகள் பேசியிருக்கிறீர்கள். இன்னும் 5, 6 பேர் பேசவேண்டும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்**: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முடித்துவிடுகிறேன். மானியத்தில் முதன்முதலில் பேசுகிறேன். இதோ மிக முக்கியமான கருத்தைச் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கிறதோ என்று எனக்குத் தெரியாது. தயவுசெய்து நான்,

உங்களுக்குச் சொல்கிறேன், ஒரு sensitivity இல்லையா? The legal sensitivity, judicial sensitivity. Am I free from any judicial dispensation or any judicial sensitivity? எனக்கு judicial sensitivity–யே இல்லையா? Because, simply I happen to be here, in this House, do you think I am completely extricated from the field of judiciary, and the judicial observations. Not only as a Court Officer, but even as a citizen, as a Member of this House who is responsible to grant money for the administration of justice and maintenance of jails, I am entitled to make certain observations with limits and with a great sense of responsibility and restraint. இந்தமாதிரி touchy–நான் உங்களையும் கேட்டுக் கொள்கிறேன்.–இங்கே பேசியதைப் பற்றியெல்லாம் நீங்கள் ஒன்றும் கவலைப்படாதீர்கள். இதனாலே, it has the least impact. இத்தனை நாள் இருந்திருக்கிறேன். இதிலே என்ன இருக்கிறது? ஏன் இவ்வளவு sensitive ஆகிறீர்கள்? நீங்கள் எல்லோரும் எழுந்து நின்று இதைப்பற்றி reaction பண்ண வேண்டிய அவசியம் இல்லை. It is a waste. நாங்கள் பேச்வதைப் பற்றி உங்களுக்கு என்ன? அவர்கள் பேசுவது பற்றி என்ன? Nothing will happen. 'ஏமி லேதண்டி', இதிலே எதுவுமே கிடையாது. இதனாலே என்னுடைய வயதைவிடக் குறைவாக இருக்கிற தம்பிமார்கள் இதைப்பற்றி கவலையேபடாதீர்கள். ஒரு situation வந்திருக்கிறது. அந்த situation என்ன என்பதை நான் இங்கே சொல்லவில்லை. Hon'ble Chief Minister is capable of dealing with that situation and there is no doubt whatsoever. (மேசையைத் தட்டும் ஒலி) நான் உங்களுக்கு ஒன்றைத்தான் சொல்கிறேன், அவர்களுக்கு இந்தி தெரியும் என்று நான் நினைக்கிறேன். நான் உங்களுக்கு ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன், புரியவில்லை என்றெல்லாம் சத்தம் போடாதீர்கள்.

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அண்ணன் லத்தீப் அவர்களே, அவர்களுக்கு எல்லா மொழிகளும் தெரியும், எங்களுக்குத் தெரியாது.

**திரு. ம. அப்துல் லத்தீப்**: சொல்லி முடித்து விடுகிறேன். பின்னர் அதற்கான அர்த்தத்தைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் லத்தீப் அவர்கள் சொல்வதைத் தமிழில் சொன்னால் எல்லோரும் புரிந்துகொள்வார்கள், மேசையைத் தட்டுவார்கள்.



**திரு. ம. அப்துல் லத்தீப்**: ராஷ்ட்ர கவி, தேசிய கவி என்ன சொல்கிறார்:

"சன்சார் கி சமரஸ்தலிமே தீர்த்தாதி தீரன் கரோ
சல்தே உயே நீஜத்பத்மே சங்கடோஸே மத் கரோ"

என்று. இந்த சன்சார் என்பது ஒரு போர்க்களம். இந்தப் போர்க் களத்தில் நீங்கள் வீரத்தையும், தீரத்தையும் கடைப்பிடியுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வீரதீர பராக்கிரமத்தோடு செல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தன்னம்பிக்கையோடு நீங்கள் முன்னேறுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வழியிலே ஏற்படுகின்ற முட்டுக் கட்டைகளைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், கட்டைகள் எல்லாம் கட்டைகள்தான், மட்டைகள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அதைப்பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்களிடத்தில் உண்மையும், நேர்மையும், தைரியமும், தெளிவும், துணிவும் கனிவும் இருக்கும்போது (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் தைரியத்தோடு முன்னேறுங்கள். வெற்றி உங்களைச் சார்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) யாரையும் சேராது. எனவே இடையிலே வருவதைப் பற்றி, இடையிலே சில தடங்கல்கள், தடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது பத்திரிகைகளில் சொல்லப்படுகின்றன. நான் அதுபற்றி விமர்சிக்கவில்லை. நான் உங்களைக் கேட்டுக்கொள்வது, தடைகள் வரலாம், சிலர் எடை போட்டுப் பார்க்கலாம். ஆனால் எடை போட்டுப் பார்த்தாலும், தடைகளை ஏற்படுத்தினாலும் என்னுடைய நடை தொடரும், (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைக் கூறி தயவுசெய்து நீங்கள் நடந்துகொள்ளுங்கள், எனக்கு வயது இருக்கிற காரணத்தால் உங்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து தைரியமாக நடங்கள் என்று சொல்லி உங்களுக்கு எல்லாம் கடைசியாக நான் கூறுகின்ற அறிவுரை, எதுபற்றியும் நீங்கள் பதட்டம் அடையத் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படியெல்லாம் எழுந்து நிற்கவும் தேவையில்லை. ஏனென்றால் ஆட்சி உங்களுடையது. இந்த அவை அமைதியாக நடப்பதற்கு எங்களைவிட உங்களுக்குப் பொறுப்பு அதிகம். பேசாமல் இருங்கள். She is the only Chief Minister (மேசையைத் தட்டும் ஒலி) who is capable of dealing with all situtations. நான் மூத்தவன் என்ற முறையில், இந்த அவையில் உட்கார்ந்து அவருடைய செயலைப் பார்க்கிறேன். Her performance is being observed with great delight, happiness and satisfaction. ஆகையினால், ஒன்றும் நடக்கப் போவதில்லை. Don't worry. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகப் பதட்டம் அடையத் தேவையில்லை என்பதை மட்டும் சொல்லி முடிக்கிறேன். நான் தனியாக இங்கே வந்திருக்கிறேன். ஆனால் நான்



223950
சென்னை-600 008

ஒரு கொள்கையோடு வந்திருக்கிறேன். நான் அண்ணாவை, அவர் வகுத்த, அவர் வளர்த்த அந்தப் பாரம்பரியத்தை நேசிப்பவன். காயிதே மில்லத் அவர்களுடைய நிழலிலே வளர்ந்தவன். ஆனால் ஒரு கொள்கை, நான் எதற்கும் ஆசைப்படவில்லை. எதற்காக ஆசைப்படுகிறேன் என்றால், இந்த மாநிலம் அனுபவித்த சிக்கல்கள், அனுபவித்த அவமானங்கள், சந்தித்த அபத்தங்கள் இவற்றிலிருந்து விடுபட வேண்டும். அன்று பேசிய பேச்சை தம்பி இங்கே எடுத்துச் சொன்னார். என்னுடைய பேச்சை மட்டுமா சொல்கிறீர்கள்? உங்களுடைய பேச்சை நான் சொன்னால் நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் சொன்ன அந்தப் பேச்சை சொல்கிறேன். தயவு செய்து நான் அவர்களைக் கேட்கிறேன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சீக்கிரம் உரையை முடியுங்கள். உச்சக்கட்டத்திற்குப் போய் விட்டீர்கள், முடியுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்**: நான் கேட்கிறேன், பரதேசி, பண்டாரம் என்று சொன்ன நீங்கள் நல்லவர், வல்லவர் என்றீர்கள். பரதேசி, பண்டாரம் என்று நான்கூடச் சொல்லவில்லை. எனக்கு வாஜ்பாய் மீது பெரிய மதிப்பு உண்டு. மரியாதை உண்டு, எல்லாம் உண்டு. அதோடுகூட, எல்லோரையும் மதிப்பவன் நான். எல்லோரையும் முறைப்படி நடத்துபவன் நான். நீங்கள் தலைவர் என்று சொல்கிறீர்கள், நான் அவரை அண்ணன் என்கிறேன். நீங்கள் எங்களுடைய தலைவி என்கிறீர்கள். அவர் என்னுடைய தங்கச்சி. ஆகையினாலே, தங்கச்சிக்குக் கொடுக்க வேண்டிய மரியாதை, தங்கச்சிக்குச் செலுத்தவேண்டிய அன்பு எந்த சூழ்நிலையிலும் நான் செலுத்துவேன். அண்ணனுக்கு உரிய மரியாதை கொடுப்பேன். ஆனால் என்னுடைய கவலையெல்லாம், தங்கச்சி நேர்மையாக நடக்கிறார், அண்ணன் அப்படி நடக்கவில்லையே என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் வேறல்ல என்பதை உங்களிடம் சொல்லி என் உரையை முடிக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

*பிற்பகல் 1–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அண்ணன் லத்தீப் அவர்களே, இந்தப் பாராட்டோடு அமருங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்**: பேச்சை முடித்து விடுகிறேன். மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மேற்கொண்டு உங்களுக்கு தர்மசங்கடத்தை நான் ஏற்படுத்த விரும்பவில்லை. காரணம், நீங்கள் எனக்கு இங்கே தலைவர்.





ஆனால், நீங்களும் என்னுடைய தம்பி என்பதை ஒப்புக்கொள்வீர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சொல்லி, நான் எடுத்துவைத்த கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நான் யாருக்காகவும் வாதாடவில்லை, அப்பாவிகளுக்கு நீங்கள் விடுதலை தாருங்கள். குற்றவாளிகளை தண்டியுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் என்னுடைய கோரிக்கை.

போலீஸ்காரர்கள் உங்களிடத்திலே நீண்டகாலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காகப் பேசுவதற்கு யாரும் இல்லை. அதனால் நானே பேசுகிறேன். தயவுசெய்து அவர்களுக்கு நீங்கள் நம்பிக்கையை. உற்சாகத்தைத் தாருங்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அதை எந்த நேரத்தில் செய்ய வேண்டுமோ அதைச் செய்து தாருங்கள் என்று கேட்டு, மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு இரட்டிப்பு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். ராஜா அவர்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி**: பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அப்துல் லத்தீப் அவர்கள் சொன்ன கருத்திற்கு ஒரு விளக்கத்தைச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அவருடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார். விட்டுவிடுங்கள். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி**: என்னுடைய கருத்தைச் சொல்ல வேண்டாமா? பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் அப்துல் லத்தீப் அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. பரிதி இளம்வழுதி, நான் உங்களைப் பேச அனுமதிக்கவில்லை. திரு. ராஜா அவர்கள். (குறுக்கீடு) அவருடைய கருத்தை அவர் பதிவு செய்திருக்கிறார். அதில் ஒன்றும் தவறு இல்லை. நீங்கள் பேசுகிறபோது உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள். அதைப்பற்றி ஒன்றும் இல்லை. திரு. புகழேந்தி காலையிலே அவருடைய கருத்தைப் பதிவு செய்தார். அதைப்போல, அண்ணன் லத்தீப் அவர்கள் தன்னுடைய கருத்தைப் பதிவு செய்திருக்கிறார். இடையிலே புகுந்து நீங்கள் குழப்பக்கூடாது. உட்காருங்கள். திரு. ராஜா அவர்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** என்னுடைய கருத்தைச் சொல்ல அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதிக்க முடியாது. திரு. ராஜா அவர்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** I am on a Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order எல்லாம் இல்லை.

**திரு. பரிதி இளம்வழுதி:** ஒருதலைப்பட்சமாகச் சொல்லக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா அவர்கள். நீங்கள் அவரைக் கவனிக்க வேண்டாம். நீங்கள் பேசலாம்.

**திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பேசியபோது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதற்கு நான் விளக்கம் சொல்ல வேண்டாமா? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா அவர்கள், நீங்கள் பேசலாம். *(குறுக்கீடுகள்)*

**திரு. பரிதி இளம்வழுதி:** ஒருதலைப்பட்சமாகச் சொல்லக் கூடாது. என்னைப் பேச அனுமதிக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி, நான் அனுமதிக்கவில்லை. திரு. ராஜா அவர்கள் தொடர்ந்து பேசலாம். *(குறுக்கீடுகள்)*

**திரு. எச். ராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் உள்ளவர்கள் 24 மணி நேரமும் உன்னிப்பாக இருந்து பணியாற்ற வேண்டிய சூழ்நிலையிலே இருப்பவர்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் யாரும் அமர்ந்துகொண்டு பேசக்கூடாது.

**திரு. எச். ராஜா:** எனவே, அவர்கள் பணிபுரிவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், காவல் துறையினுடைய ஆயுதங்களை நவீனப்படுத்தவும், மைய அரசு தரும் மானியத்தின் அடிப்படையிலே மாநில அரசும் காவல் படையை நவீனப்படுத்துவதற்காக கட்டடங்கள், வீட்டுவசதி, வாகன வசதிகள், தகவல் பயிற்சி, ஆயுதங்கள், விரல் ரேகைக்



கூடம், தடய அறிவியல் ஆய்வகம், தகவல் தொகுப்பு, கணினிமயமாக்கல், ஆகிய சாதனங்களை வழங்குவதற்கு மைய அரசுக்கு இணையான தொகையை மாநில அரசும் அளிப்பதாக இந்த மானியக் கோரிக்கைக் குறிப்பிலே அறிவிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

மத ரீதியான பதட்டத்தைக் தவிர்க்கும்பொருட்டு அனுமதி அளிக்கப்படாத இடங்களிலே அதிக அளவில் வழிபாட்டுக் தலங்கள் உருவாவதைத் தடுக்க நீதிபதி வேணுகோபால் விசாரணை ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட ஆணை அரசால் வலியுறுத்தப்பட்டுள்ளன என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், நீதிபதி திரு. வேணுகோபால் விசாரணை ஆணையத்தின் பரிந்துரைகளுக்குப் புறம்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே பல்வேறு இடங்களிலே அதனுடைய பரிந்துரைகள் மீறப்பட்டிருக்கின்றன. அதற்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நான் இந்த இடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நடைபெறும் இந்த மானியக் கோரிக்கைகள் விவாதத்தின் போது யாருடைய ஆட்சியிலே எந்தச் சம்பவம் நடந்தது என்பதைப்பற்றிக்கூட இங்கே பேச்சு வந்தது. ஆர்.எஸ்.எஸ், அலுவலகத்தில் வெடிகுண்டுச் சம்பவம், அதற்கடுத்து கோவை வெடிகுண்டுச் சம்பவம், அதற்கடுத்து திருச்சியிலே பாரதீய ஜனதா கட்சியினுடைய மாநகரத் தலைவர் ஸ்ரீதர் படுகொலை, திண்டுக்கல்லிலே மாணிக்கம் படுகொலை, உத்தமபாளையத்தில் வரதராஜன் படுகொலை, மதுரையில் பேராசிரியர் பரமசிவம் படுகொலை என, மேலப்பாளையத்திலே, இப்படி வரிசையாக ஒவ்வொரு பகுதிகளிலும் மத அடிப்படை வாதிகளால், தீவிரவாதிகளால், பயங்கரவாதிகளால் படுகொலைகள் நடந்து கொண்டு வந்திருக்கின்றன.

ஆனால், Justice delayed is justice denied. பல ஆண்டுகளாக 1997–லே நடந்த திண்டுக்கல் சம்பவமாக இருந்தாலும், அதைத் தொடர்ந்து நடந்த மதுரை சம்பவமாக இருந்தாலும், அதற்குப் பிறகு 1998–லே நடந்த கோவை வெடிகுண்டு சம்பவம், எந்தவொரு சம்பவத்திலும் இன்றுவரை இறுதித் தீர்ப்பு வந்து, குற்றவாளிகள் இறுதியாக நீதிமன்றத்தால் தண்டிக்கப்படாத காரணங்களினாலே இன்னமும்கூட அம்மாதிரியான சக்திகள் ஒரு ஊக்கத்தோடுதான் இருந்து கொண்டிருக்கின்றன. சம்பவம் நடக்கவில்லை என்பதைக் கருத்திலேகொண்டு அரசாங்கம் மெத்தனமாக இருந்துவிடக் கூடாது. அனைத்து வழக்குகளும் they should be taken to their logical end. இறுதியாக, அவர்கள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–05*

பொருளாதாரக் குற்றங்கள் பிரிவு–2ன்கீழ் இதுவரை 417 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அவற்றிலே 190 வழக்குகள் குறித்து புலனாய்வு செய்யப்பட்டு வருகின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே முதலீட்டாளர்களுக்கு இதுவரை 253.66 கோடி ரூபாய் திரும்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இம்மாதிரியாக டெபாசிட்தாரர்களுக்கு அவர்களுடைய டெபாசிட்டைக் கொடுக்காமல் defaulting companies–உடைய சொத்துக்கள் 1380 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இன்னமும் 1500 கோடி ரூபாய்க்கு மேல் டெபாசிட்தாரர்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இது விஷயத்திலே ஒரு சிறிய சிக்கல் இருக்கிறது. டெபாசிட்தாரர்களுக்கு அவர்களுடைய டெபாசிட்டை திரும்பத் தராத கம்பெனிகளுக்கு எதிராகப் பொருளாதாரக் குற்றவியல் பிரிவு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால், அந்தக் கம்பெனிகளுக்கு, அவர்கள் அட்வான்ஸ் செய்திருக்கின்ற, அவர்களிடம் கடன் பெற்றிருப்பவர்களுடைய கடனை வசூலிப்பதிலே அம்மாதிரியான கிரிமினல் வழிமுறைகள் இல்லை. அதில் சிவில் அப்ரோச் இருக்கின்ற காரணத்தினாலே அவற்றை நாம் வசூலித்து டெபாசிட்தாரர்களுக்கு பணம் திரும்பக் கொடுப்பதிலே தாமதம் ஆகிறது என்கிற காரணத்தினால் கம்பெனிகளிடம் பணம் பெற்று, கடன் பெற்று திரும்பத் தராதவர்களுக்கு எதிராகவும் கிரிமினல் நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சந்தானம் அவர்களும், அதற்குப்பிறகு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களும் ஒரு விஷயத்தை, அவர்களுடைய கருத்தை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசும்போது மாநில அரசின் அதிகாரங்கள் மீறப்படுகின்றன, அரசியல் சட்டத்தினுடைய ஷரத்துக்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்று அவர்கள் இங்கே கருத்து தெரிவித்திருக்கின்றார்கள். இது விஷயத்திலே நாம் சட்டரீதியாக இதை அணுகவேண்டும், உணர்வு ரீதியாக யாரும் அணுகிவிடக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அரசியல் சட்டப்பிரிவு 312, உட்பிரிவு 2–ன்படி ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஆகிய கேடர், 'The services known at the commencement of this Constitution as the I.A.S., and the I.P.S., shall be deemed to be the services created by Parliament under this Article.' அதோடுகூட, Article 311(3)–லே 'Any All India Service Official





can be dismissed, removed or reduced in rank by President of India without holding an enquiry if the Union Government thinks it is reasonably not practicable to hold such an enquiry' என்று அரசியல் சட்டத்திலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளை இடம் மாற்றுவது அல்லது அவர்களுடைய பணியை நிர்ணயிப்பது என்பது மத்திய அரசாங்கத்தினுடைய அதிகார வரம்புக்கு உட்பட்டது. ஆகவே, அதிலே மத்திய அரசாங்கம் எந்த ஒரு நடவடிக்கை எடுத்திருந்தாலும் அது மாநில அரசாங்கத்தினுடைய அதிகாரத்திலே் குறுக்கிடுவது என்பதாகாது. ஏனென்றால், Indian Police Service Cadre Rules, 1954–லே கூட....

**திரு. ம. அப்துல் லத்தீப்**: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்...

**திரு. எச். ராஜா**: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது கூட நான் கேட்டுக்கொண்டிருந்தேன். குறுக்கிடவில்லை. ஆகவே, நான் பேசி முடித்தபிறகு நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லலாம். I am not yielding. I am just stating the facts in the Constitution.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அவர் பேசி முடிக்கட்டும். பேசி முடித்தவுடனே சொல்லுங்கள்.

**திரு. எச். ராஜா**: I am not yielding. I am just stating the provisions in the Constitution.

**திரு. ம. அப்துல் லத்தீப்**: ஒரு நிமிடம், நான் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. லத்தீப் அவர்களே, திரு. ராஜா பேசி முடித்தவுடனே உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். அப்போது சொல்லுங்கள். உட்காருங்கள். நீங்கள் அவைக்கு முன்னுதாரணமாக விளங்கக்கூடியவர். அமருங்கள். அவர் பேசி முடித்தவுடனே நான் உங்களை அழைக்கிறேன்.

**திரு. எச். ராஜா**: நீங்கள் பேசும்போது நான் குறுக்கிடவில்லை. நான் யார் பேசுகிறபோதும் குறுக்கிடுகிற பழக்கம் சரியல்ல என்று நினைக்கிறவன். Regarding deputation of cadre officers for Central assignment, under Rule 6(1) of the Indian Police Service cadre Rules, 1954, in case of any disagreement regarding deputing a cadre officer for Central Service, the matter shall be decided by the Central Government and the State Government shall give effect to the decision of the Central Government.

அதாவது ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளைப் பொறுத்தவரையில், மத்திய அரசாங்கம் ஒரு முடிவெடுத்துவிட்டது என்று சொன்னால் அந்த முடிவினை மாநில அரசு செயல்படுத்த வேண்டும் என்பது அரசியல் சட்டத்திலே, அதேபோல, அகில இந்திய போலீஸ் சர்வீஸ் கேடர் விதிகளின்படியும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, மத்திய அரசாங்கம் எடுத்திருக்கின்ற நடவடிக்கை என்பது மாநில அரசினுடைய அதிகாரத்தில் குறுக்கிடுவது என்பதாகாது. தனக்குட்பட்ட அதிகார வரம்பில்தான் மத்திய அரசாங்கம் செயல்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்து இந்த மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல அனுமதித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி அமைகின்றேன்.

*பிற்பகல் 1–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) திரு. லத்தீப் சொல்லுங்கள்.

**THIRU M. ABDUL LATHEEF**: It is not that I would like to interfere as to what has been stated by the Hon. Member about the pith and substance of the provisions of the Constitution. What I submit is that, the Articles that have been pointed out and referred to by the Hon. Member are correct. But at the same time when this Article is put into action, into implementation, the situation gets basically changed. That is my submission.

What I submit is that, when a person is taken as an employee of the State Government there comes the importance. What you stated is alright as it is, so far as the letters are concerned. But when a person is taken as an employee of either the Central Government or the State Government it becomes the prerogative and privilege of the Government concerned to retain him or to release him because he is paid and maintained by the Government concerned. I do not dispute that.

Under this Article, *ipso facto,* you feel that the Government is entitled, the Central Government is entitled to take such action or such decision as is deemed necessary under the circumstances, as per the letters and the words used in the Article that you have mentioned.

When a person belonging to the All India Service, the All India cadre ie. IAS/IPS, if they are absorbed as an employee of the State Government the release of the person for any other duty other than the State duty should definitely be with the consent, necessary consent, of the State Government. You cannot force the State Government to release him. (Thumping of desks) That is the meaning of that Article.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜா தெரிவித்த கருத்துக்கு நான் இன்று பிற்பகல் எனது பதிலுரையில் விரிவான ஒரு விளக்கத்தை அளிக்கவுள்ளேன். ஆனால், இப்போது ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். அவர் Constitution of India, Article 312, sub–section (2) Article 311 பற்றி எல்லாம் இங்கே குறிப்பிட்டார். அதைப் போலவே, Rule 6, Police Service Cadre Rules இங்கே வாசித்துக் காண்பித்தார். மத்திய அரசுக்கு என்னென்ன அதிகாரங்கள் இந்த விதிகளின்கீழ் உள்ளன என்பதை எல்லாம் இங்கே குறிப்பிட்டார். இந்த அதிகாரங்கள் மத்திய அரசிற்கு உள்ளன. இதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், நடைமுறையில் எந்த மத்திய அரசும் இந்தச் சட்டங்களை இதுவரை பயன் படுத்தவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாநில அரசுகளுக்கும் மத்திய அரசிற்கும் இடையே ஒரு சுமுகமான உறவு இருக்க வேண்டுமானால் நம்முடைய Federal System of Government, ஜனநாயகம் செயல்பட வேண்டுமானால் ஆரோக்கியமான ஒரு ஜனநாயக ஆட்சி முறை நடைபெற வேண்டுமானால், எந்த மத்திய அரசும் இந்தச் சட்டங்களை வலியுறுத்தாது. இதுவரை வலியுறுத்தவும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு திரு. ஜி. பழனிசாமி.

**திரு. எச். ராஜா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ராஜா, நீங்கள் வாசித்ததில் ஒன்றும் தவறு சொல்லவில்லை. சட்டத்திலே இருக்கிறது. நடைமுறையில் அப்படி இல்லை என்பதைத்தான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விளக்கம் சொல்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. எச். ராஜா**: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம், ஒரே ஒரு விஷயந்தான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னார்கள், மாநில அரசால் அவர்கள் சம்பளம் பெறுகின்ற காரணத்தால் என்று. ஆனால், According to the Rule 4–ஆமாம் அதிலேயே விளக்கம் இருக்கிறது– According to the clarifications, regarding Rule (4) of the Cadre Rules, ஒரு மாநிலத்தினுடைய strength என்னவாக இருக்கலாம் என்பதுகூட தெரிவிக்கப்பட்டிருக்கிறது. The power to alter the strength and composition of a cadre vests in the Central Government vide sub–rule (1) of Rule 2 of the cadre Rules.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் மாண்புமிகு உறுப்பினர் ராஜா புரிந்துகொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், though they are deputed by the Government of India, they are deputed to serve in the State Cadre. (Thumping of Desks) They are deputed specifically to serve in the Tamil Nadu Cadre என்பதை மறந்துவிடக் கூடாது. When they are deputed to serve in the Tamil Nadu Cadre, they are under the control of the Tamil Nadu State Government. (Thumping of desks)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜி. பழனிசாமி. இன்னும் 4, 5 பேர் பேச வேண்டியிருக்கிறது. காலையிலே தலைவர்கள் பேசி முடித்து விட்டால், மாலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

**திரு. ஜி. பழனிசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறை, தமிழ்நாடு தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கையின்மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எவ்வளவு சுருக்கமாக நான் பேச முடியுமோ அதை நான் பேசுவதற்கு முயற்சிக்கிறேன். குறிப்பாக, நான் காவல் துறையினுடைய கோரிக்கையை முதலிலே சொல்வது என்பது சரியாக இருக்குமென்று கருதுகிறேன். நம்முடைய காவல் துறையில் சார்ந்திருக்கக் கூடியவர்களுக்கு உணவுக்காக ரேஷன் முறையிலே பல்வேறு பொருள்கள் வழங்கப்படுகின்றன. அதற்கு மாதம் 170 ரூபாய் என்று வழங்கப்படுகிறது. ஆனால், துறையிலே வழங்கக்கூடிய பொருள்கள் எல்லாம் தரமில்லையென்று சொல்கிறார்கள். ஆகையினால், அதை 200 ரூபாய் பணமாகவாவது கொடுத்துவிட்டால்கூட தரமான பொருள்களை அவர்களே வாங்கிக்கொள்வதற்கு வாய்ப்புகளை உருவாக்க முடியும். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, 35 ஆண்டுகாலமாக பணிபுரிந்து கொண்டிருக்கக் கூடிய காவல் துறையினரிடத்திலே பதவி உயர்வு இல்லை. தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அறிவிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. அநேகமாக பதவி உயர்வு கிடைக்கப்பெறவில்லை என்ற குறையை காவல் துறையினர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 10 ஆண்டுகாலம் பணிபுரியக்கூடிய காவல் துறையினருக்கு பதவி உயர்வு அளிக்கக்கூடிய விதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1994 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உதவி ஆய்வாளர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோன்று, ஆயுதப்படைப் பிரிவிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். 1997–2001–ல் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிற ஆயிரம் உதவி ஆய்வாளர்கள் சட்டம்–ஒழுங்குப் பணியிலே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சீனியாரிட்டி குறையும் என்கிற அடிப்படையிலே அந்த முரண்பாடு ஏன் வந்தது? சென்ற ஆட்சியிலே செய்தார்கள். அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையிலே தனியாக இயங்கிக் கொண்டிருக்கின்ற இந்த அமைச்சுப் பணியாளர்களை காவல் துறையிலே இணைக்க வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். அதே துறையிலே பணியாற்றக்கூடிய சுருக்கெழுத்தாளர்கள், எழுத்தர்கள், நிருபர்கள், தொழில் நுட்பம், விரல் நிபுணர்கள் போன்றவர்கள் எல்லாம் பணியிலே இருக்கிற போது எங்களையும் அதிலே இணைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இரண்டொரு கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு முதலிலே கொண்டு வந்து விடுகிறேன். குறிப்பாக, திருத்துறைப்பூண்டியினுடைய காவல் நிலையம், தாலுகா காவல் நிலையமாக இருப்பதால் அதை சிட்டி காவல், நகர காவல் நிலையமாக இரண்டாகப் பிரித்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், விக்ரபாண்டியத்தில் ஒரு புறக் காவல் நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டியில் தீயணைப்பு நிலையம் என்னுடைய தொகுதியிலே மூன்று இடங்களிலே இயங்கிக்கொண்டிருக்கிறது. மூன்றும் வாடகைக் கட்டடத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. தீயணைப்பு நிலையத்திற்கான அந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு இந்த ஆண்டிலே தேர்வு செய்ய வேண்டும். கொள்கைக் குறிப்பிலே திருவாரூர் மாவட்டத்திலே ஒன்று மட்டும், மன்னார்குடி மட்டும்தான் அதிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. திருத்துறைப்பூண்டி, கோட்டூர், முத்துப்பேட்டை போன்ற மூன்று இடங்களுக்கும் இடமிருக்கிறது. அதற்கு கட்டடங்களை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2001–2002 ஆம் ஆண்டுக்கான காவல் துறை மானியக் கோரிக்கையிலும், ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலேயும் காவல் துறையை நவீனப்படுத்துவதற்கும், அவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற நல்ல திட்டத்தை கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். காவல் துறைக்கு ஒரு சமூகப் பார்வை, நல்லிணக்கத்தோடு நல்லொழுக்கத்தோடு தமிழ்நாட்டிலே இருக்க வேண்டும் என்பது மிக அவசியமானது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்ந்த காரணத்தால்தான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அந்தப் பணியை முதலில் செய்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-20*

காவல் துறையைப் பொறுத்தமட்டில், அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலே எந்த ஒரு அரசியல் இயக்கத்திற்கும் மாறுபட்ட கருத்து இருக்கமுடியாது. ஏனென்றால், தமிழகத்தில் இருக்கிற பல்வேறு துறைகளில், தன்னுடைய கோரிக்கைகளை வைத்துப் போராடி தன்னுடைய கோரிக்கைகளை வலியுறுத்திப் பெற்றுக் கொள்கிற வாய்ப்புகள் இருக்கின்றன. காவல் துறையைப் பொறுத்த மட்டில், அவர்கள் எந்தக் கோரிக்கையையும் வைக்க முடியாது. இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், ஆளும்கட்சிகள், எதிர்க் கட்சிகள், பொறுப்பு உணர்வுடன் அவர்களுடைய கோரிக்கைகளைக் கொடுத்ததன் மூலமாக பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறைக் கொள்கை விளக்கக் குறிப்பிலே பல்வேறு நலத் திட்டங்களை கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி, மருத்துவம், அவர்கள் நோய்வாய்ப்பட்டு இறந்தால் அதற்கான உதவித் தொகைகள், வாரிசுதாரர்களுக்கான வேலைவாய்ப்பு போன்ற நல்ல திட்டங்கள் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அது ஒரு நல்ல அம்சம். முதலிலே அதையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தமட்டில், எனக்கு முன்பாக பல்வேறு விவாதங்கள் தொடங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. பாரதிய ஜனதா கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள், ஐ.ஏ.எஸ்., மற்றும் காவல் துறையிலே இருக்கிற ஐ.பி.எஸ்., அதிகாரிகளை, சட்ட விதிகளின்கீழே அவர்கள் சொல்லியிருக்கிற அந்த விதிகளுக்குள்ளே தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம், அழைத்துக் கொள்ளலாம் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக



நான் வரவேற்கிறேன். அதிலே, மாறுபட்ட கருத்துக்களைச் சொல்ல விரும்பவில்லை. இருந்தாலும், மத்தியிலும், மாநிலத்திலும் ஆளுகின்ற ஒரு கூட்டாட்சித் தத்துவத்திற்கு மாறாக ஒரு மாநில அரசிடம் கலந்து ஆலோசிக்காமல் தனக்குத் தேவையான அதிகாரிகளை ஒரு அதிரடி உத்தரவை அனுப்பி இவர்களையெல்லாம் அனுப்பி வைக்கவேண்டுமென்று சொல்லுகின்ற காரணம், அதற்குரிய நேரம், அந்தக் கூட்டணிக் கட்சிகளின் நிர்பந்தத்திற்கு அடிபணிகிற மோசமான நிலைமை ஆளும் கட்சியிலே இருக்கிறது, மத்திய அரசிலே இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் நாட்டு மக்களுக்கு வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தச் சட்டப்பேரவையின் உறுப்பினர்களாக பல ஆண்டுகாலம் நாங்கள் இருக்கிறோம். மத்திய அரசிற்கு சில ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் தேவைப்பட்டால் கூப்பிடுவது வழக்கம். அது ஒரு கூட்டாட்சித் தத்துவத்திற்கு ஜனநாயகத்திற்கு முறையானது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர், தலைமைச் செயலாளர் வேண்டும் என்பதற்காக மத்தியிலேயிருக்கிற ஒரு அதிகாரியை வேண்டுமென்று அழைக்கவில்லையா? பிரதமரிடம் அணுகிச் சொல்லவில்லையா? அவர்கள் அனுப்பவில்லையா? ஏன் இந்த முரண்பாடு வருகிறது? இவையெல்லாம் நாட்டுக்கு அம்பலப்பட்டுப் போயிருக்கிறது. ஒரு நல்ல அரசாக, ஒரு சிறந்த அரசாக, சிறந்த அதிகாரிகளை வைத்து செயல்படக்கூடாது என்பதுதான் இன்றைக்கு இருக்கிற நிலைமை. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம் தோழமைக் கட்சிகளாக இருக்கக்கூடியவர்கள் அரசியல் நிர்பந்தம் கொடுப்பார்கள் என்பதற்காகத் தன்னுடைய ஆட்சி கலைந்துவிடுமோ என்ற அந்தச் சூழ்நிலையில் இவர்களையெல்லாம் அழைக்க வேண்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நீதியையும், சட்டத்தையும், மறக்கலாமா மத்திய அரசு. திரு. ராஜா அவர்கள் நன்கு படித்தவர். நல்ல பண்பாளர், அவர் நேர்மையாகக்கூட சென்ற முறை இங்கே பேசினார். அப்பேர்ப்பட்டவர்கள் ஏன் இந்த நிர்பந்தத்திற்கு ஆளாகிறார்கள் என்று புரியவில்லை. இதற்கெல்லாம் அவர் பதில் சொல்வார் என்று எதிர்பார்க்கிறேன். அதோடு மட்டுமல்ல, தமிழ்நாட்டில் எத்தனையோ போராட்டங்களில் நாங்களெல்லாம் கலந்து கொண்டிருக்கிறோம். ஒரு நாள், இரண்டு நாள் அல்ல, வருடக் கணக்கிலே போராட்டத்திலே ஈடுபட்டு சிறை சென்றிருக்கிறோம். வருடக் கணக்கிலே சிறைத் தண்டனையை கம்யூனிஸ்ட் கட்சி அனுபவித்திருக்கிறது. நாங்களெல்லாம் ஜனநாயகப்பூர்வமாக போராடுகிறபோது காவல் துறை சில வழக்குகளைத் தொடுப்பார்கள். தண்டவாளத்தில் மிகப்பெரிய ஆயுதங்களை வைத்தார்கள். வெடிகுண்டு வைத்தார்கள். அரசுப்

பணிகளை செய்யவிடாமல் அதிகாரிகளைத் தடுத்தார்கள் என்று வழக்கு தொடுப்பார்கள். அப்படிப்பட்ட வழக்குகளை எங்கள்மீது தொடுப்பார்கள். ஆனால், உண்மையாகவே தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது? இங்கே மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்கள்கூட சமீபத்தில் நிதிநிலை அறிக்கையில் கடைசியாக பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். 'மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மரியாதைக்குரியவர். அவரை எப்போது கூப்பிட்டாலும், அவர் போராட்டத்திற்கு அஞ்சுபவர் அல்ல. சிறைச்சாலைக்கு அஞ்சுபவர் அல்ல. போராட்டத்திற்கு போகக்கூடிய வல்லமை படைத்தவர்தான், இரவில் அழைக்காமல் பகலில் அழைத்திருந்தால் அவர் வந்திருப்பார்' என்று சொன்னார்கள். நியாயமானதுதான். நாங்களெல்லாம் போராட்டத்திற்கு போயிருக்கிறோம். சிறை சென்றிருக்கிறோம். ஜெயிலில் இருந்திருக்கிறோம். ஆக அப்படியிருக்கும்போது, இரண்டு மத்திய அமைச்சர்கள், முன்னாள் முதலமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் சிறைகளுக்கு அஞ்சாதவர்கள், தம்பிகூட காலையில் இங்கே பேசினார். நான் சிறைக்குப் போக தயாராக இருந்தாலும், அஞ்சுபவன் அல்ல என்று சொன்னார். இப்படிப்பட்டவர்கள் காவல் துறையிடம், அவர்களுடைய நிர்வாகத்திடம் தலையிட அவசியம் என்ன வந்தது? (மேசையைத் தட்டும் ஒலி) என்ன முரண்பாடு வந்தது? ஏன் தலையிட வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. பழனிசாமி பிரச்சினைக்கு உள்ளே போகவேண்டாம். அதோடு நிறுத்துங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி**: நான் பிரச்சினைக்குள் போகவில்லை. அத்தோடு முடித்துக்கொள்கிறேன். நான் அடுத்த கட்டத்திற்குப் போய் விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அதோடு நிறுத்துங்கள். தகவலுடன் நிறுத்துங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி**: ஆகையினாலேதான், மத்திய அரசின் அமைச்சராக இருந்தாலும் சரி, மாநில அரசின் அமைச்சராக இருந்தாலும் சரி, நான் ஏற்கெனவேகூட, நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தின்போது சொன்னேன். அவர்கள் எல்லாம் அதிகாரிகளாக இருக்கிறபோது, அதிகாரிகள் அதிகாரிகளாகச் செயல்பட வேண்டும். அமைச்சர்கள் அமைச்சர்களாகச் செயல்பட வேண்டும் என்று நான் சொன்னேன்.



*பிற்பகல் 1-25*

அந்த வகையிலேதான் நான் குறிப்பிட்டேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. நான் சமீபத்திலேகூட ஒரு செய்தியைப் பார்த்தேன். பத்திரிகைகளிலே செய்திகளைப் பார்த்தேன். லண்டனில் இருக்கக் கூடிய பிரதமருடைய மகன் கைது செய்யப்பட்டார். காவல் துறையினர் கைது செய்து கொண்டு போனார்கள். கைது செய்யப்பட்டு சிறைக்குச் சென்றபின்னாலே அந்த நாட்டிலே எந்தத் தொலைபேசிச் செய்தியும், பிரதமருடைய மகன் என்பதற்காக, அவரை விடுவிப்பதற்காக எந்தவொரு முயற்சியும், தொலைபேசிச் செய்தியும் வரவில்லை. இப்படி ஒரு செய்தி வந்தது.

அமெரிக்கா ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் அவர்களுடைய மகள், வயதிற்கு வந்தவர். மதுபானம் அருந்திவிட்டு கார் ஓட்டினார் என்பதற்காக, அவரை காவல் துறையினர் கைது செய்தனர். ஒருவரும் போய் ஒரு சிபாரிசும் பண்ணவில்லை. எந்த மந்திரியும் போய் நிற்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இது எல்லா அரசியல்வாதிகளுக்கும் மிகப் பெரிய படிப்பினை அல்லவா? அப்படியென்றால் காவல் துறையிலே அரசியல்வாதிகளின் தலையீடு இல்லாமல் இருப்பதற்கு என்ன பாதுகாப்பு செய்ய வேண்டுமோ அதை நேர்மையாக செய்வதுதான். ஜனநாயக நாட்டிலே தன்னிச்சையாக சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதிலே, திறம்பட காவல் துறை செயல்பட முடியும். அரசியல்வாதிகளின் தலையீடு இருந்தால் அவர்களால் நிச்சயமாகப் பணியாற்ற முடியாது. ஆகவே, நான் பல்வேறு விவரங்களுக்குள் போக விரும்பவில்லை. நேரத்தின் அருமை கருதி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தமட்டில், காவல் துறையில் நெறிமுறைகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று சொன்னால், 1902 ஆம் ஆண்டிலேயிருந்து வருகிற அதனுடைய கமிஷன் மாறாமலே இருந்துகொண்டு வருகிறது. அது இந்தியாவிலே இருக்கிறது. தமிழ்நாட்டிலே இருக்கிறது. ஆகவே, அதை மாற்றுவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலத்திலேயாவது, அந்தப் பணிகளைத் தைரியமாகச் செய்ய வேண்டும். உங்களாலேதான் செய்ய முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் தைரியமாக அந்த நடவடிக்கையை எடுப்பீர்கள். ஆட்சியைப் பற்றிக் கவலைப்படவில்லை. மத்திய அரசினுடைய நிர்பந்தத்தைப்பற்றி கவலைப்படவில்லை. தமிழ்நாட்டுடைய நலனை, தமிழ்நாட்டு மக்களுடைய நலனைப் பாதுகாப்பதிலே என்ன தைரியம் உங்களுக்கு இருக்கிறதோ (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல

[திரு. ஜி. பழனிசாமி] [2001 செப்டம்பர் 1

காவல் துறையில் 1902 ஆம் ஆண்டிலேயிருந்து இருக்கிற அந்த கமிஷன் ரிப்போர்ட்டை முதலிலே மாற்ற வேண்டும். அப்படி மாற்றுகிறபோதுதான் காவல் துறையின் நெறிமுறைகளைக்கூட ஒழுங்குப்படுத்த முடியும். நான் காவல் துறை தப்பு செய்யவில்லை என்று சொல்லவில்லை. ஏனென்றால், 1 இலட்சம் பேர் வேலை செய்கிறார்கள். சமீபத்திலேகூட பார்த்தேன். ஒரு எஸ்.ஐ.–ஐ ஏட்டு பிடித்து காவல் நிலையத்திலேயே துப்பாக்கியால் மிரட்டுகிறார். அவருக்கு இருக்கிற குணம் அந்த மாதிரி. காவல் துறை உள்ளேயே இப்படி இருக்கிறது. இவை எல்லாவற்றையும் பார்க்கிறோம். இவற்றையெல்லாம் நெறிப்படுத்த வேண்டும். மூடிமறைக்காமல், காவல் துறையை நெறிப்படுத்துவதற்கு சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதன் மூலமாகவே அதற்கான நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னும் ஒன்றை நான் சொல்லி உரையை முடிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். நம் நாட்டிலே சாதி, மத மோதல்கள் இருக்கின்றன. சமீபகாலமாக தென் மாவட்டங்களிலே ரொம்பத் தீவிரமாக இது பரவியிருக்கிறது. அப்படிப் பரவுகிறபோது அநேகமாக அந்தச் சந்தர்ப்பங்களிலே நாங்கள் போகிறபோது அந்தப் பகுதி மக்கள் என்னிடத்திலே சொன்னார்கள். காவல் துறை அதிகாரிகள் சாதிய உணர்வோடு செயல்படும் போக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தப் போக்குகள் இருக்கலாமா? காவல் துறையிலே அது வரலாமா? அது வேரூன்றிப் போய்விட்டது. அப்படிப்பட்ட காவல் துறை அதிகாரிகளை நீங்கள் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த உணர்விற்கு அவர்கள் ஆட்படக்கூடாது. அவர்கள் தங்களுடைய கடமையுணர்வோடு, ஏற்றுக் கொண்ட பொறுப்புக்களை சரியாகத் திறம்படச் செய்வதற்கான அதிகாரிகளாக அந்தக் காவல் துறை அதிகாரிகள் இருக்க வேண்டும். அந்த வகையிலே இதைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிறகு, 'கியூ' பிரான்ஞ்ச், சிஐடி போலீஸ் என்றெல்லாம் இந்த மாதிரி 35 பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. எல்லா விவரங்களையும் நான் சொல்ல விரும்பவில்லை. இப்போது, 'கியூ' பிரான்ஞ்ச் இருக்கிறது, இந்த 'கியூ' பிரான்ஞ்ச் என்ன பண்ணுகிறது? இடதுசாரி கட்சிகளை, இடதுசாரிக் கட்சிக் கூட்டங்களில் இப்படி ஏதாவது பேசினால் வரிவரியாக எடுத்துக்கொண்டு வந்துவிடுவார்கள். எங்களைப் பார்த்தால்



2001 செப்டம்பர் 1] [திரு. ஜி. பழனிசாமி]

மட்டும், சிவப்புத் துண்டுக்காரர்களை கண்டால் மட்டுமே நடவடிக்கை எடுப்பதற்காக இருக்கிறார்கள்.

ஆனால் நீங்கள் பார்த்தீர்கள் என்றால் 2000 கோடி ரூபாய் ஊழலைச் செய்திருக்கிற நிதி நிறுவனம் பற்றி உங்களுக்குத் தெரியாதா? நாட்டிலே மூடியா இது நடக்கிறது? இது ஏதோ நமது முதலமைச்சர் வந்துவிட்டார் என்பதற்காக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைக் குறிப்பிலேயே எந்த எந்தப் பிரிவிற்கு என்னென்ன பணிகள் என்பது தெளிவாகத் தரப்பட்டுள்ளது. 'கியூ' பிராஞ்ச் பிரிவின் கடமைகள், பணிகள் தீவிரவாத நடவடிக்கைகளை ஒடுக்குவது, தீவிரவாத அமைப்புகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது என்பதாகும். நிதி நிறுவனங்கள் செய்கின்ற மோசடிகளைப் பற்றி நடவடிக்கை எடுக்க Economic Offences Wing இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. பழனிசாமி அவர்களே, சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள். 15 மணித்துளிகள் ஆகியிருக்கின்றன.

**திரு. ஜி. பழனிசாமி**: தலைவர் அவர்களே, நான் சீக்கிரம் உரையை முடித்துவிடுகிறேன். நான் இன்னும் ஒரேயொரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி.

அந்தவகையிலே இப்போதுகூட 253 கோடி ரூபாய் திரும்பக்கூடப் பெற்று, அவர்களுக்கு நிதி நிறுவனங்களிடமிருந்து வாங்கியிருக்கிறார்கள். அதிலே பல காவல் துறை அதிகாரிகளே, அவர்கள் அனுமதி பெற்றுப் பணம் போட்டு ஏமாந்தவர்களெல்லாம் பகிரங்கமாகத் தொலைக் காட்சியிலே பேட்டி கொடுக்கிறார்கள். அதுதான் மிகவும் வேதனையாக இருக்கிறது. அப்படிப்பட்டவர்களை, இவைகளையெல்லாம் கண்காணித்து காலத்தோடு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், தஞ்சாவூர் மாவட்டத்தில் 1989 ஆம் ஆண்டு ஒரு வழக்குப் போடப்பட்டது. முருகையன் என்பவருடைய மனைவி; அவர் பாபனாசத்தைச் சேர்ந்தவர். அவருடைய மனைவி

பட்டப் பகலிலேயே பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்யப்பட்டார். தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படாமல் அந்த வழக்கு உள்ளது. சென்ற ஆட்சியிலேகூட, பல தடவை நாங்கள் இந்தச் சட்டமன்றத்திலேயேகூடப் பேசியிருக்கிறோம். அந்த வழக்கு மூடி மறைக்கக்கூடிய அளவுக்கு அன்றைக்கு இருந்த அரசு அதற்கான நடவடிக்கையை எடுத்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றச்சாட்டை மீண்டும் ஒருமுறை சி.பி.சி.ஐ.டி.-யை விட்டு விசாரிக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. தற்போது நவீனமான வழக்குகளும் நவீனமான திருட்டுகளும் இன்றைக்கு வந்து கொண்டிருக்கின்றன. எல்லாவற்றிலும் நவீனமான திருட்டுகள். எப்படி நாம் காவல் துறையை நவீனப்படுத்துகிறோமோ அதேபோன்று நாட்டிலே நடக்கிற திருட்டுகள் நவீனமான திருட்டுகள் போன்றவைகளை இப்போது தொடங்க ஆரம்பித்துவிட்டார்கள்.

பல ஆயிரக்கணக்கான பேர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் படித்த பட்டதாரிகள் வெளிநாட்டிலே வேலை செய்யலாம் என்ற ஒரு நிலை இருக்கிறது. அப்படிப்பட்டவர்களை எல்லாம் வெளி நாட்டிற்கு ஆள் அனுப்புவதாக, வேலை வாங்கித் தருவதாக பல மோசடிகளிலே ஈடுபட்டு, அவர்களுடைய நிலைகளில் பெரிய நிறுவனங்களைத் தொடங்கி பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதித்து ஏமாற்றக்கூடிய அளவுக்கு இருக்கிறது. அதுபோன்றவைகளை எல்லாம் காவல் துறையினர் கண்காணிக்க வேண்டும்; உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தீயணைப்புத் துறையைப் பொறுத்தமட்டில், அதனுடைய உதிரிபாகங்கள் சரியாக இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள். தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களிலே தீப்பற்றி நிறைய எரிகிறது. திடீர் திடீரென்று எரிகிறது. அப்படி எரிகிறபோது, எங்கள் திருத்துறைப்பூண்டியிலே இருக்கிற ஒரு தீயணைப்பு வண்டி, அந்த வண்டி போவதனால் எந்தப் பயனும் அளிக்கவில்லை. அதனுடைய உதிரி பாகங்களால் பயனும் இல்லை. தண்ணீரை எடுத்துக்கொண்டுப் போனால் அந்த வண்டி பல இடங்களிலே நின்று விடுகிறது. அந்தத் தண்ணீரைத் தொடர்ந்து பயன்படுத்த முடியவில்லை. அதற்குத் தேவையான உதிரி பாகங்களைச் வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இறுதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு பிரச்சினையைக் கொண்டுவந்து, என்னுடைய பேச்சை நிறைவு செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன். சமீபத்திலே என்னுடைய திருத்துறைப்பூண்டியிலே, என்னுடைய தொகுதியிலே கற்பநாதபுரம் என்ற கிராமத்தில் சோமசுந்தரம் என்பவருடைய 15 வயது மகன், இடும்பாவனம் அரசு மேல்நிலைப் பள்ளியிலே அவர் படித்துக்கொண்டிருந்தார். அங்கே ஏதோ 450 ரூபாய் பணத்தை அவர் திருடிவிட்டார் என்பதற்காக அந்தப் பையனை அந்தப் பள்ளியிலே இருக்கக்கூடிய உடற்பயிற்சி ஆசிரியர் மனோகரன் மற்றும் காவலாளியாக இருக்கக்கூடிய இன்னொருவரும் ஆக இரண்டுபேரும் சேர்ந்து அந்த மாணவனை, அந்த 15 வயது மாணவனுடைய உடலிலே மண்ணெண்ணெயை ஊற்றி தீ வைத்துக் கொளுத்தி அந்தப் பள்ளியினுடைய வாசலிலேயே அந்த மாணவன் இறந்து போய்விட்டான். இதிலே என்ன கொடுமை என்று சொன்னால், ஒரேயொரு மகன்தான் அவருக்கு. வேறு ஒருவரும் இல்லை. ஒரேயொரு மகன். அவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். அந்த குடும்பத்தைச் சேர்ந்த அவர் இறந்துபோய் இருக்கிறார். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த வேதனையோடு கடிதங்களை முதலமைச்சர் அவர்களுக்கும் எழுதியிருக்கிறார்கள், எனக்கும் எழுதியிருக்கிறார்கள். அந்தக் குடும்பத்திற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். முடிந்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் குடும்பத்திற்கு ஏதாவதொரு நிவாரண நிதியை வழங்க முடியுமென்று சொன்னால் அதையும் வழங்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே. ஹேமச்சந்திரன், திருமதி டி. யசோதா மற்றும் திரு. ஐ. கணேசன் ஆகிய 3 பேர்கள் பேச வேண்டும். எல்லோரும் 10, 10 மணித் துளிகளில் பேசி முடித்துவிட்டால் நிறைவு செய்துவிடலாம். திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: மாண்புமிகு தலைவர் அவர்களே, காவல் துறையினரின் நிர்வாகத்தைப் பற்றி தொடக்கத்திலேயே நம்முடைய நாட்டிலே சமூக மேம்பாடு நிலைநாட்டப்பட வேண்டுமென்றால் சட்டம் ஒழுங்குக்கு இருக்கிற முக்கியத்துவத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதற்குச் சில நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அரசும் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதை நான் இந்த நேரத்திலே வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால் பிரதான பிரச்சினை

என்னவென்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல பிரிட்டிஷ்காரர்களுடைய காலத்திலே 1902–03 ஆம் வருடத்திலே ஒரு commission–ஐப் போட்டார்கள். அந்தக் commission–லே என்ன சொல்லியிருக்கிறது என்றால், "There can be no doubt that the Police Force throughout the country is in a most unsatisfactory condition, that abuses are common everywhere." அதாவது இதுதான் பொதுவான நிலை இன்றைக்கும். அதிலேயிருந்து ஒரு மாற்றம் கொண்டு வருவதற்காக சில நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் வரவேற்கிறேன்.

*பிற்பகல் 1–35*

பிரதானமாக இன்று இது ஒரு சமூகப் பிரச்சினை என்று வருகிற நேரத்திலே சமூகத்திலே இருக்கிற பல்வேறு துறைகளிலே சம்பந்தப் பட்டிருக்கிற வேலைகளைப் பாதுகாக்கக்கூடிய முறையிலே செயலாற்ற வேண்டிய பொறுப்பு காவல் துறைக்கு ஏற்படுகிறது. அதையெல்லாம் நேரத்தினுடைய அருமை காரணமாக அதைப் படித்துக் காட்டவில்லை. இப்போது நம் நாட்டிலே குற்றங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன என்பதை நாம் மறுத்துவிட முடியாது. உதாரணமாக இன்று பெண்களுக்கு எதிராக இருக்கின்ற குற்றங்கள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. பொருளாதார ரீதியாக குற்றங்கள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. உலகத்திலே வந்திருக்கிற மாறுதல்களைப் பொறுத்தளவில் காவல் துறையைச் சார்ந்தவர்கள் எவ்வளவோ தெரிந்துகொண்டு இருக்கிறார்கள். இன்று Information technology வளர்ந்து கொண்டிருக்கிறது. இப்போது 20 வயது, 25 வயது வாலிபர்கள் கல்லூரிகளிலே படித்துக் கொண்டிருக்கின்றவர்களுக்கு தெரிந்திருக்கிற பல நவீனமான விஷயங்கள் என் போன்ற வயதானவர்களுக்குத் தெரியாது. இது காவல் துறைக்கு சம்பந்தப்பட்டது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே பயிற்சி என்பது இன்றைக்குப் பிரதானமான விஷயம். பயிற்சிக்கு என்று சில திட்டங்களை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது; அறிவித்திருக்கிறது. அதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று இவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது என்று வருகிற நேரத்தில் ஏராளமான court தீர்ப்புகள் இன்றைக்கு வந்திருக்கின்றன; ஏராளமான சட்டங்கள் வந்திருக்கின்றன. இதெல்லாம் இன்றைக்கு நம்முடைய கிராமங்களிலே இருக்கிற காவலர்களுக்கு Constable–களுக்கு அல்லது Head Constable–களுக்கு எந்த அளவிற்கு தெரிந்துகொள்ள முடியும்? ஆகவே அந்தப் பயிற்சி கொடுப்பது



என்பது இங்கே மட்டும் நகரங்களிலே மட்டும் இருந்து கொண்டிருப்பதல்ல, கிராமங்களுக்கு நாம் எடுத்துச் செல்ல வேண்டும். ஆகவே மாவட்டத் தலைநகரங்களில் வருடத்திற்கு ஒரு தடவையாவது இந்தப் போலிஸ்காரர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்குரிய ஏற்பாடு செய்ய வேண்டும். தேவைப்பட்டால் அதையொரு நிரந்தரமான institution–ஆக மாற்றினால்கூட பரவாயில்லை. அந்த முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இன்று காவல் துறையைப் பொறுத்தளவிலே நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்று sensitive spots என்று சொல்லக்கூடிய அந்த இடங்களைப் பற்றியோ, அங்கு நடக்கிற நிகழ்ச்சிகளைப் பற்றியோ நம்முடைய Special Branch–க்கோ அல்லது C.I.D. Branch–க்கோ எந்த அளவிற்கு கண்டுபிடிக்க முடிகிறது, முன்கூட்டி தெரிந்துகொள்ள முடிகிறது என்ற குறைபாடு இருந்து கொண்டிருக்கிறது. பல இடங்களிலே பிரச்சினைகள் வருவதற்கு முன்னாலே அதைக் கண்டறிந்து தடுத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குப் பதிலாக அது வந்ததற்குப் பிறகு 'ஆ', 'ஊ', 'ஈ', 'ஊ' என்று நாம் பேசி பிரயோஜனம் இல்லை. (சிரிப்பு) நான் பயன்படுத்தினது சரியில்லை என்றால் நான் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உங்களுடைய நாஞ்சில் நாட்டுத் தமிழை நான் மிகவும் ரசிக்கின்றேன். (சிரிப்பு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: ஆகவே இன்று அதற்கான ஒரு பிரத்தியேகப் பயிற்சி அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஆக ஒரு பிரச்சினை ஏற்படுவதற்கு முன்னாலே நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டிய விஷயம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே என்ன நடந்தது? பாளையங்கோட்டையிலே அங்கேயிருக்கிற மாஞ்சோலை தொழிலாளிகள் மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து ஒரு மனு கொடுக்க வேண்டும் என்று வந்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தத் தொழிலாளிகளைப் பார்த்தால் என்ன கெட்டுப் போகிறது? அனுமதிக்க வில்லை. அதனுடைய விளைவு என்ன? இன்றைக்குப் பெரியதாக மனித நேயத்தைப் பற்றியும், அதுபோன்று மற்றதைப் பற்றியும் (மேசையைத் தட்டும் ஒலி) பேசுகிறார்கள். அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மறுக்கிறார் என்று அரசுக்குத் தெரியாதா? அவருக்குத் தகுந்த அறிவுரையை அரசு சொல்லியிருக்க வேண்டாமா? அதைச் சொல்லாததன் விளைவாக 17

அப்பாவி தொழிலாளிகள் இறந்து போகக்கூடிய நிலை ஏற்பட்டது. அவர்கள் தங்களுடைய உயிரைப் பாதுகாத்துக்கொள்வதற்காக ஆற்றிலே சாடின நேரத்திலே, அடித்து நையப் புடைத்தார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு மனித உரிமைகளைப் பற்றியெல்லாம் பேசுகிறார்கள். அது இருக்கட்டும். அதெல்லாம் பற்றி நான் பேசவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், இப்படிப்பட்ட சிறு விஷயங்களில் காவல் துறையும், அதேபோன்று ஆட்சியாளர்களும் தவறு செய்ததன் விளைவாக இப்படி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அந்த பாதிக்கப்பட்ட மக்கள் பாதிப்பிலிருந்து இன்னும் மீளாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1–40*

மேலும் நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல் துறையினரைப் பொறுத்தவரையிலே நான் அவர்களை குறை சொல்லவில்லை. ஆனால் காவல் துறையைச் சேர்ந்தவர்களும் மனிதர்கள் தான். அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கான ஒரு apparatus நிச்சயமாக ஏற்படுத்தப்பட வேண்டும். இன்றைக்கு அரசு ஊழியர்கள் அல்லது மற்ற ஊழியர்களுக்கெல்லாம் அரசைப் பார்த்து அவர்களிடம் representation கொடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அவர்களுக்கு சங்கம் இருக்கிறது. இந்தக் காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு சங்கம் வைத்துக்கொள்வதற்கான உரிமை கொடுப்பதால் என்ன கெட்டுப் போய்விடும்? அவர்களும் ஜனநாயகரீதியாக அவர்களுடைய உரிமைகளை சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்லி, அதற்குத் தீர்வு காண்பதற்கான ஒரு நிலையை உருவாக்கிக்கொள்ள முடியும். இன்றைக்கு இருக்கிற ஜனநாயக வளர்ச்சியிலே அது தேவை என்று நான் கருதுகிறேன்.

நான் மேலும் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படக்கூடிய போக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. ஜவஹர்லால் நேருவுக்கு எதிராக கருப்புக் கொடி காட்டின நாடு இது. இந்தியாவினுடைய பிரதமராக இருந்த நேரத்தில், ஜவஹர்லால் நேரு சென்னைக்கு வந்த நேரத்திலே விமான நிலையத்திலே கருப்புக் கொடி காட்டினோம். அந்த அளவிற்கு ஜனநாயக உரிமை இந்த நாட்டில் நிலை நாட்டப்பெற்றது. இப்போது என்ன நிலை?

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நான் இந்த அவையிலேகூட பேசினேன். ஒரு கோரிக்கை கொடுப்பதற்கு, ஓர் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி கேட்டால், இங்கே நாங்கள் சேப்பாக்கத்தில்



வைத்துக்கொள்கிறோம் என்றால், இல்லை, இல்லை, நீங்கள் கோயம்பேடுக்கு போங்கள் அல்லது அரும்பாக்கத்திற்கு போங்கள் என்கிறார்கள். எதற்கு வருகிறான்? இந்த நாட்டிலே இருக்கிறவர்கள், அவர்களுடைய பிரச்சினைகள் பற்றி, சம்பந்தப்பட்டவர்களிடம், நியாயம் வழங்க வேண்டியவர்களிடம், அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியவர்களிடம், அவர்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வருவதற்காக அவர்கள் வருகிறார்கள். இந்த மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலேயிருந்தும், 1000 ரூபாய், 2000 ரூபாய் என்று செலவு செய்து, அவர்கள் என்ன வேடிக்கை பார்ப்பதற்காகவா வருகிறார்கள்? அவர்களுடைய வேதனைகளை எடுத்துச் சொல்வதற்கு வருகிறார்கள். நம்முடைய சத்துணவு ஊழியர்கள். அவர்களுக்கு பல குறைகள் இருக்கின்றன. அதைத் தீர்ப்பதற்கு வந்தால் இங்கே ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டாம்; வள்ளுவர் கோட்டத்திற்கு அந்தப் பக்கத்திற்குப் போய் ஆர்ப்பாட்டம் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட போக்கு மாற்றப்பட வேண்டும். இன்றைக்கு காவல் துறையை முறைப்படுத்த வேண்டுமென்று சொல்கிற கருத்திலே எனக்கு மாற்றுக் கருத்தில்லை.

**திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானாலும், இன்றைக்கு இருக்கிற ஆட்சியானாலும் ஆர்ப்பாட்டம் செய்கிறவர்களுக்கு, உண்ணாவிரதம் இருக்கின்றவர்களுக்கு என்று சில இடங்களை ஒதுக்கியிருக்கிறார்கள். ஏதோ, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மட்டும்தான், நீங்கள் சேப்பாக்கம் போங்கள் என்று சொன்னதைப் போலவும், இந்த ஆட்சி கோட்டைக்கு எதிரே உட்கார வைத்தது போலவும் பேசுகிறார்கள். எந்த ஆட்சியாக இருந்தாலும் இதற்கென்று சில வரைமுறைகளை வைத்தாக வேண்டும். அதைத்தான் செய்தாக வேண்டும். உங்களுடைய மார்க்சிஸ்ட் கட்சி இருக்கிற கல்கத்தாவிலேகூட இந்த நிலைமைதான் இருக்கிறதேதவிர தலைமைச் செயலகத்திற்குள்ளே வந்து செய்வதற்கு எந்த அரசும் அனுமதிக்காது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகனுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். சமீபத்திலே பத்திரிகைகளில் செய்தி வந்தது. மம்தா பானர்ஜியினுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் திரு. புத்ததேவ் பட்டாச்சார்யாவினுடைய அறையிலேயே உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களை யாரும் கைது செய்யவில்லை; அவர்களை அடிக்கவில்லை; அவர்களை வெளியேற்றவில்லை; அவர்களாகவே வெளியேறினார்கள்.

[2001 செப்டம்பர் 1

**திரு. துரைமுருகன்**: பேரவைத் தலைவர் அவர்களே, மம்தா பானர்ஜியை bend எடுத்துவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை, இல்லை. திரு. ஹேமச்சந்திரன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) விளக்கத்தைச் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே செய்யவில்லை என்று சொன்னார்கள். நான் இந்த அவையிலேயே பேசியிருக்கிறேன். அவையெல்லாம் Record–ல் இருக்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அதைப் பின்பற்றினாலும் நாங்கள் அதை சரி என்று சொல்லவில்லை. நான் இந்த அவையிலே எடுத்து வைப்பது, ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான். அதைப்போன்று நான் ஒன்றை இந்தநேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய மாவட்டத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: 2 மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: 5 மணித்துளிகளில் பேசி முடித்து விடுகிறேன். எங்களுடைய மாவட்டத்தில் eve–teasing என்பது இப்போது வளர்ந்து கொண்டிருக்கிறது. இன்று காலையிலே முதலமைச்சர் அவர்கள் மேய்க்காமண்டபம் நிகழ்ச்சி சம்பந்தமாக சில குறிப்புகளை, விளக்கங்களைக் கொடுத்துள்ளார்கள். மேய்க்காமண்டபத்தில் இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி, இரண்டு பெண் குழந்தைகள் மேலே திராவகத்தை வீசி, அவர்கள் இன்றைக்கு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற நிலை ஏற்பட்டிருப்பதற்குக் காரணமே அந்த இடத்திலே இதற்கு முன்னாலே இதேபோன்று பல நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. காவல் துறையும் அரசும் அதைக் கண்காணித்து தடுப்பதற்கு தவறிவிட்டன என்ற காரணத்தினாலேதான் அது நடைபெற்றது. உதாரணமாக பால்மனோ என்ற ஒருவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். ஒரு வாலிபர், கல்லூரியிலே படித்துக் கொண்டிருப்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். விசாரிப்பதற்கும் தயாராக இல்லை.

*பிற்பகல் 1–45*

அதேபோல, ஆசாரிபள்ளத்திலே அமுதா என்ற ஒரு கல்லூரி மாணவி தற்கொலை செய்துகொண்டார். சம்பந்தப்பட்டவரின்



2001 செப்டம்பர் 1] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

வீடுகளில் இருக்கக்கூடியவர்களிடம் மன்றாடியதற்குப் பிறகும்கூட, அவர்கள் அதை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்ததனால்தான் கடைசியிலே வேறு வழி இல்லை என்ற முறையில் அவர் தற்கொலை செய்துகொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டது. தற்கொலைக்குக் காரணமாக இருந்தவர்களை கைது செய்தார்கள். வசதி படைத்தவர்கள் court–லே கொண்டுபோய் மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். காவல் துறையிலே, நீதிமன்றத்திலே இருக்கக் கூடியவர்களின் சில ஏற்பாடுகளோடு, அவர்களுடைய உதவியோடு மிகக் கொடூரமான ஒரு குற்றத்தை செய்தவரை சிறைக்கு அனுப்பாமல் மருத்துவமனைக்கு வசதியாக அனுப்பினார்கள். இந்நிகழ்ச்சி இதுபோன்ற குற்றவாளிகளை தூண்டிவிடுகின்ற முறையிலுள்ள ஒரு நிகழ்ச்சியாக மாறுகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதுபோன்ற நிலைமைகள்தான் இருந்துகொண்டிருக்கின்றன. நான் இன்னும் ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகளைச் சொல்ல முடியும்.

திண்டுக்கல்லில் ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. கௌசல்யா என்ற ஒரு பெண், விசாரணைக்காக செம்பட்டி காவல் நிலையத்திற்கு கூட்டிச் செல்லப்படுகிறார். அந்தக் காவல் நிலையத்திலே அவருக்கு ஏற்பட்ட கொடூர நடவடிக்கை பற்றி R.D.O. விசாரித்தார். R.D.O. விசாரணையைப் பொறுத்தளவிலே, சம்பந்தப்பட்டவர்கள் Court–க்குச் சென்று stay வாங்கினார்கள். அந்தக் குற்றத்தைச் செய்தவர்கள். காவல் துறையைச் சார்ந்தவர்கள் அதே இடத்தில் இருக்கின்றார்கள். எப்படி நியாயம் கிடைக்கும்? ஆகவே இதன்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே ஒருசில விஷயங்கள் குறித்து நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) பொருளாதாரக் குற்றங்கள் சம்பந்தமாக ஏற்கெனவே நம்முடைய அவை முன்னவர் அவர்கள் விளக்கமாக சில விளக்கங்களை இங்கே கொடுத்தார்கள். 29–8–2001 தினமலர் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. நம்முடைய சட்டமன்ற விடுதியிலே காவல் துறையைச் சார்ந்த ஒரு அதிகாரி Economic Offences–லே உள்ள ஒருவரைக் கூட்டிவந்து interrogate செய்து அவரிடம் பணத்தை வாங்கிக் கொண்டு அனுப்பியிருக்கிறார். எப்படி பாதிக்கப்பட்டவருக்கு நியாயம் கிடைக்கும்? இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்னும் ஒன்று, கள்ளச்சாராயம். கள்ளச்சாராயம் இப்போது எங்கள் மாவட்டத்தில் மிகவும் வளர்ந்திருக்கிறது. நான்கூட Superintendent of Police–ஐ சந்தித்து ஒரு representation கொடுத்திருந்தேன். அதன் அடிப்படையில் அவர்கள் raid செய்வதற்கு ஏற்பாடு செய்தார்கள். raid செய்ய வேண்டிய போலிஸ் அதிகாரிகள் அங்கே போவதற்கு முன்பே, ஞாறான்விளை போலிஸ் ஸ்டேஷனிலே, அருமனை போலிஸ் ஸ்டேஷனிலே இருந்து அந்தக் கள்ளச்சாராயம் விற்பவர்களுக்குத் தகவல் போய்விட்டது. அவர்கள் கட்டி எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். அவர்கள் innocent என்கின்ற முறையிலே சாட்சியைக் காட்டினார்கள். இதுகுறித்து எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவலின்படி என்ன நிலைமை என்றால், கொல்லங்கோட்டில் இருக்கின்ற காவல் துறை அதிகாரி எல்லாம் சேர்ந்து இப்படிப்பட்ட ஏற்பாடுகளுக்குத் துணை இருக்கிறார்கள். காவல் துறையைப் பொறுத்தளவிலே இது நிறுத்தப்பட வேண்டுமென்றால், என்னுடைய தாழ்மையான கருத்து climate of willing obedience என்ற ஒரு நிலையை ஏற்படுத்துவதற்கு பயிற்சி கொடுக்க வேண்டும். புத்தகங்களில் அதற்கான சில பாடங்களைச் சேர்க்க வேண்டும். அதேபோல சில Video Film தயார் செய்து கிராமங்களிலே காட்டப்பட வேண்டும். இப்படிப்பட்ட பொருளாதாரக் குற்றங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

இந்தநேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மதுவை ஒழிக்க நல்லமுறையில் செயலாற்றுபவர்களுக்கு உத்தமர் காந்தி Medal–லும், 10 ஆயிரம் ரூபாய்க்கு பரிசும் கொடுக்கிறார்கள். அதைவிட நேர்மையாக, நியாயமாக இந்தக் கள்ளச்சாராயத்தை ஒழித்துக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்ற அதிகாரிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு promotion கொடுக்க வேண்டும். அதன்மூலமாகத்தான் இதைச் சரி செய்ய முடியும். மேலும் அவர்களை ஊக்குவிக்க முடியும்.

*பிற்பகல் 1–50*

அதேபோன்று, கோயம்புத்தூரிலே நடந்த வெடிகுண்டு நிகழ்ச்சியிலே, மக்களைப் பாதுகாப்பதற்கான வேலைகளை செய்த பல காவல் துறை அதிகாரிகளுக்கு பரிசு கொடுக்க வேண்டுமென்று recommend செய்யப்பட்டது. ஆனால் அது இன்னும் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், இவையெல்லாம் அந்தக் காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கு ஒரு enthusiasm கொடுக்கிற ஒரு விஷயமாக மாறும். அந்த முறையிலே உள்ள



நடவடிக்கைகளை வளர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* நான் கடைசியாக, இரண்டு நிமிடங்களில், என்னுடைய தொகுதி சம்பந்தமாக சில விஷயங்களைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீங்கள் கேட்ட 5 மணித் துளிகள் முடிந்துவிட்டன.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: அதில் 3 நிமிடங்கள்தான் ஆனது. இன்னும் 2 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். Venugopal Commission Report சம்பந்தமாக இங்கே சொன்னார்கள். ஆனால், நான் ஒரு விவாதத்திற்குக்கூடத் தயார். பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள்தான், அந்தக் Commission Report–க்கு எதிராக சாலைகளிலே, சிலைகளை வைத்து தகராறுகளை ஏற்படுத்துகிறார்கள்.

அதேபோன்று, உரிமையுள்ள கிறிஸ்துவர்களுடைய பள்ளிகளிலே அந்தப் பிரார்த்தனையை நடத்துவதற்குக்கூட விடாமல் சில இடங்களிலே தகராறு செய்கிறார்கள். மாவட்ட ஆட்சியரிடத்திலே நானே இது சம்பந்தமாக முறையிட்டிருக்கிறேன். ஆகவே Venugopal Commision Report and Recommendations–படி யாராக இருந்தாலும், எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, புதியதாகக் கோவில்களோ அல்லது அந்தமாதிரி உள்ள ஏற்பாடுகளைச் செய்வதற்கு District Administration–உடைய அல்லது State Administration–உடைய பிரத்யேகமான அனுமதியைப் பெற்றுத்தான் அதை நடைமுறைப்படுத்த, வேணுகோபால் Commission--உடைய சிபாரிசை, சரிவர இந்த அரசு கடைபிடிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு, பார்வதிபுரம், தடிக்காரன்கோணம் போன்ற ஒன்றிரண்டு இடங்களில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்களுடைய கட்சிக் காரர்கள் வைத்திருக்கிறார்கள்.

நம்முடைய காவல் துறை சம்பந்தமாக ஒரு விஷயத்தை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சர்க்காரியா Commission–உடைய சிபாரிசுப்படி ஒரு ஆளுநரை நியமனம் செய்வதற்குக்கூட, மாநில முதலமைச்சரை consult செய்ய வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய அரசியல் சட்டத்தில் பல ஷரத்துக்கள் இருக்கின்றன. ஆனால் நடைமுறையிலே வந்திருக்கிற சில விளைவுகளை நாம் கடைபிடிக்க வேண்டும்.

நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், 356–வது ஷரத்தைப் பயன்படுத்தி, சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று கலைத்து விடப்பட்ட மாநிலங்களிலேகூட, எந்தக் காவல் துறை அதிகாரியையும் மாற்றுவதற்கு இதுவரை மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி சர்க்காரியா கமிஷன் சிபாரிசு செய்தும், ஏன் இப்படி ஒரு நிலைமை வந்தது. ஆளுநர்கள் அரசியல் விருப்பு வெறுப்புக்கு தகுந்த அளவிலே செயலாற்றுவதனுடைய விளைவாக சில மாநிலங்களிலே ஏற்பட்ட சில சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளும், அரசியல் பிரச்சினைகளும்தான் சர்க்காரியா கமிஷன் இப்படி ஒரு சிபாரிசை கொடுப்பதற்கு அடிப்படையை ஏற்படுத்தியது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அந்தக் கருத்தோடு முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: என்னுடைய தொகுதியைப் பற்றி குறிப்பிடவில்லையென்றால், என்னை விடமாட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சொன்னதை, நான் இப்போது சுட்டிக்காட்ட விரும்புகிறேன். A.I.A.D.M.K. Government–ல் recruitment செய்யப் பட்டவர்கள் என்ற காரணத்தாலே, 500–க்கும் அதிகமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஹேமச்சந்திரன், தொகுதி தொடர்பான பிரச்சினைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிக் கொடுத்துவிடுங்கள், நேரம் ஆகிவிட்டது. 2 நிமிடங்களில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: 1995-லே, எட்டு மணி நேர வேலை என்பதை அமல்படுத்த வேண்டுமென்று அன்றைய அரசு போட்ட உத்தரவை வரவேற்று சுவரொட்டி ஒட்டினார்கள் என்ற காரணத்தினால், நல்லதம்பி என்ற ஒரு சிறைக் காவலர் பழிவாங்கப்பட்டிருக்கிறார். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை இந்த அரசு பின்பற்றக்கூடாது. அவர்களுக்கெல்லாம் நியாயம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1998–99–லே recruit செய்யப்பட்ட சில பெண் காவலர்கள், 20–12–2000–ல் உயர் நீதிமன்றம், இவர்களை வேலைக்கு எடுக்க வேண்டுமென்று கேட்டதற்குப் பிறகும் திராவிட முன்னேற்றக் கழக அரசு நியமனம் செய்யவில்லை. அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும்.



அதேபோன்று, 5–வது ஊதியக் குழுவின் பரிந்துரையில், மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை, Sub–Inspector–களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது. அதன்படி, ரூ.5500 கொடுக்க வேண்டும். ஆனால் இப்போது கொடுக்கப்பட்டிருப்பது ரூ.5300 தான். அந்த ஊதிய விகிதம் மாற்றப்பட வேண்டும். அதேபோல ஆயுதப் படையிலே 25 ஆண்டுகள் வேலை செய்தவர்கள், அதிலே 10 ஆண்டுகள் Head Constable–களாக இருந்தால், அவர்களுக்கு promotion கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் இன்று பல ஆட்கள் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள். தகுதி உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இது தொகுதிப் பிரச்சினை இல்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: குமரி மாவட்டத்திலே பளுகல் என்ற இடத்திலே ஒரு புறக்காவல் நிலையம் இருக்கிறது. அதை Police Station–ஆக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மார்த்தாண்டத்திலே இருக்கிற காவல் நிலையம் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது. அதை ஒரு நல்ல இடத்திற்கு மாற்றி, நல்ல காவல் நிலையத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

அதேபோல, 8 மணி நேர வேலை என்பது, காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கும் implement செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டு, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**திரு. எச். ராஜா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும்போது, கன்னியாகுமரி மாவட்டத்திலே பாரதீய ஜனதா கட்சியினர் எங்கோ சிலை வைப்பதாக இங்கே தவறான விஷயத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் பேசும்போது எனக்கு, I do not have communal mind; நான் எந்த மதம், என்ன என்பதைக் குறிப்பிடவேயில்லை. நீதிபதி வேணுகோபால் கமிஷனுடைய பரிந்துரைகள் அங்கே மீறப்படுகின்றன. யார் மீறினாலும், I go on record, யார் மீறினாலும் அதை அனுமதிக்காமல், existing place of worship–க்குப் பக்கத்திலே ஒரு கிலோமீட்டருக்கு இன்னொன்று வராமல் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கட்டும். மதவாதக் கண்ணோட்டத்தோடு நான் பேசவில்லை என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: அதாவது, நான் என்ன சுட்டிக் காட்டினேன் என்றால், இன்று அவருடைய கட்சியைச் சார்ந்தவர்கள்தான் இப்படி செய்து கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு, அவர்களுக்கு பி.ஜே.பி. கட்சியுடன் இருந்த நட்பு, உறவுகள் காரணமாக அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. விநாயகர் சதுர்த்தி அன்று அம்பாங்காலா என்ற இடத்திலே ஒரு சிலையை காவல் துறை தடுத்ததற்குப் பிறகும் வைத்ததன் காரணமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள். திரு. ராஜா, உங்களுடைய விளக்கமும் ஏற்கப் படுகிறது. முதலமைச்சர் அவர்கள் என்னவென்று விசாரித்து முடிவு செய்வார்கள்.

**திரு. எச். ராஜா**: பேரவைத் தலைவர் அவர்களே, வேணுகோபால் கமிஷனுடைய பரிந்துரை, வழிபாட்டுத் தலங்களை உருவாக்குவது பற்றி. ஏதோ, விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்திற்காக, அந்தப் பண்டிகையின்போது, மூன்று நாட்கள் சிலை வைப்பதற்காக அல்ல. நான் இங்கே குறிப்பிட்டது, ஏற்கெனவே இருக்கின்ற வழிபாட்டுத் தலத்திற்கு அருகிலே இன்னொரு வழிபாட்டுத் தலம் வருவதற்குத்தான் வேணுகோபால் கமிஷனிலே தடை இருக்கிறது; பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இங்கே விநாயகர் சிலை இரண்டு நாட்களுக்கு வைப்பதைக் குறிப்பிட்டு, உண்மையான position–ஐ distort செய்ய வேண்டாம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**THIRU J. HEMACHANDRAN:** Hon. Speaker Sir, I am not distorting. I pray to Hon. Chief Minister and the Government that an officer may be appointed to go into all these issues to know what is really happening in Kanyakumari District. (interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உரையை முடித்துக் கொள்ளுங்கள். அடுத்து இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது; திருமதி யசோதா அவர்களும், திரு. கணேசன் அவர்களும். மாலை 4–30 மணிக்குக் கூடி, 5–00 மணிக்குள் நீங்கள் இரண்டு பேரும் பேசி முடித்துவிடுங்கள். 5–00 மணிக்கு முதலமைச்சர் அவர்கள் பதிலுரையாற்றுவார்கள்.



## 3. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாலை சட்டமன்றப் பேரவையின் கூட்டம் நடைபெறவிருப்பதால், மாலை 5–00 மணியளவில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தை ஒட்டிய பகுதியில் உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–58 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

*பிற்பகல் 4–30*

மாலை 4–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 2. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: காவல் துறை, தீயணைப்புப் பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதம். திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 15–இன்மீதும், மானியக் கோரிக்கை எண் 16–இன்மீதும் நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை உங்கள் முன்னே சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால்,

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகுத்திக்
குறுகத் தறித்த குறள்"

என்று சொல்வார்கள். அதுபோல 61 பக்கங்களையும் எடுத்துக்கொண்டால்

எல்லாம் நலப் பணிகளாகவே இருக்கின்றன. உண்மையிலேயே பாராட்டக் கூடாது என்று நினைத்தாலும் பாராட்டியே ஆக வேண்டும் என்பதற்காகத் தயாரிக்கப்பட்ட (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறை மானியக் கோரிக்கையாகவே இருக்கிறது. நான் இந்த விஷயத்திற்குப் போவதற்கு முன்னாலே, மறைந்த மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களுக்கு, அரசு மரியாதை தந்தமைக்கு நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் தமிழக முதலமைச்சரவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் உரித்தாக்கிக் கொள்கின்றேன். அந்த இரங்கல் நிகழ்ச்சியைக்கூட அரசியலாக்க முற்படுவது உண்மையிலேயே வேதனைக்குரியதுதான். நேற்றையதினம் இரங்கல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்திலே, அதாவது அந்தச் சடங்குகள், இறுதிச் சடங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்திலே, பத்திரிகையாளர்களைப் பூட்டி வைத்தது என்ன நியாயம் என்று அருமைச் சகோதரர், மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் கேட்டார்கள். நான் அவரை நேரிலேயே கேட்டேன், நேற்று எங்கே பத்திரிகையாளர்களைப் பூட்டி வைத்தார்கள் என்று. அதற்கு நேற்று இல்லை அதற்கு முன்தினம் என்றார்கள். முன்தினம்கூட பூட்டவில்லை. எஸ்.பி.ஜி.க்காக அவர்களின் உத்தரவின்படி திருமதி சோனியா காந்தி வருகின்ற காரணத்தினால், மூப்பனார் அவர்களுடைய பூதவுடல் அப்போது வரவில்லை, அது வந்து சரி செய்ததற்குப் பிறகுதான் எல்லோரையும்விட வேண்டுமென்று சொல்லி, சட்டமன்ற உறுப்பினர்களும் அதற்குள்ளேயே இருந்தார்கள். அங்கே எல்லோரும் ஒன்றாகத்தான் இருந்தோம். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்களும் அங்கே இருந்தார்கள். அதிலே குறிப்பாக திரு. சிவராஜ் போன்றவர்கள் அங்கேதான் இருந்தார்கள். ஆக, ஒரு தவறான கண்ணோட்டத்தை அவைமுன்னே கொண்டு வருவது சிறப்புக்குரியதாக இருக்காது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மத்திய அரசு 2001 ஆம் ஆண்டு மகளிர் உரிமை ஆண்டாக அறிவித்துள்ளது. உண்மையிலேயே இது தமிழகத்தில் மிகப் பெரிய மறுமலர்ச்சியை உருவாக்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசுதான் மகளிர் ஆண்டை அறிவித்து இருக்கின்றது. அந்தப் பட்ஜெட்டிலே மகளிருக்கான முன்னுரிமைகள் தரப்பட்டதோ, இல்லையோ தெரியாது, தமிழகத்தின் முதல்வர் அவர்கள் மகளிருக்குக் கொடுத்திருக்கின்ற அந்த ஏற்றம் (மேசையைத் தட்டும் ஒலி) காலம் காலமாக நினைத்துப் பார்க்கக்கூடிய ஒன்றுதான்.



மகளிர் காவல் நிலையங்கள் ஏற்கெனவே 58 இருக்கின்றன. அது உங்களாலே தோற்றுவிக்கப்பட்டது. தற்போது, மீண்டும் 50–க்கு நீங்கள் அடிகோலிட்டிருக்கின்றீர்கள் என்று சொன்னால், 108 மகளிர் காவல் நிலையங்கள் உருவாக இருக்கிறது. அந்த மகளிர் காவல் நிலையங்களினாலேதான் வரதட்சிணை ஒழிப்பு, கொலை, தற்கொலை, கற்பழிப்பு, கடத்தல், பாலியல், பெண் சிசுக் கொலை, கணவனால் சித்திரவதை செய்து கொலை செய்யப்படுவது, தற்கொலைக்கு ஆளாக்கப்படுவது, விபச்சாரம் போன்றவை எல்லாம் அந்த மகளிர் காவல் நிலையங்களினாலே பரிசீலிக்கப்பட வேண்டியவை, கவனிக்கப்பட வேண்டியவை என்று நீங்கள் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. ஒன்றிலே மட்டும் கொஞ்சம் வித்தியாசம், பெண் சிசுக் கொலை இனிமேல் நடக்காது. நீங்கள்தான் ஒரு குழந்தை பெற்றால் 20 ஆயிரம் ரூபாய் என்று சொல்கிறீர்கள். இரண்டு குழந்தைகளைப் பெற்றால் 14 ஆயிரம் ரூபாய் என்று சொல்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவனவன் இப்பொழுது ஏண்டா பெண் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லி வருத்தப்படக்கூடிய நேரத்தை நீங்கள் தொடங்கி வைத்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர் பிரச்சினைகளைக் கவனிக்க 1217 காவல் நிலையங்கள் இருக்கின்றன. 1119 மகளிர் துணை ஆய்வாளர்களும், 1638 மகளிர் காவலர்களும் நியமிக்க இருப்பது, உங்களுடைய பரந்த மனதிலே மகளிருக்கு நீங்கள் கொடுத்திருக்கின்ற அந்த விலை மதிக்க முடியாத இடம் என்பதை நான் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 4–35*

சலுகை விலையில் உணவு கொடுக்கின்றீர்கள். ஆனால் காவல் துறையைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் சொல்கிறார்கள், அது சரியாக இல்லையென்று. அது தரமாக இல்லை. ஒருவேளை ஐந்து வருடங்களாக அப்படி இருந்ததோ என்னவோ, இனிமேல் நீங்கள் பார்த்து தரமாகக் கொடுக்க வேண்டுமென்பது அவர்கள் கோரிக்கையாக இருக்கிறது.

அதேபோல காவல் துறையிலே இருக்கின்றவர்கள் திடீரென்று ஏதோ ஒரு காரணத்தாலே அவர்கள் இறக்க நேர்ந்தால் அவர்கள் குடும்பத்திலே ஒருவருக்கு, வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி கொடுப்பதற்கு உத்தரவாதம் கொடுத்திருக்கிறீர்கள். மருத்துவ வசதிக்கு மருத்துவமனைகளை ஏற்படுத்துதல், கல்வி வசதி, விளையாட்டில் பரிசு, விளையாடுவதற்கு ஊக்கப்படுத்துதல், சொந்தத்தில் வீடு, வீட்டு வசதி

வாரியம்; ஏற்கெனவே மூடுவிழா நடத்தியதை இன்றைக்கு புனரமைக்கப்பட்டுள்ளதற்காக வரவேற்கின்றேன்.

அதேபோல குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், திருட்டு. நான் தேர்தல் காலச் சம்பவங்களைச் சொல்லக் கூடாது என்று நினைக்கிறேன். எங்கிருந்துதான் அந்தக் கார்ட்டூனைப் போட்டார்களோ, தெரியவில்லை. திருச்செந்தூர் கோயில் வைர வேல் காணாமல் போயிற்று என்று நீதி கேட்டு நெடும்பயணம் நடத்தியவர்கள், அந்த வைர வேல் பற்றி யார் மேல் அவர்கள் சந்தேகப்பட்டார்களோ அவர்களோடு கூட்டு வைத்துக்கொண்ட, அந்தக் கார்ட்டூனை வரைந்தபோது (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையிலேயே நாங்கள் எல்லோரும் பாராட்டுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்கூடச் சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்கிறார்கள், ரொம்ப நன்றாகப் பேசுகிறார்கள் என்று. மன்றத்தில் சொல்லிவிட்டார். அங்கே போய் என்ன பாடுபட்டாரோ? (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில் இங்கே நம்முடைய மாண்புமிகு மூத்த உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள்கூட அம்மையார் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். என்ன பதில், என்ன பதில்! பேசிவிட்டு யாரும் தப்பித்துப் போய்விட முடியாது. Computer brain மாதிரி. (மேசையைத் தட்டும் ஒலி) டக்கு, டக்கு, என்று முதல்வரிடமிருந்து பதிலாக வருகிற போது, நானும் ஒரு பெண்ணாக இருக்கிற காரணத்தாலே பெருமிதத்திலே மிதக்கின்றேன்.

சிலை திருட்டு. இன்றைக்கு அதைக் கண்டுபிடிப்பதற்காகவும் அதைத் தடுப்பதற்காகவும் உரிய நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். வரவேற்கக்கூடியதுதான். போதைப் பொருள் மாணவர்களைப் பாழ்படுத்தாமல் பாதுகாக்க வேண்டும். நீங்கள் பான்பராக்கைத் தடை செய்திருக்கிறீர்கள். இந்தப் பான்பராக் கள்ளத்தனமாக இனி தமிழகத்திலே விற்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். அதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு நம்முடைய காவல் துறைக்கு இருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நடு நடுவில் என் தொகுதியைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன், இல்லையென்றால் விட்டுப் போய்விடும். என்னுடைய தொகுதியில் குன்றத்தூர், மாங்காடு, மணிமங்கலம், சோமங்கலம், ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையங்களும் சுங்குவார் சத்திரத்தில் புறக் காவல் நிலையமும்தான் இருக்கின்றன. படப்பை, பிச்சுவாக்கம், எடையார்பாக்கம் ரொம்ப அதிகமான தூரத்தில் இருக்கிற பகுதிகளில் எல்லாம் காவல் நிலையங்கள்



இல்லை. அங்கே காவல் நிலையங்களைத் தோற்றுவிக்க வேண்டும். வீட்டு வசதி வாரியத்தை நீங்கள் இன்றைக்கு மறுபடியும் புனரமைத்திருக்கிறீர்கள். ஒரேயிடத்திலே அங்கேயிருக்கிற காவல் பணி செய்கின்ற அதிகாரிக்கும், காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் குடியிருப்புகள் இருக்குமேயானால், ஒரு விசில் சத்தம் கொடுத்தால்கூட, எல்லோரும் பணிக்கு வந்துவிட முடியும். அல்லது, ஏதாவது ஒரு விஷயத்தில் அவர்கள் alert–ஆக இருக்க முடியும். பஞ்சாபில் தீவிரவாதம் இருந்த நேரத்தில் அதிகாரிகளெல்லாம் வேலைக்குப் போயிருந்தபோது, வீட்டில் இருந்த குழந்தை, பெண்களை சுட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அதுபோன்ற ஒரு நிலைமை வராமல் இருக்க, ஒட்டுமொத்தமாக அவர்கள் சக்தியைப் பெற வேண்டுமென்று சொன்னால், அவர்கள் ஓரிடத்திலே, அவர்களுக்கு ஒரு தொகுப்பாக, அவர்களுக்கு வீட்டு வசதி வாரியம் அமைத்தால் சிறப்பாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

புதிய ஆயுதங்கள். கம்ப்யூட்டர் குற்றங்கள் என்று புதிது புதிதாக இன்றைக்கு வந்து கொண்டிருக்கின்றன. விஞ்ஞான வளர்ச்சி பெற்று வருகிறோம் அல்லவா? இதிலேயும் அவர்களுடைய வளர்ச்சியை, திறமையைக் காட்டுவதற்குத் தயாராகியிருக்கிறார்கள். நிச்சயமாக, திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் கூறியதைப்போல, பயிற்சி மையம் நிரந்தரமாக அமைக்கப்பட வேண்டும். காவலர்கள் உட்பட finger print–லிருந்து, கம்ப்யூட்டர் பயிற்சி வரைக்கும் மோட்டார் சைக்கிள் ஓட்டுவது வரைக்கும் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதற்கெல்லாம் பயிற்சி கொடுத்தே ஆக வேண்டும். பெரிய அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் செல்வதைப்போல, நாம்கூட வருடத்திற்கு 10 பேரை, காவல் துறையிலே இருக்கின்றவர்களை வெளி நாடுகளுக்கு அனுப்பலாம். ஜப்பான், கிரேட் பிரிட்டன் போன்ற நாடுகளில் எல்லாம் காவல் துறை மிகச் சிறப்பாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்த நாடுகளோடு மத்திய அரசின் மூலமாக ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு அங்கேயிருந்து 10 பேர் நம் ஊருக்கு வர வேண்டும். விமானச் செலவு எல்லாம் அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டியது. இங்கே வந்தால் தங்குவதற்கும், அவர்களுக்கு உரிய சாப்பாடு செலவும், அவர்களுக்குரிய வாகன வசதியும் நாம் ஏற்படுத்திக் கொடுத்து அவர்களுடைய திறமையை நாமும், நம்முடைய திறமையை அவர்களும் பகிர்ந்துகொள்கின்ற வகையிலே நம் ஊரிலேயிருந்து வருடத்திற்கு 10 பேர் அங்கே போக வேண்டும்; அங்கேயிருந்து 10 பேர் இங்கே வர வேண்டும் என்ற ஒரு திட்டத்தினை நீங்கள் மனதில் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி வந்தால் நல்ல ஒரு நிர்வாகத் திறமை

நமக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 4–40*

இப்போதெல்லாம் கம்ப்யூட்டர் மயம். 'கணினித் தமிழை வளர்ப்போம், கன்னித் தமிழைக் காப்போம்'. ஏனென்று சொன்னால் இப்போது கணினி வந்தவுடனேயே இன்னும் கொஞ்சம் நாட்களிலே தமிழ் அழிந்துவிடுமோ என்ற ஒரு அபாய கட்டம் இருக்கிறது. ஐரோப்பாவில் Printing press–ஐ 500 வருடத்திற்கு முன்னால் எட்வர்டு ஜென்னர் என்றவொரு விஞ்ஞானி கண்டுபிடித்தார். அவர் கண்டுபிடித்த நேரத்திலே அங்கே நூற்றுக்கு மேலான மொழிகள் இருந்தன. ஆனால் அந்த மொழிகள் அத்தனையும் அழிக்கப்பட்டு ஒருசில மொழிகள்தான் இப்போது ஐரோப்பாவிலே இருக்கிறது என்று சொன்னால், அந்த நிலைமை நமக்கு ஏற்படாவண்ணம் பாதுகாப்பதற்கு கணினியை வளர்க்கின்ற அதேநேரத்திலே நாம் தமிழையும் வளர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாநிலம் முழுமையும் அதிகமாக இருப்பது இரண்டே துறைதான். அவை இல்லாத பகுதியே கிடையாது. போலீசும் கல்வித் துறையும். இவை இரண்டும் மாநிலம் முழுவதும் இருக்கும். இந்த இரண்டிலுமே களப்பணிக்கும், அரசுப் பணிக்கும் நாம் கம்ப்யூட்டர் பயிற்சியைக் கொடுத்தே ஆக வேண்டும். உதாரணமாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால் இந்த விதையைப் போட்டால் இந்த மண்ணிலே முளைக்கும் என்று சொல்பவர் அரசுப் பணியாளர். அந்த விதையை நட்டு தண்ணீர் ஊற்றி அதை வளர்த்துக் கொடுப்பவர் களப் பணியாளர்கள். அந்தக் களப் பணியாளர்களுக்கும் அதேநேரத்திலே அரசுப் பணியாளர்களுக்கும் கம்ப்யூட்டர் பயிற்சி அவசியம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் எத்தனையோ காரியங்களிலே – நாம் டி.வி.யிலே பார்த்தால்கூடத் தெரியும் – படிக்கிற பிள்ளைகளுக்கு எல்லாம் அள்ளி அள்ளிக் கொடுக்கிறார்கள். அவர்கள் நல்ல மார்க் வாங்கிவிட்டு வந்தால் அவர்களுக்கு என்று தனியாகக் கொடுக்கிறார்கள். அதுபோல, காவல் துறையிலே இருக்கின்ற காவலர்கள், தலைமைக் காவலர்கள், துணை ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் என்ற அந்த கிரேடிலே இருக்கின்றவர்களுடைய பிள்ளைகள் நன்றாகப் படித்துவிட்டு மேல் படிப்பு படிப்பதற்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால் ஆண்டுக்கு ஒரு பிள்ளையாவது வெளிநாடு செல்வதற்குரிய ஒரு திட்டத்தினை தங்கள் பெயரிலேயே துவக்கி வையுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும்



ஒலி) காரணம், ஒரு உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஒரு கான்ஸ்டபிளினுடைய பிள்ளைதான் செல்வராஜ், I.A.S. அதுமாதிரி அடித்தளத்திலே இருக்கின்ற கான்ஸ்டபிள் தம் பிள்ளையை கான்ஸ்டபிளாகவே வர வைக்க வேண்டுமென்று நினைக்கக் கூடாது. அவருடைய பிள்ளைக்கும் திறமை இருந்தால், தகுதி இருந்தால் அதை அரசாங்கம் கவனித்து அதுபோன்றவர்களை வருடத்திற்கு ஒன்று நீங்கள் உருவாக்குங்கள். அது அப்படியே பற்றிக்கொள்கிறதா இல்லையா என்று பாருங்கள். ஒரு நல்ல திட்டமாக தமிழகத்து மக்களுக்கு நீங்கள் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 மணித்துளிகள் இருக்கின்றன.

**திருமதி டி. யசோதா:** சீக்கிரம் உரையை முடித்துவிடுகிறேன் சார். நிறைய விஷயம் சொல்ல வேண்டும். காஞ்சீபுரத்திலே கருங்குழி பேரூராட்சியில் பஜார் வீதியில் மகாத்மா காந்தியினுடைய சிலையை சில சமூக விரோதிகள் லாரியால் மோதி அந்த மண்டபத்தை உடைத்து விட்டார்கள். அதற்குப் பிறகு சிலையை உடைத்ததால் அங்கே பெரிய பிரச்சினைகள் கிளம்பின. உடனே இராத்திரியோடு இராத்திரியாக மகாத்மா காந்தி எடுக்கப்பட்டு விநாயகர் வந்து உட்கார்ந்துவிட்டார். அதற்குப் பிறகு அங்கே அந்த விநாயகரையும் காணோம். அதனால் அந்த விநாயகரை எடுத்தவர்கள் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் என்று சொல்லி அவர்கள் கைது செய்யப்பட்டு இன்றைக்கும் சிறைச்சாலையிலே இருக்கிறார்கள். ஆகவே, அம்மையார் அவர்கள் இதிலே உண்மையான குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். தேசப்பிதா மகாத்மா காந்தி அடிகளுடைய மண்டபத்தை உடைத்தவர்கள், அதற்குப் பிறகு அந்தச் சிலையை எடுத்து வைத்துவிட்டு விநாயகர் சிலையை வைத்தவர்கள், அதற்குப் பிறகு இந்த மகாத்மா காந்தி சிலையையும், மணி மண்டபத்தையும் கட்ட வேண்டுமென்பதற்காகப் பணம் வசூல் செய்தவர்கள் இவர்களில் யார் குற்றவாளி என்று கண்டுபிடித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 4–45*

1966 ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சியிலே இருந்த காலம். 35 வருடங்கள் ஆயிற்று. அந்தக் காலத்திலே வேலைக்குச் சேர்ந்தவர்கள் இப்போதும் இருக்கிறார்கள். 35 வருடங்களுக்கு முன்னாலே வேலைக்குச் சேர்ந்தவர்கள் கான்ஸ்டபிளாகவும், ஹெட் கான்ஸ்டபிளாகவும்,

இருக்கிறார்கள். முந்தைய அரசாங்கத்திடம்கூட அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நீங்கள் காங்கிரஸ்காரர்கள் காலத்திலே வந்தவர்கள்தானே, இப்பொழுதெல்லாம் உங்களுக்கு வயதாகிவிட்டது என்று சொன்னதாகச் சொன்னார்கள். அதனால் அவர்களுடைய பதவி உயர்வுக்கு, அம்மையார் அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 1980–81 ஆம் வருடத்தில் காவல் துறையிலே பணியாற்றுவதற்கு எல்லோரையும் சேர்த்து இருக்கிறார்கள். அதிலே ஒரு சிலருக்கு மட்டும் 200 ரூபாய், 300 ரூபாய் அதிகமாகக் கிடைக்கிறது. இங்கேயிருக்கிற வெள்ளை டிரஸ் போட்டுக் கொண்டிருக்கின்ற காவலர்களுக்கெல்லாம் 4000 ரூபாய் அடிப்படைச் சம்பளம் என்று சொல்கிறார்கள். 4100, 4200 ரூபாய் என்பது இன்னொரு பிரிவில் உள்ளவர்களுக்கு அளிக்கப்படுகிறது. ஒரே நாளில், ஒரே தேதியில் சேர்ந்தவர்களுக்கு இந்த வேற்றுமை ஏன்? அதுமட்டுமல்ல, எல்லோரும் ஒரேநாளில் தான் சேர்ந்தார்கள். ஆனால் அவர்களுக்கு மட்டும் எல்லாவிதமான சலுகைகளும் கொடுக்கப்படுகின்றன, இவர்களுக்கு அவை இல்லை என்ற நிலைமை. எட்டு மணி நேரத்திற்கும் மேலே வேலை செய்தாலும்கூட, லீவ் நாளில் வேலை செய்தாலும்கூட 50 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அதை ஒருநாள் சம்பளமாகக் கொடுத்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும். அதிகமாக உழைக்கிறார்கள்.

அதேபோல, இவர்களெல்லாம் '25, 30 வருடங்களாக வேலை செய்கிறோம், எங்களுக்கு உண்மையிலேயே நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்றால், நாங்கள் Voluntary Retirement கேட்டால், எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று' கேட்டுக்கொள்கிறார்கள். இவற்றையெல்லாம் நான் அம்மா அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன். இவற்றையெல்லாம் இங்கே படித்தால் ரொம்ப நேரம் ஆகும்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் 1997–98–க்காக ஆயிரம் காவல் துறை Sub–Inspector–களைத் தேர்வு செய்ததில் நடந்த முறைகேடுகளைத் தங்கள் முன் வைக்கிறேன் என்று என்னிடம் கொடுத்தார்கள். அதை நான் அம்மா அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன். அதைப்பற்றிப் பேசினால் நேரம் ஆகும். இறுதியாக ஒருசில விவரங்களைக் கூறி நான் விடைபெறலாம் என்று நினைக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, ஒருசில விவரங்கள் வேண்டாம், ஏதாவது ஒன்றைச் சொல்லுங்கள்.



**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டைப்பற்றி மட்டும் சொல்லிவிடுகிறேன். அதாவது, குறிப்பாக, சிவகாஞ்சிபுரம் B–1 Police Station அதிலே 29—5—2000 அன்று ராஜேந்திரன், மார்க்கசகாயம் என்பவருடைய பையன், ராஜ்குமார் என்பவருடைய வீட்டிலே 7.50 இலட்சம் ரூபாய் திருடு போயிருக்கிறது. 38 சவரன் களவு போயிருக்கிறது. அவர்கள் அதற்காக புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். புகார் F.I.R. No. 361/2000. ஆனால், 38 சவரனுக்கு 36 சவரன் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 7.50 இலட்சம் ரூபாய் இன்றையவரையில் கொடுக்கப்படவில்லை. நான்கூட நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக அணுகினேன். அவர்கூடச் சொன்னார். ஆனால், இன்றையவரையிலும் அது கிடைக்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்றால், கைது செய்யப்பட்டவர்கள் ஏகாம்பரம், ஜமாலுதீன். அந்த இரண்டுபேரையும் கூப்பிட்டுக் கேட்டபோது, நகையெல்லாம் எங்கே அடமானம் வைக்கப் பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிவிட்டார்கள். ஏனென்றால், அவர்கள்தான் திருடியவர்கள். 36 சவரன் நகை வந்துவிட்டது. அவர்கள்மேல் வழக்குப் பதிவு பண்ணாமல், அவர்களைக் குண்டர் சட்டத்தில் போட்டுவிட்டார்கள். குண்டர் சட்டத்திலே போடப்பட்டவர்கள் இப்போது வெளியே வந்திருக்கிறார்கள். வெளியே வந்ததற்குப் பிறகு, இப்போது பல திருட்டுக்கள், 10 திருட்டுக்களுக்குமேல் அங்கே நடந்திருக்கின்றன. ஆனாலும்கூட, குண்டர்கள் சட்டத்தில் போடப்பட்ட திருடர்களான இந்த ஏகாம்பரம், ஜமாலுதீன் இரண்டுபேரும் யாரிடத்திலே பணத்தைக் கொடுத்தார்கள் என்று சொன்னால், அங்கே வழக்கறிஞர் ஒருவர் இருக்கிறார். அவரிடத்திலே கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்த வழக்கறிஞருக்குத் தந்தை S.P. Control Office, காஞ்சீபுரத்திலே S.P. Office–லே, ** என்கிற பெயர் அவருக்கு, அவர் இருக்கிறார். அதனாலே திருடுபோன அந்தப் பணம்–(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா அவர்களே, (குறுக்கீடு) நேரத்துக்காகச் சொல்லவில்லை. நீங்கள் ஒருவருடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) அந்தப் பெயரை எடுத்துவிடுவோம். (குறுக்கீடு) மற்ற விவரங்களை நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்துவிடுங்கள். அவர்கள் அதுகுறித்து நடவடிக்கை எடுப்பார்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல மலையம்பாக்கம் என்ற ஊர் என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. அங்குள்ள கோயிலில் தீமிதி திருவிழா சென்ற வாரத்திற்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முந்தைய வாரம் நடந்தது. எல்லோரும் விரதம் இருந்து, மஞ்சள் வேட்டி, மஞ்சள் சட்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களையெல்லாம் பிடித்து, கள்ளச் சாராய கேஸ் எழுதி, அவர்கள் எல்லோரையும் கொண்டுபோய் Remand பண்ணிவிட்டார்கள். நான் அவர்களிடம் சொன்னேன். அவர்கள் கோயில் திருவிழாவிற்காக விரதம் இருக்கிறார்கள், அவர்கள்மேல் இப்படி கேஸ் போடுகிறீர்களே என்று கேட்டால்கூட, அவர்கள் அதைச் சரியாகக் கேட்கவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நீங்கள் தவறாக நினைக்கக் கூடாது. அண்ணா தி.மு.க.காரர்கள் முழுக்க முழுக்க என்னுடைய தொகுதியிலே பழிவாங்கப்படுகின்ற காரணத்தினாலே, அவர்கள் நேராக அம்மையாரைச் சந்திக்க முடியாமல் என்னிடம் கேட்கும்போது நான் அங்கே போனால்கூட எனக்கு அங்கே சரியான பதில் இல்லை. சத்யா என்ற ஒரு பையன். புரட்சித் தலைவருடைய அம்மா பெயர் அந்தப் பையனுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. 21 வயது. அவனைப் பிடித்துப் போட்டு விட்டார்கள். நான் எங்களுடைய உள்ளூர் மந்திரியிடம் சொன்னேன். அம்மா ஏதாவது சொல்லப் போகிறார்கள் என்றார். நான் பார்த்தேன், நேராக S.P. Office–க்கே போய்விட்டேன். அந்தப் பையனை விடவில்லை என்று சொன்னால் பிரச்சினை வரும், அவன் அண்ணா தி.மு.க.–வில் இருக்கிறான், அவன் புரட்சித் தலைவர் அவர்களுடைய அம்மா பெயரை வைத்திருக்கிறான். அவன் தப்புப் பண்ணவில்லை. அவன் தப்புப் பண்ணியிருந்தால் இதில் நான் தலையிடமாட்டேன் என்று சொன்னேன். அதற்கு அப்புறம், அவர்கள் என்னுடைய வார்த்தையைக் கேட்டார்கள். அவனை நான் மெட்ராசுக்கே கொண்டு வந்துவிட்டேன். அவனிடம் 'நீ அந்த ஊரிலே இருக்கவேண்டாம். உன்மேல் தப்பாகச் சொல்வார்கள்' என்று சொல்லி அழைத்து வந்துவிட்டேன். யாரோ சொல்கின்ற ஆலோசனையின் பேரில் சிலர், காவல் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் எடுக்கின்ற நடவடிக்கைகள் குறித்து அம்மையார் அவர்களுடைய கவனத்திற்கு வர வேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்த நேரத்திலே இதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 4–50*

அதேபோல, பன்னலூரிலே அம்பிகா என்ற பெண். அவள் ஏற்கெனவே மிசாவிலிருந்து வந்து 3 மாதம்கூட ஆகவில்லை. அந்தப் பெண் பாவம். பிள்ளைகுட்டிகளை எல்லாம் இன்றைக்கு வீட்டிலே விட்டுவிட்டு இரண்டாவது தடவையாக மிசாவிலே அவளைக் கொண்டுபோய் இருக்கிறார்கள். நான் எவ்வளவோதூரம் போராடியும் எதுவும் நடைபெறவில்லை. இதுபோன்ற சூழ்நிலையில் நான் ஒன்றை மட்டும்



கூறிக்கொள்ள விரும்புகிறேன். காவல் துறையிலே இருக்கின்றவர்கள் எல்லோருமே நல்லவர்கள் இல்லை என்று நான் சொல்வதற்குத் தயாராக இல்லை. ஆனால், அதே நேரத்திலே அவர்களை நாம் மிகப் பக்குவமாக நடத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கின்றேன். இறுதியாக, ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: *20 நிமிடங்கள் ஆகிவிட்டன.*

**திருமதி டி. யசோதா**: முடித்துவிட்டேன், சார். தமிழகத்திலே இருக்கின்றவர்களுக்கு நம்முடைய ஊரில் இருக்கின்ற தனி நீதிமன்றம் பிடிக்காது. தனி நீதிபதிகளையும் பிடிக்காது. தமிழ் வழக்கறிஞர்களையும் பிடிக்காது. தமிழ்நாட்டிலே இருக்கிற கோர்ட்டுகளையும் பிடிக்காது. அவர்களுக்கெல்லாம் பிடித்தது Supreme Court–தான். வட இந்திய வழக்கறிஞர்கள்தான் அவர்களுக்குப் பிடிக்கும். வட இந்திய நீதிபதிகளைத்தான் அவர்களுக்குப் பிடிக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர்கள்தான் ஒரு காலத்திலே வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொன்னார்கள். இவர்கள்தான் ஒரு காலத்திலே வடவர்கள் வல்லவர்களுமல்ல, நல்லவர்களுமல்ல என்று சொன்னவர்கள். ஆகவே, இன்றைக்கு வடக்கு கொடிகட்டிப் பறக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆனால், மக்கள் சக்திக்கு முன்னாலே யாரும் எதிரிலே நிற்க முடியாது என்பதைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கைகள் மீது பேச என்னை அழைத்த தங்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றிகலந்த வணக்கத்தை முதலிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக் கடல் அறிஞர் அண்ணா அவர்கள் ஒன்று சொன்னார்கள். 'நியாயங்களை எக்காரணத்தைக் கொண்டும் காயப்படுத்தக் கூடாது, அதேபோல காயங்களை எக்காரணத்தைக் கொண்டும் நியாயப்படுத்தக் கூடாது' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொல்லியிருக்கிறார்கள். அதையே இந்த மாமன்றத்திற்கு நான் சொல்லி இந்த நாட்டினுடைய பிரச்சினைக்குரிய, மிகமிகக் கடினமான ஒரு துறை எது என்றால், அது காவல் துறைதான். நான் காவலர்கள் மீது பரிதாபப்படுகிறேன். ஆட்சிகள்

மாறும்போதெல்லாம் அவர்கள் மாறிக்கொண்டே இருக்கிறார்கள். காவல் துறை, காவல் துறை அதிகாரிகள் எப்பொழுதும் நடுநிலையோடு பணியாற்ற வேண்டுமென்ற என்னுடைய விருப்பத்தையும், நான் சார்ந்திருக்கிற பாட்டாளி மக்கள் கட்சியினுடைய விருப்பத்தையும் மிகப் பணிவோடு நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலைநாடுகளில் ஒன்று சொல்வார்கள். குதிரை மேல் சவாரி செய்பவன்தான் குதிரையை அழைத்துச் செல்ல வேண்டும். ஆனால், குதிரை மேல் உட்கார்ந்து இருப்பவன், குதிரையின் போக்குக்கே செல்லக் கூடாது. அதேபோலத்தான் இந்தத் துறையும் தெளிவான திட்டங்களை வகுக்க வேண்டும். மக்களுக்காகத்தான் காவல் துறை, சமுதாயத்தைக் காக்கத்தான் காவல் துறை என்ற அடிப்படையில்தான் காவல் துறை செல்ல வேண்டும். குதிரையை ஓட்டுபவன் சரியான வழியிலே அதை ஓட்டவில்லை என்றால், அதனால் அந்தக் குதிரை மேல் உட்கார்ந்து இருப்பவனுக்கும் ஆபத்து, அந்த வழியிலே செல்லக்கூடிய மக்களுக்கும் ஆபத்து என்று மேலைநாட்டு அறிஞர்கள் சொல்வார்கள். அதையே இந்த அரசாங்கம் மிக உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய பாட்டாளி வர்க்கத்தினுடைய தலைநாயகனாக வீற்றிருக்கும் டாக்டர் அய்யாவை சென்ற ஆட்சியின்போது சில கும்பல் கொலை செய்ய முயன்றார்கள். அவர்களுடைய காரை வளைத்து அடித்து நொறுக்கினார்கள். இதைத் தெரிந்த ஒருசில பாட்டாளி சொந்தக்காரர்கள் உடனடியாக சாலை மறியலில் ஈடுபட்டார்கள். சாலை மறியலிலே ஈடுபட்ட தொண்டர்களை, சென்ற அரசாங்கம் பல்வேறு வழக்குகளிலே பதிவு செய்திருக்கிறது. அதற்குக்கூட நான் உள்ளே போகவில்லை. ஆனால், அவர்களில் 21 பேர்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்திலே போட்டிருக்கிறார்கள். அதிலே ஒருவர் 15 வயதுக்குக் குறைந்த ஒரு பள்ளி மாணவர். ஒருவர் 17 வயதுள்ள பள்ளி மாணவர். இந்த நாட்டை எந்த நாட்டுக்குக் காட்டிக் கொடுப்பதற்காக அவர்கள்மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் பாய்ந்தது என்பதனை இந்த அரசாங்கம் தயவுசெய்து சிந்திக்க வேண்டும். சென்ற முறை இதுபற்றி எங்களுடைய கட்சி மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியும், அந்தப் பொய் வழக்குகள் எல்லாம் இன்னும் வாபஸ் பெறாமல் இருக்கின்றன. அவற்றை வாபஸ் பெற வேண்டுமென்று இந்தப் புதிய அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



*பிற்பகல் 4–55*

அதேபோல, காவலர்களைப்பற்றி இங்கே பல்வேறு உறுப்பினர்கள் மிகச் சிறப்பான முறையிலே எடுத்துச் சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, 24 மணி நேரமும் பணி செய்யக்கூடிய ஒரு பணியாளர் இருக்கிறார் என்றால், அவர் காவல் துறையைச் சார்ந்தவர்தான். அவர்கள் உள்ளக் குமுறல்களை, உள்ள வேதனைகளை, இந்த மாமன்றத்திலே, காலையிலே எடுத்துச் சொன்னார்கள். ஒருவர் சீமை எண்ணெய்யை ஊற்றிக் கொளுத்திக் கொண்டதாகக்கூடச் சொன்னார்கள். நான் சொல்கிறேன், அந்த உள்ளக் குமுறல்களை அவனுடைய மேலதிகாரிகளிடத்திலே அவனால் சொல்ல முடியாது. ஆகையால் தயவுசெய்து, இந்த அரசு, தமிழக முதலமைச்சர் அவர்கள், ஒரு I.A.S. அதிகாரியை நியமித்து, மாவட்டந்தோறும் சென்று சாதாரண ஒரு காவலரிலிருந்து எஸ்.பி.வரை, அவரவர்களுடைய குறைபாடுகள் என்ன, அவர்கள் உள்ளக் குமுறல்கள் என்ன, அவர்களுக்கு இந்த அரசாங்கம் செய்யவேண்டிய கடமை என்ன என்பதைத் தெரிந்து, காவலர்களுக்கு நல்லதைச் செய்ய இந்த அரசு முன்வர வேண்டுமென்று பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். காவல் துறையிலே இருக்கக்கூடியவர்கள், அக்காள் யசோதா அவர்கள் சொன்னதைப்போல, எங்கேயாவது அத்திப் பூத்தாற்போல I.P.S. வந்திருப்பார். ஆனால், ஒரு இலட்சம் காவலர்கள், எந்த நேரத்திலே வீட்டிலேயிருந்து வெளியே வருகிறோம், எப்போது வீட்டிற்குப் போகிறோம் என்று யாருக்கும் தெரியாது. அந்தக் காவலர்களுக்கும் தெரியாது. அதனால், அவன் குடும்பத்தையும் கவனிக்காமல், அந்தக் குழந்தையைச் சரியாகப் பராமரிக்காமல் அந்தக் குழந்தையினுடைய கல்வித் தரமெல்லாம் கெட்டுவிடுகிறது. ஒரு அலுவலகத்திலே இருக்கிற பியூனிலிருந்து, கிளார்க்கிலிருந்து அதிகாரிகள்வரை, அவனுடைய குழந்தை எப்படி உருவாக்கப்பட வேண்டுமென்று திட்டம் போடுகின்றானோ, அப்படி அவனால் அந்தக் குழந்தைகளை உருவாக்க முடிகிறது. M.B.B.S. ஆக, எஞ்சினியராக, வக்கீலாக, I.P.S. ஆக, I.A.S. ஆகக்கூட உருவாக்க முடிகிறது. ஆனால், சாதாரண போலீஸ்காரர், எந்த நேரத்திலே தன்னுடைய குழந்தையினுடைய முகத்தினைப் பார்க்கிறான்? அவன் போகும்போது குழந்தை தூங்கி விடுகிறது. அவன் படித்தானா, சாப்பிட்டானா என்றுகூடத் தெரிந்துகொள்ள முடியாத ஒரு நிலை.

[திரு. ஐ. கணேசன்] [2001 செப்டம்பர் 1

ஆகவே, இந்த அரசாங்கம் அந்தப் போலீஸ்காரர்கள்மீது கருணைகூர்ந்து அந்தக் குடும்பத்தின்மீது கருணை வைத்து, அந்தக் குழந்தைகளுக்குப் படிப்பிலே ஒரு தனி இட ஒதுக்கீட்டைக் கொடுக்க வேண்டும். அதேபோல, தற்போது போலீஸ் வேலைக்கெல்லாம் ஆள் எடுக்கிறார்கள். ஒரு தனி இட ஒதுக்கீடு கொடுத்து, அந்தப் போலீஸ்காரர்களுடைய குழந்தைகளுக்கு நிச்சயமாக அந்த வேலை கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

காலையில் இங்கே பேசிய அத்தனை நண்பர்களும், எதிர்க்கட்சி நண்பர்களும் சொன்னார்கள். 30 ஆண்டுகள், 35 ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்குக்கூட இன்னும் முழுமையாக 7 ஆயிரம் ரூபாய் வரைக்கும் சம்பளம் வாங்காத போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். சம்பள உயர்வு போலீஸ் இலாகாவிலே மிகமிகக் குறைவு. எப்படியாவது போலீஸ்காரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 10,000 ரூபாய்வரை சம்பளம் கொடுக்க இந்த அரசாங்கம் முழு முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். காவல் துறையில் காவலர்கள் 10 ஆண்டு பணி முடித்தால் முதல்நிலைக் காவலர்கள், 15 ஆண்டு பணி முடித்தால், தலைமைக் காவலர்கள், 25 ஆண்டு பணி முடித்தால், உதவி ஆய்வாளர்கள் – எஸ்.ஐ. – என பதவி உயர்வு அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், காவலர்கள் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால், அவர்களுடைய குடும்பத்திற்குக் கண்டிப்பாக, நிச்சயமாக, உடனடியாக வேலை கிடைக்க வேண்டும்.

*பிற்பகல் 5–00*

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே 47–வது பக்கத்திலே, 1200 பேருக்கு மேலே இன்னும் வேலை கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அந்தக் குடும்பங்களுக்கு எல்லாம் வேலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, மற்ற அரசு ஊழியர்களைப்போல காவலர்களுக்கு வாரத்தில் இரண்டு நாட்கள் விடுமுறை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி முடியவில்லை என்றால் அவர்களுக்கு அந்த விடுமுறை நாட்களுக்கான சம்பளமாவது கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். பணியின்போது மரணமடைந்துவிட்டால் அந்தக் குடும்பத்திற்கு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாய்வரை கொடுக்கப்படுகிறது. அதை அனைத்து காவலர்களுடைய குடும்பத்திற்கும், பணியின்போது



2001 செப்டம்பர் 1] [திரு. ஐ. கணேசன்]

காலமடைந்த அவருடையஅந்தக் குடும்பத்திற்கும் குறைந்தது 10 இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகையாக வழங்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, சீருடை. சீருடை தைத்து வந்து அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். பல்வேறு size–லே இருக்கிறார்கள். என்னைப்போல, மணியைப் போல, மற்றவர்களைப்போல் பல்வேறு size–லே உடம்பை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தைத்துக் கொடுக்கக்கூடிய சீருடை, கிட்டத்தட்ட 90, 95 சதவிகிதம் பேருக்கும் போதுமானதாக இல்லை. அது பிரித்து, கிழித்து, தைத்து சீரழிக்கப்படுகிறது. அவர்களுக்குத் துணியாகக் கொடுத்துவிடுங்கள். தையல் கூலியும், துணியும் கொடுத்துவிட்டால், அவர்கள் நல்ல அழகோடு, மிடுக்கோடு நடந்து வருவதைப் பார்க்க கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அதை விடுத்து, அங்கொன்றும், இங்கொன்றுமாக இருப்பது அவ்வளவு சரியில்லையென்று, அவர்களுக்குத் துணியாகக் கொடுக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணன் திரு. பழனிசாமி அவர்கள் சொன்னதுபோல, திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னதுபோல, காவலர்களுக்கு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பொன்மனச் செம்மல், மக்கள் திலகம், கொடை வள்ளல் என்று போற்றப்படக்கூடிய என்னுடைய இதய மன்னன் எம்.ஜி.ஆர். அவர்கள் முதன்முதலாக காவலர்களுக்கு மலிவு விலையிலே அரிசி வழங்கக்கூடிய திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தத் திட்டத்தின்போது, அனைத்துக் காவலர்களும் மிக மகிழ்ச்சியோடு அந்தப் பொருட்களை எல்லாம் வாங்கிக்கொண்டு வீட்டிற்குச் சென்றார்கள். ஆனால், இன்று அந்தப் பொருட்கள் தரம் குறைந்து இருப்பதாகப் பல்வேறு தரப்பிலிருந்தும் சொல்லப் படுகிறது. இதைப்பற்றி ஆராய்ந்து, நல்ல தரமான பொருட்களை வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டிலே எந்தக் காவல் நிலையத்திற்குச் சென்றாலும் சரி, அங்கு போதுமான காவலர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. கேட்டால் பல்வேறு பணிக்குச் சென்றுவிட்டார்கள்; பந்தோபஸ்துக்குச் சென்று விட்டார்கள்; அங்கே சென்றுவிட்டார்கள்; இங்கே சென்று விட்டார்கள்; நாங்கள் என்ன செய்வது; குற்றவாளிகளைப் பிடிக்க முடியவில்லை என்று F.I.R.–கூடப் பதிவு பண்ண முடியாமல் பல காவல் நிலையங்கள் இருக்கின்றன. அந்தக் காவல் நிலையங்களில் எல்லாம் போதுமான அளவிற்கு காவலர்களைப் போட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட அளவிலே உள்ள தனிப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு ஆகியவைகளிலே துணை கண்காணிப்பாளர்கள், டி.எஸ்.பி. மட்டத்திலே ஏற்கெனவே இருந்த பணியிடத்திற்கு டி.எஸ்.பி. பணியிலிருந்து இறக்கி இன்ஸ்பெக்டர் மட்டத்திலே முந்தைய அரசு வைத்துள்ளது. இதை மாற்றி மீண்டும் டி.எஸ்.பி. மட்டத்திற்கு அந்தப் பணியிடத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெண் காவலர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, தமிழ்நாடு சட்டம்–ஒழுங்குப் பிரிவிற்குத் தேர்ந்தெடுத்துவிட்டு, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையிலே சேர்த்து பணிபுரியச் சொல்கிறார்கள். அப்படி ஆண்களோடு பெண்கள் ஒரே இடத்திலே பணியாற்றும்போது சரியாக பாத்ரூம் வசதி, மற்ற வசதிகளெல்லாம் கிடைப்பதில்லை. ஆகவே, பெண் காவலர்களைச் சட்டம்–ஒழுங்குப் பிரிவிலே பணியாற்ற இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மருத்துவப் படி மிகமிகக் குறைவு. அதை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரிஸ்க் அலவன்ஸ் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். காவலர்கள் வெளியூருக்குக் குற்றவாளிகளைப் பிடிக்கச் செல்லும்போது அவர்களுக்குச் சாப்பாட்டிற்காக ஒதுக்கிக் கொடுக்கக்கூடிய தொகை மிகமிகக் குறைவு. 50 ரூபாய்தான்; அந்தப் போலீஸ்காரர்களுக்கு மூன்று நேரத்திற்கும் போதுமா? சிந்தித்துப் பார்த்து அதையும் உயர்த்திக் கொடுக்க வேண்டும். அதேபோல, அவர்களுடைய துணிகளைச் சலவை செய்ய 15 ரூபாய் கொடுக்கிறார்கள். அதையும் உயர்த்திக் கொடுக்க வேண்டும். அதேபோல பல்வேறு சலுகைகள், தீயணைப்புத் துறையில் இருப்பவர்களுக்கும் சிறைச்சாலையில் இருக்கக்கூடிய வார்டன்களுக்கும் இத்தனை சலுகைகளை நாம் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 5–05*

அடுத்து, வெளியூரிலே குற்றவாளிகளைப் பிடிக்கச் செல்லும் போது அவர்கள் தங்குவதற்கு இடவசதி கொடுக்கப்படுவதில்லை. Hotel Room Bill வாங்கினால்கூட சாதாரண தொகைகூடக் கொடுக்கப் படுவதில்லை என்று காவலர்கள் மிகவும் வருத்தப்பட்டுக் கொள்கிறார்கள். அதையும் இந்த அரசு கவனித்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு அந்த ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, கள்ளச் சாராயம். ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களோ மற்றவர்களோ வருத்தப்பட்டுக்கொள்ளக்கூடாது. கள்ளச் சாராயம் பல்வேறு பகுதிகளிலே அப்படியே ஓடிக் கொண்டிருக்கிறது, சென்ற அரசாங்கம் இருந்தபோதும், இப்போதும். அதிலும் குறிப்பாக, சேலம் மாவட்டத்திலே– இதே சட்டமன்றத்திலே 4 ஆண்டுகள் தொடர்ந்து பேசியிருக்கிறேன்– ஒவ்வோர் ஆண்டும் கள்ளச் சாராயம் குடித்துவிட்டு இறப்பவர்கள் எண்ணிக்கை ஆண்டாண்டு காலம் வந்து கொண்டேயிருக்கிறது. முதலிலே அவர்கள் நடத்தினார்கள்; அதே கடை இப்போது மற்றவர்களால் நடத்தப் படுகிறது. இதை முதலமைச்சர் அவர்களின் தனிக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்கள் அந்தக் குறைபாடுகளையெல்லாம் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது விடப்பட்டுள்ள மதுக் கடைகளிலே Bar நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு யார் அவர்களுக்கு licence கொடுத்தது? அரசாங்கம் கொடுத்ததா? எப்படி அவர்கள் Bar நடத்துகிறார்கள்? எந்தப் பகுதியிலே இதுபோல நடக்கிறது என்பதைக் கண்டுபிடித்து காவல் துறை கடுமையாக தண்டிக்க வேண்டும். சென்ற முறை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும்போது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Bar நடத்துவதற்கு licence வழங்கப்படுவதில்லை. காவல் துறையினர் இதுகுறித்து தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் அரசு பாராமுகமாக இருந்ததால் நிறைய இடங்களில் சட்ட விரோதமான Bar-கள் நடத்தி வரப்பட்டன. ஆனால், இப்போது இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு மிகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைப்பாடி தொகுதியைப் பொறுத்தவரையில் நான் சென்ற 5 ஆண்டு காலமாக இந்த மாமன்றத்திலே சொல்லி வந்திருக்கிறேன், கொங்கணாபுரத்திற்கு ஒரு காவல் நிலையம் வேண்டுமென்று. அந்த கொங்கணாபுரம் ஒன்றியத்திலே கிட்டத்தட்ட 50,000 மக்களுக்குமேல் இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே காவல் நிலையம் இல்லாமல் அதில் ஒரு பகுதி சங்ககிரி காவல் நிலையத்திலும், ஒரு பகுதி இடைப்பாடி காவல் நிலையத்திலும், ஒரு பகுதி மகுடஞ்சாவடி காவல் நிலையத்திலும் இருப்பதால், அங்கு சட்டம்–ஒழுங்கு மிகவும் கெட்டுக் கொண்டிருக்கிறது. அதைவிட தமிழ்நாட்டிலேயே மிகச் சிறப்பு வாய்ந்த சொசைட்டி அங்கு இருக்கிறது. நான்கு மாநிலங்களிலிருந்து வியாபாரிகள் வருகிறார்கள்.

பல்வேறு திருட்டுக்கள் நடைபெறுகின்றன. ஆகவே, நிச்சயமாக இந்தப் புதிய அரசாங்கமாவது கொங்கணாபுரத்தில் ஒரு காவல் நிலையம் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். அதேபோல, இடைப்பாடி பூலாம்பட்டி காவலர்களுக்குக் குடியிருக்க வீடுகள் அங்கில்லை; மிகவும் பரிதாபத்திற்குரிய நிலை அங்கிருக்கிறது. அங்கு குடியிருப்பு கட்டிக் கொடுக்க வேண்டும்.

இடைப்பாடியில் தீயணைப்பு நிலையம், சென்ற அரசாங்கம் அளித்திருக்கிறது. ஆனால், அதற்கு அரசுக் கட்டடம் இல்லை. ஏற்கெனவே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கையகப்படுத்திய கிட்டத்தட்ட 100 ஏக்கருக்கு மேலே சும்மா இருக்கிறது. அந்த இடத்திலே ஒரு தீயணைப்பு நிலையத்தைக் கட்டித்தர வேண்டும்.

அடுத்து, இடைப்பாடியிலே போக்குவரத்து இடையூறு மிக அதிகமாக உள்ளது. அங்கு போக்குவரத்துக் காவலர்களை நியமிக்க வேண்டும். அதேபோல பெண் காவலர்கள் இரண்டு பேர் அங்கே போடப்படுவதாக இந்தக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் ஒரு பெண் காவல் நிலையமே இடைப்பாடியிலே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர் திருக்கச்சூர் ஆறுமுகம் அவர்கள் வாக்காளர்களுக்கு நன்றி சொல்வதற்காக எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் ஐயா அவர்களை அழைத்துச் சென்று, 25–8–2001–லே அவர் வாக்காளர்களுக்கு நன்றி சொல்லும்போது, அங்கு போலீஸ் பாதுகாப்பு சரியாக இல்லாததால் அந்தக் கூட்டம் முடியக்கூடிய கடைசி நேரத்திலே, திருக்கழுக்குன்றத்திலே கூட்டம் முடிகிற கடைசி நேரத்திலே பல்வேறு பிரச்சினைகள், போலீஸ் போதாத காரணத்தால், ரௌடித்தனம் மிக அதிகமாக இருந்திருக்கிறது. அதற்கும் இந்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்து, டாக்டர் ஐயா அவர்களுடைய கூட்டத்திற்குத் தகுந்த பாதுகாப்பினை அளிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 5–10*

திரு. முருகவேல் ராஜன் அவர்கள், ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார். ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அதையும் நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரை இருக்கிறது. ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்**: திரு. முருகவேல் ராஜன் ஒரு மனு கொடுத்திருக்கிறார். வெட்டுத் தீர்மானமும் கொடுத்திருக்கிறார். கவன ஈர்ப்பு அறிவிப்பும் கொடுத்திருக்கிறார். அவர்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்திலே 9–8–2001–ல் சிக்கல் என்ற ஊரிலே கணேச பாண்டியன், வெள்ளையன் என்பவர்களை அடித்துக் கொன்றிருக்கிறார்கள்.

அதேபோல, நெல்லை மாவட்டத்திலே கருங்காடு முனுசாமி படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். தச்சநல்லூரில் சுரேஷ் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இதன் மீதெல்லாம் அரசு தனிக் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

சென்ற மாதம் கிருஷ்ணகிரியிலே துப்பாக்கிச் சூடு நடைபெற்று, அதிலே ஒருவர் இறந்திருக்கிறார். அந்தக் குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாய் நிதி அளிக்க வேண்டும்.

செய்யாறு சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த தூசி காவல் நிலையத்தில் ஏற்பட்ட கலவரத்தினால் Sub--Inspector மற்றும் 120 பேர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறாமல் அப்படியே இருக்கின்றன. அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினரவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திருவள்ளூர் மாவட்டத்திலே இருக்கக்கூடிய 50 வயதான கண்ணப்பன் என்பவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அதேபோல, முனுசாமி என்ற 40 வயதானவர் படுகொலை செய்யப் பட்டிருக்கிறார். அவர்மீது F.I.R. போடப்பட்டிருக்கிறது. ஆனால், படுகொலை செய்தவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை என்று திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு. இரவிராஜ் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, செங்கல்பட்டு ஆறுமுகம் அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கணேசன், மற்ற கோரிக்கைகளை எல்லாம் நீங்கள் எழுதிக் கொடுத்துவிடலாம்.

**திரு. ஐ. கணேசன்**: காவல் நிலையம் அனைத்தும் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே பணிவோடு சொல்லிக்கொள்வதெல்லாம், காவல் துறைதான்

ஒரு நாட்டின் வலுவான பாதுகாப்புச் சாதனம். அதை பலப்படுத்துவதும், பலஹீனப்படுத்துவதும் சம்பந்தப்பட்ட அரசாங்கத்தின் கையில்தான் உள்ளது. பாதுகாப்புச் சாதனமாக உள்ள காவல் துறையை பலஹீனப்படுத்திப் பேசினால் நாட்டு மக்களிடையே நம்பிக்கையையும் நன்மதிப்பையும் காவல் துறை இழந்துவிடும். ஒரு துறையிலே ஒரு சிலர் செய்யக்கூடிய தவறு ஒரு துறையையே பாதிக்கிறது. ஆகையால், காவல் துறையும், அரசாங்கமும் கவனத்திலே எடுத்துக் கொண்டு, திறமையாகச் செயல்பட்டு, தங்கள் கௌரவத்தை, காவல் துறையின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். சென்ற அரசாங்கம் 1100 காவலர்களை, Sub-Inspector–களை நியமித்தார்கள். அதில் 500 பேர் சட்டம்–ஒழுங்கிலும், மீதம் 600 பேர் மற்ற பிரிவிலும் இருக்கிறார்கள். அவர்களுடைய குறைபாடுகளைப் போக்கி, அவர்கள்மீது அரசாங்கம் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேச்சேரி சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கைகளையும் தீர்க்க வேண்டும். அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய கடிதங்களையும் முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்து விடுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை ஆகியவற்றிற்கான மானியக் கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதத்திற்கு எனது பதிலுரையை அளிக்க இப்போது துவங்குகின்றேன்.

இந்த விவாதம் தொடங்குவதற்கு முன்பு இந்த விவாதத்தில் 'அனல் பறக்கும்', 'கனல் பறக்கும்', 'தீப்பொறி பறக்கும்' என்றெல்லாம் எதிர்பார்த்து வந்தேன். குறைந்தபட்சம் 'தூள் பறக்கும்' என்று எதிர்பார்த்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அதுகூட இல்லை. நான் எதிர்பார்த்ததற்கு மாறாக, மிகவும் அமைதியாகவே இந்த விவாதம் நடைபெற்று முடிந்துள்ளது.

நம் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துவிட்டது காவல் துறையின் பணியாகும். சமுதாயம் அமைதியான முறையில், ஒழுங்கான முறையில், சட்டத்திற்குட்பட்டு நடைபெற வேண்டுமானால், அதற்குக் காவல் துறையின் பணி இன்றியமையாதது.



*பிற்பகல் 5–15*

சட்டம் என்பது மனித சமுதாயத்தை ஒழுங்குபடுத்த, வகைப்படுத்த, மனிதர்களே இயற்றிக் கொள்கின்றவைகள்தான். நாமே இயற்றிக் கொள்கின்ற, வகுக்கின்ற சட்டங்களை நிலைநாட்டுவதற்குத்தான் காவல் துறை தேவைப்படுகிறது. பலரும் காவல் துறையைப் பற்றி பலவிதமான கருத்துக்களைக் கூறுகிறார்கள். ஆனால், இந்தக் காவல் துறையானது எப்போது முதன்முதலாகத் தொடங்கப்பட்டது என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். சமுதாயத்தில் ஒழுங்கினை நிலைநாட்டும் மற்றும் சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளைப் புலன் விசாரணை செய்யும் பணியில் ஈடுபடுகின்ற அலுவலர்களின் குழுவினைத்தான் 'போலீஸ்', அதாவது காவல் படை என்று குறிப்பிடுகிறோம். 1667 ஆம் ஆண்டு அதாவது 334 ஆண்டுகளுக்கு முன்பாக பிரான்ஸ் நாட்டில் பாரீஸ் நகரில்தான் சுதந்திரமான காவல் படை முதன்முதலாக ஏற்படுத்தப்பட்டு பின்னர் 1829 ஆம் ஆண்டு முதல் சீருடைப் பணியாளர் அமைப்பாக மாற்றப் பட்டது. இங்கிலாந்து நாட்டின் முதல் தொழில் முறையான இத்தகைய காவல் படை அமைப்பு, 1800 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட Marine Police Establishment அதாவது "கடற் காவல் படை அமைப்பு" ஆகும். The Metropolitan Police அதாவது மாநகரக் காவல் படையானது, சர் ராபர்ட் பீல் என்பவரால் 1829 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு காவல் துறை, அதாவது Madras Police முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட நாள் 31–8–1859 ஆகும். சரியாக 142 ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய தமிழ்நாடு காவல் துறை தொடங்கப்பட்டது.

அமைதியான சமுதாயம் ஏற்பட பொருளாதார முன்னேற்றம், மக்கள் மற்றும் மாநிலத்தினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகியவற்றிற்குச் சட்டம்–ஒழுங்குப் பராமரிப்பு மிக முக்கியம். காவல் துறை இதற்குப் பெரிதும் துணை புரிகிறது. தமிழ்நாடு காவல் துறை, மாறிவரும் சமுதாயத்தில், பெருகிவரும் நூதன மற்றும் புதிய முறையான குற்றங்களைக் கையாள, நவீனமயமாக்கப்படுதல் மற்றும் சிறந்த பயிற்சி மற்றும் மனிதநேய அணுகுமுறை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. காவல் துறை, சட்டம்–ஒழுங்குப் பராமரிப்பைத் தவிர எண்ணற்ற இதர பணிகளிலும் ஈடுபட்டுள்ளது. அவை சமுதாயப் பிரச்சினைகள், போதைப் பொருட்கள் கடத்தல் தடுப்பு, பொதுச் சொத்துக்களுக்குப் பாதுகாப்பு, மனித உரிமைகளுக்குப் பாதுகாப்பு, வீடியோ சட்ட விரோத பிரதி எடுத்தலைத் தடுத்தல், பொது விநியோகப் பொருட்கள் கடத்தலைத் தடுத்தல், பொருளாதாரக் குற்றங்கள் தடுப்பு, சிலைத் திருட்டைத் தடுத்தல்,

இளைஞர்களிடையே குற்றங்களைத் தடுத்தல், வகுப்புவாத மதவாதக் கலவரங்களைத் தடுத்தல, போக்குவரத்துக் கண்காணிப்பு, சாலைப் பாதுகாப்பு போன்றவையாகும். தமிழகக் காவல் துறையின் குறிக்கோள் உலக அளவில் மிகச் சிறந்த காவல் துறைக்கு ஈடாக ஒப்பிடும் அளவிற்குத் தொழில் திறமை மற்றும் சட்டம்–ஒழுங்கைப் பராமரிக்கும் வலுவுள்ள சக்தியாக தம்மை உருவாக்கிக் கொள்வதே தமிழக காவல் துறையின் லட்சியமாகும்.

பொதுவாக, தேர்தல் முடிந்து புதிய அரசு பதவியேற்றவுடன் முக்கிய பதவிகளில் பணிபுரிபவர்களை மாறுதல் செய்வது வழக்கமான நிர்வாக நடவடிக்கையாகும். இங்கே பேசிய சில மாண்புமிகு உறுப்பினர்கள்கூட ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் மாற்றப்படுவதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். கடந்த மே மாதம் 2001–ல் இந்த அரசு பதவியேற்றவுடன் அரசுச் செயலர்கள் பலர் தொடர்ந்து மூன்று அல்லது நான்கு வருடங்களுக்குமேல் ஒரே பதவியில் பணிபுரிந்து வந்ததும், அதேபோன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களில் பெரும்பாலானவர்களும் மூன்று அல்லது நான்கு வருடங்களுக்குமேல் ஒரே மாவட்டத்தில் பணிபுரிந்து வந்ததும் தெரிய வந்தது. இவ்வாறு தொடர்ந்து ஒரே பதவியில் பணிபுரிந்த அலுவலர்களை மட்டுமே இந்த அரசு மாறுதல் செய்தது. ஏனைய மாறுதல்கள் அனைத்தும் அலுவலர்களின் தகுதி, திறமை மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றத் தேவையான ஈடுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் நிர்வாகக் காரணங்களுக்காகச் செய்யப்பட்டன. இந்த அரசு பதவியேற்றவுடன் இந்திய ஆட்சிப் பணி மற்றும் இந்தியக் காவல் பணி ஆகியவற்றில் ஓரிரு மாதங்களில் செய்து முடிக்கப்பட்டுள்ள இந்த இடமாற்றங்களின் விளைவாக அரசின் நிர்வாக இயந்திரம் சுறுசுறுப்படைந்து திட்டங்களை நிறைவேற்றுவதில் மிகுந்த ஈடுபாட்டுடன் பணியாற்றி வருகிறது. இந்நிலையில், இத்தகைய இடமாற்றங்களின் விளைவாக, நிர்வாக இயந்திரம் முடங்கிப் போனதாகக் கூறப்பட்டுள்ளது, முற்றிலும் உண்மைக்கு மாறான கருத்தாகும். அண்மைக்காலமாக சில பத்திரிகைகளில்கூட இது சம்பந்தப்பட்ட சில கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார்கள். தமிழக அரசு அடிக்கடி ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும், ஐபிஎஸ். அதிகாரிகளையும் மாற்றி வருகிறது. இதனால் அரசு நிர்வாகமே ஸ்தம்பித்துப் போய்விட்டது என்றெல்லாம் கூறுவதை ஒரு வழக்கமாகவே கொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் இந்த விளக்கத்தை நான் இங்கே அளிக்கின்றேன். இன்னும் சொல்லப் போனால் 1996–ல் முந்தைய தி.மு.க. அரசு பதவியேற்றவுடன் மே மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையில் பல்வேறு உயர் பதவிகளில்



இருந்த 126 காவல் துறை அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். இவர்களில் 3 காவல் துறை இயக்குநர்கள், 6 கூடுதல் காவல் துறை இயக்குநர்கள், 14 காவல் துறை தலைவர்கள், 29 காவல் துறை துணைத் தலைவர்கள், 74 மாவட்டக் கண்காணிப்பாளர்கள் ஆகியோர் அடங்குவர். இதுமட்டுமின்றி, இந்திய ஆட்சிப் பணியிலும் நூற்றுக்கணக்கான அலுவலர்கள் மாற்றம் செய்யப்பட்டனர். இவற்றில் மிகப் பெரும்பாலான இனங்களில் தேவையற்ற முறையிலும், பழி வாங்குதல் அடிப்படையிலும் அத்தகைய மாற்றங்கள் செய்யப்பட்டன.

*பிற்பகல் 5–20*

அதுமட்டுமின்றி, குறிப்பிட்ட சில உயர் அலுவலர்கள் தொடர்ந்து நான்கு முறை மாற்றம் செய்யப்பட்டனர். சில உயர் அலுவலர்களை 6 மாதங்களுக்கு மேலும் ஒரு வருடத்திற்கு மேலும்கூட கட்டாயக் காத்திருப்பில் வைத்து இருந்ததால் உயர் அலுவலர்களிடையே மிகுந்த மனச் சோர்வு ஏற்பட்ட அவல நிலையும் சென்ற தி.மு.க. ஆட்சியின் போதுதான் நடைபெற்றது என்பதை இத்தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த 18 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் காவல் துறை சம்பந்தமான சில புதிய அறிவிப்புகள் செய்யப்பட்டன. அவற்றைப் பற்றியும் இன்னும் சில புதிய அறிவிப்புகளைப் பற்றியும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

காவல் துறை நவீனமயமாக்கப்படுதல். தமிழகக் காவல் துறை நவீனமயமாக்கப்படுவதற்காக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 107 கோடியே 57 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் ஏற்கெனவே அறிவார்கள். இந்த நிதியைக்கொண்டு, தமிழகக் காவல் துறைக்குத் தொலைத் தொடர்பு கருவிகள், புதிய வாகனங்கள், நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய ஆயுதங்கள், கம்ப்யூட்டர்கள் மற்றும் குற்றப் புலனாய்வுக்குத் தேவைப்படுகிற நவீன கருவிகள் ஆகியவை வழங்கப்பட்டு, காவல் துறையின் செயல்பாடுகள், அனைத்துப் பிரிவுகளிலும் நவீனமயமாக்கப்படும். மேலும், இந்தத் திட்டத்தின்கீழ் காவல் துறையினருக்கு மேம்படுத்தப்பட்ட பயிற்சி மற்றும் கட்டமைப்பு வசதிகள் ஆகியவையும் வழங்கப்படும். மொத்தம் உள்ள 184 காவல் உட்கோட்டங்களிலும் அதாவது 184 சப்–டிவிஷன்களிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் ஏற்படுத்துதல், இந்த அரசு மேற்கொண்டுள்ள முக்கியப் பணிகளில் ஒன்றாகும். தற்போதுள்ள

அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் எண்ணிக்கை 58. நடப்பு ஆண்டில் புதியதாக ஏற்படுத்தப்படுபவை 50 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக நிதியொதுக்கீடு 3 கோடி ரூபாய் ஆகும்.

காவலர்களுக்கு இந்த ஆண்டு 3000 குடியிருப்புகள் கட்டப்படவுள்ளன. இதற்காக 115 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இப்போது பட்ஜெட்டில் வெளிவராத சில புதிய அறிவிப்புகளை நான் இங்கே வெளியிட விரும்புகிறேன். நடப்பாண்டான 2001 –Women Empowerment Year– அதாவது மகளிர் அதிகாரப் பகிர்வு ஆண்டு என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறைக்கப்படுவதற்கு ஏதுவாக, அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தும் பணிக்கும், பெண் காவலர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பணிக்கும் சிறப்புக் கவனம் அளிக்கப்பட்டுள்ளது. ஆண், பெண் இருபாலரையும் மதிக்கச் செய்யும் பயிற்சி, அதாவது, Gender Sensitization பயிற்சி, குற்றப் புலனாய்வு – Crime Investigation – மற்றும் பாதிப்புக்குள்ளான மகளிருடைய பிரச்சினைகள் ஆகியவை பற்றிய பயிற்சி அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் பணிபுரியும் பெண் காவலர்களுக்கு அளிக்கப்படவுள்ளது. இது தவிர, காவல் துறையில் உள்ள அனைவருக்கும் இப்பயிற்சி அளிக்கப்படவும் உள்ளது. இதற்கு 1 கோடியே 8 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது இயங்கி வருகின்ற 58 அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் தேவையான கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படும்.

எஞ்சியுள்ள 126 காவல் உட்கோட்டங்களிலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள 184 காவல் உட்கோட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் அமையும் வண்ணம், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டில் 50 புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் எல்லா வசதிகளுடனும் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லா அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் Helpline, அதாவது தொலைபேசி வாயிலாக ஆலோசனை வழங்கும் பிரிவு மற்றும் நேரில் ஆலோசனை வழங்கும் பிரிவு ஆகியவை இயங்கும். இவை பாதிப்புக்குள்ளான மகளிருக்கு அனைத்து உதவிகளையும் வழங்கிடும். இப்பணிகள் அனைத்தையும் மேற்கொள்ள மொத்த நிதி ஒதுக்கீடு 9 கோடியே 55 இலட்சம் ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)



*பிற்பகல் 5-25*

பெண்கள், பொதுவாக, ஆண் காவலர்கள் உள்ள காவல் நிலையங்களுக்குச் செல்லத் தயங்குகின்றனர். ஆகையால், தமிழகத்தில் மொத்தம் உள்ள 1,217 காவல் நிலையங்கள், ஒவ்வொன்றிலும் ஒரு பெண் உதவி ஆய்வாளர், இரண்டு பெண் காவலர்கள், இரண்டு ஆண்டுகளில் நியமிக்கப்பட உள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், தற்போது உள்ள மகளிருக்கான பணியிடங்களுடன், கூடுதலாக 1,119 பெண் உதவி ஆய்வாளர் பணியிடங்களும், 1,638 பெண் காவலர் பணியிடங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதற்கு ஆண்டுதோறும் தொடர் செலவாக 25 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுமட்டுமின்றி, இரயில்வே பாதுகாப்புப் பிரிவில் உள்ள பெண் காவலர்கள் எண்ணிக்கை, தற்போதுள்ள 69–லிருந்து 129 ஆக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, கூடுதலாக 60 இரண்டாம் நிலை பெண் காவலர்கள் நியமிக்கப்படுவார்கள். இதற்கு ஆண்டுக்கு 58 இலட்சம் ரூபாய் செலவாகும்.

ஆண் காவலர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஆயுதங்கள் போலவே, பெண் காவலர்களுக்கும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண் காவலர்களுக்கு Searge cap என்ற வகை தொப்பிகளும், பெண் காவல் அலுவலர்களுக்கு Peak cap என்ற வகை தொப்பிகளும் வழங்கப்படும். இப்போது பெண் காவலர்களுக்கு Parret cap என்று சொல்லக்கூடிய வகையான தொப்பி வழங்கப்பட்டுள்ளது. அது, ஏதோ ஆப்பத்தைத் தலையில் கவிழ்த்து வைப்பதுபோல் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதை மாற்றி, இந்த Searge cap –களையும், Peak cap–களையும் வழங்கினால் மிடுக்காக தோற்றம் அளிப்பார்கள் என்பதற்காக இந்த மாற்றம் செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது பல்வேறு குற்ற நிகழ்வுகளில் மகளிர் உட்பட பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படுகின்ற நிவாரண நிதி – அதாவது Victim Relief Fund – ஒரு கோடியிலிருந்து இரண்டு கோடி ரூபாயாக உயர்த்தப்படுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

விலை மதிப்பற்ற சிலைகளைக் கடத்தல் குற்றங்களிலிருந்து பாதுகாத்து வருகின்ற திருக்கோயில் பாதுகாப்புப் படையினருக்குத் தற்போது வழங்கப்படுகின்ற ஊதியமான 1,435 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக

உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக ஆண்டுதோறும் 23 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவிடப்படும்.

சரக காவல் துறை தலைவர்கள், டி.ஐ.ஜி–களுக்கும், காவல் துறை கண்காணிப்பாளர்கள், எஸ்.பி.–க்கள் ஆகியோருக்கும் Cell Phone வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கலவர நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் கலைப்பதற்குப் பயன்படுத்தப்படும் Varuna என்ற Water cannon, அதாவது தண்ணீர் பீய்ச்சி அடிக்கும் இயந்திரம், அனைத்து மாவட்டங்களுக்கும் 8 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட சாலைகள் ஆகியவற்றில் மொத்தம் 50.12 இலட்சம் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் வாகன விபத்தில் 9,000 பேர் உயிர் இழக்கின்றனர். காவல் துறை நவீனமயமாக்கப்படல் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் சாலை பாதுகாப்பு நிதிக்கு 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாவட்டங்களில் இயங்கி வரும் சாலை பாதுகாப்புக் குழுக்கள் தவிர, காவல் துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு சாலை பாதுகாப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

வாகன விபத்துக்களால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தடுக்க தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய சாலைகளில் போக்குவரத்து உதவி மையங்கள், அதாவது Traffic Aid Centres ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றில் ஆம்புலென்ஸ் வண்டிகள், வாகன மீட்பு வண்டிகள் – Recovery Vans – பாரம் தூக்கி வண்டிகள் – Heavy Duty Cranes – ஆகியவை பயன்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தப் போக்குவரத்து உதவி மையங்கள், Trauma Care Centres and Hospitals, அதாவது காயங்களுக்கான சிகிச்சை மையம் மற்றும் மருத்துவமனைகளுடன் இணைந்து இயங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைச்சாலைகள் துறை ஆகியவற்றுக்கான காவலர்கள் பொதுவான ஆள் சேர்க்கை – Common recruitment – மூலம் பணிக்குச் சேர்க்கப்படுவார்கள்.



நேர்முகத் தேர்வு – viva voce– மற்றும் உடல் திறன் தேர்வு – Physical efficiency test – ஆகியவற்றிற்கு மதிப்பெண்கள் குறைக்கப்பட்டு, எழுத்துத் தேர்வுக்கு – written test–க்கு மதிப்பெண்கள் உயர்த்தப்படும். இந்தப் புதிய முறை, காவலர் தேர்வில் நடக்கின்ற முறைகேடுகளைப் பெரிதும் போக்கிடும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 5–30*

காவலருக்கான பயிற்சியில் சிறந்த அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதற்காக பயிற்சியாளர்களுக்கான பயிற்சி – Trainers' training – மற்றும் பயிற்சியாளர்களுக்குக் கூடுதல் சலுகைகள் ஆகியவை அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

14.5 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை மாநகரத்தில் நவீன மின்னணு சார்ந்த ரோந்து முறை, அதாவது –Modern Electronic Beat System– அமைக்கப்படும். தற்சமயம் நடைமுறையில் இருக்கின்ற ரோந்து முறையானது மிகப் பழமையானதும், ரோந்து விவரத்தைச் சரியானபடி அறிந்துகொள்ள இயலாததுமாக உள்ளது. சென்னை மாநகரில் ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் 400 ரோந்துகள் அனுப்பப்படுகின்றன. இந்த முறையை நவீனமயமாக்குவதன் மூலம் நடைமுறையில் இருக்கும் ரோந்து புத்தகப் பதிவு முறையைக் கணிசமான அளவிற்குக் குறைப்பதோடு மேலதிகாரிகள் ஒரு பட்டனை அழுத்துவதன் மூலம் அனைத்து ரோந்து விவரங்களையும் ஒரே சமயத்தில் அறிந்துகொள்ளவும், இது உதவியாக இருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இதன்மூலம் பொது மக்கள் தங்களின் இல்லங்களில் பதிவேடு ஒன்றை வைத்து, அதனை ரோந்துக் காவலர்கள், இரவு நேரங்களில் கையொப்பம் செய்கின்ற வசதிக் குறைபாடுகளும் தவிர்க்கப்படும். இதற்காக ஆகக்கூடிய உத்தேச செலவு ரூ.14.5 இலட்சம் ரூபாய் என கணிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் 66 இலட்சம் ரூபாய் செலவில் 72 புதிய நேர்முக உதவியாளர் (நிர்வாகம்) பணியிடங்கள் உருவாக்கப்படும். 35 இலட்சம் ரூபாய் செலவில் ஒவ்வொரு காவல் நிலையத்திலும் xerox வசதி செய்து தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 18.48 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்கள் Battalions மற்றும் Commissionerates ஆகியவற்றிற்கு Police Band கருவிகள் மற்றும் சீருடைகள் வழங்கப்படும். ஒரு கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் ஆறு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உட்பட, 26 காவல் நிலையங்களுக்கு அரசுக் கட்டடங்கள் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆறு

அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் புதிய கட்டடங்கள் கட்டப்படும் இடங்கள்: காஞ்சிபுரம், விழுப்புரம், நாமக்கல், தஞ்சாவூர், ராஜபாளையம், தூத்துக்குடி.

இவைமட்டுமின்றி, காவல் நிலையங்களுக்குப் புதிதாகக் கட்டடங்கள் 20 இடங்களில் கட்டப்படும். அவை திருவள்ளூர் மாவட்டத்தில் மணவாள நகர், திருவண்ணாமலை மாவட்டத்தில் மங்கலம், வேலூர் மாவட்டத்தில் அரக்கோணம், தருமபுரி மாவட்டத்தில் கொட்டப்பள்ளி மற்றும் வேப்பனப்பள்ளி, பெரம்பலூர் மாவட்டத்தில் மருவத்தூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம், திருவாரூர் மாவட்டத்தில் முத்துப்பட்டிணம் மற்றும் பரவக்கோட்டை, நாகப்பட்டினம் மாவட்டத்தில் கரியாப்பட்டிணம் மற்றும் பழையாறு, மதுரை மாவட்டத்தில் காட்டுப்பாடி மற்றும் வி.சத்திரப்பட்டி, திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல், தேனி மாவட்டத்தில் ஜெயமங்கலம், இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்புலானி மற்றும் இளம்செம்பூர், தூத்துக்குடி மாவட்டத்தில் புளியம்பட்டி, திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி தாலுகா காவல் நிலையம், கன்னியாகுமரி மாவட்டத்தில் அருகாணி.

36 இலட்சம் ரூபாய் செலவில், விழுப்புரம், தூத்துக்குடி, திண்டுக்கல், கோயம்புத்தூர், விருதுநகர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய ஆறு மாவட்டக் காவல் அலுவலகங்களில் – Dormitories – அதாவது காவலர் தங்கும் இடவசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இராணுவ மருத்துவமனைகளில் உள்ள வசதிகளுக்கு இணையாக, காவல் துறை மருத்துவமனைகள் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பணியில் ஈடுபடும்போது இறக்க நேரிடுகிற காவலர்களின் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையில் காவலர் பதவி வழங்க விதிமுறைகள் தளர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

1994 ஆம் ஆண்டு, நான் முதலமைச்சராக இருந்தபோது, காவலர்களுடைய பிள்ளைகளுக்காகச் சிறப்பு கல்வி உதவித் திட்டம் – Special Scholarship Fund – 10 இலட்சம் ரூபாயில் ஏற்படுத்தப்பட்டது. இதில், தொழில் கல்வி படிப்புகளுக்குச் செல்கின்ற, சிறந்த ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்கு 40,000 ரூபாயும், மேலும் ஐந்து மாணவர் அல்லது மாணவியர் ஒவ்வொருவருக்கும் 20,000 ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இந்த நிதி 10 இலட்சம் ரூபாயிலிருந்து 20 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



கடந்த 29–8–2001 அன்று, சென்னை ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் சென்னை மாநகர காவல் பிரிவிற்கு மேலும் பொலிவூட்டும் வகையில் சில கூடுதல் வசதிகளை வழங்கினேன். தற்போது சென்னை மாநகரில் மகளிருக்கு எதிராக நடைபெறுகின்ற குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்காக, ஏற்கெனவே 10 மோட்டார் சைக்கிள்கள் கொண்ட 'மஞ்சள் நிற பறக்கும் படை' அதாவது 'Yellow Brigade' என்ற பிரிவில் மேலும் 50 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பிரிவு மாநகர் முழுவதும் மேலும் சிறப்பாக இந்தப் பணியினை ஆற்ற வழிவகை செய்யப்பட்டது.

பிற்பகல் .5–3.5

சென்னை மாநகரில் மகளிருக்கு உதவி புரிய தொலைபேசி எண் 1091–ஐக்கொண்ட –Helpline– அதாவது "சேவை தொலைத் தொடர்பு இணைப்பு" ஒன்று ஏற்கெனவே இயங்கி வருகிறது. தற்போது இதனுடன் மேலும் இரண்டு புதிய இணைப்புகள் வழங்கப்பட்டு, இது குறித்த பணிகளை மேற்கொள்வதற்காக 3 ஜீப் வாகனங்கள் புதிதாக வழங்கப்பட்டன.

சென்னை மாநகரக் காவல் துறையினருக்கு, புதுப்பேட்டை ஆயுதப் படை காவலர் குடியிருப்பு வளாகத்தில் ஒரு புதிய கூட்டுறவுப் பண்டகசாலை தொடங்கி வைக்கப்பட்டது. இந்த விழாவில் சென்னை மாநகரக் காவல் துறையினரால் மீட்கப்பட்ட 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திருடுபோன நகைகள், வாகனங்கள் மற்றும் ரொக்கப் பணம் ஆகியவை அவற்றின் உரிமையாளர்களிடம் திரும்ப வழங்கப்பட்டன.

விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் காவல் துறையில் பணிபுரியும் பெண் துப்புரவுத் தொழிலாளர்கள் என்னிடத்தில் மனு கொடுக்க வேண்டும் என்று வந்திருந்தார்கள். இந்த விவரம் எனக்குத் தெரியாது. என்னிடம் மனு கொடுக்கவிடாமல் அவர்கள் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த விவரமும் எனக்குத் தெரியாது. பின்னர், அடுத்த நாள் பத்திரிகைகளில் இந்தச் செய்தியைப் பார்த்தேன். அதன் பின்னர், இந்தப் பெண் துப்புரவுத் தொழிலாளர்களை நேற்று இங்கே, தலைமைச் செயலகத்திற்கு – கோட்டைக்கு – வரவழைத்து, அவர்களின் கோரிக்கையைக் கேட்டு அவர்கள் கொடுத்த மனுவினைப் பெற்று, அதன்மீது இப்போது நடவடிக்கை எடுத்து, புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிடுகிறேன்.

சென்னை மாநகர காவல் துறையில் தற்போது பணிபுரியும் 116 பகுதி நேர துப்புரவுப் பணியாளர்களின் கோரிக்கையை ஏற்று, அவர்களது தொகுப்பு ஊதியம் மாதம் 445/- ரூபாயிலிருந்து மாதம் 900/- ரூபாயாக உயர்த்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதில் ஒன்றை விளக்கிக் கூற விரும்புகிறேன். அவர்கள் 900 ரூபாய் தாருங்கள் என்று கேட்கவில்லை. இத்தனை ஆண்டுகாலமாகப் பணியாற்றி வருகிறோம். எங்களுக்கு மாத ஊதியம் வெறும் 445 ரூபாய்தான், உயர்த்தித் தாருங்கள் என்றுதான் கேட்டார்கள். அதை நான் இருமடங்காக, 900 ரூபாயாக ஆக்கியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகர காவல் துறையில் பணியாற்றுகின்ற பகுதி நேர துப்புரவுப் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்தும் வகையில், அவ்வப்போது ஏற்படுகின்ற, ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் காலி இடங்களில், தகுதிக்கேற்ப, பகுதி நேர துப்புரவுப் பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்படுவார்கள்.

தகுதிவாய்ந்த பகுதி நேர துப்புரவுப் பணியாளர்களுக்கு அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்புவதில் வாய்ப்பு அளிக்கப்படும்.

சென்னை நகரில், தடய அறிவியல் துறையின் தலைமை அலுவலகம் தற்போது சிறியதாக இடவசதியின்றி உள்ளது. அதே வளாகத்தில், புதிய தலைமை அலுவலகக் கட்டடம் ஒன்று 6 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தடய அறிவியல் துறையில் பயன்படுத்தப்படும் கருவிகளை நவீனப்படுத்துவதற்காக 53 இலட்சம் ரூபாய் செலவில் புதிய உபகரணங்கள் வாங்கி வழங்கப்படும். இவைமட்டுமின்றி, 12 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு நடமாடும் தடய அறிவியல் ஆய்வகமும், 5 இலட்சம் ரூபாய் செலவில் Multi-Media Video Projection என்ற computer வசதியும், 6 இலட்சம் ரூபாய் செலவில் Infra-red Spectrophotometer என்ற ஆய்வகக் கருவியும் வாங்கி, வழங்கப்படும்.

தற்போது பொதுமக்கள் காவல் துறையினர் மீது கூறுகின்ற குறைகள்: புகார்கள் காவல் நிலையங்களில் வாங்கப்படுவதில்லை; காவல் துறையினர் பொதுமக்களுக்கு மரியாதை தருவதில்லை; புகார்கள் முறையாகப் பதிவு செய்யப்படுவதில்லை. புகார் செய்யப்படும்போது, காவல் எல்லை அடிப்படையில் ஒரு காவல் நிலையத்திலிருந்து இன்னொரு காவல் நிலையத்திற்குச் செல்லும்படி மனுதாரர்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர்.





பதிவு செய்யப்பட்ட புகார்களின் தற்போதைய நிலையை மனுதாரர்களுக்குச் சரியாகச் சொல்வதில்லை என்பனவாகும்.

பொதுவாக காவல் துறையினர்மீது கூறப்படுகின்ற இந்தக் குறைகளைக் களைவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஒரு காவலர் Reception Officer–அதாவது வரவேற்பு அலுவலர்–என்று அறிவிக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) அவர் காவல் நிலையத்திற்கு வருகின்ற பொதுமக்கள் குறைகளைக் கேட்டு, புகார்களைப் பெற்றுக்கொள்வார். ஒவ்வொரு காவல் நிலையத்திலும் புகார்களைப் பதிவு செய்யும் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும். இது, ஒரு தலைமைக் காவலர் அல்லது காவலர் தலைமையில் செயல்படும். இந்தப் புகார் பதிவு அலுவலர் – Grievances Registration Officer – பொதுமக்களிடமிருந்து புகார்களை வாங்கிப் பதிவு செய்து சட்டம்–ஒழுங்கு ஆய்வாளர் அல்லது குற்றப் பிரிவு ஆய்வாளருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்புவார். ஆய்வாளர் புகாரினுடைய நிலை குறித்து அவ்வப்போது புகார் பதிவு அலுவலருக்குத் தெரிவிப்பார். புகார் பிரிவு அலுவலரும் இதைப் புகார் கொடுத்த பொதுமக்களுக்கு முறையாகத் தெரிவிப்பார். இந்தப் புகார்கள் பதிவு செய்யும் புதிய முறை மாவட்டத் தலைமையிடங்களிலும், பின்னர் உட்கோட்டத் தலைமையிடங்களிலும், அதன் பின்னர் அனைத்து காவல் நிலையங்களிலும் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் .5-40*

பொதுக் கூட்டங்களில் பேசப்படுவதைக் குறிப்பெடுப்பதற்காகவும், சட்டத்திற்குப் புறம்பாகப் பேசப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவும் ஏற்கெனவே காவல் துறையில் சுருக்கெழுத்துப் பிரிவு– Shorthand Bureau – ஒன்று இயங்கி வருகிறது. இந்த நவீன யுகத்தில் இந்த பழைய முறை போதாது என்பதைக் கருத்திற்கொண்டு, புதிதாக காவல் துறையில் வீடியோ பிரிவு ஏற்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுக் கூட்டங்களில் பேசப்படுவதைப் பதிவு செய்யவும், ஒலியோடு, ஒளிப்பதிவு செய்ய ஏதுவாகவும் சட்டத்திற்குப் புறம்பான பேச்சுக்கள் பேசப்படுகின்றனவா என்பதைக் கண்காணி. கவும் 184 காவல் உட்கோட்டங்களுக்கும் வீடியோ கேமராக்கள் மற்றும் இதர சாதனங்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒவ்வொரு உட்கோட்டத்திலும் உள்ள காவலர்கள் சிலருக்கு இவற்றைப் பயன்படுத்த தக்க பயிற்சிகள் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் பலரும் காவலர்கள் குறைகள் தீர்க்கப்பட வேண்டும். அவர்கள் தங்கள் குறைகளை யாரிடம் போய் கூறுவார்கள், யாரிடம் போய் கூற முடியும் என்றெல்லாம் கேட்டார்கள். அதற்கும் ஒரு ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

காவல் துறை கண்காணிப்பாளர்களும், காவல் துறை துணைத் தலைவர்களும் மாதம்தோறும் ஒரு நாளை ஒதுக்கி, அந்த நாளில் காவலர்களின் குறைகளைக் கேட்டு, அவற்றை இயன்றவரை தீர்த்து வைத்திட வேண்டுமென்று அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அலுவலர்கள் மாநாட்டில் ஏற்கெனவே அறிவித்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் 3 மாதங்களுக்கு ஒரு முறை காவலர்களின் குறைகளைப் போக்க நானே அவர்களிடமிருந்து (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நேரில் மனுக்களைப் பெற்று நடவடிக்கை எடுக்கின்ற காவலர்கள் குறை தீர்க்கும் திட்டத்தையும் புதிதாக அமல்படுத்த உள்ளேன்.

இன்னொரு முக்கியமான அறிவிப்பை இங்கே வெளியிட விரும்புகிறேன். தமிழக காவல் துறையில் பணியாற்றும் காவலர்கள் மற்றும் அலுவலர்கள், அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோரின் வாரிசுகளுக்குத் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் வாரியம் நடத்தும் காவல் பணியாளர் பணியிடங்களுக்கான தேர்வுகளில் 10 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிவிப்பு காவல் துறையில் பணியாற்றும் அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கும் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்று காவல் துறை அதிகாரிகளை மத்திய அரசுப் பணிக்கு அனுப்ப வேண்டுமென்று மத்திய அரசு திடீரென்று ஒரு மாற்றல் உத்தரவை அனுப்பியதுபற்றி இன்று காலை இந்த அவையில் விவாதம் நடைபெற்றது. தமிழ்நாடு மாநிலத்திற்கு அனுமதிக்கப்பட்ட மொத்த இந்திய காவல் பணி அலுவலர்களின் எண்ணிக்கை 214 ஆகும். எனினும் தற்போது பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை 171 மட்டுமே. அனுமதிக்கப்பட்ட ஐ.பி.எஸ். பணியிடங்கள் 214. ஆனால் தற்போதுள்ள ஐ.பி.எஸ். அதிகாரிகளின் எண்ணிக்கை வெறும் 171 தான். இதன்படி மாற்றுப் பணியில் Central Deputation–ல் அனுப்ப வேண்டிய



அலுவலர்களின் எண்ணிக்கை 37. தற்போதைய நிலவரப்படி 24 இந்திய காவல் பணி அலுவலர்கள் மத்திய அரசின் மாற்றுப் பணிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இது மத்திய மாற்றுப் பணிக்கு அனுப்பப்பட வேண்டிய அலுவலர்களின் எண்ணிக்கையில் 65 விழுக்காடு ஆகும். இம்மாநிலத்திற்கு அனுமதிக்கப்பட்ட 214 பணியிடங்களை அடிப்படையாக எடுத்துக்கொண்டால், தமிழ்நாடு 54.35 விழுக்காட்டினை எட்டியுள்ளது. இது மத்திய மாற்றுப் பணிக்கு மற்ற மாநிலங்களின் சராசரியான 55.56 விழுக்காட்டிற்கு மிக அருகிலுள்ளது. இம்மாநிலத்தைவிட குறைவான அதாவது மிகக் குறைந்த 25 விழுக்காடு முதல் 53.85 விழுக்காடு வரை மத்திய மாற்றுப் பணிக்கு அதிகாரிகளை 14 மாநிலங்கள் அனுப்பியுள்ளன. குஜராத் 25 விழுக்காடு. ஜம்மு காஷ்மீர் 26.92 விழுக்காடு. பஞ்சாப் 29.03 விழுக்காடு, கர்நாடகம் 31.25 விழுக்காடு, ஆந்திரப் பிரதேசம் 40.48 விழுக்காடு, உத்திரப்பிரதேசம் 43.21 விழுக்காடு மற்றும் கேரளா 53.85 விழுக்காடு என பல மாநிலங்கள் மத்திய மாற்றுப் பணிக்கு மிகக் குறைவான அலுவலர்களையே அனுப்பியுள்ளன.

பிற்பகல் .5–4.5

சென்னை நகரத்தில் முக்கியப் பொறுப்புகளை வகிக்கும் திருவாளர்கள் டாக்டர் ராஜகோபாலன், கே. முத்துக்கருப்பன், எஸ். ஜியார்ஜ் மற்றும் கிறிஸ்டோபர் நெல்சன் ஆகிய அலுவலர்களை மத்திய அரசு கோரியிருந்தது. முன்னதாக எந்தவகையிலும் மத்திய அரசு இதுகுறித்து மாநில அரசினைக் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக தேசிய பாதுகாப்புப் படை தலைமை இயக்குநர் மற்றும் மத்திய அமைச்சரவை செயலகத்தில் தனி அலுவலர்களாகவும் நியமித்து, இந்த அலுவலர்களை விடுவிக்குமாறு இவ்வரசினைக் கேட்டுக்கொண்டது. காவலர்களின் தீவிரப் பயிற்சிக்கு டாக்டர் ராஜகோபாலன் அவர்களின் பணி இன்றியமையாத தேவையாக இருந்தபோதிலும், மத்திய அரசு குறிப்பிட்டுள்ளவாறு அவரின் புதிய நியமனப் பதவியாகிய தேசிய பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குநராகப் பணியேற்கும்பொருட்டு, அவரை மாநிலப் பணியிலிருந்து இந்த அரசு விடுவித்துள்ளது.

இதர மூன்று அலுவலர்களைப் பொறுத்தவரை டிசம்பர் 2000–த்தில் மத்திய மாற்றுப் பணி ஒதுக்கீட்டிற்கான கருத்துரு மத்திய அரசால் கோரப்பட்டபோது, அந்த மத்திய அரசே திரு. முத்துக்கருப்பன் 25–9–2002 வரை மத்திய மாற்றுப் பணிக்கு அனுப்பப்படுவதைத் தடை செய்துள்ளது. இதேபோல் திரு. எஸ். ஜியார்ஜ், மத்திய மாற்றுப் பணிக்கு முன்னதான இளைப்பாறும் காலத்தில் cooling off period–ல் உள்ளதால்

மத்திய அரசின் நெறிமுறைகளின்படி மத்திய அரசின் மாற்றுப் பணிக்குத் தகுதியற்றவராகிறார். திரு. கிறிஸ்டோபர் நெல்சன் அவர்களைப் பொறுத்தவரை, அவரது அகில இந்தியப் பணிக்கான ஒதுக்கீடு ஆண்டு குறித்து மத்திய அரசினால் இன்னும் முடிவெடுக்கப்படாமல் உள்ள நிலையில், அவர் மாற்றுப் பணிக்குரிய தகுதிகளைப் பெற்றிருக்கவில்லை.

இச்சூழ்நிலையில், மத்திய அரசின் கொள்கை முடிவிலிருந்து மாறுபட்டு, மத்திய அரசு தேர்ந்தெடுத்த பெயர் பட்டியலில் இல்லாத நிலையிலும், பெயர் குறிப்பிட்டு இம்மாநிலத்திலிருந்து 3 காவல் துறை அலுவலர்களை வலுக்கட்டாயமாகக் கோருவதற்கு எந்தக் காரணங்களும் தெளிவாகக் கூறப்படவில்லை. ஆகவே, மத்திய அரசின் பணி நியமனமும், அலுவலர்களை விடுவிக்க கட்டாயப்படுத்துதலும் ஒரு தண்டனை நடவடிக்கையாகவே தோன்றுகிறது. முன்னாள் முதலமைச்சர் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த இரு மத்திய அமைச்சர்களின் தூண்டுதலின் பேரில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாதிரியான ஒரு முடிவை மத்திய அரசு எடுத்துள்ளது என்பதை மக்கள் அறிவார்கள். மத்திய அரசு கட்டாயமான பணி மாற்றம் மற்றும் நியமனத்தினைக் கடைப்பிடிக்குமானால் அனைத்திந்தியப் பணி அலுவலர்களின் மனோதிடமும், சுதந்திர உணர்வும் குலைய நேரிடும்.

இந்த 3 காவல் அலுவலர்கள் மீது தவறுகள் உள்ளதா என்பதை விசாரிக்க ஒரு விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டு, அதன் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தருணத்தில் மூன்று அலுவலர்களை மத்திய மாற்றுப் பணிக்கு அனுப்புவது, விசாரணைக் கமிஷன் விசாரணையைப் பாதிப்பதுடன், இந்தக் கட்டாய நடவடிக்கை அனைத்திந்தியப் பணி அலுவலர்களின் பணி உற்சாகத்தைக் குலைக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இன்று காலை பேசிய மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் சில சட்டங்களையும், விதிகளையும் இங்கே வாசித்துக் காண்பித்தார். அந்தச் சட்டங்களையும், விதிகளையும் நான் மறுக்கவில்லை. Central deputation–க்கு இங்கேயிருந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையோ, ஐ.பி.எஸ். அதிகாரிகளையோ அனுப்புவதாக இருந்தால் அதற்கொரு நடைமுறை இருக்கிறது. ஒரு established procedure இருக்கிறது. ஏற்கெனவே, நான் சொன்னபடி மத்திய அரசுக்கு தமிழ்நாடு அனுப்ப வேண்டிய காவல் துறை அலுவலர்களின் எண்ணிக்கை 37 ஆகும். பொதுவாக, மாநில அரசு காவல் துறை அதிகாரிகளிடம் மத்திய அரசுப் பணிக்கு யார் செல்ல விரும்புகிறார்கள் என்று அவர்களிடம் கேட்டு



தெரிந்துகொண்டு, அவர்களின் ஒப்புதல் பெற்ற பிறகு, ஒரு offer list என்ற பட்டியலை மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கிறது. மத்திய அரசு அங்கே காலிப் பணியிடங்கள் வருகின்றபோது, மாநில அரசு அனுப்பியுள்ள அந்த offer list–ஐ வைத்துக்கொண்டு, அந்தப் பட்டியலிலிருந்து ஒருவரையோ, இருவரையோ எத்தனை பேர் வேண்டுமோ, அத்தனை அலுவலர்களைத் தேர்ந்தெடுத்து இவர்களை உடனே நீங்கள் relieve செய்து மத்திய அரசுக்கு அனுப்புங்கள் என்று இங்கே கடிதம் அனுப்புவார்கள். அதற்குமுன்பு இந்த consultation என்ற process இருக்கும். மத்திய அரசே சில பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்பதற்காக தமிழ்நாட்டிலிருந்து அல்லது வேறு மாநிலங்களிலிருந்து சில அதிகாரிகள் தேவை என்று கருதினால் மாநில அரசுக்கு எழுத வேண்டும். சில அதிகாரிகள் எங்களுக்குத் தேவை; உங்களால் அனுப்ப முடியுமா என்று கேட்பார்கள். முடியுமா, முடியாதா என்பதை மாநில அரசு தெரிவிக்கும்.

*பிற்பகல் .5–50*

மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் குறிப்பிட்டதுபோல், All India Police Service Cadre Rule No.6–ன்படி மாநில அரசு மறுத்தாலும்கூட, அதை over–rule செய்கின்ற அதிகாரம் மத்திய அரசுக்கு இருந்தபோதிலும், இதுவரை மத்தியில் ஆட்சியிலிருந்த எந்த அரசும் அந்த நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை; அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தவில்லை என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். காரணம், தமிழ்நாட்டில் மட்டும் இந்த நிலை இல்லை. எல்லா மாநிலங்களிலும் இதே நிலைதான். திறமை வாய்ந்த, தகுதி வாய்ந்த சீனியர் காவல் துறை அலுவலர்களின் எண்ணிக்கை எல்லா மாநிலங்களிலுமே மிகக் குறைவாக இருக்கிறது. நான் இப்போதுதான் பட்டியலை வாசித்துக் காண்பித்தேன். பிற மாநிலங்களைவிட அதிக எண்ணிக்கையில் தமிழ்நாடுதான் காவல் துறை அலுவலர்களை மத்திய பணிக்கு அனுப்பிவைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மத்திய அரசு பணிக்கு தமிழ்நாடு அரசு அதிகாரிகளை அனுப்ப விரும்பவில்லை என்ற நிலையில்லை. மாறாக, மத்திய பணிக்குச் செல்லும் தகுதியில்லாத மத்திய அரசு கொள்கையின்படி அந்த தகுதியில்லாத இந்த 3 அதிகாரிகளை, பெயர் சொல்லிக் குறிப்பிட்டு, மத்திய அரசு அனுப்பக் கோருகிறது; உத்தரவிடுகிறது என்று சொன்னால் இது பழிவாங்கும் நடவடிக்கை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதால்தான் தமிழக அரசு மறுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையில், மண்ணடி பகுதியில் தனியாரால் ஆழ்குழாய் கிணறு தோண்டுவதற்காக அமைக்கப்பட்டிருந்த 32 அடி ஆழமுள்ள துளைக்குள் துரதிருஷ்டவசமாக 5 வயது பள்ளிச் சிறுவன் தமிழ்மணி 30-8-2001 அன்று மாலை 3.00 மணியளவில் தவறி விழுந்துவிட்டான் என்ற செய்தி கிடைத்தது. இந்தச் சம்பவம் நடந்தவுடனே சென்னை மாநகர காவல் துறையினர் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையினர் சம்பவம் நடந்த சென்னை, மண்ணடி பகுதி, ஆடியபாதம் தெருவிற்கு விரைந்து சென்று அந்தச் சிறுவனை மீட்பதற்காக மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறையினர் Mini–video Camera மற்றும் Life detector போன்ற நவீன கருவிகளை வைத்து, சிறுவன் என்ன நிலையில் உள்ளான் என்பதைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். மேலும் சுமார் 1 அடி அளவு விட்டம் மட்டும் கொண்ட இந்த ஆழமான துளையில் விழுந்துவிட்ட சிறுவன் பிராண வாயு இன்றி, அபாய நிலைக்குச் சென்று விடக்கூடாது என்பதற்காக அந்தச் சிறுவனுக்கு ஆக்சிஜன் சிலிண்டரிலிருந்து பிளாஸ்டிக் குழாய் மூலம் தொடர்ந்து சிறுவன் இருக்கும் இடத்திற்கு ஆக்சிஜன் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் மருத்துவக் குழுக்களும், சம்பவ இடத்திற்கு அருகிலேயே இருந்து மீட்புப் பணிகளில் காவல் துறையினருக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினருக்கும், ஆலோசனைகளையும் உதவிகளையும் கொடுத்து வருகின்றனர். இந்தச் சம்பவத்தைப்பற்றி அறிந்த நான் மிகவும் வருத்தம் அடைந்துள்ளேன். எப்படியாவது அபாயத்தில் சிக்கியுள்ள சிறுவன் தமிழ்மணி உயிருடன் மீட்கப்பட வேண்டும் என்று காவல் துறையினருக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் படையினருக்கும் உத்தரவிட்டுள்ளேன். மீட்புப் பணியில் உதவி செய்வதற்கு இராணுவத்தினரும் முன்வந்துள்ளனர். அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்களும் இந்த மீட்புப் பணிக்கு ஒத்துழைப்பு நல்கி வருகிறார்கள் என்று தெரிய வருகிறது. விரைவில் சிறுவன் தமிழ்மணி உயிருடன் மீட்கப்படுவான் என்று நம்புகிறேன். அனைத்துவிதமான நவீன யுக்திகளையும் பயன்படுத்தி சிறுவனை மீட்க வேண்டுமென இது சம்பந்தப்பட்ட எல்லா துறையினருக்கும் உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆழ்குழாய் தோண்டிய தனியார் காஜா மொய்தீன் என்பவர் கைது செய்யப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில முக்கிய நாளேடுகளில் குறிப்பாக, முக்கிய ஆங்கில நாளேடுகளில் இந்த விபத்துக்கு ஏதோ தமிழக அரசுதான் பொறுப்பு என்பதுபோல திரித்துச் செய்திகளை வெளியிட்டிருந்தார்கள். தமிழக அரசில் ஒரு துறை



என்ன செய்கிறது என்று மற்றொரு துறைக்குத் தெரியவில்லை; இவ்வளவு அஜாக்கிரதையாக இருந்துவிட்டார்கள் என்றெல்லாம் செய்தி வெளியிட்டிருந்தார்கள். இதைப் பார்த்ததும் நானே திடுக்கிட்டுப் போனேன். உடனே விசாரித்தேன். ஆனால் தெரியவந்தது என்னவென்றால், இது அரசு போட்ட குழாய் கிணறே அல்ல; TWAD Board–ம் செய்யவில்லை. Metro Water–ம் செய்யவில்லை. இதைச் செய்தது ஒரு தனியார், அவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பதை நான் தெரியப்படுத்திக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் இந்த ஆங்கில நாளேடுகள் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, அவசரப்பட்டு இத்தகைய செய்திகளை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 5–55*

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சந்தனக் கடத்தல்காரன், கொலைகாரன். கொள்ளைக்காரன் வீரப்பனைப் பிடிக்க என்ன நடவடிக்கை எடுத்து வருகிறீர்கள் என்றெல்லாம் கேட்பார்கள், அதைப்பற்றிப் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் யாரும் அதைப்பற்றிப் பேசவில்லை. இருப்பினும் அதைப்பற்றித் தெரிவிப்பது என்னுடைய கடமை என்பதால் நான் சில விவரங்களைத் தெரிவிக்க விழைகிறேன்.

1978 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை 2000 ஆண் யானைகளைக் கொன்றும், 12 கோடி ரூபாய் மதிப்புள்ள யானைத் தந்தங்களைத் திருடியும், 1000 கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தன மரக் காடுகளை அழித்து சந்தன மரங்களைக் கடத்தியும், 124 பேர்களை இதுவரை கொன்று குவித்தும் பல்வேறு அக்கிரமங்களைப் புரிந்துள்ள வீரப்பனைப் பிடிப்பதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான் 1993–ல் சிறப்பு அதிரடிப் படையைத் தமிழக அரசு ஏற்படுத்தியது. தமிழ்நாடு அரசும், கர்நாடக அரசும் இணைந்து செயலாற்றி, அ.இ.அ.தி.மு.க. அரசு 1996 ஆம் ஆண்டு மே மாதம் பதவி விலகும்போது 150 பேர் கொண்ட கும்பலாக இருந்த வீரப்பனின் கூட்டத்தை வெறும் 5 நபர்கள் அடங்கிய கூட்டமாகக் குறைத்தது. ஆனால், அதன் பின்னர் பதவியேற்ற முந்தைய தி.மு.க. அரசோ வீரப்பனைப் பிடிப்பதற்கு எந்தவித சீரிய நடவடிக்கையும் எடுக்காமல், மாறாக வீரப்பனுடனும், சட்டவிரோதச் செயல்களைப் புரிய அவனுக்கு துணைபோன சில தேசவிரோத, தீவிரவாத சக்திகளுடனும் சமரசம் செய்துகொண்டு, வீரப்பனை ஊக்குவித்து வந்தது. அதன் விளைவாக,

கன்னட திரைப்பட நடிகர் டாக்டர் ராஜ்குமார், வீரப்பன் கும்பலால் கடத்தப்பட்டபோது, அவரை மீட்பதற்கு, காவல் துறை நடவடிக்கை எதையும் எடுக்காமல், தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்புள்ள, தடைசெய்யப்பட்ட இயக்கங்களின்மேல் பரிவு கொண்டுள்ள தேசவிரோத சக்திகளுடன் நட்பு பாராட்டுகின்ற பிரமுகர்கள் சிலரைத் தூதுவர்களாக அனுப்பி (மேசையைத் தட்டும் ஒலி) வீரப்பனிடம் கெஞ்சிக் கூத்தாடி, டாக்டர் ராஜ்குமாரை விடுதலை செய்யவேண்டிய கட்டாயமும், அரசின் இறையாண்மை வலுவிழந்துபோன ஒரு அவல நிலையும் தமிழ்நாட்டில் ஏற்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய சூழ்நிலையில் ஒருவழியாக டாக்டர் ராஜ்குமார், வீரப்பனாலேயே விடுவிக்கப்பட்டு இது தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகள் முந்தைய தி.மு.க. அரசின்மீது அனைத்துத் தரப்பு மக்களாலும் எழுப்பப்படும் சூழ்நிலையும் ஏற்பட்டது.

தேர்தல் முடிவுகளையடுத்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவியேற்ற பின்னர் மீண்டும் வீரப்பனுக்கு எதிரான சிறப்பு அதிரடிப் படை நடவடிக்கை சீரிய முறையில் தொடர பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே சிறப்பு அதிரடிப் படையின் தலைமையேற்று வீரப்பனைப் பிடிக்கும் பணியில் சிறந்த முன்னேற்றத்தைக் காட்டிய ஓய்வு பெற்ற காவல் துறை இயக்குநர் திரு. வால்டர் தேவாரம், சிறப்பு அதிரடிப் படைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். தேசிய எல்லைப் பாதுகாப்புப் படையில் பணியாற்றி வந்த ஐ.ஜி. திரு. கே. விஜயகுமார், சிறப்பு அதிரடிப் படையில் காவல் துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார். மேலும், சிறப்பு அதிரடிப்படையில் விருப்பம் உள்ள திறமையான ஆற்றல் மிக்க புதிய காவலர்கள் பலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வீரப்பனைப் பிடிக்கும் அபாயமான பணியில் ஈடுபட்டிருக்கும் காவல் துறைப் பணியாளர்களை ஊக்குவிக்க அரசு பல்வேறு சலுகைகளை வழங்கியுள்ளது. குறிப்பாக, வீரப்பனைத் தேடும் பணியில் ஈடுபடுகின்ற நாட்களுக்கு இடர்ப் படி, துயரப் படி ஆகியவை ஒன்றரை மடங்கு தினப் படியாக வழங்குதல், வெகுமதித் தொகை உயர்த்தி வழங்குதல், காவலர்களுக்கு விரைவுப் பதவி உயர்வு ஆகிய சலுகைகளை அரசு வழங்கியுள்ளது. மேலும், மத்திய அரசிடமிருந்து கோரி 150 ஏ.கே.47 வகைத் துப்பாக்கிகள், அவற்றிற்கான தோட்டாக்கள், எஸ்.எல்.ஆர். துப்பாக்கிகள், 120 பைனாக்குலர்கள், 40 திசைகாட்டும் கருவிகள், இரட்டைத் தொலைநோக்கிக் கருவிகள், 477 பேர் கொண்ட எல்லைப் பாதுகாப்புப் படைப் பிரிவு மற்றும் 'கண்ணி வெடியை வெடிக்க வைக்கும் கருவி, இரவில் பார்க்கக்கூடிய பைனாக்குலர்கள், ஹெலிகாப்டர் வசதி ஆகியன



சிறப்பு அதிரடிப் படைப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், சரியான தகவல்கள் இல்லாமல் காட்டுப் பகுதியில் வீரப்பனைப் பிடிக்க இயலாது என்பதால், தற்போது காவலர்கள் பொதுமக்களின் நண்பர்களாக மாறி அவர்களுடன் இணைந்து தேடுதல் பணியினைத் தொடரும் வகையில் சாதகமான சூழ்நிலையும் ஏற்பட்டு வருகிறது.

தமிழக அரசு வீரப்பனைப் பிடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் முனைப்புடன் எடுத்து வருகிறது. வீரப்பனைத் தேடும் பணியில் உள்ளவர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணித்து கடமையாற்றி வருகின்றனர். வீரப்பன் இந்த தொடர் நடவடிக்கைகளின் வாயிலாக விரைவில் பிடிபட இருப்பது உறுதி என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறது. ஆனால், முந்தைய தி.மு.க. அரசு செய்ததைத்போல வீரப்பனைத் தேடுகின்ற பணி குறித்து, தேவையின்றி தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் அளவிற்கு அதிகமான விளம்பரங்களைக் கொடுத்து, விவரங்களைக் கொடுத்து, அதன் வாயிலாக காவல் துறையின் திட்டங்களையும், அதன் பலத்தையும் வீரப்பன் அறிந்துகொண்டு உடனே தப்பி விடுவதற்கு உகந்த சூழ்நிலையை இந்த அரசு ஒருபோதும் ஏற்படுத்தாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 6-00*

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றில் ஒருசிலவற்றிற்கு மட்டும் இப்போது பதில் கூறலாம் என்று எண்ணுகிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், சாத்தூர் நகரில் காவல் குடியிருப்புகள் கட்டித் தரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார். மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. டி.கே. இராஜா, திரு. ஜி.கே. மணி உட்பட 16 மாண்புமிகு உறுப்பினர்கள் காவலர்களுக்கு வீடுகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஆகியவை அவரவர்கள் தொகுதியில் பணியாற்றும் காவலர்களுக்குக் கட்டித் தரவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்கள். தி.மு.க.-வைத் தவிர மற்ற கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தரவேண்டுமென்று கோரிக்கை விடுப்பதில் எவ்வித பேதத்தையும் நான் காணவில்லை. ஆனால், தி.மு.க. உறுப்பினர்கள், காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தரவேண்டுமென கோரிக்கை விடுப்பதுதான் விந்தையாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இதைப்பற்றிப் பேசுவதற்கு இவர்களுக்கு எவ்வித முகாந்திரமும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு முக்கியத் தகவலை நான் இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன். காவலர்களுக்கு அவரவர்கள் பணியாற்றும் பகுதியில் குடியிருப்புகள் இருக்க வேண்டுமென்ற தேவையை உணர்ந்து, 1980 ஆம் ஆண்டு, அப்போதைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தை ஏற்படுத்தி, ஆண்டுதோறும் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டார்கள். அதனால், ஒவ்வொரு ஆண்டும், காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, அவர்களுக்கு வீடு கிடைப்பதில் இருந்த சிரமம் குறைந்தது. ஆனால், 1989 ஆம் ஆண்டு, தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பேற்ற திரு. கருணாநிதி, இந்தத் திட்டத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்தார் என்ற ஒரே காரணத்திற்காக, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தையே மூடிவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும், 1991 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று, நான் முதலமைச்சராக வந்த பிறகுதான் இந்தக் காவலர் வீட்டு வசதி வாரியத்தின் நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்பட்டது. ஆகவே, காவல் துறையைச் சீரமைப்பது குறித்தோ, காவல் துறை வளர்ச்சி குறித்தோ யார் பேசினாலும் பேசலாம். ஆனால், தி.மு.க. உறுப்பிர்கள் பேசுவது சற்றும் பொருத்தம் உடையதாக இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் இன்று காலையில் பேசுகின்றபோது, எங்கள் தானைத் தலைவர் முதலமைச்சராக இருந்தபோது, காவல் துறையின் வளர்ச்சிக்காக எத்தனையோ திட்டங்களைச் செயல்படுத்தினார்கள் என்றெல்லாம் கூறினார்கள். காவல் துறையினருக்கு எத்தனையோ வசதிகளை எல்லாம் செய்து கொடுத்தார் என்றெல்லாம் குறிப்பிட்டார். அப்போது பதில் கூறவேண்டாம் என்று காத்திருந்தேன். விரிவான பதிலை மாலையில் கூறலாம் என்று இருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்களுக்கே இந்தத் தகவல் இப்போது தான் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது ஆட்சிக்கு வருகின்றவர்கள் சில கொள்கை முடிவுகள் எடுப்பதன் காரணமாக, சில வேறுபாடுகள் வரத்தான் செய்யும். ஆனால், 5



ஆண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் காவலர்களுக்கு வீடுகள் கட்டப்படவில்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்களா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் தெளிவாக விளக்கம் கூற விரும்புகிறேன். கடந்த 5 ஆண்டு காலத்தில், காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்படவில்லை என்று நான் கூறவில்லை. முதன்முதலில் காவலர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக இந்த Police Housing Corporation என்ற அமைப்பை, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1980–ல் தொடங்கினார். பின்னர், தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது, 1989–ல் அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி, அந்த Police Housing Corporation–ஐ மூடிவிட்டார். பின்னர், மீண்டும் 1991–ல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டபோது, நான் முதலமைச்சரான பிறகுதான், அந்த Housing Corporation–க்கு மீண்டும் உயிர் கொடுத்து, மீண்டும் அதனைத் தொடங்கினேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்பிறகு அது தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இரண்டாவது முறையாக அதை இழுத்து மூடினால் மிகவும் கெட்ட பெயர் வந்துவிடும் என்று பயந்துதான் திரு. கருணாநிதி அதை மூடவில்லை போலும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 6–0.5*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, சாத்தூர் இராமச்சந்திரன்தான் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார், அவர் பழைய ஞாபகத்திலே கொடுத்திருப்பார் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

***பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு செயலை நிறைவேற்றுகிறபோதும் அதற்கான வடிவங்கள் மாறிவிடுகின்றன. ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் அந்த உரிமை இருக்கிறது. என்ன முறை என்பதில், எந்த அமைப்பு மூலமாக என்பதில், அவ்வப்போது ஏற்படுகிற கருத்து மாறுபாடுகள் காரணமாக, வெவ்வேறு முறைகள் கையாளப்படுகின்றன. ஆனாலும், தி.மு.க. ஆட்சியில் காவலர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டன என்பதை மட்டும்தான் நான் பதிலாகக் கூற முடியும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 முதல் 1991 வரை காவலர்களுக்கு தி.மு.க. ஆட்சியில் ஒரு குடியிருப்புகூட கட்டித்தரப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன, தலைவர் கலைஞர் ஆட்சியில் அழகழகான வீடுகள், மதுரையிலேகூட நீங்கள் பார்த்திருக்கலாம். பை-பாஸ் ரோடு முக்கிலே அழகான வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களோடு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் இருந்தபோது கற்பூர மூளை படைத்தவராக இருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது ஏனோ நான் சொல்வதைப் புரிந்துகொள்ள மறுக்கிறார். கடந்த ஐந்தாண்டு காலத்தில் காவலர்களுக்கு வீடுகள் கட்டவில்லை என்று சொல்லவில்லை.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஐந்தாண்டு காலத்தில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: முதலமைச்சர் அவர்கள் கட்டவில்லை என்று சொல்லவில்லை.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**: பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. அது என்ன? போன ஐந்தாண்டு கால ஆட்சியிலே கட்டாததைப் போல்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். (கூச்சல்–குழப்பம்) முதலில், அவர்கள். (குறுக்கீடுகள்) போன ஐந்தாண்டு காலத்திலே ....(கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டேன். நான் என்ன சொல்ல வந்தேன் என்றால், காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் கோரியிருக்கிறார். இதைப்பற்றி யார் வேண்டுமானாலும் பேசலாம், ஆனால் தி.மு.க. உறுப்பினர்கள் பேசக்கூடாது. ஏனென்றால், புரட்சித் தலைவர் அவர்கள் தொடங்கிய இந்த Police Housing Corporation–ஐ தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகுதான், அன்றைய முதல்வர் கருணாநிதி 1989–ல் இழுத்து மூடினார் என்பதை நான் குறிப்பிட்டேன். அதன் பிறகு, நான் 1991–ல் ஆட்சிக்கு வந்தபோது அதை மீண்டும் தொடங்கினேன். அன்றிலிருந்து இன்றுவரை செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. கடந்த ஐந்தாண்டு காலத்தைப்பற்றி நான் பேசவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. துரைமுருகன்**: தலைவர் அவர்களே, 1989–லேயிருந்து 1991 வரையிலே இருந்த குறுகிய காலத்திலே விடுபட்டுப் போயிருக்கலாம். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் மூவாயிரத்து நூற்று எண்பத்தைந்து வீடுகளை, இல்லை, 13 ஆயிரம் வீடுகளுக்கு மேலே கட்டப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறுகிய காலமோ, நீண்ட காலமோ, அவர்களுடைய கொள்கை, எப்படிப்பட்ட கொள்கை? காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தரத் தேவையில்லை என்று கொள்கை முடிவு எடுத்துத்தானே ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருந்த வீட்டு வசதி வாரியத்தை அவர்கள் இழுத்து மூடினார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கார்ப்பரேஷன் இல்லை என்பதாலேயே வீடு கட்டிக் கொடுக்கவில்லை என்பது தவறான வாதம். கார்ப்பரேஷன் தேவையில்லை என்ற கொள்கை அடிப்படையிலேகூட அது மூடப்பட்டிருக்கலாம். மீண்டும் நீங்கள் வந்த பிறகு தொடங்கியிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அதைத்தான் சொல்கிறார். முதலமைச்சரும் அதைத்தான் குறிப்பிடுகிறார். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதைத்தான் சொல்கிறார்கள்.

**டாக்டர் க. பொன்முடி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டிக் கொடுக்கவில்லை என்று சொல்வது தவறு. கார்ப்பரேஷனில் தவறு இருந்ததால், கார்ப்பரேஷன் வேண்டாம் என்று முடிவெடுத்திருக்கலாம். அதுதான் உண்மை. வீடு கட்டக் கூடாது என்றல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அதைத்தான் முதலமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையை நவீனப்படுத்த நான் மேற்கொண்ட பல்வேறு பணிகளை பாழ்படுத்தியது முந்தைய தி.மு.க. ஆட்சிதான். 1996 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக மக்கள் தீர்ப்பு அளித்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை நான் தொடங்கி வைத்த பல்வேறு திட்டங்களை தி.மு.க. ஆட்சியாளர்கள் கைவிட்டுவிட்டார்கள். அவற்றை சீர்கேடு அடையச் செய்தார்கள். 1991 ஆம் ஆண்டு நான் பொறுப்பேற்றபோது, காவல் துறையில் எந்தவிதமான நவீன வசதியும் கிடையாது. அப்போது இயங்கிக் கொண்டிருந்த 1027 காவல் நிலையங்களில் 30 காவல் நிலையங்களுக்கு மட்டுமே ஜீப் இருந்தது. அன்று சுமார் 1000 காவல் நிலையங்களுக்கு இரு சக்கர வாகனங்கள்கூடக் கிடையாது. கிராமப்புறங்களில் அமைந்துள்ள காவல் நிலையங்களில் பலவற்றிற்கு தொலைபேசி வசதிகூட கிடையாது. நகர்ப்புறங்களில் அமைந்துள்ள காவல் நிலையங்களுக்கு நவீன தொலைத்தொடர்பு வசதி கிடையாது, நவீன ஆயுதங்கள் கிடையாது. இரண்டாம் உலகப் போரின்போது உபயோகத்திலிருந்த மஸ்கட் மற்றும் சாதாரண துப்பாக்கி போன்ற ஆயுதங்களைத்தான் காவலர்கள் வைத்திருந்தார்கள். அன்றைய சூழ்நிலையில் தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது.

*பிற்பகல் 6–10*

எல்.டி.டி.ஈ.-யினர் சர்வதேசத் தரம் வாய்ந்த ஆயுதங்கள், வாகனங்கள் ஆகியவற்றை வைத்திருந்தார்கள். ஹைதர் காலத்துத் துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு எப்படி தமிழக காவல் துறையினர் விடுதலைப் புலிகளினுடைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும்? எனவேதான், தமிழக காவல் துறையை நவீனப்படுத்த போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கைகளை நான் தொடங்கி வைத்தேன், தொலைத் தொடர்பு வசதிகள், மைக்ரோவேவ் கருவிகள், வாக்கி–டாக்கி செட்டுகள், வி.ஹெச்.எப். செட்டுகள் ஆகியவற்றைக் கொடுத்து, ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் வாகனங்களை வழங்கி, ஏ.கே.47, எம்.பி.5 போன்ற நவீனரகத் துப்பாக்கிகளைக் காவலர்களுக்கு வழங்கினேன். கமாண்டோ பிரிவுகளை அமைத்து காவலர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் எந்த அவசர நிலையையும் எதிர்கொள்ளும் அளவிற்கு தயார் செய்யப்பட்டார்கள். Bomb Disposal Squad, Coastal Security Group, Flying Squad, Anti–dacoity Cell போன்ற தனித்தனியான அமைப்புகளைத்



தொடங்கி, அந்தப் பிரிவுகளுக்குத் தேவையான வாகனங்கள், ஆயுதங்கள், கட்டமைப்பு வசதிகள் போன்ற அனைத்தையும் வழங்கி, போர்க்கால அடிப்படையில் தமிழக காவல் துறையில் ஒரு –Quantum Leap Forward– முன்னேற்றத்திற்கு நான் ஏற்பாடு செய்தேன். ஒரு அடி தாவுவதற்குப் பதிலாக, பத்து அடி தாவினால் அதை முன்னேற்றம் என்று சொல்வார்கள். ஆனால், என்னுடைய தலைமையில் அமைந்த அப்போதைய தமிழக அரசு காவல் துறைக்கு ஆயிரம் அடி தாண்டும் அளவிற்கு வசதிகளைச் செய்து கொடுத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிச் செய்ததால்தான் தமிழகத்தில் எல்.டி.டி.ஈ.-இன் நடவடிக்கைகளை முற்றிலுமாக வேரறுக்க முடிந்தது. எல்.டி.டி.ஈ.-ஐ தமிழ்நாட்டிலிருந்து விரட்டியடிக்க முடிந்தது. தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கும் சிறப்பாக நிலைநாட்டப்பட்டது.

தமிழக காவல் துறையினரின் செயல்திறனை சர்வதேச அளவிற்கு ஒப்பான நிலைக்குக் கொண்டு செல்ல நான் நடவடிக்கைகளைத் தொடங்கி வைத்தேன். தமிழக காவல் துறையில் பணிபுரிந்த காவலர்களுக்கு Kit Maintenance Allowance, Risk Allowance போன்ற பலவகையான படிகளை உயர்த்தி வழங்கி அவர்கள் பணியில் ஆர்வமிக்கவர்களாக மாறுவதற்கு அவர்களுக்கு ஊக்கமளித்திருந்தேன். 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை 1250-க்கும் மேற்பட்ட புதிய வாகனங்கள் வாங்கப்பட்டன. சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்திற்கு எனது ஆட்சிக் காலத்தில் குற்றங்களைக் கட்டுப்படுத்த, ரோந்துப் பணிக்கு patrolling பணிக்கு 38 புதிய ஜீப்புகளை வழங்கினேன். இன்றுவரை அவைதான் பயன்பாட்டில் உள்ளன. சென்ற தி.மு.க. ஆட்சியில் சென்னை மாநகர காவல் துறைக்கு ரோந்துப் பணிக்கு 4 வாகனங்கள் மட்டுமே வாங்கப்பட்டுள்ளன என்பதைப் பார்க்கும்போது, வெட்கித் தலை குனிய வேண்டிய நிலை ஏற்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோன்று 2000 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் காவல் துறைக்கு, நவீனப்படுத்தப்படும் திட்டத்தின்கீழ் 434 வாகனங்கள் வாங்க தி.மு.க. அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால், போதிய நிதி ஒதுக்கப்படாமல் 58 வாகனங்கள் மட்டும் வாங்கப்பட்டன. அதாவது, சட்டமன்றத்தில் அன்றைய முதலமைச்சர் உரையாற்றும்போது அறிவிப்புகள் எல்லாம் பிரமாதமாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) பத்திரிகைகளிலும் பிரமாதமாகச் செய்திகளை வெளியிட்டார்கள். 2000 ஆம் ஆண்டில் 434 வாகனங்கள் காவல் துறைக்கு வாங்கப்படும் என்று அறிவித்துவிட்டு, அதற்கு sanction–ம் கொடுத்துவிட்டு, நிதி ஒதுக்கவில்லை, வெறும் 58 வாகனங்களுக்கு மட்டுமே நிதி கொடுத்திருக்கிறார்கள். எஞ்சிய 376

வாகனங்களில் 368 வாகனங்கள் இந்த ஆண்டு காவல் துறை
நவீனமயமாக்கப்படும் திட்டத்தின்கீழ் வாங்குவதற்கு நான் ஆட்சிப்
பொறுப்பேற்ற பிறகு வழிவகை செய்யப்பட்டுள்ளது (மேசையைத் தட்டும்
ஒலி) என்பதையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

காவல் துறை மட்டுமல்லாமல், மற்ற அனைத்து துறைகளிலுமே
எனது முந்தைய ஆட்சியில் புதிய முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.
உதாரணத்திற்கு 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை சிறந்த
போக்குவரத்துக் கழகங்களுக்கான தேசிய விருதுகள் நம்முடைய
போக்குவரத்துக் கழகங்களுக்குத்தான் வழங்கப்பட்டன. என்னுடைய
ஆட்சிக் காலத்திலே மூன்று வருடங்களுக்கு மேலாக ஓடிய
போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அனைத்தும் மாற்றப்பட்டு புதிய
பேருந்துகள் வாங்கப்பட்டன. ஆனால், இப்போது 8 அல்லது 9 வருடங்கள்
கழித்துகூட ஓட்டை உடைசல் பேருந்துகளை தமிழக போக்குவரத்துக்
கழகங்கள் ஓட்டிக்கொண்டிருக்கின்றன.

**டாக்டர் க. பொன்முடி**: தலைவர் அவர்களே....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: I am not yielding. (குறுக்கீடு)
I am not yielding. நான் பேசி முடித்த பிறகு நீங்கள் சொல்லுங்கள்.
(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. பொன்முடி, உட்காருங்கள்.
முதலமைச்சர் அவர்கள் பேசி முடித்தவுடன் உங்களைக் கூப்பிடுகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இந்த அரசு 1996–லே பொறுப்பேற்கிறபொழுது, அப்போது இருந்த
பேருந்துகளின் சராசரி வயது 7 ஆண்டுகளுக்கு மேல் இருந்தது. மூன்று
ஆண்டுகளுக்கு ஒரு முறை பேருந்துகள் வாங்கி மாற்றப்பட்டன என்பது
தவறான செய்தி என்பதை நான் தங்களின் மூலம் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

*பிற்பகல் 6–15*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிந்தே தவறான
தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இந்த விவரங்களைப் பெற்று,
பிறகு நான் மீண்டும் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். நான் சொன்னதில் எந்த மாற்றமும் இல்லை. (மேசையைத்
தட்டும் ஒலி) இப்போது 8 அல்லது 9 வருடங்கள் கழித்துகூட ஓட்டை



உடைசல் பேருந்துகளைத் தமிழகப் போக்குவரத்துக் கழகங்கள்
ஓட்டிக்கொண்டிருக்கின்றன.

அதேபோல்தான் கடந்த தி.மு.க. ஆட்சியில் மற்ற துறைகளிலும்
சீர்கேடுகள் மலிந்து மக்கள் நலப் பணிகள் பாழ்பட்டுப் போயின.
எடுத்துக்காட்டாக, விளையாட்டுத் துறையில் எனது ஆட்சியில் நேரு
விளையாட்டரங்கம் உலகத் தரம் வாய்ந்த அளவில் வடிவமைத்துக்
கட்டப்பட்டது. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அதைப்
பராமரிக்கக்கூட வழிவகை செய்யாமல், விளையாட்டு அல்லாத இதர
கலை நிகழ்ச்சிகளுக்கு அந்த விளையாட்டரங்கத்தைக் குறைந்த
வாடகைக்கு விட்டு சீர்குலைத்துவிட்டார்கள்.

மீண்டும் காவல் துறைக்கு வருகிறேன். இன்று அனைத்து மகளிர்
காவல் நிலையங்களின் நிலையும் அப்படித்தான். உலகமே வியந்து
பாராட்டிய திட்டம் இது. நான் 1992–ல் அனைத்து மகளிர் காவல்
நிலையங்கள் அமைக்கும் திட்டத்தைச் சென்னையில் பரிட்சார்த்தமாகத்
தொடங்கி வைத்தபோது, மக்களிடையே குறிப்பாக தாய்மார்களிடையே
நல்ல வரவேற்பு இருந்தது. அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் அவற்றைப்
படிப்படியாக எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த எண்ணி 1996
ஆம் ஆண்டு வரை 58 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை உருவாக்கி
வைத்தேன். அப்போது இந்தத் திட்டத்தின் சிறப்புகளைத்
தெரிந்துகொண்டு, பாகிஸ்தான் நாட்டின் முன்னாள் பிரதமர் பெனாசிர்
பூட்டோ அவர்களும், பங்களாதேஷ் நாட்டின் பிரதமர் பேகம் கலிதா
ஜியா அவர்களும் அவர்களது நாட்டில் அனைத்து மகளிர் காவல்
நிலையங்களை அமைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நமது நாட்டில்
மேற்கு வங்க மாநிலத்திலும், கேரள மாநிலத்திலும் அனைத்து மகளிர்
காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)
ஆனால், முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி 1996–ல் ஆட்சிப்
பொறுப்பு ஏற்றவுடன், அனைத்து மகளிர் காவல் நிலையங்களை
அலட்சியப்படுத்தினார். அவற்றை மூடவில்லை, ஏனென்றால், அவற்றை
மூட ஆரம்பித்தால், அந்த நடவடிக்கை மக்களிடையே அவருக்குக் கெட்ட
பெயர் ஏற்படுத்திவிடும் என்பதைப் புரிந்துகொண்டு, அனைத்து மகளிர்
காவல் நிலையங்கள் பாழ்பட்டுப் போவதற்கான எல்லா
நடவடிக்கைகளையும் எடுக்க ஆரம்பித்தார். முதலாவதாக, 58 அனைத்து
மகளிர் காவல் நிலையங்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்த ஜீப்புகள்
பறிக்கப்பட்டு, அவை வேறு பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டன. காவல்
நிலையங்களிலிருந்து மேசை, நாற்காலி போன்ற தட்டுமுட்டுச்
சாமான்கள்கூட அப்புறப்படுத்தப்பட்டு, கவனிப்பாரற்றுப் போயின. எந்தக்

காவல் துறை உயர் அதிகாரியும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்குப் பார்வையிடுவதற்காக கடந்த ஐந்தாண்டுகளில் ஒருமுறைகூட செல்லவில்லை. அங்கே பணிபுரிந்த பெண் காவல் துறை ஆய்வாளர்கள் மற்றும் பெண் காவலர்கள் ஈனப் பிறவிகள் போல் நடத்தப்பட்டார்கள். செயல்பாடுகள் எதுவுமின்றி அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் சீர்குலைக்கப்பட்டன. இதையெல்லாம் கருத்தில்கொண்டுதான், இந்த ஆண்டு 50 புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்களைக் கூடுதலாக அமைக்க நான் உத்தரவிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட 5 ஆண்டுக் காலமாக செயல்பாடுகள் எதுவுமின்றி அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் பணிபுரிந்த பெண் காவலர்கள் பணியில் ஆர்வமின்றி இருந்தனர். அதனால், 58 காவல் நிலையங்களிலும் புதிய பெண் காவலர்களை நியமித்து முன்பு பணியாற்றிய பழைய பெண் காவலர்களுக்குப் புத்தொளி பயிற்சி கொடுக்க வேண்டிய நிலைமை இப்போது ஏற்பட்டுள்ளது.

கடந்த தி.மு.க. ஆட்சியின்போது, எல்லாத் துறைகளிலும் அரசியல் காழ்ப்புணர்ச்சி ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு நிர்வாகம் நடந்திருக்கிறது. மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணம் எதுவுமின்றி பிடிக்காதவர்களைப் பழி வாங்குவதற்காகவே அவர்களுடைய ஆட்சி நடந்திருக்கிறது, செயல்பாடுகளும் இருந்திருக்கின்றன. அரசுப் பொறுப்பு, ஆட்சிப் பொறுப்பு என்பது, ஒரு பெரிய சுமை. ஒரு காலி மனையில் எளிதாக புதிய கட்டடம் ஒன்றைக் கட்டிவிடலாம். ஆனால், ஏற்கெனவே கட்டப்பட்ட ஒரு கட்டடம் பாழ்பட்டு பாதி இடிந்திருக்குமானால் இடிபாடுகளை அகற்றி அந்த இடத்தைச் சுத்தம் செய்து அந்த இடத்தில் ஒரு புதிய கட்டடத்தைக் கட்டுவது என்பது மிகமிகக் கடினமான பணி. ஏற்கெனவே நாசப்படுத்தப்பட்ட பகுதியைச் சுத்தப்படுத்தி மறுபடியும் அடித்தளம் அமைத்து, மறுபடியும் அஸ்திவாரம் போட்டு, புதிய கட்டடத்தை நிர்மாணிப்பது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. முந்தைய தி.மு.க. ஆட்சி நிர்வாகத்தில் அதற்கு ஒப்பான சீர்கேடுகள், அலங்கோலங்கள், குளறுபடிகள் என்று நிறைய சொல்லிக்கொண்டே செல்லலாம். அவற்றையெல்லாம் சீர்படுத்துகின்ற, சரிசெய்கின்ற கடினமான பணியில் இப்போது இந்த அரசு ஈடுபட்டுள்ளது. பல்வேறு நெருக்கடிகளுக்கு இடையே எங்களால் முடிந்த அளவு முயற்சிகளை மேற்கொண்டு நாங்கள் செய்கின்ற பணிகளை நடுநிலையாளர்கள் கண்டிப்பாகப் பாராட்டத்தான் செய்வார்கள். எங்கள் கஷ்டங்களைப் புரிந்துகொண்டு இவ்வளவு குறுகிய காலத்திலும் (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் நிகழ்த்திக் காட்டிய சாதனைகளுக்கு



மக்கள் வரவேற்பளிப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு நிறையவே உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 6–20*

இப்போது மீண்டும் வெட்டுத் தீர்மானங்களுக்கு வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் ஜி.கே. மணி, குமாரதாஸ், வை. சிவபுண்ணியம், கே.சி. கருணாகரன், அப்பாவு உள்ளிட்ட 12 மாண்புமிகு உறுப்பினர்கள் கொள்கை பற்றி விவாதிக்க வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள். தமிழ்நாடு காவல் துறை கோரிக்கை எண் 15 என்ற தலைப்பிட்ட கொள்கை விளக்கக் குறிப்பில் தமிழ்நாட்டில் காவல் துறை சாதனைகள் மற்றும் திட்டங்கள் பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கொள்கை விளக்கக் குறிப்பு இந்தப் பேரவை முன்பு வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருவாளர்கள் வேல்முருகன், கந்தசாமி, எச்.எம். ராஜு, திருஞானசம்பந்தம், ஹேமச்சந்திரன், ராம்குமார் உள்ளிட்ட 15 மாண்புமிகு உறுப்பினர்கள் புதிய காவல் நிலையங்கள் அமைப்பது குறித்து விவாதிக்க வெட்டுத் தீர்மானங்கள் அளித்துள்ளார்கள். தமிழ்நாட்டில் புதிய காவல் நிலையங்கள் அமைப்பது குறித்து வரக்கூடிய கோரிக்கைகள், வாய்ப்புகள், எழக்கூடிய தேவைகள், நிலவும் சூழ்நிலைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நன்கு பரிசீலித்து முன்னுரிமை அடிப்படையிலும், நிதிநிலைக்கேற்பவும் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்படுவது குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதிதாக 50 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் நிறுவப்பட உள்ளன என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன். அவை சென்னை மாநகரில் வண்ணாரப்பேட்டை, அண்ணா நகர், கிண்டி; சேலத்தில் சூரமங்கலம்; திருச்சி மாநகரில் கோட்டை, ரேஞ்ச், கண்டோன்மெண்ட்; செங்கல்பட்டு கிழக்கு மாவட்டத்தில் நீலாங்கரை, எண்ணூர்; காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர், செங்கல்பட்டு; திருவள்ளூர் மாவட்டத்தில் திருவள்ளூர்; விழுப்புரம் மாவட்டத்தில் திண்டிவனம், கள்ளக்குறிச்சி; கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டி, விருத்தாசலம்; வேலூர் மாவட்டத்தில் குடியாத்தம், வாணியம்பாடி; திருவண்ணாமலை மாவட்டத்தில் வந்தவாசி; சேலம் மாவட்டத்தில் சேலம் புறநகர், மேட்டூர், ஆத்தூர்; தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, அரூர்; நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு; கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவினாசி, பெரியநாயக்கன்பாளையம்; ஈரோடு மாவட்டத்தில் காங்கேயம்; நீலகிரி மாவட்டத்தில் குன்னூர்; திருச்சி மாவட்டத்தில் லால்குடி; பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர்; அரியலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம்;

கரூர் மாவட்டத்தில் குளித்தலை; புதுக்கோட்டை மாவட்டத்தில் பொன்னமராவதி; தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவையாறு, பட்டுக்கோட்டை; திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர், மன்னார்குடி; நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி; மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி, மேலூர்; விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை; திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல்; தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூர்; இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி; சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர்; திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி புறநகர், சங்கரன்கோவில்; தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர்; கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சாமியார் மடம், குமாரபுரம் ஆகிய இடங்களில் காவல் நிலையங்கள் அமைக்க வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார். இவற்றில் சாமியார் மடம் என்ற இடத்தில் புதிய காவல் நிலையம் தோற்றுவிக்க கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று சென்னையை அடுத்த அம்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட புதூரிலும், தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதி சோழபுரம் பேரூராட்சி ஆகிய இடங்களிலும் புதிய காவல் நிலையங்கள் அமைக்க கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் உள்ளிட்ட 4 மாண்புமிகு உறுப்பினர்கள் புறக் காவல் நிலையங்கள் அமைக்க கோரிக்கை விடுத்துள்ளார்கள். தமிழ்நாட்டில் இனி, எந்த ஒரு இடத்திலும், புறக் காவல் நிலையம் அமைப்பது இல்லை எனவும் தற்போதுள்ள புறக் காவல் நிலையங்கள் அனைத்தையும் ஆண்டுதோறும் படிப்படியாக முழு அளவிலான காவல் நிலையங்களாக நிதிநிலைக்கேற்ப உயர்த்துவது என்றும், அரசினால் முடிவு எடுக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இருப்பினும் அவசர முக்கியத்துவம் காரணமாக, புறக் காவல் நிலையம் அமைக்கப்படுவதில் தவறு இல்லை என்று கருதுகிறேன். அந்த அடிப்படையில் 28–8–2001 அன்று சென்னை துறைமுகம் ரேவ் பகுதியில் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை தடுக்கும் வகையில் ஒரு புறக் காவல் நிலையம் அமைக்க உத்தரவிட்டுள்ளேன்.



மாண்புமிகு உறுப்பினர்கள் டி. சுதர்சனம், திரு. ஞானசேகரன் உள்ளிட்ட 18 மாண்புமிகு உறுப்பினர்கள் காவல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவது குறித்து வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்து உள்ளார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிடும் இடங்களில் காவல் நிலையங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதாகவும், அவற்றிற்கு உரிய சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருமாறும் கேட்டுள்ளார்கள். அவற்றை பரிசீலனை செய்ததில், மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிடும் இடங்களில் காவல் நிலையங்கள் கட்டுவதற்கு தேவையான நிலம் இன்னும் கையகப்படுத்தப்படவில்லை எனத் தெரிகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிடும் இடங்களில் நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கு பின்னர் அந்த இடங்களில் காவல் நிலையங்கள் கட்டும் பணி தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரியும் அனைத்துப் பிரிவு காவலர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்க வேண்டிய அவசியம் குறித்து வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். தற்போது மத்திய அரசு காவலர்களுக்கு இணையாக தமிழக அரசு காவலர்களுக்கும் சம்பளம் வழங்கப்படுகிறது. மத்திய அரசு காவலர்களுக்குச் சம்பளம் உயர்த்தி வழங்கும்போது அவர்களைப் போன்றே தமிழக அரசு காவலர்களுக்கும் சம்பளம் உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 6-25*

தமிழகத்தில் கள்ளச் சாராயத்தை முற்றிலும் அறவே ஒழிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டு உள்ளார்கள். அதற்கு நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கோரியுள்ளார்கள். இந்த அரசு பதவி ஏற்றது முதல் கள்ளச் சாராயத்தை முற்றிலும் வேரறுக்க கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுகளில் போடப்பட்ட வழக்குகளைவிட, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அதிக அளவில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், காவலர்களுக்கு சங்கம் அமைப்பது பற்றிய கோரிக்கை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரிமோகன் அவர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களும் அதைப்பற்றிக் குறிப்பிட்டார். காவலர்களுக்குச் சங்கம் அமைப்பது குறித்த வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இவ்வழக்குகள் முடிந்த பின்னர், அரசு இதுகுறித்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், தொழில் நுட்பக் கல்லூரிகளில் காவல் துறையினரின் குழந்தைகளுக்கு தனி ஒதுக்கீடு குறித்தும், மாவட்டத் தலைமை இடங்களில் காவலர்களுக்கு தனி மருத்துவமனை அமைப்பது குறித்தும், நீலகிரி மாவட்டத்தில் காவல் நிலையங்களில் பணியிடங்கள் காலியாக இருப்பது குறித்தும், காவல் துறையினருக்கு பணி நேரம் வரையறுப்பது குறித்தும் மற்றும் பல பிரச்சினைகள் குறித்தும் வெட்டுத் தீர்மானங்கள் மூலம் இந்த அரசின் கவனத்தை ஈர்த்துள்ளார்கள். அத்தனை வெட்டுத் தீர்மானங்களுக்கும் தனித்தனியாக பதில் அளிக்க கால அவகாசம் இல்லாத காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளை அரசு கவனமுடன் பரிசீலித்து நிதிநிலைக்கேற்ப தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1994–95 ஆம் ஆண்டில் சார் ஆய்வாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், சேமப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல்படை ஆகியவற்றுக்கும், சார் ஆய்வாளர்களாக பணிக்கு அனுப்பப்பட்டார்கள் என்பது குறித்து இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சந்தானம் அவர்களும் இன்னும் பலரும் இன்று அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். 1994–95 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தின் மூலம் 1100 காவல் சார் ஆய்வாளர்கள் – Sub Inspectors of Police – பதவிகளுக்கான தேர்வு நடைபெற்றது. முதலில் 500 காவல் சார் ஆய்வாளர்களின் பதவிகள் உருவாக்கப்பட்டு, பின்னர் அது 1100–ஆக உயர்த்தப்பட்டது. 1996 ஆம் ஆண்டு இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், தேர்வுப் பட்டியலில் வரிசைக்கிரமத்தில் முதலில் இருந்த 500 சார் ஆய்வாளர்கள் 1–3–1996 முதல் சட்டம் ஒழுங்கு காவல் நிலையங்களில் இருந்த காலியிடங்களுக்கு பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். மீதம் இருந்த 600 சார் ஆய்வாளர்களில், தேர்வுப் பட்டியலில் வரிசைக்கிரமமாக, முதலில் இருந்த 99 நபர்கள் சட்டம் ஒழுங்கு காவல் நிலையங்களுக்கும் தேர்வுப் பட்டியலில் அதற்குப்



பின்னால் இருந்த 349 சார் ஆய்வாளர்கள் சேமப் படைக்கும், பின்னர் கடைசியாக இருந்த 54 சார் ஆய்வாளர்கள் தமிழ்நாடு சிறப்புக் காவல் படைக்கும் அனுப்பப்பட்டனர். 1996 ஆம் ஆண்டு இந்தத் தேர்வுக்கான அரசாணைப்படி அதிகமாக மதிப்பெண்கள் பெற்று தேர்வு பெற்றவர்கள் சட்டம் ஒழுங்கு காவல் நிலையங்களுக்கும், அதன்பின்னர், அதற்கு அடுத்தபடியாக மதிப்பெண்கள் பெற்றவர்கள் சேமப் படைக்கும், அதற்கு அடுத்தபடியாக மதிப்பெண்கள் பெற்றவர்கள் தமிழ்நாடு சிறப்புக் காவல் படைக்கும் அனுப்புவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு ஒரே சமயத்தில் தேர்வு பெற்றவர்கள் பல்வேறு பிரிவுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதை எதிர்த்து தேர்வு பெற்றவர்கள் சிலர் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பு ஆணையத்தை அணுகினார்கள். ஆனால், தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பு ஆணையமும் இவர்களது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் நிராகரித்துவிட்டது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டது உள்நோக்கம் கொண்டது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறிவிட்டது. இருப்பினும், இவர்கள் 5 வருடங்கள் சேமப் படையிலும், சிறப்புக் காவல் படையிலும் பணியாற்றிய பின்னர் சட்டம் ஒழுங்கு காவல் நிலையங்களில் பணியாற்ற விதிகள் அனுமதிக்கின்றன. அதன்படி இவர்கள் 2002 ஆம் ஆண்டு சட்டம் ஒழுங்கு காவல் நிலையங்களுக்கு காவல் துறை சார் ஆய்வாளர்களாக மாற்றப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6–30

மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசுகின்றபோது, பாளையங்கோட்டையில் நடைபெற்ற ஒரு கொலை வழக்குபற்றி இங்கே குறிப்பிட்டு, சி.பி.சி.ஐ.டி. விசாரணையை முடித்துவிட்டு அறிக்கையை அரசுக்குத் தந்துவிட்டது; அதை வெளியிட வேண்டுமென்று கேட்டார். பாளையங்கோட்டை மகுதி வளாகத்தில் 9–12–2000 அன்று இரவு 11–00 மணியளவில் அப்துல் ரஜீத் என்பவர் கொலை செய்யப்பட்டார். அதற்காக வழக்கு ஒன்று பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர், அந்த வழக்கு திருநெல்வேலி ஊரகக் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டது. இதுகுறித்து, மாரியப்பன் மற்றும் மொகைதீன் பிச்சை என்பவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மொகைதீன் பிச்சை, கொலை செய்யப்பட்ட அப்துல் ரஜீத் என்பவரின் சொந்த மகன் ஆவார். மொகைதீன் பிச்சை, ரெஜீனா என்ற பெண்ணைக் காதலித்து வந்ததாகவும், அதற்கு அவரது தந்தை எதிர்ப்புத் தெரிவித்து, அவருக்கும், மற்றொரு பெண்ணான மெஹ்ரா பானுவுக்கும் திருமணம்

நிச்சயம் செய்யப்பட்டுவிட்டதால், மகன் மொகைதீன் பிச்சை என்பவர் தனது தகப்பனாரைக் கொலை செய்துவிட்டதாக காவல் துறை விசாரணையின் முடிவில் கண்டறியப்பட்டுள்ளது. இதில், உண்மை நிலையை அறிய இவ்வழக்கு சி.பி.சி.ஐ.டி. ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் டீமுக்கு மாற்றப்பட்டு, அதன்மூலமாக விசாரணை நடைபெற்று வருகிறது. விரைவில் இந்த வழக்கில் உண்மை நிலை தெரியவரும். சி.பி.சி.ஐ.டி. ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் டீம் இன்னும் விசாரணையை முடிக்கவில்லை. ஆகவே, விசாரணையை முடித்து, அரசுக்கு அறிக்கை தந்துவிட்டது என்பது தவறான தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் இன்று பேசுகின்ற போது, அரசினர் தோட்ட காவல் நிலையத்தினர் கையூட்டு பெற்று குற்றவாளிகளை அனுப்பிவிட்டதாக இங்கே ஒரு தகவலைத் தெரிவித்தார். 27–8–2001 அன்று மாலை 6–00 மணியளவில் தனக்கு பணம் கொடுக்க வேண்டியவர்கள்மீது புகார் கொடுத்த திரு. மொகைதீன் என்பவர் பொருளாதாரக் குற்றப் பிரிவு ஆய்வாளர் திரு. காந்தி என்பவரைப் பார்க்க பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குச் சென்று இருந்தார். அப்போது திரு. மொகைதீனுக்கு சுமார் ரூ.4.75 இலட்சம் பணம் கொடுத்துள்ள ஜெயக்குமார், இலட்சுமணன், செல்வநாதன், ராஜா ஆகியோர் மொகைதீனை தேடி, ஆய்வாளர் திரு. காந்தி அறைக்குச் சென்று கூச்சலிட்டனர். ஆய்வாளர் திரு. காந்தி உடனே டி.7 அரசினர் தோட்டம் காவல் நிலையத்திற்கு இதுபற்றி தொலைபேசி மூலமாகப் புகார் செய்ய, அரசினர் தோட்டம் காவல் நிலையத்தினர் அவர்களை அழைத்துச் சென்று மொகைதீனிடம் எழுத்து மூலமாக புகார் பெற்று இரண்டு தரப்பினரையும் விசாரணை செய்து, இது வெறும் வாய்த் தகராறு என்பதால், இரு தரப்பினரையும் எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தனர். பணம் கொடுக்க வேண்டியவர்களிடம் கையூட்டு பெற்று குற்றவாளிகளை டி.7 அரசினர் தோட்ட காவல் நிலையத்தினர் அனுப்பிவிட்டதாக கூறுவது உண்மைக்குப் புறம்பானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களுடைய கோரிக்கையை ஏற்று திருத்துறைப்பூண்டி இயணைப்பு நிலையத்தில் உள்ள நீர் தாங்கி ஊர்தியை மாற்றி புதிய நீர் தாங்கி ஊர்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் உதிரி பாகங்கள் வாங்கி வழங்கப்பட வேண்டும் என்றுதான் கோரிக்கை வைத்தார். ஆனால், புதிய



நீர் தாங்கி ஊர்தியே வழங்க நான் உத்தாவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் ஜவ்வாது மலை, ஜமுனாமரத்தூர் காவல் நிலையத்தில் காவலர் எண்ணிக்கை குறைவாக இருப்பதாக இங்கே தெரிவித்தார். திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலை ஜமுனாமரத்தூர் காவல் நிலையத்திலுள்ள காவலர் எண்ணிக்கை குறைவாக உள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் தெரிவித்தார் என்பதை அடுத்து, இதைப்பற்றி நான் விசாரணை நடத்தினேன். இந்தக் காவல் நிலையத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட உதவி ஆய்வாளர், தலைமைக் காவலர், காவலர் நிலை–1 ஆகிய பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுள்ளன. காவலர் நிலை–2 பணியிடத்தில் மட்டும் 5 காலியிடங்கள் உள்ளன. இவற்றை நிரப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ம. அப்துல் லத்தீப்**: மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, ஜமுனாமரத்தூர் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ளது. நான் சொன்னது, ஜவ்வாதுமலை சத்திரம், காவலூர் சத்திரம், அது என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அதைத்தான் நான் குறிப்பிட்டேன். எனவே, அதைத் திருத்திச் சொல்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அப்துல் லத்தீப் மற்றும் திரு. ஜி. பழனிசாமி உள்ளிட்ட இன்னும் பல சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாடு காவல் துறை அமைச்சகப் பணியாளர்களின் கோரிக்கையை வலியுறுத்தி இங்கே பேசினார்கள்.

*பிற்பகல் 6–35*

1993 ஆம் ஆண்டு, தமிழ்நாடு காவல் துறையின் அமைச்சகப் பணியாளர்கள், தமிழ்நாடு காவல் நிர்வாகப் பணிகள் Tamil Nadu Police Administrative Service என்று தனியாக ஒரு பணியினை ஏற்படுத்தித் தரும்படி என்னிடம் ஒரு கோரிக்கை வைத்தார்கள். அதே கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தி, 1994 ஆம் ஆண்டு, கோயம்புத்தூரிலும் மனு கொடுத்தார்கள். இந்தக் கோரிக்கை என்னுடைய முந்தைய ஆட்சிக்காலத்தில் பரிசீலனை செய்யப்பட்டு வந்தது. அதற்குப் பின்னர் வந்த அரசால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. தற்போது, தமிழகக் காவல் துறையின் அமைச்சகப் பணியாளர்கள், அவர்களுடைய

கோரிக்கையினை மாற்றி தற்போது தமிழகக் காவல் துறையில் பணியாற்றும் விரல் ரேகை பதிவுக்கூடப் பணியாளர்களுக்கு–Finger Print Bureau Staff–க்கு கொடுக்கப்பட்டிருக்கும் executive status போன்று அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய இந்தக் கோரிக்கையினை இந்த அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் இன்று காலை பேசுகின்றபோது, பைசல் என்ற குற்றவாளி இரண்டு மாணவிகள் மீது திராவகம் வீசிய பிறகு கைது செய்யப்படவில்லை என்று கூறினார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும்போது, கன்னியாகுமரி மாவட்டத்தில் பள்ளி மாணவிகள் இருவர் மீது அமிலம் வீசி குற்றம் புரிந்த பைசல் என்ற குற்றவாளி இன்னும் கைது செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டார். ஆனால் இதில் உண்மை நிலை என்னவென்றால், இந்தக் குற்றவாளி நாகப்பட்டினம் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளான். அதன் பின்னர் கடந்த 19–8–2001 அன்று இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஆல்வின் என்ற மற்றொரு குற்றவாளியும், பைசல் என்ற சரணடைந்த குற்றவாளியும், குண்டர்கள் சட்டத்தின்கீழ் குற்ற எண் 21/2001 மற்றும் 22/2001 ஆகியவற்றின்படி தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதுவே, இந்த வழக்கின் தற்போதைய நிலை என்பதை திரு. ஹேமச்சந்திரன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் தமிழ்நாடு தீயணைப்புத் துறைக்கு வருகிறேன். மனிதன் முதன்முதலாக தீயின் பயனை அறிந்து கொண்டதை மனித சமுதாயத்தின் மிகப் பெரிய கண்டுபிடிப்பு என்று குறிப்பிடலாம். தீ மனித வாழ்க்கையோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகிறது. கற்கால வாழ்க்கையில், தீ எவ்வாறு முக்கியப் பொருளாக விளங்கியதோ, அதேபோன்று தற்போதைய நாகரிக வாழ்க்கையிலும் தீ இன்றியமையாத பொருளாகத் திகழ்கிறது.

பெருகிவரும் மக்கள் தொகை, பெரு நகரங்கள் மற்றும் சிறு நகர்கள் ஆகியவற்றின் வளர்ச்சி, வாகனங்கள் எண்ணிக்கை உயர்வு மற்றும் குடியிருப்புகள் அதிகரித்தல் ஆகிய நவீன யுகத்தின் வளர்ச்சி, தீயின் பயன்பாட்டினை அதிகரிக்கச் செய்திருப்பதோடு, அதனால் விளைகின்ற அபாயங்களையும் பெருகச் செய்துள்ளது. எளிதில் தீப்பற்றக்கூடிய பொருள்களான மண்ணெண்ணெய், பெட்ரோல், சமையல் எரிவாயு



போன்றவை அஜாக்கிரதையாகவும், முன்யோசனை இன்றியும் பயன்படுத்தப்படும்போது, தீ விபத்துகள் நடைபெற்று, மனிதர்களுடைய உயிர்களையும், உடைமைகளையும் அழித்து, பெரும் சேதத்தை விளைவிக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் தீ விபத்துகள் நடக்காமல் தடுப்பதற்கும், துரதிருஷ்டவசமாக அத்தகைய தீ விபத்துகள் நடந்தால், அவற்றின் வாயிலாக ஏற்படும் உயிர், உடைமை போன்றவற்றிற்கான சேதங்கள் குறைவாக இருக்கவும், தீயணைப்புத் துறை ஆற்றுகின்ற பணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

தீயணைப்புத் துறையினர், தீ விபத்துகளின்போது, விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று, தீயினுடைய கடுமையைக் குறைப்பதற்காகவும், அதனை முற்றிலும் தடுத்து நிறுத்துவதற்காகவும் தங்களுடைய உயிரையும் பொருட்படுத்தாது சேவை புரிகின்றனர். இதுமட்டுமின்றி, குறிப்பாக வெள்ளம், புயல், நிலச்சரிவு, கட்டடம் இடிந்து விழுதல், வெடிகுண்டு விபத்துகள், ரயில் மற்றும் பஸ் விபத்துகள் போன்ற இதர அபாய நிகழ்வுகள் நடக்கும்போதும், உயிர்களையும், உடைமைகளையும் இயற்கையின் சீற்றங்களிலிருந்து காப்பாற்றுகின்ற மீட்புப் பணிகளையும், இத்துறையினர் ஆற்றிவருகின்றனர். ஆகவே, தமிழ்நாட்டில் தீயணைப்புத் துறை இந்த ஆண்டு முதல் தமிழக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை என்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு இரு பெரும் சிறப்புகள் உள்ளன. இந்தியாவிலேயே முதன்முதலாக தீயணைப்புத் துறை தொடங்கப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்பது ஒரு சிறப்பு. மற்றொன்று, இந்தியாவில் தற்போது மொத்தமுள்ள சுமார் 2,000 தீயணைப்பு நிலையங்களில் 7–ல் ஒரு பகுதி தமிழ்நாட்டில்தான் உள்ளது. அதாவது 280 தீயணைப்பு நிலையங்கள் தற்போது தமிழ்நாட்டில் உள்ளன என்பது நம் மாநிலத்திற்கு உள்ள மற்றும் ஒரு சிறப்பாகும் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணியாற்றுகின்ற காவலர்களுக்கு உதவுகின்ற வகையில் அவர்களுக்கு தற்போது உணவுப்படியாக நாளொன்றுக்கு வழங்கப்பட்டு வருகின்ற 9 ரூபாய் நாளொன்றுக்கு 50 ரூபாயாக காவல் துறையில் வழங்கப்படுவது போலவே உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 6–40*

தற்போது வார விடுப்பு ஈட்டுப்படியாக–weekly off duty remuneration– நாளொன்றுக்கு வழங்கப்படுகின்ற 10 ரூபாய் நாளொன்றுக்கு 50 ரூபாயாக காவல் துறையில் வழங்கப்படுவது போலவே (மேசையைத் தட்டும் ஒலி) உயர்த்தி வழங்கப்படும். இந்த இரண்டு சலுகைகளுக்கும் சேர்த்து ஆண்டொன்றுக்கு 1 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவாகும்.

தற்போது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் கருணை அடிப்படையில் காவலர் பணி நியமனம் கோரி காத்திருப்புப் பட்டியலில் நிறைய பேர் உள்ளனர் என்பதைக் கருத்தில்கொண்டு, நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், 25–5–2001 ஆம் நாளிட்ட உள் துறை அரசாணை (நிலை) எண் 514 என்ற ஆணையைப் பிறப்பித்து, சிறப்பு இனமாக இத்துறையோருக்கு Fireman பணியிட நியமனம் வழங்க தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் இயக்குநருக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளேன்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் காவலர்கள் தங்கள் கடமையை மேலும் சிறப்பாக ஆற்ற வேண்டும் என்பதற்காக, 5–7–2001 ஆம் நாளிட்ட உள் துறை அரசாணை (நிலை) எண் 630 என்ற ஆணையை நான் பிறப்பித்தேன். அதன்படி, தீயை அணைப்பதிலும், மீட்புப் பணியிலும் மிகச் சிறந்த பணியினை ஆற்றியுள்ள தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையின் சார்நிலைப் பணியாளர்களுக்கு தீயணைப்புத் துறையில் சிறப்புப் பணிக்காக தமிழ்நாடு முதலமைச்சருடைய பதக்கம் வழங்கப்படும். ஒவ்வொன்றும் 8 கிராம் எடையுள்ள 22 காரட் தங்கத்தினால் ஆன மூன்று பதக்கங்கள் ஆண்டுதோறும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தீயணைப்பு காவல் நிலைய அலுவலர் Station Officer நிலையில் உள்ள அலுவலர்களுக்கு பதக்கத்துடன் 3000 ரூபாயும், முன்னணி தீயணைப்பு காவலர்களுக்கு Leading Fireman–க்கு பதக்கத்துடன் 2500 ரூபாயும், தீயணைப்புக் காவலர்களுக்கு– Fireman–க்கு பதக்கத்துடன் 2000 ரூபாயும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நாங்கள் பதவியேற்றவுடன், தீயணைப்புத் துறை ஆற்றுகின்ற பல்வேறு பணிகளைக் கருத்தில்கொண்டு, தீயணைப்புத் துறையின் பெயரை "தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை" என்று 2–7–2001 நாளிட்ட உள் துறை அரசாணை எண் 618 என்ற ஆணை பிறப்பிக்கச் செய்தோம். இனிமேல், இந்தத் துறையின் இயக்குநர் முதல் உதவி தீயணைப்பு நிலைய அலுவலர் வரை உள்ள அலுவலர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர் என்று அழைக்கப்படுவார்கள்.



தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை நல நிதியில் தற்போது அரசு மானியமாக 3 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அரசு மானியம் இனி 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பணியில் இருக்கும்போது உயிரிழக்கின்ற தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சார்ந்த அலுவலர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண நிதியாக தற்போது 2 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிவாரண நிதி இத்தகைய இனங்களில் அரசு குடும்ப நல நிதியின்கீழ் வழங்கப்படுகின்ற 1 இலட்சம் ரூபாயைத் தவிர, காவல் துறையில் வழங்கப்படுவது போலவே இனி 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, பணியில் இருக்கும்போது நிரந்தர ஊனம் அடைபவர்களுக்கு நிவாரண நிதியாக தற்போது வழங்கப்பட்டு வரும் 50,000 ரூபாய் இனி 100,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பணியில் இருக்கும்போது கடுமையான காயம் அடைபவர்களுக்கு நிவாரண நிதியாக தற்போது வழங்கப்பட்டு வரும் 10,000 ரூபாய் இனி 20,000 ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பணியில் இருக்கும்போது லேசான காயம் அடைபவர்களுக்கு நிவாரணத் தொகையாக தற்போது வழங்கப்படும் 5,000 ரூபாய் இனி 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கை மீது பல சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. ஜி.கே. மணி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. எச்.எம். ராஜு, திரு. மு. அப்பாவு உள்ளிட்ட 10 மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

இந்தத் துறை குறித்த அரசின் கொள்கை பற்றிய விளக்கம், கொள்கை விளக்கக் குறிப்பில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் கோரி, திரு. எம். ராம்குமார், திரு. மு. அப்பாவு, திரு. தி. வேல் முருகன், திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் உள்ளிட்ட 13 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் திறக்கப்பட வேண்டும் எனக் கோரி வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள்.

*பிற்பகல் 6-45*

பொதுவாக ஒரு இடத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்றால், அங்குள்ள மக்கள்தொகை, அருகிலுள்ள நிலையங்கள், தீ அபாயங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படுகிறது. மேலும் 25 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாக உள்ளது. இந்தச் சுற்றளவுக்குள் வேறு எங்காவது ஒரு நிலையம் இருந்தால், அங்கு இன்னொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் ஏற்படுத்துவது இயலாது.

திரு. ஐ. கணேசன், திரு. சி. ஞானசேகரன், திரு. மு. கார்த்தி உள்ளிட்ட 7 மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களிலும் பொதுவாகவே தமிழகத்தில் உள்ள இத்தகைய நிலையங்களிலும், புதிய தீயணைப்பு வண்டிகள் வழங்கப்பட வேண்டும் என்று வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் உள்ள அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களில், 326 நீர் தாங்கி வண்டிகளும், 36 தண்ணீர் லாரிகளும், 13 சிறிய ஊர்திகளும், அதிக திறனுள்ள 5 நவீன ரக ஊர்திகளும் தற்போது பயன்பாட்டில் உள்ளன. பொதுவாக தீயணைப்பு ஊர்திகளின் உழைப்புக் காலம் 10 ஆண்டுகள் ஆகும். உழைப்புக் காலம் முடிவடைந்த ஊர்திகளுக்குப் பதிலாக புதிய ஊர்திகள் மோட்டார் வாகனத் துறையின் தக்க ஆய்வுக்குப் பின்னரே வாங்கி வழங்க இயலும். தமிழகத்தின் அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களில் உள்ள மொத்த ஊர்திகளில் 22 நீர் தாங்கி வண்டிகளும், 3 தண்ணீர் லாரிகள் மட்டுமே உழைப்புக் காலம் முடிவடைந்து, அவற்றிற்குப் பதிலாக புதிய ஊர்திகள் வாங்க வேண்டிய நிலையில் உள்ளன. இதில் 18 நீர் தாங்கி வண்டிகள் 2 கோடியே 48 இலட்சம் ரூபாயில் வாங்கி வழங்கப்பட அரசு ஆணை இந்த அரசு பதவியேற்ற பிறகு 9-8-2001 நாளிட்ட உள் துறை அரசாணை எண் 757-ல் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எஞ்சியுள்ள 4 நீர் தாங்கி வண்டிகளுக்கும் 3 தண்ணீர் லாரிகளுக்கும் பதிலாக புதிய வாகனங்கள் வாங்கி வழங்க நிதி நிலையைக் கருத்தில் கொண்டு அரசு முடிவெடுக்கும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. இ. புகழேந்தி, திரு. ஐ. கணேசன், திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் ஆகியோர் பொதுவாக தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு நவீன உபகரணங்கள்



வாங்கி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள்.

பொதுவாக தமிழ்நாட்டில் அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களிலும் நீர் தாங்கி வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இவைமட்டுமின்றி, சென்னை மற்றும் இதர முக்கிய நகரங்களில் உள்ள நிலையங்களுக்கு நவீன தொழில்நுட்பம் கொண்ட தீயணைப்பு ஊர்திகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் நீர் தெளிப்பான்கள், புகையை வெளியேற்றும் கருவிகள், நச்சு வாயுவை கண்டுபிடிக்கும் கருவிகள், ஜெனரேட்டர் போன்றவை அடங்கும். இதன் அடிப்படையில் பார்க்கும்போது, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கு வெளிநாடுகளில் பயன்படுத்தப்படுவது போன்ற அதி நவீன ஊர்திகளும் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. இருந்தாலும் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களை மென்மேலும் நவீனமயமாக்க அனைத்து நடவடிக்கைகளையும் நிதிநிலைகேற்ப அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சக்ரபாணி, திரு. அசோகன், திரு. சிவராஜ் உள்பட 11 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் அரசு கட்டித் தர வேண்டும் என்று வெட்டுத் தீர்மானங்கள் அளித்துள்ளார்கள்.

11-வது நிதிக் குழு மூலம் 600 கோடி ரூபாய் செலவில் 34 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. மேலும் பாபநாசம், பெண்ணாகரம், வெள்ளக்கோயில், திருக்கழுக்குன்றம், கீழ்வேலூர், எடப்பாடி, பேராவூரணி, கீழ்பெண்ணாத்தூர் ஆகிய இடங்களில் உள்ள நிலையங்கள் புதிய சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்காக உரிய நிலத் தேர்வு நடவடிக்கை பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றது.

இந்தப் பணி முடிவடைந்தவுடன் அங்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர, நிதிநிலைமைக்கேற்ப அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். மேலும் சாத்தூர் மற்றும் வேட்டவலம் ஆகிய இடங்களில் நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்துள்ள நிலையில் 11-வது நிதிக்குழு அளித்த 600 கோடி ரூபாய் நிதியில் அங்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர செயற்குறிப்பு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இந்தத் துறையைச் சார்ந்த பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தரவேண்டுமென்று கோரி, திரு. ராம்குமார், திரு. ஜி.கே. மணி,

திரு. க. முருகவேல்ராஜன் மற்றும் திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் ஆகிய 4 சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள்.

*பிற்பகல் 6–50*

தீயணைப்புப் பணியாளர்களின் பணித் தன்மையைக் கருத்தில்கொண்டு, அவர்கள் அனைவரும் வாடகை இல்லா குடியிருப்புகளுக்குத் தகுதியுடையவர்கள் என்று அந்தத் துறை விதிகளில் உள்ளது. இருப்பினும் தற்போது குடியிருப்புகளின் தேவை 12.48 சதவீதம் மட்டுமே நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் குடியிருப்புகள் ஆண்டுதோறும் 100 என்ற எண்ணிக்கையில் கட்டித் தந்தால், அனைவருக்கும் கட்டி முடிக்க நீண்ட காலம் ஆகும் என்பதால், இந்த ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் சுமார் 6 கோடி ரூபாய் செலவில் 100 குடியிருப்புகளுக்குப் பதிலாக 200 குடியிருப்புகள் கட்டித் தர நான் முடிவெடுத்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு, மீட்புப் பணிகளுக்கு helicopter பயன்படுத்துதல், தீ விபத்து குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பணியாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட பயிற்சி, காலி பணியிடங்களை நிரப்புதல் போன்ற பொருள்கள் குறித்து சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் பல்வேறு வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மேம்பாட்டிற்காக பல்வேறு புதிய அறிவிப்புகளையும், புதிய திட்டங்களையும் நான் தற்போது வெளியிட்டிருக்கிறேன்.

மேலும் இந்தத் துறையின் முன்னேற்றத்திற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் கோரியுள்ள பல்வேறு கோரிக்கைகள் மீதும் அரசு கவனத்துடன் பரிசீலனை செய்து தக்க தருணத்தில் நிதி நிலைக்கேற்ப முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினரின் பணி மிகவும் கடினமானது, ஆபத்து நிறைந்தது. அதேபோன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரின் பணியும் பல்வேறு அபாயங்களைக் கொண்டுள்ளது என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். காவல் துறையினர்



அளிக்கும் பாதுகாப்பை வரவேற்கும் சமுதாயம், பொது அமைதிக்காக, காவல் துறையினர் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்போது அதே சமுதாயம் காவல் துறையின் செயல்பாட்டினை ஒட்டுமொத்தமாக வரவேற்பது இல்லை. மாறாக, சிலரது சொந்தப் பிரச்சினைகளில் சட்டத்தை நிலை நாட்டுவதற்கு காவல் துறை முற்பட்டால் அதைக்கூட சமுதாயம் தவறாகப் புரிந்துகொண்டு வெறுப்பதை நாம் காண்கிறோம்.

சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க வேண்டும் என்று பேசுவோர்கூட, சட்டம்-ஒழுங்கைக் காக்க காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கும்போது தமக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிட்டால் காவல் துறையினர் மீது எல்லையற்ற கசப்புணர்வையும், வெறுப்புணர்வையும் காட்டுகின்றார்கள்.

சட்டத்தின் முன்பு அனைவரும் சமம். ஆண்டியானாலும், அரசனானாலும் அவர்கள் சட்டம்-ஒழுங்கிற்குக் கேடு இழைத்தாலும், பிற குற்றங்களைப் புரிந்தாலும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதும், அவர்களுக்குரிய தண்டனையைப் பெற்றுத் தருவதும் காவல் துறையினரின் கடமையாகும். ஆனால் நாட்டில் சில பேர் இருக்கிறார்கள். ஆளும் பொறுப்பில் இருக்கும்போது இரும்புக்கரம் கொண்டு சமூக விரோதச் செயல்களை அடக்குவோம் என்று ஆணவ மொழி பேசுவார்கள். எதிரிகள் மீது பொய் வழக்கு ஜோடிக்க காவல் துறையினரைப் பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் செய்வார்கள். குற்றமற்றவர்களைக்கூட பொய் வழக்குகளில் கைது செய்து, சிறையில் அடைத்து மகிழ்வார்கள். குதூகலத்தில் மிதந்து, அதிகார மமதையில் தலை கால் தெரியாமல் ஆடுவார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) சட்டம் தன் கடமையைச் செய்கிறது என்று கிண்டல் மொழி பேசுவார்கள், கேலி செய்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் காலம் மாறி, காட்சிகள் மாறும்போது, அவர்கள் சாயம் வெளுத்துவிடுகிறது, அவர்கள் சுயரூபம் தெரிந்துவிடுகிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

எந்தக் காவல் துறையை வைத்து எதிரிகளைக் கேவலப்படுத்தினார்களோ, அதே காவல் துறை அவர்கள் செய்த ஊழலுக்காக கடமையை ஆற்றச் செல்லும்போது ஒத்துழைக்க மறுக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மைக்கு மாறாகப் பேசி, காவல் துறையினரின் மீது அவதூறுச் சேற்றை வாரி வாரி இறைக்கின்றார்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்**: பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேராசிரியர் அவர்களே, அவர்கள் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகத்தான் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: நான் பொதுவாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். I am not yielding. (Interruption) I am not yielding. நான் பேசி முடித்த பிறகு வேண்டுமானால் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அவர்கள் சொல்லி முடித்த பிறகு பேராசிரியர் அவர்கள் பேசலாம்.

*பிற்பகல் 6–55*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: காவல் துறையினரின் மீது வீண்பழி போட்டு பிரச்சினையைத் திசை திருப்ப வேண்டும் என்பதற்காக நாடகம் ஆடுகிறார்கள். உண்மைக்கு மாறானவைகளை நவீன யுத்திகள் மூலம் உண்மை போலக் காட்டி திட்டமிட்டே அவதூறுச் செய்திகளைப் பரப்புகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அடித்தார்கள், உதைத்தார்கள், குத்தினார்கள், தள்ளினார்கள், இடித்தார்கள் என்றெல்லாம் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அபாண்டமாக, நெறிமுறைகள் அறிந்த காவல் துறை உயர் அதிகாரிகளைக் கேவலப்படுத்துகிறார்கள், கொச்சைப்படுத்துகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறையைப் பற்றி அத்தகையோர் பரப்பிய அவதூறு, அக்கிரமச் செய்தி மிகக் கடுமையானது, கொடுமையானது. செய்த ஊழலை மறைக்கவும், அது மக்களுக்குச் சென்று சேராமல் திசை திருப்பவுமே இப்படிப்பட்ட நாடகங்கள் நடத்தப்பட்டன என்பதை நாட்டு மக்கள் இன்றைக்குத் தெளிவாக உணர்ந்து விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பிறர் மீது ஏவி பேரானந்தம் கண்டவர்கள் தனக்கென்று வந்ததும் ஓலம் இடுகிறார்கள். ஒப்பாரி வைக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பதவி மோகத்தில் ஒரு தலைமைக்கு இருக்க வேண்டிய நிதானத்தை கட்டிக் காக்க மறந்து விடுகிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) பின்னர் நிலை குலைந்து புலம்பி மக்களிடம் அனுதாபம் கிடைக்காதா என்று இலவு காத்த கிளியாக ஏங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களால் ஆட்சி அதிகாரம் பறிக்கப்பட்ட பின்பு அமைதி காக்க முடியாதவர்கள் ஆத்திரத்தின் பிடியில் சிக்கித் தவிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட



ஆட்சியை சதிச் செயல்கள் மூலம் சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்று கூக்குரல் எழுப்பி கவிழ்த்துவிட வேண்டும் என்பது அத்தகையோரின் கனவாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வன்முறையைத் தூண்ட, கலவர நெருப்பைப் பற்ற வைக்க அத்தகையோர் ஆலாய்ப் பறக்கும் நிலையைப் பார்த்து நமக்குப் பரிதாபம்தான் பிறக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டம்-ஒழுங்கைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் அவர்களும் மனிதர்கள்தானே என்பதை மறந்துவிட்டு காவல் துறையினரை மட்டுமின்றி அவரது குடும்பத்தினரையும் சொல்லவே நா கூசும் அநாகரிக வார்த்தைகளால் (மேசையைத் தட்டும் ஒலி) சிலர் திட்டித் தீர்க்கும்போது அதையும் பொருட்படுத்தாது அமைதி காத்து கடமை வீரர்களாய் பணியாற்றி பொதுமக்கள் மற்றும் நடுநிலையாளர்களின் பாராட்டுகளைப் பெற்றுள்ள காவல் துறையினரின் சமூகப் பொறுப்புணர்ச்சியை நான் பெரிதும் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சிரமங்களைப் பார்த்து நாங்கள் அசரவில்லை. மனம் தளரவில்லை. 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கு சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு, தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்ததை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். அதேபோன்று, தமிழக மக்களின் அமோக ஆதரவோடு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள நான், மீண்டும் தமிழ்நாடு, சட்டம்–ஒழுங்குப் பராமரிப்பில் முதன்மை மாநிலமாக விளங்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமின்றி, தமிழ்நாடு ஏனைய துறைகள் அனைத்திலும்கூட இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்வதற்கு இந்த அரசு தொடர்ந்து எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1996 ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிப் பொறுப்பை விட்டுச் சென்றபோது தமிழக கஜானாவில் உபரியாக நிதி இருந்தது. ஆனால் 2001–ல் மீண்டும் பதவியேற்றவுடன் மிக அதிக அளவு பற்றாக்குறை கொண்ட பட்ஜெட் போட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அவல நிலைக்கு யார் காரணம் என்பது இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு, ஏன் தமிழக மக்கள் அனைவருக்குமே தற்போது நன்றாகத் தெரிந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய தி.மு.க. ஆட்சியாளர்கள் செய்த நிர்வாகக் கோளாறினைச் சரிசெய்யும் பணியில் எங்கள் அரசு முழு வீச்சுடன் ஈடுபட்டுள்ளது. இந்தச்

திட்டங்களைத் தொடங்கி வைப்பதற்கும், அவர்களுக்கு மேலும் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் சிறிது கால அவகாசம் தேவை. எனினும் சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் காவல் துறை தொடர்பாக எழுப்பியுள்ள கோரிக்கைகள் அனைத்தும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, இந்தப் பொறுப்புகளை எல்லாம் செவ்வனே நிறைவேற்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அரசுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, தமிழக காவல் துறையினர் மேலும் சிறந்த முறையில் கடமையாற்ற தமிழக மக்களும் தங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

*பிற்பகல் 7–00*

மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த வேண்டாமெனக் கேட்டுக்கொண்டு, தமிழ்நாடு காவல் துறை மற்றும் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தொடர்பான மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு இந்த மாமன்றத்தைக் கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை குறித்து விளக்கமான கருத்துகளை இங்கே எடுத்து வைத்து, பதிலுரை ஆற்றியிருந்தாலும்கூட இடையில் அவர்கள் காவல் துறையின் செயலில் மாறுபாடு கொண்டு எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்ததன் காரணமாக, அந்த நிலை குறித்து விசாரிப்பதற்கான ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறபோது, அந்தக் கமிஷன் விசாரித்துத் தர வேண்டிய தீர்ப்பு எப்படி இருக்க வேண்டும் என்ற ஒரு எண்ண ஓட்டம் அவர்களுடைய மனதிலே பதியத்தக்க அளவிற்கு இங்கே அவர்கள் எதிர்க்கட்சியை, முன்னாள் முதல்வரையும், அவர்களைச் சார்ந்தவர்களையும், வேறு யாரும், கூறப்பட்ட அந்த விவரங்களில் இடம்பெறுவதற்கு வாய்ப்புப் பெறாத நிலையில் அவர்களைக் குறிப்பிட்டு, அவர்களை நினைவூட்டக்கூடிய அளவிற்கு நிகழ்ச்சிகள் குறித்து சொல்லப்பட்ட வார்த்தைகள் காரணமாக, அந்த நிலை ஏற்பட்டிருப்பதை நான் எதிர்க்கட்சித் தலைவராக உள்ள நிலையில் அதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் அதை மறுக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.



இந்த மறுப்பை நான் இந்த அவையில் பதிய வைக்கின்றேன். ஒருவேளை ஆளுங்கட்சி பெரும்பான்மை காரணமாக என்னுடைய மறுப்பு எடுபடாது என்ற எண்ணம் ஏற்படுகிற காரணத்தால் என்னுடைய மறுப்பைப் பதிவு செய்ய, நானும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் (குறுக்கீடு) சிரிப்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஒருவேளை கேலியாக இருந்தாலும் ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய மறுப்பை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சார்ந்த இயக்கத்தின் சார்பாக இப்படிப்பட்ட ஒரு பதிலை நான் முதலமைச்சரிடத்திலே எதிர்பார்க்கவில்லை என்றும் தெரிவித்துக்கொண்டு, வெளிநடப்பு செய்வதாக இந்த அவையிலே தெரிவித்து, வெளிநடப்புச் செய்கிறேன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திமுக-வினர் தற்போது மேற்கொண்டிருக்கின்ற வெளிநடப்பு என்பது ஏற்கெனவே நேற்றே அலுவல் ஆய்வுக் குழுவிலேயே தெரிவிக்கப்பட்டதைப் பேரவைத் தலைவர் அவர்கள் அறிவார்கள். பேராசிரியர் அவர்கள் எப்படி இருந்தாலும் வெளிநடப்புதான் செய்வோம் என்று நேற்றே தெரிவித்து விட்டார். திட்டமிட்டு வெளிநடப்புச் செய்திருக்கிறார்களேயொழிய, புரட்சித் தலைவியினுடைய பேச்சுக்காக வெளிநடப்பு என்பது கண்துடைப்பு என்பதை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விசாரணைக் கமிஷனைப் பாதிக்கக்கூடிய வகையிலோ, யாருடைய பெயரையும் குறிப்பிட்டோ எதுவும் சொல்லாமல் மிக எச்சரிக்கையாக, மிகக் கவனமாக, வார்த்தைகளைப் பக்குவமாகப் பயன்படுத்தினார்கள். இருந்தாலும் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பதைப்போல அவர்களாகவே ஒன்றைச் சொல்வது என்பது சரிப்பட்டதல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் இத்தகைய போக்கைப் பின்பற்றக்கூடாது என்பதைப் பேரவைத் தலைவர் என்கிற முறையிலே நான் அறிவுறுத்த விரும்புகின்றேன். மாண்புமிகு திரு. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தோடு பல்வேறு அறிவிப்புகளை எல்லாம் இங்கே செய்திருக்கிறார்கள். அந்த அறிவிப்புகளினூடே உண்மையின் அடிப்படையிலேயும், நியாயத்தின் அடிப்படையிலேயும் சில கோரிக்கைகளைத் தொடர்ந்து வைக்க நான் முன்வருகின்றேன். தமிழ்நாடு முழுவதுமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட மகளிர் காவல் உதவி ஆய்வாளர்களை நியமனம் செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். 1981 ஆம் ஆண்டு மகளிர் காவல் நிலையங்களிலே ஏறக்குறைய 20,30 நபர்கள் என்று கருதுகிறேன், அவர்கள் எல்லாம் 1981 ஆம் ஆண்டு Grade- I Constable-களாக நியமனம் செய்யப்பட்டு சிலபேர் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள், சார்பு ஆய்வாளர்களாக. ஆகவே, தகுதியுடைய பட்டதாரிகளாக இருக்கக்கூடியவர்கள் விளையாட்டு வீராங்கனைகளாகச் சான்றிதழ் பெற்றவர்கள் எல்லாம் இருக்கிற காரணத்தினாலே அவர்கள் தகுதியுள்ள காரணத்தால் அவர்களுக்கு உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு வழங்கப்படுமா என்று கேட்டுக்கொள்கிற அதேநேரத்தில், மத்திய அரசுக்கு இணையான ஊதியம் என்று சொல்லி வழங்கப்படுவதாக முதலமைச்சர் அறிவித்தார்கள். அந்த அடிப்படையிலே காவல் நிலையங்களிலே பணியாற்றக்கூடிய உதவி ஆய்வாளர்கள் B.S.F., C.R.P.F.-லே இருக்கக்கூடியவர்களுக்கு அடிப்படைச் சம்பளத்திலே, Basic Pay-லே சற்று குறைவாக இருக்கின்றது, உதவி ஆய்வாளர்களுக்கு. ஆகவே, அவற்றை நிவர்த்தி செய்வதற்கு முன்வர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, இன்னொன்று காவல் நிலையங்களிலே பணியாற்றக்கூடிய பெண் துப்புரவுப் பணியாளர்களுக்கு சென்னை மாநகரத்திலே மட்டும் 440-லேயிருந்து 900 ரூபாய் தொகுப்பு ஊதியம் வழங்குவதாக அறிவித்திருக்கிறார்கள். அதைப்போலவே, தமிழ்நாடு முழுவதிலும் இருக்கக்கூடிய அனைத்து காவல் நிலையங்களிலும் பணியாற்றக்கூடிய அந்தப் பெண் துப்புரவுப் பணியாளர்களுக்கும் அதை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

*பிற்பகல் 7–05*

**திரு. ஆஸ்டின்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஆஸ்டின், வெளிநடப்பு செய்கிறீர்கள், அவ்வளவுதானே? தாராளமாகப் போய்விட்டு வாருங்கள். இதுதான் உங்களுடைய முடிவாக இருக்கும் என்பது தெரியும். தாராளமாகப் போய்விட்டு வாருங்கள். நான் உவமை சொன்னால்



கோபித்துக்கொள்வீர்கள். நான் நேற்றே ஓர் உவமை சொன்னேன்; கோபித்துக்கொண்டீர்கள். நீங்கள் தாராளமாகப் போய்விட்டு வாருங்கள்.

*(திரு. ஆஸ்டின் அவையைவிட்டு வெளியேறினார்)*

இந்தப் பேரவைக்கு ஒன்றை மகிழ்ச்சியோடு நான் தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைத் தலைவர் என்ற முறையிலே தெரிவிக்க விரும்புகிறேன். இதுவரைக்கும் மானியக் கோரிக்கைகளிலே உறுப்பினர்கள் தந்த வெட்டுத் தீர்மானங்களுக்கு முழுமையாகப் பதில் சொல்லி யாரும் பேசியதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள்தான், இரண்டாவது முறையாக அதை இங்கே செய்திருக்கிறார்கள். இத்தகைய ஒரு நல்ல முன்மாதிரியை சட்டமன்றத்திலே அரங்கேற்றியவர்கள் நம்முடைய முதலமைச்சர்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 15 – காவல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி, இருக்கையில் இல்லை.

திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆஸ்டின், இருக்கையில் இல்லை.

திரு. ஆஸ்டின் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.



**திரு. ஐ. கணேசன்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. து. நெப்போலியன், இருக்கையில் இல்லை.

திரு. து. நெப்போலியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1102,58,85,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 16 – தீயணைப்புப் பணிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மானியக் கோரிக்கை எண் 16 – தீயணைப்புப் பணிகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம்.ராஜு.



**திரு. எச்.எம். ராஜு**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி, இருக்கையில் இல்லை.

திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை.

திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.55,69,74,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 3–9–2001, திங்கட்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7–09 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*50. 1999–2000 ஆம் ஆண்டிற்கான திருநெல்வேலி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*51. 1999–2000 ஆம் ஆண்டிற்கான மதுரை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*52. 1999–2000 ஆம் ஆண்டிற்கான நீலகிரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*53. 1999–2000 ஆம் ஆண்டிற்கான கன்னியாகுமரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*54. 1999–2000 ஆம் ஆண்டிற்கான நாமக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*43. வணிக வரிகள் துறையில் 2–6–2000 அன்று உருவாகி, 2–6–2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(1)வ.வ/45 (ஐ–3) 2000 ஆம் எண் அறிவிக்கையில் 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) கீழ் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 30–5–2001 ஆம் நாளிட்ட 54 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.*

44. மானியக் கோரிக்கை எண் 15 – தமிழ்நாடு காவல் துறையின் 2001–2002 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ்)

45. மானியக் கோரிக்கை எண் 16 – தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

46. மானியக் கோரிக்கை எண் 24 மற்றும் 53 – பெருந் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

47. தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

48. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

49. சர்க்கரைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு I

(38 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் – 15

## காவல் துறை கொள்கை விளக்கக் குறிப்பு

## 2001 – 2002

### 1. முகவுரை

சட்டம்—ஒழுங்கு பராமரிப்பு என்பது, அமைதியை நிலை நாட்டச் செய்வதற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். அப்போதுதான் மாநிலத்தின் மற்றும் பொது மக்களின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியையும், மேம்பாட்டையும் உறுதி செய்ய இயலும். ஒழுங்கு, அமைதி, சமுதாய நல்லிணக்கம் ஆகியவற்றைப் பேணிக்காத்து, மாநிலத்திலுள்ள நலிந்த பிரிவினர் மற்றும் மகளிரின் உரிமைகளைப் பாதுகாக்கும் உன்னதப் பணியை நிறைவேற்ற அரசுக்கு உதவி புரிவதில் தமிழ்நாடு காவல் துறை முக்கியப் பங்காற்ற வேண்டியுள்ளது.

நவீன முறையில் புதிய உத்திகளைக் கையாண்டு இழைக்கப்படும் குற்றங்களின் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் காவல் படைப் பிரிவை நவீனமாக்குதல், மேம்படுத்தப்பட்ட மனிதவளம், இருபாலினருக்கும் செயல்திறனூட்டும் பயிற்சி மற்றும் மனிதநேய அணுகுமுறை ஆகியவற்றின் மூலம் காவல் படையினரின் செயல்திறனை மேம்படுத்த, தமிழ்நாடு காவல் படைப் பிரிவு முடுக்கிவிடப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு காவல் துறை, மாநிலத்தில் சட்டம்—ஒழுங்கைப் பராமரிப்பது மட்டுமின்றி போதைப் பொருட்கள், மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவற்றைக் கள்ளத்தனமாகக் கடத்துதல், குடிமைப் பாதுகாப்பு, குடிமை உரிமைகள், மனித உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாத்தல், வீடியோ திருட்டு, பொது விநியோக முறையின்கீழ் வரும் பொருட்களை வேறு பயன்களுக்காக எடுத்துச் செல்லுதல், பொருளாதாரக் குற்றங்கள், சிலைத் திருட்டு, சிறார்கள் புரியும் குற்றங்கள், சமுதாயக் குற்றங்கள் போன்ற சமூகப் பிரச்சினைகள் காரணமாக எழும் குற்றங்களையும் காவல் துறை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளதோடு, போக்குவரத்தை முறைப்படுத்துதல், சாலைப்

பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

"உலகில் உள்ள உயரிய தொழில் முனைத்திறனுடன் பணியாற்றும் சட்டத்தை செயல்படுத்தும் எந்தவொரு அமைப்புடனும்" ஒப்பிடத்தக்க வகையில் தமிழ்நாடு காவல் படையானது தன்னைத்தானே மாற்றியமைத்துக்கொள்ளும் செயலில் ஈடுபட்டுள்ளது.

## 2. காவல் துறையின் நிருவாக அமைப்பு

### 2.1. உயர்நிலை நிருவாகம்

காவல் துறைத் தலைமை இயக்குநர், தமிழ்நாடு காவல் துறையின் ஒட்டுமொத்த நிருவாகப் பொறுப்பை வகித்து வருகிறார். அவருக்கு உதவியாக, அவரது அலுவலகத்தில் காவல் துறை கூடுதல் இயக்குநர் (சட்டம்—ஒழுங்கு), காவல் துறைத் தலைவர் (தலைமையிடம்), காவல் துறைத் தலைவர் (நிருவாகம்), காவல் துறைத் தலைவர் (சட்டம்—ஒழுங்கு) ஆகியோர் பணியாற்றுகின்றனர். இம்மாநிலத்தில், சட்டம்—ஒழுங்கு பராமரிப்பு தொடர்பான அனைத்து விஷயங்களில், காவல் துறை தலைமை இயக்குநருக்கு, சென்னையிலுள்ள காவல் துறை கூடுதல் இயக்குநர் (சட்டம்—ஒழுங்கு), காவல் துறைத் தலைவர் (சட்டம்—ஒழுங்கு) மற்றும் மதுரையிலுள்ள காவல் துறைத் தலைவர் (தென்மண்டலம்) ஆகியோர் உதவியாகப் பணிபுரிகின்றனர்.

காவல் துறைத் தலைவர் (தலைமையிடம்), காவல் துறைத் தலைவர் (நிருவாகம்) ஆகியோர் காவல் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனித்து வருகின்றனர். இது தவிர, காவல் துறை செயல்பாட்டுக்கான தேவைகள் மற்றும் திட்டங்கள் குறித்த பணிகளையும் இவர்கள் செய்து வருகின்றனர்.

காவல் துறைத் தலைவர் (தொழில்நுட்பப் பிரிவு), காவல் வானொலித் தகவல் அளித்தல், காவல் துறை கணிப்பொறிப் பிரிவு, மாநில விரல்ரேகைப் பதிவுப் பிரிவு போன்ற தொழில்நுட்பப் பணிகளுக்கு பொறுப்பு வகிக்கிறார்.

காவலர் பயிற்சிப் பிரிவு காவல் துறை இயக்குநர் ஒருவரின் தலைமையின்கீழ் இயங்குகிறது. காவல் துறைத் தலைவர் (பயிற்சி) இவருக்கு உதவியாகப் பணியாற்றி வருகிறார். காவல் துறை இயக்குநர் பதவித் தரத்திலான அதிகாரி ஒருவர், சென்னையிலுள்ள தமிழ்நாடு காவலர் பயிற்சிக் கழகத்திற்கு பொறுப்பு வகிக்கிறார்.





தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், காவலர் குடியிருப்புகளையும் / காவல்படை குடியிருப்புகளையும் கட்டும் பணியை மேற்கொள்வதோடு, காவல் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு "சொந்த வீடு பெறும் திட்டத்தின்" கீழ், அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் பணியையும் மேற்கொள்கிறது. இக்கழகத்திற்கு காவல் துறை கூடுதல் இயக்குநர் பதவித் தரத்திலான அதிகாரி ஒருவர், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராகப் பணியாற்றி வருகிறார்.

காவல் துறை கூடுதல் இயக்குநர்கள் இருவர், குற்ற நிகழ்வுகளைத் தடுக்கும் பிரிவிற்கும், குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கும் பொறுப்பாவார்கள். இவர்கள், ஒரு மாவட்டத்திற்கு மேற்பட்ட பகுதிகளில் அல்லது மாநில எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் உள்ள காவல் நிலையங்களில் பதிவாகியுள்ள குற்ற வழக்குகளின் புலன் விசாரணையை மேற்பார்வையிட்டு வருகின்றனர்.

மது விலக்கு அமல்பிரிவு காவல் துறை கூடுதல் இயக்குநர், சென்னை மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டத்தை செயல்படுத்தும் பணிக்குப் பொறுப்பு வகிக்கிறார். காவல் துறைத் தலைவர் பதவித் தரத்திலான அதிகாரி ஒருவர், சென்னையிலுள்ள குடிமைப் பொருள் புலனாய்வுத் துறைக்கு பொறுப்பு வகிக்கிறார்.

காவல் துறை கூடுதல் இயக்குநர் (பொருளாதாரக் குற்றங்கள் பிரிவு), பொருளாதாரக் குற்றங்களைக் கண்டுபிடித்து, அவை தொடர்பான புலன் விசாரணையை நடத்தும் பணிக்கு பொறுப்பு வகிக்கிறார். சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவு, வணிகக் குற்றங்கள் விசாரணைப் பிரிவு (சிசிமிபி) மற்றும் காவல் ஆராய்ச்சி மையம் ஆகிய பிரிவுகள் இவருடைய நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றன. வங்கிசாரா நிதி நிறுவனங்கள், பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் தொடர்பான வழக்குகளின் விசாரணையையும் அவர் கண்காணிக்கிறார். காவல் துறைத் தலைவர், பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு—மி காவல் துறைத் தலைவர், பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு—மிமி (நிதி நிறுவனங்கள்) ஆகியோரும் இவருடைய நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் பணிபுரிகின்றனர்.

காவல் துறை கூடுதல் இயக்குநர் (நுண்ணறிவு), மாநிலப் பாதுகாப்பு தொடர்பான பயனுள்ள தகவல்களைத் திரட்டி தொகுத்துப் பரிமாறுவது ஆகிய சிறப்புப் பிரிவின் பணிகளையும் கவனித்து வருவதோடு, மாநிலத்திற்கு வருகைதரும் மிக முக்கிய நபர்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான முக்கிய அமைப்புகள் ஆகியவற்றின் பாதுகாப்பு ஏற்பாட்டுப் பணிகளையும் ஒருங்கிணைக்கிறார். தீவிரவாதிகள், போராளிகள்

[2001 செப்டம்பர் 1

ஆகியோரது சதிச் செயல்களைக் கண்காணித்து, அவர்களது நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான தீவிர நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க காவல்துறை கூடுதல் இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழும் வழிகாட்டுதலின் கீழும், "க்யூ" பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை காவல் துறை கண்காணிப்பாளர் பணியாற்றி வருகிறார்.

மாநிலத்தின் கடலோரப் பகுதி நெடுகிலும், கடலோரக் காவல் பணிகளை காவல் துறை கூடுதல் இயக்குநர் தலைமையிலான கடலோரப் பாதுகாப்புப் பிரிவு கவனித்து வருகிறது.

காவல் துறைத் தலைவர், மனித உரிமைகள்/ சமூக நீதி புலானாய்வுத் துறையின் தலைமையிலுள்ள தீண்டாமை ஒழிப்புப் பிரிவின் சீரிய பணிகளை காவல் துறை கூடுதல் இயக்குநர் (சமூக நீதி குற்றப் புலனாய்வுப் பிரிவு) மேற்பார்வையிடுகிறார். இப்பிரிவு, மாநிலத்தில் 1989 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கு பொறுப்பு வகிக்கிறது.

ஆவடியில் உள்ள சிறப்புப்படை மையமும் மற்றும் 11 ஆயுதப்படைப் பிரிவுகளும், காவல் துறைத் தலைவரின் (ஆயுதப்படை) கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

காவல் துறைத் தலைவர் (இரயில்வே), இரயில்வேக்கு பாதுகாப்பு அளிக்கும் பொறுப்பை வகிக்கிறார். இவர் இம்மாநிலத்தில் அரசு இரயில்வே காவல் படையினரின் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.

காவல் துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்புத் துறை ஆகியவற்றில் சீருடைப் பணியாளர் நியமனத்தை ஒருமுகப்படுத்தி சீரான நியமனத்திற்கு வழிவகுக்கும் வகையில், காவல் துறை இயக்குநர் தலைமையில் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஒன்று அரசால் ஏற்படுத்தப்பட்டது.

காவல் துறை கூடுதல் இயக்குநர் [உள்நாட்டு (Civil) பாதுகாப்புப் பயிற்சி] தமிழ்நாட்டில் உள்நாட்டு பாதுகாப்பு உட்பட ஊர்க்காவல் படைக்குப் பொறுப்பு வகிக்கிறார். காவல் துறைத் தலைவர் / சிவில் பாதுகாப்பு இயக்குநர், சென்னை ஊர்க்காவல் படைத் துணைத் தளவாய் ஆகியோர் காவல் துறை கூடுதல் இயக்குநருக்கு உதவியாகப் பணியாற்றி வருகின்றனர்.

தமிழ்நாட்டில் அனுமதிக்கப்பட்ட இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த பணியாளர்களின் எண்ணிக்கை 214 ஆகியிருக்க, 2001 ஆம் ஆண்டில்



2001 செப்டம்பர் 1]

நியமிக்கப்பட்ட இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த நான்கு அலுவலர்கள் உட்பட, 30.6.2001ஆம் நாள் நிலவரப்படி பணியிலிருந்த அலுவலர்களின் எண்ணிக்கை 178 ஆகும். 2000 ஆம் ஆண்டில், இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த ஐந்து அலுவலர்கள் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். பதவி உயர்வு ஒதுக்கீட்டின்கீழ் இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த நான்கு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். 2001 ஆம் ஆண்டில் இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த ஆறு அலுவலர்கள், வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றனர்.

தமிழ்நாடு காவல் துறையில், செயல் அலுவலர்கள், அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் தொலைத்தொடர்புப் பிரிவுப் பணியாளர்கள் 31.07.2001 ஆம் நாளன்று நிலவரப்படி 98,358 ஆகும். (இணைப்பைக் காண்க) தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பிரிவைச் சேர்ந்த 11 பிரிவுகளில் சேமக் காவல் படைப் பிரிவைச் சேர்ந்த 223 காலாட் படைப் பிரிவுகளும், சட்டம்— ஒழுங்கைப் பராமரிப்பதில் உள்ளூர் காவல் துறையினருக்கு நிறம்பட உதவுகின்றன. இதில் ஓர் ஆயுதப்படைப் பிரிவு, திகார் சிறைச்சாலை வளாகத்திற்குப் பாதுகாப்பு அளிக்க புதுதில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## 2.2. காவல் துறையில் உள்ள சிறப்புப் பிரிவுகள்

காவல் துறையிலுள்ள சிறப்புப் பிரிவுகள் குறித்த விவரம் வருமாறு:

1. அதிரடிப்படை மற்றும் அதிரடிப்படைப் பள்ளி
2. அதிவிரைவுப் படை
3. கோவில் பாதுகாப்புப் படை
4. இரயில்வே காவல் படை
5. விமான நிலையப் பாதுகாப்புப் படை
6. கடலோரப் பாதுகாப்புப் படை
7. மதுவிலக்கு அமல் பிரிவு
8. நாய்ப் படைப் பிரிவு
9. குதிரைப் படைப் பிரிவு
10. விபச்சாரத் தடுப்புப் பிரிவு

11. இளங்குற்றவாளிகளைச் சீர்திருத்த உதவி புரியும் காவல் பிரிவு

12. காவல் சுருக்கெழுத்துக் கூடம்

13. ஊர்க்காவல் படை

14. உள்நாட்டுப் பாதுகாப்பு

15. சமூக நீதி

16. கொள்ளைத் தடுப்புப் பிரிவு

17. வீடியோ திருட்டுத் தடுப்புப் பிரிவு

18. நுகர்பொருள் வழங்கல் புலனாய்வுத் துறை

19. சிறப்பு அதிரடிப்படை

20. போதைப் பொருள் நுண்ணறிவு — புலனாய்வுத் துறை

21. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்

22. பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு—I

அ) வணிகக் குற்றங்கள் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு (CCIW)

ஆ) சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவு

23. பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு-II (நிதி நிறுவனங்கள்)

24. தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணி

25. நுண்ணறிவுப் பிரிவு

(அ) தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

(ஆ) பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

(இ) "க்யூ" பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

(ஈ) சிறப்புப் பிரிவு

26. தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கூடம்

27. காவல் துறை கணினி பிரிவு

28. காவல் ஆராய்ச்சி மையம்



**அதிரடிப்படை மற்றும் அதிரடிப்படைப் பள்ளி**

தமிழ்நாடு அதிரடிப்படை மற்றும் அதிரடிப்படைப் பள்ளி ஆகியவை 24.01.1997 அன்று அமைக்கப்பட்டன. தமிழ்நாடு அதிரடிப்படையில், ஒரு காவல்துறை கண்காணிப்பாளர், மூன்று காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள், எட்டு காவல் துறை ஆய்வாளர்கள், இரண்டு காவல் துறை ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்), முப்பத்தி ஆறு உதவி ஆய்வாளர்கள், நான்கு உதவி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்), ஏனைய 228 காவல் துறைப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். தமிழ்நாடு அதிரடிப்படைப் பள்ளியில் ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளர், ஒரு காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர், ஒரு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர், 11 ஆய்வாளர்கள், 22 உதவி ஆய்வாளர்கள், ஏனைய 90 காவல் துறைப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

காவல்துறைப் பணியாளர்களுக்கு 2000 மற்றும் 2001 (ஜூன் திங்கள் வரையில்) ஆண்டுகளில் நடத்தப்பட்ட சில முக்கிய பயிற்சிகள்:—

1. அதிரடிப் படைப் பயிற்சி

2. சிறப்பு அதிரடிப் படைப் பயிற்சி

3. பயங்கரவாதத் தடுப்புப் பயிற்சி

4. விமானம் கடத்துவதற்கெதிரான தடுப்பு நடவடிக்கை, விமானநிலையப் பாதுகாப்பு மற்றும் அதிரடிப் படைப் பிரிவுப் பயிற்சிகள்

5. வைக்கப்பட்டுள்ள வெடிகுண்டுகளைக் கண்டறிந்து செயலிழக்கச் செய்து அங்கிருந்து அகற்றுதல் தொடர்பான பயிற்சி

6. ஆயுதமின்றிப் போரிடும் பயிற்சி

7. மிக முக்கிய நபர்களின் பாதுகாப்புப் பயிற்சி

தமிழ்நாடு அதிரடிப்படைப் பள்ளி தமிழக காவல் துறைப் பணியாளர்களுக்கும், பிற மாநில காவல் படையினருக்கும் பயிற்சி அளித்துள்ளது.

**அதிவிரைவுப்படை**

மாநிலத்தில் இனக் கலவரம்/வன்முறை ஏதேனும் ஏற்படுமாயின், அதனைக் கட்டுப்படுத்துவதற்காக, 1997ஆம் ஆண்டில் அதிவிரைவுப் படை

உருவாக்கப்பட்டது. கலவரத்தைக் கட்டுப்படுத்துதல், திறநுட்பப் பயிற்சி, தீயணைப்பு நடவடிக்கைகள், மீட்புப் பணிகள், முதலுதவிப் பணிகள், மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு ஆகியவற்றில், அதிவிரைவுப் படையைச் சேர்ந்த பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இந்த அதிவிரைவுப் படையைச் சேர்ந்த காவல் பணியாளர்கள், இனக் கலவரங்களை அடக்குவதற்கும், தீவிரவாதிகள் தொடர்பான விஷயங்களைக் கவனிக்கவும், வெவ்வேறு தன்மையையுடைய பெரிய அளவிலான சட்டம்—ஒழுங்கு குறித்த முக்கியப் பிரச்சினைகளை ஒடுக்குவதற்கும் பயன்படுத்தப்படுகின்றனர்.

### கோவில் பாதுகாப்புப் படை

இப்படையில், 1000 இரண்டாம் நிலைக் காவலர்களும், 3000 முன்னாள் இராணுவ வீரர்களும் பணிபுரிகின்றனர். இக்கோவில் பாதுகாப்புப் படை, கோவில்களுக்கும், அவற்றின் சொத்துக்களுக்கும் பாதுகாப்பு அளித்து வருகிறது.

### இரயில்வே காவல் படை

இரயில்வே காவல் படை, இம்மாநிலம் முழுவதும் தன்னுடைய அதிகாரவரம்பினைக் கொண்டுள்ளது. இப்படையின் கீழ், 31 இரயில்வே காவல் நிலையங்களும், 26 புறக் காவல் நிலையங்களும் இயங்கி வருகின்றன. இந்த இரயில்வே காவல் படையின் பணிகள், தங்கச் சங்கிலி திருட்டு, பயணமூட்டை திருட்டு, இரயில் கொள்ளை, இரயில் நிலையங்களிலும், ஓடும் இரயிலிலும், ஆதாயத்திற்காகச் செய்யப்படும் கொலை போன்ற குற்றங்கள் ஏற்படாவண்ணம் பாதுகாக்கவும், அவ்வாறு ஏற்பட்டிருக்குமாயின் அவற்றைக் கண்டுபிடிக்கவும் பயன்படுத்தப் படுகின்றன.

### விமான நிலையப் பாதுகாப்பு

சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் விமானங்கள், விமான நிலைய முனையங்கள் மற்றும் அதன் உள் கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை பாதுகாப்பதும், விமான நிலையத்தில் நாச வேலை நடக்காமல் தடுப்பதும், விமானக் கடத்தலைத் தடுப்பதும், விமான நிலையப் பாதுகாப்புப் படையினரின் பொறுப்பாகும்.



### கடலோரப் பாதுகாப்பு படை

எரிபொருள், மருந்துப் பொருட்கள், போதைப் பொருட்கள், வெடி மருந்துகள், துப்பாக்கிகள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் ஆகியவற்றை தமிழ்நாடு கடலோரப் பகுதியிலிருந்து இலங்கைக்குக் கடல் வழியாகக் கடத்துவதைத் தடுத்தல், போராளிகளின் ஊடுருவலைத் தடுத்தல், மீனவர்கள், போராளிகள் மற்றும் கடத்தல்காரர்களுக்கும் இடையே ஏற்படக் கூடிய கூட்டுச் சதித்திட்டங்களை முறியடித்தல் போன்ற பணிகளைக் கவனிப்பதற்காக தமிழ்நாடு அரசு கடலோரப் பாதுகாப்புப் படையை உள் (காவல்—15) துறையின் 27—6—1994 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 718—ன்படி ஏற்படுத்தியுள்ளது. இதன் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ளது. இது ஐந்து மண்டல அலுவலகங்களைக் கொண்டுள்ளது. அவை நாகப்பட்டினம், வேதாரண்யம், பட்டுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. சோதனைப் பணிகளைத் திறம்பட மேற்கொள்ளும்பொருட்டு, தமிழ்நாடு கடலோரப் பகுதி நெடுகிலும் அறுபது கடலோரச் சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டுள்ளன.

கள்ளத்தனமாக குடிபுகுவோர்களின் நடமாட்டத்தையும், கள்ளக் கடத்தல் நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்காக, கோடியக்கரையில் 40 அடி உயரத்தில் காவல் கோபுரம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. கடலோரப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த அதிகாரிகளும், பணியாளர்களும், கடலோரச் சோதனைச் சாவடிகள், கடலோர ரோந்துக் காவல் பணிகள் ஆகியவற்றின் மூலம் காவல் பணியை விழிப்புடன் மேற்கொள்ளும் காரணத்தால், இலங்கைப் போராளிகளின் தங்குதடையற்ற நடமாட்டம் முற்றிலுமாகத் தடுக்கப்பட்டுள்ளது.

### மதுவிலக்கு அமல் பிரிவு

அனைத்து வகை கள்ளச்சாராய நடவடிக்கைகளிலிருந்து தமிழ்நாட்டைப் பாதுகாக்கும்பொருட்டு தமிழ்நாடு அரசு, மதுவிலக்கு கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. இப்பிரிவு, மாநில அளவில் காவல் துறை கூடுதல் இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. இந்த மதுவிலக்கு அமல் பிரிவுகள், மாவட்டக் கண்காணிப்பாளர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன. மேலும், அவர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் மதுவிலக்குச் சட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்தும் பொறுப்பையும் கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு முழுவதிலும் 86 மதுவிலக்கு அமல் பிரிவுகள் உள்ளன. இவை ஒவ்வொன்றும், காவல் துறை ஆய்வாளரின் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. மதுவிலக்கு அமல் சட்டத்தின் செயல்பாட்டை மேற்பார்வையிடுவதற்காக, 37 காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்களும். 37 காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்களும் பணியமர்த்தப்பட்டனர். இப்பிரிவின் முக்கிய பணி என்னவெனில் கிராம கள்ளச்சாராயத் தடுப்புக் குழுக்களின் துணையுடன் கள்ளச்சாராயம் காய்ச்சுவதையும், கள்ளச்சாராயம் மற்றும் போலி மதுபானங்களின் விற்பனையையும் அறவே ஒழிப்பதே ஆகும்.

சாராயம் அருந்துவதால் ஏற்படும் மரணங்களுக்கு முக்கியக் காரணம் "மெத்தனால்" என்ற இரசாயனப் பொருளே என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்த இரசாயனப் பொருளை வாங்குவது, எடுத்துச் செல்வது ஆகிய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கென பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கென 21 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

**நாய்ப் படை பிரிவு**

காவல் துறையிலுள்ள நாய்ப் படை பிரிவைச் சேர்ந்த நாய்கள், குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. வெடிமருந்துப் பொருட்களை கண்டறிவதில் பயிற்சியளிக்கப்பட்ட மோப்ப நாய்களின் பணிகள், வெடிகுண்டுகளைக் கண்டறிவதிலும், முக்கிய மற்றும் மிக முக்கிய நபர்கள் ஆகியோருக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணிகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. காவல்படையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ், நாய்கள் வாங்குவதற்கும், அனைத்து மாவட்டங்கள், மாநகரங்களில் நாய்ப் படை பிரிவுகளை அமைப்பதற்குமென, அரசு ரூ.16.20 இலட்சம் வழங்கியுள்ளது.

**குதிரைப் படை பிரிவு (Mounted Branch)**

சென்னை மாநகரிலும், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாநகரங்களிலும் குதிரைப் படைப் பிரிவுகள் உள்ளன. பெண்களைக் கேலி செய்தல், தங்கச் சங்கிலியைத் திருடுதல் போன்ற நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும், சமூக விரோதச் சக்திகளின் நடமாட்டத்தை ஒடுக்குவதற்குமென சென்னை மாநகரிலுள்ள இந்த குதிரைப் படைப் பிரிவு, சென்னை மெரினா கடற்கரையில் காலையிலும் மாலையிலும் நாள்தோறும் ரோந்துக் காவல் பணிபுரிகின்றது.



**விபச்சாரத் தடுப்பு பிரிவு**

சென்னை மாநகரில் விபச்சாரத் தடுப்புப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு, காவல் நிலையமாக அறிவிக்கப்பட்டுள்ளது. விபச்சாரத் தடுப்புப் பிரிவின் முக்கிய பணி என்னவெனில், 1956 ஆம் ஆண்டு விபச்சாரத் தடுப்புச் சட்டம் தொடர்பான மத்தியச் சட்டங்களை செயல்படுத்துவதும், இளம்பெண்களையும், மகளிரையும், பாலியல் தொழிலில் ஈடுபடுமாறுத் தூண்டுதல்/ அவர்களை விலைக்கு வாங்குதல், விபச்சார விடுதிகள் நடத்துதல் ஆகிய நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைப்பாளர்களைக் கண்டறிவதும், சென்னை மாநகரில் இத்தீய ஒழுக்கம் நடைபெறாவண்ணம் தடுப்பதும் ஆகும்.

**இளங்குற்றவாளிகளைச் சீர்திருத்த உதவிபுரியும் காவல் பிரிவு**

இளங்குற்றவாளிகளை திருத்தக்கூடிய காவல் பிரிவு, இந்தியத் தண்டனைச் சட்டம், மதுவிலக்குச் சட்டம், விபச்சாரத் தடுப்புச் சட்டம், சூதாடல் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் பிடிபட்டு, ஆனால் குற்றஞ்சாட்டப்பட முடியாத 16 வயதுக்குக் குறைவான ஆதரவற்ற சிறார்களைக் கவனிக்கும் பணியை மேற்கொள்கிறது. இளங்குற்றவாளிகளுக்கு உதவும் இக்காவலர் பிரிவு, இதுபோன்று சுற்றித் திரியும் சிறார்களைப் பிடித்து அவர்களுடைய பெற்றோர்களிடம் அல்லது உள்ளூர் பாதுகாவலர்களிடம் ஒப்படைக்கிறது. குடிசைகள், இரயில் நிலையங்கள், திரையரங்குகள், விழா நடக்கும் இடங்கள் போன்ற அதிக அளவு குற்றம் நடக்கக்கூடிய இடங்களில் ரோந்துப் பணி புரிந்து, ஆதரவற்ற குடும்பத்திலிருந்து ஓடிவந்த, சமூக விரோதிகளிடம் பிடிபடாமல் பாதுகாக்கப்படவேண்டிய சிறார்களையும், பிடித்து வைக்கும் பணிகளையும், இப்பிரிவு கவனிக்கிறது. இளங்குற்றவாளிகளுக்கு உதவும் இக்காவல் பிரிவுகள், கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களிலும் மற்றும் சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும் உள்ளன.

**காவல் சுருக்கெழுத்துக் கூடம்**

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட காவல் சுருக்கெழுத்துக் கூடம் எல்லா மாவட்டங்களிலும் தன்னுடைய கிளை அலுவலகங்களைக் கொண்டுள்ளது. பொதுக் கூட்ட பேச்சுக்களை சுருக்கெழுத்தில் பதிவு செய்யவும், மறுப்புக்கிடமானதும், உணர்வைத் தூண்டக்கூடியதுமான பேச்சுக்களைக் கண்காணிப்பதற்கெனவும் இப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது.

**ஊர்க்காவல் படை**

தமிழ்நாடு ஊர்க்காவல் படை முற்றிலும், தொண்டுத்தன்மை வாய்ந்த நிறுவனம் ஆகும். இது காவல் துறையினருக்கு உதவி புரிகிறது. அனைத்துத் தரப்பு ஆண்கள் மற்றும் பெண்கள் இவ்வமைப்பில் பணியாற்றுகின்றனர். தமிழ்நாடு ஊர்க்காவல் படைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள 10,560 ஊர்க்காவல் படையினரில், 550 பெண்களும் அடங்குவர். போக்குவரத்துப் பணி, இரவு ரோந்து, கோயில் மற்றும் திருவிழாப் பாதுகாப்பு, இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது மீட்புப் பணி முதலிய பணிகளில் ஊர்க்காவல் படையினர் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஒவ்வோராண்டும் சென்னை மாநகரிலும், மாவட்டத் தலைமையிடங்களிலும் நடைபெறும் குடியரசுத் தினவிழாவில் ஊர்க்காவல் படையினர் பங்கேற்கின்றனர். புயல்/ பலத்த மழைக் காலங்களில், கடலோரப் பகுதிகளில், வெள்ள நிவாரணப் பணிகளில், ஊர்க்காவல் படையினரின் பணிகள் வெகுவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

குடியரசு தினம், சுதந்திர தினம் ஆகிய விழாக்களின்போது, இம்மாநிலத்திலுள்ள ஊர்க்காவல் படையினருக்கு, குடியரசுத் தலைவரின் ஊர்க்காவல் படை பதக்கங்கள் வழங்கப்படுகின்றன.

**உள்நாட்டு பாதுகாப்பு**

பகைமை உணர்வு காரணமாக எதிராளிகள் தாக்குதல் நடத்தும்போது, மனித உயிரைக் காத்தல், சொத்துக்களின் சேதத்தைக் குறைத்தல், தொழிற்சாலைகளின் உற்பத்தியைப் பராமரித்தல் போன்ற பணிகளை உள்நாட்டுப் பாதுகாப்புப் படை மேற்கொள்கிறது. இப்படையினர், நாட்டில் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் தன்னார்வத்துடன் செயல்படுகின்றனர். சென்னை மாநகரம், கல்பாக்கம் ஆகியவை, "A" வகை சிவில் பாதுகாப்பு நகரங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளன. மக்கள் பாதுகாப்புப் படை இயக்குநராகவும் உள்ள ஊர்க்காவல் படையின் காவல் துறைத் தலைவரால், வெள்ளச் சீற்றம்/ புயல் நிவாரண நடவடிக்கைகளில், மக்கள் பாதுகாப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது மேற்கொள்ளப்படும் மீட்பு நிவாரணப் பணிகளைக் கண்காணிக்க, ஒவ்வோர் ஆண்டும் வடகிழக்கு பருவமழைக் காலத்தில் (அக்டோபர் திங்கள் முதல் ஜனவரி திங்கள் வரையிலான காலத்தில்) மாநில வெள்ளக் கட்டுப்பாட்டு மையம் இயங்குகிறது. இயற்கை சீற்றங்களின்போது, நடவடிக்கை எடுக்கும்பொருட்டு



காற்றடைத்து மிதக்க வைக்கும் படகுகள், சிறப்பு மீட்பு வாகனங்கள் ஆகியவை தக்க பயிற்சியாளர்களுடன் கடலோர மாவட்டங்களுக்கு வழங்கப்படுகின்றன.

**சமூக நீதி**

மனித உரிமைகள் பாதுகாப்புப் பிரிவு, மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி குற்றப் புலனாய்வுக் காவல் துறைத் தலைவரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இப்பிரிவை, சமூக நீதி குற்றப் புலனாய்வுத் துறையின் காவல் துறை கூடுதல் இயக்குநர் மேற்பார்வையிடுகிறார். மனித உரிமைகள் பாதுகாப்புப் பிரிவு, மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர்/ பழங்குடியினர் (வன் கொடுமைத் தடுப்புச்) சட்டம் ஆகிய சட்டங்களின் விதித்துறைகளை செயல்படுத்துகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 34 நடமாடும் காவல்படை பிரிவுகள் உள்ளன.

**கொள்ளைத் தடுப்புப் பிரிவு**

சென்னையிலிருந்து செயல்படும் இந்தக் கொள்ளைத் தடுப்புப் பிரிவிற்கு மாநிலம் முழுவதிலும் அதிகார வரம்பு உள்ளது. மேலும், இப்பிரிவு கொள்ளைகள் தொடர்பான தகவல்களை சேகரித்து, அவற்றை சரிபார்த்து, தகவல்களைப் பரப்பி, கொள்ளை வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களைக் குற்றஞ்சாட்டுதல் ஆகிய பணிகளை முக்கியமாக கவனிக்கிறது. அப்போதுதான் நாடு முழுவதிலும் உள்ள கொள்ளை வழக்குகளை முறையான வகையில் கண்காணிக்க இயலும். இப்பிரிவு தற்போது காவல் துறை கூடுதல் இயக்குநர் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது.

**வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவு**

வீடியோ திருட்டு என்பது அண்மைக் காலத்தில் நிகழ்ந்துள்ள சம்பவமாகும். இது அச்சுறுத்தத்தக்க அளவை எய்தியுள்ளது. வீடியோ உரிமையாளர்களோடு வணிக ரீதியிலான தொடர்பு கொண்டுள்ளவர்கள் பெரும்பாலும் பிரபலமான திரைப்படங்களை திருட்டுத்தனமாக வீடியோவில் பதிவு செய்கின்றனர்.

வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவு, காவல் துறைத் தலைவரின் (சிறப்புப் புலனாய்வுப் பிரிவு) ஒட்டுமொத்த கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகிறது. இதுபோன்ற வீடியோ திருட்டை கட்டுப்படுத்துவதற்காக, 1952 ஆம் ஆண்டு

திரைப்படங்கள் சட்டம், 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வி.சி.ஆர். கேபிள் டி.வி. அமைப்பு முறையின் மூலம் தொலைக்காட்சி திரையில் திரைப்படங்களாகக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம், 1957 ஆம் ஆண்டு வர்த்தக உரிமைச் சட்டம் ஆகிய சட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம். சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு ஆறு வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவுகள் செயல்படுகின்றன.

## நுகர்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை

இப்பிரிவு காவல் துறைத் தலைவரின் தலைமையில் செயல்படுகிறது. நுகர்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் முக்கிய பணிகள்: (1) நெல், அரிசி, ஏனைய இன்றியமையாப் பொருட்கள் பதுக்கி வைக்கப்படுவதைத் தடுத்தல், (2) இன்றியமையாப் பொருட்களை ஏனைய மாநிலங்களுக்கு கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைத் தடுத்தல், (3) உணவுப் பொருட்கள், சிமிட்டி மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் முதலியவற்றில் கலப்படம் செய்வதைக் கண்டுபிடித்து வழக்குத் தொடருதல் மற்றும் (4) பொது விநியோக முறையின்கீழ் வழங்குவதற்குரிய அரிசி, மண்ணெண்ணெய் மற்றும் ஏனைய இன்றியமையாப் பொருட்கள் ஆகியவற்றை சட்டவிரோதமாக வேறு பயனுக்கு அனுப்புவதைத் தடுத்தல் ஆகியவையாகும்.

## சிறப்பு அதிரடிப்படைப் பிரிவு

சிறப்பு அதிரடிப்படைப் பிரிவு, பண்ணாரியைத் தலைமையிடமாகக் கொண்டு 1995 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. சந்தனக் கடத்தல் வீரப்பனையும், அவனுடைய கூட்டாளிகளையும் பிடிப்பதில் எடுத்த முயற்சிகள் பலனளிக்காது போனதால், அது தொடர்பான நடவடிக்கைகளைச் சீரமைக்க அரசு முடிவெடுத்தது. மேலும், இதுதொடர்பாக பல நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது.

இப்பிரிவு, தற்போது சிறப்பு அதிரடிப்படைப் பிரிவைச் சேர்ந்த காவல் துறைத் தலைவரின் தலைமையில் இயங்கி வருகிறது. இப்பகுதியில் இதற்கு முன்பு பணியாற்றிய ஓய்வுபெற்ற காவல் துறை தலைமை இயக்குநர் திரு. வால்ட்டர் ஐ. தேவாரம் அவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு, வழிகாட்டல் பணியை மேற்கொண்டு சிறப்பு அதிரடிப்படைப் பிரிவு காவல் துறைத் தலைவரோடு இணைந்து





பணிபுரிந்து வருகிறார். தற்போது, இப்பணியில் ஈடுபட்டுள்ள படைப் பணியாளர்கள், தாமாகவே விரும்பி வந்த திறமைமிக்க பணியாளர்கள் ஆவர்.

பணியின் கடுமையான, இடரார்ந்த தன்மையையும் ஒப்படைக்கப்பட்ட பணியிலுள்ள அபாயகரமான தன்மையையும் கருத்தில்கொண்டு, இடருதவிப்படி, துயர்படி, உணவுப் பொருள்படி போன்ற சில கூடுதல் சிறப்புப் படிகள் இப்பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. வீரத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இப்பணியாளர்களை ஊக்குவித்து, அங்கீகாரம் அளிக்கும் வகையில், தகுதிபெற்ற இப்பணியாளர்களுக்கு விரைந்த பதவி உயர்வு அளிக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது. எண்ணற்ற மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதன்மூலமும், சிறப்பு மருத்துவ உதவி வழங்குவதன் மூலமும், காவலர்களை மக்கள் தோழர்களாக ஆக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு (குற்றப் புலனாய்வுத் துறை)

போதைப் பொருட்கள் மற்றும் மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவற்றின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி, முறைப்படுத்துவதற்காக, மத்திய அரசு, 1985 ஆம் ஆண்டு போதை பொருட்கள்—மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டத்தை இயற்றியது. மேலும், மத்திய அரசு, மற்றொரு சட்டத்தை, அதாவது, 1988 ஆம் ஆண்டு போதைப் பொருட்கள், மனமயக்கம் தரும் பொருட்கள் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்கும் சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தின்படி, போதைப் பொருட்கள், மனமயக்கம் தரும் பொருட்கள் கள்ளத்தனமாக கடத்தும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களை அதிகபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு, குறைந்தது ஓராண்டிற்கும் தடுப்புக் காவலில் வைக்க மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மாநில போதைப் பொருட்கள் நுண்ணறிவுப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் சென்னை, மதுரை, திருச்சி, சேலம், விழுப்புரம், திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி, வேலூர், கோயம்புத்தூர், இராமநாதபுரம், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த 12 போதைப் பொருட்கள் நுண்ணறிவுப் புலனாய்வுப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. அவை காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்

காவல் துறை, சிறைத் துறை, தீயணைப்புத் துறை ஆகிய துறைகளில் தகுதிபெற்ற பணியாளர்களைத் தேர்வு செய்வதற்காக, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், 1991ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. காவல் துறை இயக்குநர் ஒருவரின் தலைமையில் செயல்படும் இவ்வாரியம், காவல் துறையில் நிலை—II காவலர்கள், உதவி ஆய்வாளர்கள் ஆகிய பதவிகளுக்குரிய பணியாளர்களை தெரிந்தெடுத்து நியமிக்கிறது.

## பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு

பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு, காவல் துறை கூடுதல் இயக்குநர் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது. இது, பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு—I, பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு—II என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, இவை ஒவ்வொன்றும் காவல் துறைத் தலைவரின் தலைமையின்கீழ் இயங்குகின்றன.

## பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு—I

பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு—I, *(1)* வணிகக் குற்றங்கள் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு, *(2)* சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை என இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவை ஒவ்வொன்றும் காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில் இயங்குகின்றன.

## வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை

இப்பிரிவு, 13 துறைகளிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களில், கூட்டுறவு பணக் கையாடல் வழக்குகளைப் புலனாய்வு செய்கிறது. ரூ.1,00,000/— தொகைக்கும் அதிகமாக பணம் கையாடல் செய்யப்பட்டுள்ள அனைத்து வழக்குகளையும், வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு புலனாய்வு செய்கிறது. இப்பிரிவு, காவல் துறைக் கண்காணிப்பாளரின் தலைமையின்கீழ் இயங்குகிறது. இவருக்கு, 26 மாவட்டப் பிரிவுகளை கண்காணிக்கும் துணைக் கோட்டத்தைச் சேர்ந்த ஐந்து வணிகக் குற்றங்கள் தடுப்புப் பிரிவிலுள்ள ஐந்து காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் துறை அளவில் உதவுகின்றனர். இவை ஒவ்வொன்றும், காவல் துறைத் தலைவர் தலைமையின்கீழ் இயங்குகின்றன. வேலூர், மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



## சிலை திருட்டு தடுப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை

இப்பிரிவு, மாவட்ட காவல் துறை மேற்கொள்ளும் சிலை திருட்டு தொடர்பான முக்கிய வழக்குகளின் புலன் விசாரணையை ஒருங்கிணைப்பதோடு, திருடப்பட்ட புராதன சிலைகளை விற்கும் கொடிய நடவடிக்கைகள் பற்றிய தகவல்களையும் சேகரித்து அளிக்கிறது. கோயில் சிலைகள் திருடப்படுவதைத் தடுத்து, கண்டுபிடித்து, புலன் விசாரணை செய்யும் பணிகளை மாவட்டக் காவல் துறை கவனித்து வருகிறது. அதேசமயத்தில், ரூ.5 இலட்சத்திற்கும் அதிகமான மதிப்புள்ள சொத்துக்கள் பற்றிய வழக்குகள் அல்லது முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள் அல்லது உணர்வுகளைத் தூண்டக்கூடிய தன்மையுடைய வழக்குகள் ஆகியவை காவல் துறை இயக்குநர், சென்னை கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் சிலை திருட்டு தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

## பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு—II (நிதி நிறுவனங்கள்)

பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு—II எனப்படும் பிரிவு காவல் துறையில் தனியாக இயங்கி வருகிறது. இப்பிரிவு, காவல் துறைத் தலைவரின் தலைமையில் இயங்குகிறது. வங்கிசாரா நிதி நிறுவனங்கள், பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கெதிரான வழக்குகளை புலன் விசாரணை செய்யும் பணிகளை இப்பிரிவு மேற்கொள்கிறது. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின்கீழும், ஏனைய காவல் மாவட்டங்களைச் சேர்ந்த காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் கட்டுப்பாட்டின்கீழும் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

இந்தப் பிரிவை ஏற்படுத்திய பின்னர் நிதி நிறுவனங்கள் தொடர்பான அனைத்து வழக்குகளும், மாவட்டங்களிலிருந்தும், சென்னை மாநகரம் உட்பட மாநகரங்களிலிருந்தும் பெறப்பட்டு இப்பிரிவிற்கு மாற்றப்பட்டன. புதிய வழக்குகளும் இப்பிரிவில் பதிவு செய்யப்பட்டன.

## தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணி

தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அதிகாரிகளும், பணியாளர்களும் சட்டம்— ஒழுங்கை நிலைநாட்டுதல், வகுப்புக் கலவரங்களைத் தடுத்தல், போராளிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளில் இவர்கள் உள்ளூர் காவல் துறையினருக்கு உதவி புரிய

இம்மாநிலத்தின் பல்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். இதைத் தவிர கடலோரப் பாதுகாப்புப் பணிக்காகவும், மிக முக்கிய நபர்களின் வருகையின்போது பாதுகாப்புப் பணிக்காகவும், இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக இருக்கும் முகாம்களிலும், பன்னாரியில் வீரப்பனுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தேடுதல் வேட்டை நடவடிக்கைகளில் சிறப்பு அதிரடிப் படைக்கு (Special Task Force) உதவிபுரியவும் இவர்களின் பணி பயன்படுத்தப்படுகிறது. இதில் 11 தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகள் அடங்கியுள்ளன. அதில் ஆவடியில் ஒரு படைவகுப்பு மையமும் (Regimental Centre), ஆவடியில் ஒரு காவல் துறை போக்குவரத்துப் பணிமனை மற்றும் பயிற்சிப் பள்ளியும், திருச்சியில் வட்டார காவல் துறை போக்குவரத்துப் பணிமனையும் அடங்கும். தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணியின் ஒரு பிரிவானது 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் புது தில்லியில் செயல்பட்டு வருகிறது. இப்பணி மூன்றாண்டுகளுக்கு ஒரு படை என்ற விகிதத்தில் சுழற்சி முறையில் மாற்றியமைக்கப்படுகிறது. தற்போது இந்த தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 8—வது பிரிவு புது தில்லியிலுள்ள இந்நாட்டின் மிகப் பெரிய 'திஹார்' சிறைச் சாலையின் காவல் பணிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது.

**நுண்ணறிவுப் பிரிவு**

காவல் துறை கூடுதல் இயக்குநர் (நுண்ணறிவு) தலைமையில் இயங்கி வரும் நுண்ணறிவுப் பிரிவில் தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, "கியூ" பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, சிறப்புப் பிரிவு ஆகியன அடங்கியுள்ளன. மதம், சாதி தொடர்பான பதட்டம், ஏனைய சட்டம்—ஒழுங்கு தொடர்பான பொதுவான பிரச்சினைகள், மிக முக்கிய நபர்களின் பாதுகாப்பு, தீவிரவாத நடவடிக்கைகள், இலங்கையைச் சேர்ந்த தமிழ்ப் போராளிகள், மத அடிப்படைவாதிகள் தொடர்பான விஷயங்களை இப்பிரிவு கவனித்து வருகிறது.

**தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை**

சாதி, மதத் தொடர்பான பதட்டங்கள், ஏனைய சட்டம்—ஒழுங்கு பிரச்சினை ஆகியவை தொடர்பாக எழும் பிரச்சினைகளை புலனாய்வு செய்யும் பணிகளை தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை கவனித்து வருகிறது.





**பாதுகாப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை**

வெளி மாநிலங்களிலிருந்து வருகை தரும் தலைவர்கள் உள்ளிட்ட மிக முக்கிய நபர்களின் வருகையின்போது அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியையும், வெளிநாட்டவர்களின் நடவடிக்கைகளையும் முக்கிய சாதனங்கள் நிறுவப்பட்டுள்ள இடங்கள், கடவுச்சீட்டு (Passport) விவகாரங்கள் ஆகியவற்றையும் இந்தப் பாதுகாப்பு பிரிவு கவனித்து வருகிறது. முதலமைச்சருக்குப் பாதுகாப்பு அளிக்கும் ஏற்பாடுகளையும், உயர்நிலை பதவியில் உள்ளோர் வருகை தரும்போது வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பணிக்காகவும் "மையப்பிரிவு" (Core Cell) என்ற சிறப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பிரிவிலிருந்து எடுக்கப்பட்ட காவலர்களைக் கொண்ட அதிரடிப்படைப் பிரிவுகள், பாதுகாப்புப் பிரிவின் ஒரு பகுதியாக விளங்கி பெருமளவு அச்சுறுத்தல்களுக்கு ஆளாகும் நபர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியையும் மேற்கொள்கிறது.

**"கியூ" பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை**

இடதுசாரி தீவிரவாதிகள், இலங்கைத் தமிழ் போராளிகள் ஆகியோரின் நடவடிக்கைகள் தொடர்பான புலனாய்வை இப்பிரிவு கவனித்து வருகிறது. இடதுசாரி தீவிரவாதிகள், இலங்கைத் தமிழ் போராளிகள் குறித்த வழக்குகளை ஆய்வு செய்யும் பணியையும் இப்பிரிவு கவனித்து வருகின்றது.

**சிறப்புப் பிரிவு**

முக்கியமான நிகழ்ச்சிகளின்போதும், மிக முக்கிய நபர்களின் வருகையின்போதும், மத தீவிரவாதிகளினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்த தகவல்களை இந்த சிறப்புப் பிரிவு சேகரிக்கிறது. இந்த சிறப்புப் பிரிவு சென்னை, வேலூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய ஆறு இடங்களில் செயல்படுகிறது. ஒவ்வொரு பிரிவும் துணைக் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் இயங்கி வருகின்றது.

**தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கூடம்**

தற்போது இம்மாநிலத்தில் 33 ஒற்றை இலக்க விரல்ரேகைப் பதிவுக் கூடங்கள் (Single Digit Finger Print Bureau) இயங்கி வருகின்றன. இவை

தவிர விழிப்புப்பணி—ஊழல் தடுப்புத் துறை இயக்ககம் வணிக ரீதியிலான குற்றங்களை புலனாய்வு செய்யும் (குற்றப் புலனாய்வுத் துறை) பிரிவு ஆகியவை ஒவ்வொன்றிலும் சிறப்பு விரல் ரேகைப் பதிவுக் கூடம் செயல்படுகிறது.

"விரல் ரேகை ஆய்வு மற்றும் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் அமைப்பு" என அழைக்கப்படும் ஒரு தானியங்கி விரல்ரேகை பதிவு அடையாளம் காணும் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள சாதனத்தின் தகவல் களஞ்சியத்தில் விரல்ரேகை தடயங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுவரை அடையாளம் காணமுடியாத 7308 வழக்குகள் இப்பிரிவிடம் விரல் ரேகையை ஒப்பிடும் பொருட்டு வழங்கப்பட்டுள்ளன.

**காவல் துறை கணினிப் பிரிவு**

மத்திய அரசின் காவல் துறையை நவீனப்படுத்துதல் திட்டத்தின் ஒரு பகுதியாக 16—11—1971 ஆம் நாளிட்ட உள்துறையின் அரசாணை நிலை எண் 3111—ன்படி 1971 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காவல் துறை கணினிப் பிரிவு உருவாக்கப்பட்டது. இக்காவல் துறை கணினிப் பிரிவு தேடுதல் (Talash) குற்றவாளியின் உருவத்தை உருவகப்படுத்தி வரையும் முறை, குற்றம் குறித்த புள்ளி விவர அறிக்கைகள் தயாரித்தல், குற்றத் தகவல் பெறும் ஏற்பாட்டுமுறை கணினி பயிற்சி முதலியன போன்ற பல்வேறு வகையான பணிகளைக் கவனித்து வருகிறது.

**கணினிப் பயிற்சி**

இந்த காவல் துறை கணினிப் பிரிவு 1998 ஆம் ஆண்டிலிருந்து குற்றம் குறித்த புள்ளிவிவரங்களை ஆண்டுவாரியாக தெரிவிக்கிறது. "குற்றப்பிரிவு—தமிழ்நாடு—2000" என்ற புத்தகம் 2001 மே திங்களில் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு காவல் துறை குறித்த இணைய தளத்தை, திட்டமிடும் குழு 2001 மே திங்களில் உருவாக்கியது. காவல் துறையை நவீனப்படுத்துதல் திட்டங்களைப் பற்றி முக்கியமாக எடுத்துக்காட்டுதல், தமிழ்நாடு காவல் துறையை கணினிமயமாக்குதல் போன்ற பணிகள் 2001—ல் மேற்கொள்ளப்பட்டன.



**காவல் துறை ஆராய்ச்சி மையம்**

காவல் துறை கண்காணிப்பாளர் கட்டுப்பாட்டின் கீழ் (சிலைப்பிரிவு) காவல் துறை ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகின்றது. மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள், காவல் துறை துணைத் தலைவர் தெரிவித்த ஏதாவது ஒரு பொருள் குறித்து அல்லது முதுநிலை கண்காணிப்பு அலுவலர்களின் உத்தரவுகளின்பேரில் தெரிவிக்கப்பட்ட ஒரு பொருள் குறித்து இந்தப் பிரிவு திட்ட ஆய்வை மேற்கொள்கிறது. 1999—2000 ஆம் ஆண்டில் "காவலில் மரணம்" என்ற தலைப்பின்கீழ் திட்ட ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. 2000—2001ல் "1990 முதல் 1997 வரையிலான கால அளவில் 10 முதல் 35 வயதிற்குட்பட்ட இளம் பெண்கள் தற்கொலை செய்து கொள்ளுதல்" என்ற தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு கிட்டத்தட்ட முடிவுறும் நிலையில் உள்ளது. மாநகரங்கள் மற்றும் புறநகர் பகுதிகளில் 1991 முதல் 1998 வரையில் நடைபெற்ற கொடுங் குற்றங்கள் குறித்த ஆய்வு நடந்தேறி வருகிறது.

## 3. காவல் படையை நவீனமயமாக்குதல்

காவல் படையினரின் திறமையை உயர்த்துதல், அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் காவல் படையினரின் மனப்போக்கில் மாற்றம் ஆகியவை காவல்படையை நவீனமயமாக்கும் நடவடிக்கையில் மிகவும் இன்றியமையாத அம்சங்களாகும். இம்மாநில அரசு 1993—94 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ரூ.10 கோடி முதல் ரூ.12.50 கோடி ஒதுக்கி வருகின்றது. மேலும் மைய அரசு தரும் மானியத்தின் அடிப்படையில் மாநில அரசும் காவல் படையை நவீனப்படுத்துவதற்காக கட்டடங்கள், வீட்டுவசதி, வாகன வசதிகள், தகவல் பயிற்சி, ஆயுதங்கள், விரல்ரேகைக் கூடம், தடய அறிவியல் ஆய்வகம், தகவல் தொகுப்பு, கணினிமயமாக்குதல் மற்றும் சாதனங்கள் ஆகியவற்றிற்கு மைய அரசிற்கு இணையான தொகையை அளித்துள்ளது.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் 2000—2001 ஆம் நிதியாண்டில் பின்வருவனவற்றிற்காக மொத்தம் ரூ.153.00 கோடி ஒதுக்கீடு செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன

[2001 செப்டம்பர் 1

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| காவல்துறையினர் வீட்டுவசதி | 82.67 |
| கட்டடங்கள் | 3.10 |
| வண்டிகள் | 25.62 |
| ஆயுதங்கள் | 4.67 |
| தகவல் தொடர்பு சாதனங்கள் | 5.55 |
| பயிற்சி | 5.70 |
| தடய அறிவியல் ஆய்வகம்/ விரல்ரேகைப் பதிவு (FSL/FPB)க்கூடம் | 6.26 |
| சாதனங்கள் | 18.70 |
| கணினிமயமாக்குதல் | 0.72 |
| மொத்தம் | 153.00 |

இது மட்டுமல்லாது 2001—2002ஆம் ஆண்டிற்கான மொத்தம் ரூ.209.68 கோடிக்கான செலவிலான செயற்குறிப்புகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| கட்டடங்கள் | 40.68 |
| வீட்டுவசதி | 100.00 |
| வண்டிகள் | 38.15 |
| ஆயுதங்கள் | 1.17 |
| தகவல் தொடர்பு சாதனங்கள் | 7.17 |
| பயிற்சி | 2.86 |
| தடய அறிவியல் ஆய்வகம்/ விரல்ரேகைப் பதிவு (FSL/FPB)க்கூடம் | 3.96 |
| சாதனங்கள் | 13.26 |
| கணினிமயமாக்குதல் | 2.43 |
| மொத்தம் | 209.68 |



2001 செப்டம்பர் 1]

இதன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:—

❖காவலர் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் இம்மாநிலம் முழுவதற்கும் வெவ்வேறு இடங்களில் காவல் துறையினருக்காக 3000 குடியிருப்புகள் கட்டித் தருதல்.

❖கட்டடங்கள் என்ற தலைப்பின்கீழ் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (UNDP) கீழ் காவல் நிலையங் ,ளைக் கட்டித் தருதல், மாவட்ட காவல் அலுவலகங்கள் (DPO), சரகக் காவல் அலுவலகங்கள் ஆகியவற்றைக் கட்டுதல், காவல் துறை கட்டடங்களைப் பழுதுபார்த்தல், வண்டிகள் என்பதன் கீழ் மாவட்டங்கள், சிறப்புப் பிரிவுகள், மாண்புமிகு முதலமைச்சரின் பாதுகாப்பு போன்றவற்றிற்காக வண்டிகள் (கார்கள், ஈப்பு வண்டிகள், வேன், பேருந்து மற்றும் இருசக்கர வண்டிகள்) வாங்கப்பட்டன.

❖ஆயுதங்கள் என்பதன்கீழ் சிறு படைக்கலன்கள், ஏ.கே.47 வகை துப்பாக்கிகள், கண்ணீர் புகைக் குண்டு துப்பாக்கிகள், மெய்காப்புக் கவசங்கள் ஆகியவை வாங்கப்பட்டன.

❖தகவல் வகையில் நுண்ணலை தொலைபேசி இணைப்புகள், மீவுயர் நுண்ணலைச் சாதனங்கள், வாக்கி—டாக்கிகள் வழங்கப்பட்டன.


❖புலனாய்விற்கு உதவும் வகையில் நவீன தொழில்நுட்பவியலுடன் தடய அறிவியல் ஆய்வகம் மற்றும் விரல்ரேகைப் பதிவுக்கூடம் ஆகியவற்றுக்கு சாதனங்கள் வாங்கப்பட்டன.

❖கருவிகள் என்பதன்கீழ் நுண்ணறிவு தகவல் சேகரிப்பு சாதனங்கள், பாதுகாப்புச் சாதனங்கள், தானே இயங்கும் அலுவலகச் சாதனங்கள் ஆகியவை வாங்கப்பட்டன.

❖கணினிமயமாக்குதல் என்பதன்கீழ் வன்பொருள், மென்பொருள் பயிற்சிக்கான கட்டமைப்பு வசதி ஆகியவை அளிக்கப்படுகின்றன.

[2001 செப்டம்பர் 1

***2001—2002 ஆம் ஆண்டில் காவல் படையை நவீனமயமாக்குதல் என்பதன் கீழ் வெவ்வேறு இனங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவுகள் பின்வருமாறு:—***




## 4. சட்டம்-ஒழுங்கு மற்றும் சாதிக் கலவரங்கள்

மாநிலத்தில் பொதுவாக சட்டம்—ஒழுங்கு அமைதியாக உள்ளது. பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த மக்களிடையே சமுதாய நல்லிணக்கத்தையும் நட்புறவையும் ஏற்படுத்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. மாநிலத்தில் மீண்டும் தலைதூக்கியுள்ள தீவிரவாத, தேச விரோத, பிரிவினை வாத தீய சக்திகளை ஒடுக்க அரசு உறுதி பூண்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் சாதிக் கலவரத்தில் உயிரிழந்தவர்கள் விபரம் பின்வருமாறு:—



2001 செப்டம்பர் 1]

| வருடம் | கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1996 | 50 |
| 1997 | 93 |
| 1998 | 30 |
| 1999 | 22 |
| 2000 | 18 |
| 2001(ஜூன் வரை) | 15 |

சாதி/மதக் கலவரம் ஏற்படுவதை தவிர்க்கும்பொருட்டு வன்முறையைத் தூண்டக் கூடிய பேரணி மற்றும் ஊர்வலங்களுக்கு அனுமதி தரக்கூடாது என்றும், அவ்வாறு உரிய முன்அனுமதியின்றி பேரணி/ ஊர்வலம் நடத்துபவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அரசால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மே 2001—ல் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் மாநிலத்தில் சட்டம்—ஒழுங்கு நிலை குறித்து ஆய்வு செய்து, சட்டம்—ஒழுங்கை பராமரிக்கவும், சமுதாய நல்லிணக்கத்தை உறுதி செய்யவும் திடமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு காவல் துறை தலைமை இயக்குநருக்கும், மாவட்ட ஆட்சியர்களுக்கும் அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு:

*(1)* சாதிக் கலவரங்களை அறவே ஒழிக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் போதுமான உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். கிராம, வட்ட, மாவட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ள அமைதிக் குழுக்களின் செயல்பாடுகளை முடுக்கி விடல் வேண்டும். பதட்டம் ஏற்பட ஏதுவாகவுள்ள இடம் குறித்த தகவல் கிடைத்த உடனேயே அமைதிக் குழு கூட்டம் நடத்தி, வன்முறை வெடிப்பதற்கு முன் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்.

*(2)* அதிக அளவிலான சிலைகள் வரைமுறையின்றியும் அனுமதியின்றியும் அமைக்கப்படுவதால் சமூக விரோத சக்திகள் அவற்றை சேதப்படுத்த முனைவதன் காரணமாக சட்டம்—ஒழுங்கு பிரச்சினை ஏற்படுகிறது. புதியதாக சிலைகள் அமைப்பது குறித்து அதிக கட்டுப்பாட்டினை கடைப்பிடிக்கவும், இது தொடர்பாக ஏற்கெனவே அரசால் வழங்கப்பட்டுள்ள ஆணைகளை உறுதியாக கடைபிடிக்கவும், மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. சிலைகளின்

பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், அவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பை மாவட்டத்தில் இயங்கிவரும் கிராம கண்காணிப்புக் குழுக்களிடம் ஒப்படைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

(3) மத ரீதியான பதட்டத்தைத் தவிர்க்கும்பொருட்டு அனுமதியளிக்கப்படாத இடங்களில் அதிக அளவில் வழிபாட்டுத் தலங்கள் உருவாவதை தடுக்க வெவ்வேறு மதத்தினர் வழிபடும் வழிபாட்டு தலங்களை அருகருகே அமைப்பதைத் தடை செய்யவேண்டும் என்ற நீதிபதி திரு. வேணுகோபால் விசாரணை ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் அரசால் வலியுறுத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட ஆணைகளை தவறாது கடைப்பிடிக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**திரு. நீதிபதி ஏ.இராமன் விசாரணை ஆணையம் :**

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி, மத்திய அமைச்சர்கள் திருவாளர்கள் முரசொலி மாறன் மற்றும் டி.ஆர்.பாலு ஆகியோர் கைது செய்யப்பட்டபோது காவல் துறையினர் அத்து மீறியதாகக் கூறப்பட்ட புகாரினை விசாரிக்கும் பொருட்டு விசாரணை ஆணையங்கள் சட்டம், 1952 (மத்திய சட்டம், 60/1952)—ன்கீழ் நீதிபதி திரு. ஏ. இராமன் அவர்களைக் கொண்ட விசாரணை ஆணையத்தை 07.07.2001 அன்று அரசு நியமித்தது. விசாரணை ஆணையம் அதன் பணியை தொடங்கி விட்டது.

**திரு. நீதிபதி கே.எஸ்.பக்தவச்சலம் விசாரணை ஆணையம்**

12.08.2001 அன்று தி.மு.க—வினர் சென்னையில் நடத்திய ஊர்வலத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் மற்றும் அக்கலவரங்களின்போது ஏற்பட்ட உயிரிழப்பு, பொது மக்கள், காவல் துறையினர் மற்றும் பத்திரிகையாளர்கள் ஆகியோர் காயமடைந்தது போன்றவற்றிற்கான சூழ்நிலைகள் குறித்தும் விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு, ஓய்வு பெற்ற நீதிபதி திரு. கே.எஸ். பக்தவச்சலம் அவர்களைக் கொண்டு, அரசு ஒரு விசாரணை ஆணையத்தினை அமைத்துள்ளது.

**இலங்கை தமிழர்களின் நடவடிக்கைகள்:—**

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 1992 முதல் இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கமாகும். இத்தடை 14.05.2000 முதல் மேலும் இரண்டாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.



**பல்வகை:—**

2000 ஆம் ஆண்டு ஜுலை மாதம் கடைசி வாரத்தில் நீலகிரி மாவட்ட சிறு தேயிலை உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பச்சை தேயிலைக்கு ஆதாயமான விலை கோரியும், தேயிலை இறக்குமதியை தடை செய்யக்கோரியும் அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் நீலகிரி மாவட்டத்தில் ஊர்வலங்கள், ஆர்பாட்டங்கள் மற்றும் சாலை மறியல் நடத்தினர். இந்நிகழ்ச்சிகளில் காவல் துறையினர் அத்துமீறி நடந்ததாக புகார் கூறப்பட்டது. இச்சம்பவம் குறித்து மாநில மனித உரிமைகள் ஆணையத்தால் விசாரணை செய்யப்பட்டது. காவல் துறையினரின் அத்துமீறலால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு ஆணையம் உத்தரவிட்டது. ஆணையத்தின் பரிந்துரைகளை அரசு ஜுன் 2001—ல் ஏற்றுக்கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.31.30 லட்சம் வழங்கியது.

**காவல் துறையினரின் பொறுப்பில் இருந்தபோது ஏற்பட்ட மரணங்கள்:—**

2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜுன் மாதம் வரை காவல் துறையினரின் பொறுப்பிலிருக்கும்போது 4 மரணங்கள் ஏற்பட்டுள்ளன. அவை குறித்து காவல் நிலை ஆணை எண் 145—ன்கீழ் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காவல் துறையினரை மனித நேயமுடையவர்களாக மாற்றி அதனால் காவல் துறையினரின் பொறுப்பில் உள்ளபோது நிகழும் மரணங்களை குறைக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு காவல் துறை தலைமை இயக்குநருக்கு அரசால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு :**

அரசியல்/சாதி/மத அமைப்புகளின் ஊர்வலங்கள் மற்றும் போராட்டங்களின் போது வன்முறை ஏற்படும்போது காவல்துறையினரால் எடுக்கப்பட்ட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் பயன் தராத நிலையில், சட்ட விரோத கும்பலைக் கலைத்து நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நிகழ்த்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜுன் வரை காவல் துறையினர் 12 நேர்வுகளில் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். காவல்துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்துவதைத் தவிர்க்கவும், பிரச்சனைகளை வேறு வழிகளில் கையாளவும், துப்பாக்கிச்சூடு நடத்துவதை கடைசி ஆயுதமாக வைத்துக் கொள்ளவும் காவல் துறையினருக்கு ஆணையிடுமாறு காவல்துறை தலைமை இயக்குநர் அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

[2001 செப்டம்பர் 1

*1996 முதல் 30.06.2001 வரை* **காவல் துறை துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள், காயமடைந்தவர்கள் ஆகிய விபரங்கள்**

| விவரம் | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 (ஜூன் வரை) |
|---|---|---|---|---|---|---|
| துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை. | 24 | 63 | 48 | 35 | 24 | 12 |
| கூட்டத்தை கட்டுப் படுத்தும் போது கொள்ளை நடவடிக்கைகளை | 17 | 50 | 22 | 24 | 10 | 5 |
| தடுக்கும்போது | -- | -- | 2 | -- | -- | -- |
| குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் | 7 | 13 | 24 | 11 | 14 | 7 |
| **மொத்தம் கொல்லப்பட்டவர்கள்** | 15 | 28 | 10 | 19 | 9 | 5 |
| அ) காவலர்கள் | -- | -- | -- | 2 | -- | -- |
| ஆ) பொது மக்கள் | 15 | 28 | 10 | 17 | 9 | 5 |
| **மொத்தம் காயமடைந்தவர்கள்** | 116 | 307 | 116 | 165 | 66 | 61 |
| அ) காவலர்கள் | 97 | 245 | 68 | 154 | 58 | 51 |
| ஆ) பொது மக்கள் | 19 | 62 | 48 | 11 | 8 | 10 |

## 5. குற்றச் சம்பவங்கள் குறித்த நிலை

குற்றவாளிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்பாட்டில் வைப்பதற்கு காவல் துறையினர் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். குற்றம் நடப்பதற்கு வாய்ப்புள்ள பகுதிகளில் தீவிர சுற்றுக் காவல் பணிகளுக்கும் ரோந்துப் பணிகளுக்கும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. குற்றவாளிகளின் நடமாட்டத்தைத் தடுக்க சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குற்றப் புலனாய்விற்காக அறிவியல்பூர்வமான வழிகளும், விரல் ரேகைப் பிரிவு, தடய அறிவியல் ஆய்வுக்கூடம், நாய்ப்படை, கணினிப் பிரிவு ஆகியவற்றின் சேவைகளும் திறம்பட்ட முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்களைக் கட்டுப்படுத்தவும், குறைக்கவும் அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. இம்முயற்சிகளின் விளைவாக பொதுவாகக் குற்றங்கள், குறிப்பாக கொடுங்குற்றங்கள் வெகுவாக குறைந்துள்ளன.



2001 செப்டம்பர் 1]

தமிழ்நாட்டில், *1999, 2000, 2001 (ஜூன் திங்கள் வரையில்)* ஆண்டுகளில் நடைபெற்ற சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள் குறித்த புள்ளிவிவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| **குற்றத்தின் பெயர்** | 1999 | | 2000 | | 2001 (**ஜூன் திங்கள் வரையில்**) | |
|---|---|---|---|---|---|---|
| | பதிவு செய்யப் பட்டவை | கண்டு பிடிக்கப் பட்டவை | பதிவு செய்யப் பட்டவை | கண்டு பிடிக்கப் பட்டவை | பதிவு செய்யப் பட்டவை | கண்டு பிடிக்கப் பட்டவை |
| ஆதாயக் கொலை | 77 | 59 | 94 | 73 | 30 | 17 |
| கூட்டுக் கொள்ளை | 168 | 107 | 158 | 105 | 77 | 33 |
| கொள்ளை | 610 | 460 | 656 | 458 | 310 | 196 |
| கன்னமிட்டுத் திருடுதல் | 5694 | 3266 | 5493 | 3085 | 2719 | 1178 |
| களவு | 17131 | 14054 | 16671 | 13878 | 7526 | 5559 |
| **மொத்தம்** | **23680** | **17946** | **23072** | **17599** | **10662** | **6983** |
| **கண்டுபிடிக்கப் பட்டப்பட்ட குற்றங்களின் சதவீதம்** | | **76%** | | **76%** | | |

### களவு

*2000* ஆம் ஆண்டில் *16,671* வழக்குகள் பதிவு செய்யப்பட்டதில், *13,878* வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. *2001* ஆம் ஆண்டில், ஜூன் திங்கள் வரையிலும் *7526* வழக்குகள் பதிவு செய்யப்பட்டதில் *5559* வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

### மகளிருக்கெதிரான குற்றங்கள்

*1999* மற்றும் *2000* ஆம் ஆண்டுகளில் பல்வேறு குற்றப் பெயர்களின்கீழ் மகளிருக்கெதிரான குற்றங்கள் குறித்த வழக்குகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

[2001 செப்டம்பர் 1

| குற்றத்தின் பெயர் | பதிவு செய்யப்பட்டவை | | | கண்டுபிடிக்கப் பட்டவை | | | கண்டுபிடிக்கப்பட்ட சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1999 | 2000 | 2001 (ஜுன் வரை) | 1999 | 2000 | 2001 (ஜுன் வரை) | 1999 | 2000 | 2001 (ஜுன் வரை) |
| கற்பழிப்பு | 400 | 526 | 202 | 303 | 462 | 163 | 76 | 88 | 81 |
| கற்பழிப்பு முயற்சி | 35 | 23 | 30 | 24 | 19 | 19 | 69 | 83 | 63 |
| மான பங்கம் | 1880 | 1931 | 942 | 1687 | 1749 | 846 | 90 | 91 | 90 |
| பலவந்தமாக கடத்திச் செல்லுதல் | 813 | 864 | 365 | 508 | 555 | 201 | 62 | 64 | 55 |
| கேலி செய்தல் | 2034 | 2738 | 490 | 2025 | 2684 | 485 | 99 | 98 | 99 |
| வரதட்சணை மரணங்கள் | 199 | 181 | 83 | 161 | 159 | 66 | 81 | 88 | 80 |
| வரதட்சணை கொடுமை | 661 | 898 | 384 | 558 | 750 | 317 | 84 | 84 | 85 |
| சிசுக் கொலை | 2 | 14 | 2 | 1 | 8 | 0 | 50 | 57 | 0 |
| **மொத்தம்** | 6024 | 7175 | 2498 | 5267 | 6386 | 2097 | 87 | 89 | 84 |

### சிறப்புப் புலனாய்வுக் குழு

நடப்பாண்டில் சிறப்புப் புலனாய்வுக் குழு, இம்மாநிலத்தில் அடிப்படைக் கோட்பாட்டு வாதிகளின் தீவிரவாதத்தை திறம்பட்ட முறையில் சமாளித்தது. கோயம்புத்தூர் தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்ட 168 பேர்களும், இம்மாநிலத்தில் ஏனைய அடிப்படைக் கோட்பாட்டு வாதிகள் தொடர்பான வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்ட பலரும் தொடர்ந்து நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். சென்னை, திருச்சிராப்பள்ளி கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 30—5—1999 ஆம் நாளன்று நடைபெற்ற குண்டு வைப்பு வழக்குகளில், முழுமையாக புலனாய்வு செய்யப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்ட 21 பேர் கைது செய்யப்பட்டனர். தொகுப்பு குற்றப் பத்திரிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. டாக்டர் ஸ்ரீதர் கொலை செய்யப்பட்ட வழக்கு, திருச்சிராப்பள்ளி காவல் துறை ஆய்வாளர் முரளி மீது எறிகுண்டு வீசி தாக்கியது ஆகியவை போன்ற



2001 செப்டம்பர் 1]

ஏனைய முக்கியமான அடிப்படைக் கோட்பாட்டு வாதிகளின் குற்றங்களிலும் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, இந்த வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்ட சம்பந்தப்பட்ட அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### கடலோரப் பாதுகாப்புப் பிரிவு

கடலோரப் பாதுகாப்புப் பிரிவு, 2000 ஆம் ஆண்டில் 8400 லிட்டர் மண்ணெண்ணெய், 1032 லிட்டர் டீசல், 2500 கிலோகிராம் ரேஷன் அரிசி ஆகிய முக்கியமான பொருட்கள் கைப்பற்றப்பட்டன. 2001 ஆம் ஆண்டில் 780 லிட்டர் டீசல், 41 ஜெலட்டின் குச்சிகள், 41 டெட்டனேட்டர்கள் (வெடி மருந்துப் பொருட்கள்), கள்ளக் கடத்தல் பொருட்கள், அதாவது ரூ.1.50 இலட்சம் மதிப்புடைய டயர்கள், மோட்டார் வண்டி உதிரிப் பாகங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

### மனித உரிமைகள் பாதுகாப்பு

பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை குறித்த ஒப்பீட்டு விவர அறிக்கை ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

***1989 ஆம் ஆண்டின் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்***

| ஆண்டு | வழக்குகளின் எண்ணிக்கை | விசாரணைக்கு அனுப்பப்பட்டவை | விசாரணை நிலுவையில் உள்ளவை | விசாரிக்கப்பட்டு வருபவை | நீதிமன்றத்தில் முடிவு செய்யப்பட்டவை | விடுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | தண்டனைப் பெற்றவர்களின் எண்ணிக்கை | தண்டனைப் பெற்றவர்கள் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1999 | 1011 | 379 | 490 | 40 | 102 | 94 | 8 | 8 |
| 2000 | 996 | 269 | 400 | 314 | 13 | 12 | 1 | 8 |
| 2001 (ஜுன் வரையில்) | 441 | 127 | 129 | 185 | - | - | - | - |

[2001 செப்டம்பர் 1

**மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை**

| ஆண்டு | வழக்குகளின் எண்ணிக்கை | விசாரணைக்கு அனுப்பப்பட்டவை | விசாரணை நிலுவையில் உள்ளவை | விசாரிக்கப்பட்டு வருபவை | நீதிமன்றத்தில் முடிவு செய்யப்பட்டவை | விடுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | தண்டனைப் பெற்றவர்களின் எண்ணிக்கை | தண்டனைப் பெற்றவர்கள் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1999 | 32 | 6 | 13 | - | 13 | 13 | - | - |
| 2000 | 38 | 8 | 26 | 4 | - | - | - | - |
| 2001 (ஜூன் வரையில்) | 6 | - | 2 | 4 | - | - | - | - |

## வீடியோ திருட்டு

வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவு 2000 ஆம் ஆண்டில், 249 வழக்குகளில் துப்பறிந்து, 30,909 வீடியோ சி.டி.—க்களை கைப்பற்றியது. 2001 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வரையில் 212 வழக்குகளில் துப்பறியப்பட்டு, 39,963 வீடியோ சி.டி.—க்கள் கைப்பற்றப்பட்டன.

## நுகர்பொருள் வழங்கல்

2001 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வரையில், நுகர்பொருள் குற்றப் புலனாய்வுத் துறையினரால் 2252 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ரூ.54.78 இலட்சம் மதிப்புடைய 4557 குவிண்டால் பொது விநியோகத் திட்ட அரிசியும், ரூ.36.22 இலட்சம் மதிப்புடைய 1942.33 குவிண்டால் சாதாரண அரிசியும், ரூ.14.16 இலட்சம் மதிப்புடைய 1,606 குவிண்டால் நெல்லும், ரூ.16.73 இலட்சம் மதிப்புடைய 1,03,051 லிட்டர் மண்ணெண்ணெயும் ரூ.2.31 கோடி மதிப்புடைய, பெட்ரோல், டீசல், தேயிலை, சிமிட்டி ஆகியவை உட்பட ஏனைய பொருட்களும் கைப்பற்றப்பட்டன. வாகனங்கள் உட்பட கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.9.58 கோடியாகும். 1316 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 226 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. 2001 ஆம் ஆண்டு ஜூன்



2001 செப்டம்பர் 1]

திங்கள் வரையில் ரூ.173 கோடி மதிப்புடைய இன்றியமையாப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு அரசுக் கணக்கில் சேர்க்கப்பட்டன.

## போதைப் பொருள்

தமிழ்நாட்டில் போதைப் பொருட்கள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்களைக் கண்டுபிடித்துத் தடுப்பதற்காக தமிழ்நாடு போதைப் பொருள் நுண்ணறிவு புலனாய்வுத் துறையைச் சேர்ந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தீவிர நடவடிக்கைகள் எடுத்துள்ளனர். இப்பிரிவினர், 2000 ஆம் ஆண்டில் 1245 வழக்குகளில் துப்பறிந்து, 1192 நபர்களை கைது செய்துள்ளனர். 2001ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வரையில் 618 வழக்குகளில் துப்பறியப்பட்டு, 603 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2001 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வரையில், 1980 கி.கிராம் ஈர கஞ்சாவும், 8.64 கி.கிராம் காய்ந்த கஞ்சாவும், 0.35 கி.கிராம் ஹெராயினும் (மதிப்பு ரூ.8 கோடி) 182 வயல்கள் டாயாசிபமும் (Diazepam) கைப்பற்றப்பட்டன. 52,000 கி.கிராம் கஞ்சா செடிகளும் அழிக்கப்பட்டன.

## பொருளாதாரக் குற்றங்கள்

## வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை

1-1-2000 ஆம் நாளில் உள்ளபடி, கூட்டுறவு அமைப்புகளில் நடைபெற்றுள்ள கையாடல் தொடர்பாக மொத்தம் 152 வழக்குகளில் புலன் விசாரணை முடிவுறாமல் உள்ளது. அத்துடன், 2000 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை முடிவுறாத 123 புதிய வழக்குகளும் சேர்க்கப்பட்டன. இவற்றில், மொத்தம் 152 வழக்குகளில் 2000 ஆம் ஆண்டில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 108 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளில் மொத்தம் ரூ.18.21 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் சம்பந்தப்பட்டதாக தெரியவந்தது. மொத்தம் ரூ.9.01 கோடியை திருப்பிச் செலுத்த குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இணங்க வைக்கப்பட்டுள்ளனர்.

2000 ஆம் ஆண்டு முழுவதிலும் 98 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டிருக்க, 2001 ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் வரையில் 44 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

## சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவு

2000 ஆம் ஆண்டில் 12 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 15 உலோகச் சிலைகளும், 13 கற்சிலைகளும், பழமை வாய்ந்த 3 ஓவியங்களும் கைப்பற்றப்பட்டன. இந்த இனங்களில் பெரும்பாலானவை உள்ளூர் காவல் துறையிடம் பதிவு செய்யப்பட்ட 13 வழக்குகளில் ஏற்கெனவே சம்பந்தப்பட்டிருந்தன. ஆனால், அவற்றின் அதிக மதிப்பையும், அவற்றின் முக்கியத்துவத்தையும் கருதி, அவற்றை, சிலைத் திருட்டு தடுப்புப் பிரிவு எடுத்துக் கொண்டது. 2001 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வரையில், இப்பிரிவு 8 வழக்குகளில் புலனாய்வு செய்யப்பட்டதின்மூலம் 19 உலோகச் சிலைகளை மீட்டுள்ளது.

## பொருளாதாரக் குற்றங்கள் பற்றிய பிரிவு—II

30-6-2001 வரை இப்பிரிவில், 417 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றுள் 190 வழக்குகள் குறித்து புலனாய்வு செய்யப்பட்டு வருகின்றன. 97 வழக்குகள் நீதிமன்ற விசாரணையிலும் 69 வழக்குகள் கைவிடப்பட்டும், 7 வழக்குகளில் அதிகபட்சமாக 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளன. சுமார் 10,86,456 முதலீட்டாளர்கள், தொகையைத் திருப்பித்தரத் தவறிய நிதி நிறுவனங்களில், ரூபாய் 1,788.03 கோடி முதலீடு செய்துள்ளனர். இந்த நிதி நிறுவனங்களில் முதலீடு செய்த 5.25 இலட்சம் முதலீட்டார்களுக்கு இதுவரையில், ரூபாய் 253.66 கோடி திரும்பக் கொடுக்கப்பட்டது.

இந்த நேர்வில், ஏறத்தாழ ரூபாய் 1,380 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் கண்டறியப்பட்டுள்ளன. 52 வழக்குகளில் சொத்துக்களை ஜப்தி செய்ய அனுமதியளிக்கின்ற ஆணைகளை அரசு பிறப்பித்துள்ளது. எஞ்சியுள்ள ரூபாய் 1534.37 கோடி இன்னும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை.

## 6. பெண்களுக்கெதிரான குற்றங்கள்

சென்னை மாநகரில் 'அனைத்து மகளிர் காவல் நிலையம்' ஒன்றை எற்படுத்துவதற்காக 1992 ஆம் ஆண்டில் அரசு, அனுமதி அளித்தது. இது, காவல் துறையின் வரலாற்றிலும் பெண்களுக்கு நியாயம் வழங்கச் செய்வதிலும் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது. இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குக் கிடைத்த வெற்றி, பாராட்டு ஆகியவற்றின்



ஊக்கத்தினால், அதிக எண்ணிக்கையிலான அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. இதன் எண்ணிக்கை, 1995 ஆம் ஆண்டில் 58 ஆக அதிகரித்தது. 1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர், புதிதாக அனைத்து மகளிர் காவல் நிலையம் எதையும் தொடங்க அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், நடைமுறையில் குடும்ப நீதிமன்றங்களாகவும், திருமணத் தகராறுகளைத் தீர்த்து வைக்கின்ற ஆலோசனை மையங்களாகவும், திருமணத்தை நடத்தி வைக்கும் மையங்களாகவும்கூட செயல்பட வேண்டும். அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் வரதட்சணைக் கொடுமைகள், வரதட்சணை கொடுமையினால் ஏற்படும் மரணம், வரதட்சணை காரணமாக பெண்கள் மேற்கொள்ளும் தற்கொலை முயற்சிகள், கணவனால் சித்ரவதை செய்யப்படுதல், கடத்தல், கற்பழிப்பு வழக்குகள், பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் மற்றும் ஏனைய கொடுமைகள், பெண் சிசுக் கொலை, விபச்சாரக் குற்றங்கள், குடும்பத் தகராறுகள் ஆகியவை குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பெண்களின் நலனைப் பாதுகாப்பதே அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் செயல்பாட்டின் முக்கிய நோக்கமாகும்.

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் வேறுபட்ட முறையில் கருதப்பட வேண்டும் என்ற கருத்தை அங்கீகரிக்கும் வகையிலும், பெண்கள் வேறுபட்ட முறையில் நடத்தப்படுவதையும், வன்முறைக்கு ஆளாகக் கூடும் என்ற இடையறா அச்சத்துடன் அவர்கள் வாழ்ந்து வருவதைக் கருதியும், மாநிலத்திலுள்ள ஒவ்வொரு காவல் துறை உட்கோட்டத்திலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையமாவது இருக்கும் வகையில், மகளிர் காவல் நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு, இரண்டு மூன்று ஆண்டுகளில், இம்மாநிலத்தில் மேலும் 126 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. 2001—2002 ஆம் ஆண்டில் 50 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும். இதனால் இம்மாநிலம் 108 (58+50=108) அனைத்து மகளிர் காவல் நிலையங்களைக் கொண்டிருக்கும் இந்தக் காவல் நிலையங்களில் வண்டி, தொலைபேசி, மீ உயரலைச் சாதனங்கள் முதலிய அவசியமான அடிப்படை வசதிகள் செய்யப்படும். 50 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு இதற்கென ஆகும் செலவு பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| தொடரும் செலவினம் | — | ரூ.6.40 கோடி |
| தொடராச் செலவினம் | — | ரூ.3.15 கோடி |

தற்போதுள்ள 58 அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் உள்ள வசதிகளை மேம்படுத்த ஆகும் செலவு பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| தொடரும் செலவினம் | — | ரூ.1.74 லட்சம் |
| தொடராச் செலவினம் | — | ரூ.1.08 கோடி |

அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இல்லாத இடங்களில் அல்லலுக்குட்படுத்தப்பட்ட பெண்களைத் தொடர்பு கொள்ளவும், அவர்களுக்கு உதவவும் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு உதவுவதற்காகவும் ஒவ்வொரு வட்ட தலைமையிடக் காவல் நிலையத்திலும் 1 பெண் காவல் துறை உதவி ஆய்வாளரும் 2 பெண் காவலர்களும் இருக்குமாறு ஏற்பாடு செய்யப்படும். மாநிலத்திலுள்ள 1217 காவல் நிலையங்களிலும் ஒரு பெண் உதவி ஆய்வாளர், 2 பெண் காவலர்கள் ஆண்டொன்றுக்கு 2.5 கோடி ரூபாய் தொடரும் செலவினத்தில் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் நியமிக்கப்படுவர். இதனால் பாதிக்கப்பட்ட பெண்கள் அச்சமோ, ஐயமோ எதுவுமின்றி காவல் நிலையங்களை எளிதில் அணுகும் நிலை ஏற்படும்.

துயரத்தில் இருக்கும் பெண் ஒருவர் உதவி பெறுவதற்காக, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், சரகக் காவல் நிலையங்கள் ஆகியவற்றை அணுகுவதற்கு, மாநிலம் முழுவதிலும் 1091 என்ற எண்ணுடைய உதவி தொலைபேசி இணைப்பு அளிக்கப்படும். சென்னை மாநகரில் 1091 என்ற எண்ணுடைய உதவி தொலைபேசி இணைப்பு ஏற்கெனவே உள்ளது.

கடந்த 5 ஆண்டுகளாக, அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலுள்ள காவல் படையினர் சீர்கேடு அடைந்து வந்துள்ளது குறித்து வருத்தம் ஏற்படுகிறது. எனவே, திறநுட்பப்படுத்திய புதிய பணியாளர்களைக் கொண்டு தற்போதுள்ள மகளிர் காவல் படை மாற்றியமைக்கப்படும். அதேசமயத்தில் தற்போதுள்ள பணியாளர்கள் மீண்டும் திறநுட்பப்படுத்தப்பட வேண்டும்.

## 7. தடய அறிவியல்

தடய அறிவியல் துறை, ஆசியாவிலேயே பழமையான நிறுவனமாகும். அதன் முதன்மை மைய அமைப்பு, 1849 ஆம் ஆண்டுக்கு முன் சென்னையில் நிறுவப்பட்டுள்ளது. இத்துறை, பல்வேறு சட்டத்தைச் செயல்படுத்துகின்ற மாநில, மத்திய அரசுகளின் பல்வேறு துறைகளுக்கு தடய அறிவியல் பணியை அளித்து வருகிறது.





சட்டத்தைச் செயல்படுத்துகின்ற துறைகளுக்கு தடய அறிவியல் பணியை அளிப்பதுடன், இத்துறை, சென்னையிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள விஷமருந்தியவர்களின் உயிரைக் காப்பதற்காக, மருத்துவ ரீதியிலான நச்சியல் சிசிச்சை வசதியையும் அளிக்கிறது. ஏழ்மை நிலையிலுள்ள பெண்களுக்கும், ஆதாவற்ற பெண்களுக்கும் சமுதாயப் பணி ஆற்றுவதற்காக, மரபணுச் சோதனை மையம் ஒன்றை, இத்துறை 1985 ஆம் ஆண்டிலிருந்து நடத்தி வருகிறது.

சென்னையில், மைய ஆய்வகம், தடய அறிவியல் துறையின் அலுவலகம் ஆகியவை அமைந்துள்ள தற்போதுள்ள கட்டடத்தில் இடவசதி போதுமானதாக இல்லாததால், ரூபாய் 6 கோடி மதிப்பீட்டுச் செலவில், 60,000 சதுர அடி கட்டடப் பரப்பில் புதிய உலகத்தரம் வாய்ந்த தடய அறிவியல் ஆய்வகம் ஒன்றை, தற்போதுள்ள கட்டடத்திற்குப் பின்னால் கட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### பகுதி—II திட்டங்கள் (2001—2002 ஆம் ஆண்டு)

2001—2002 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பகுதி-II திட்டங்கள் மேற்கொள்ளப்படும்:

(அ) ரூபாய் 6 இலட்சம் செலவில் துணைக் கருவிகளுடன் கூடிய அகச் சிவப்பு நிறமாலை ஒளிப்பதிவுச் (Infra Red Spectro Photo Meter) சாதனம் ஒன்றை வாங்குதல்.

(ஆ) ரூபாய் 5 இலட்சம் செலவில் பல்வகை ஊடக ஒலி—ஒளிக் காட்சி சாதனம் (Multi-Media Video Projection) ஒன்றை வாங்குதல்.

### பதினோராம் நிதிக் குழுவின் மானியங்கள்

பதினோராம் நிதிக்குழு அளித்த தொகையில், இந்த ஆண்டு கீழ்க்காணும் திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும்:

(அ) ரூபாய் 12 இலட்சம் செலவில், நடமாடும் தடய அறிவியல் ஆய்வுக் கூடம் ஒன்றைத் தொடங்குதல்.

(ஆ) ரூபாய் 53 இலட்சம் செலவில், தடய அறிவியல் துறையின் ஆய்வுப் பணிக்கான சாதனங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

## 8. மோட்டார் வண்டிகளும் பணிமனைகளும்

காவல் நிலையங்கள், குறிப்பாக பெருமளவிலான அதிகார வரம்பினைக் கொண்டுள்ள காவல் நிலையங்கள், சட்ட, ஒழுங்கு மற்றும் குற்ற நிகழ்வுகள் காரணமாக எழும் பிரச்சினைகளைக் குறுகிய காலத்திற்குள் சமாளிக்க வேண்டியிருப்பதால், அவை, விரைந்து சென்று அதிவிரைவாகச் செயல்பட வேண்டியது அவசியமாகும்.

2000—2001 ஆம் ஆண்டில், பழைய வண்டிகளுக்குப் பதிலாக புதிய வண்டிகளை வாங்குவது உட்பட, காவல் துறையின் வெவ்வேறு பிரிவுகளுக்கு, மொத்தம் ரூபாய் 7.01 கோடி செலவில் வெவ்வேறு வகைகளைச் சேர்ந்த 201 வண்டிகளை வாங்குவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. 2000—2001ஆம் ஆண்டில், 434 வண்டிகளை, பயனற்றவையென ஒதுக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாக, புதிய வண்டிகளை வாங்குவதற்காக அரசு, உள்(காவல் துறை—II) துறையின் 27—12—2000 ஆம் நாளிட்ட அரசாணை (வாலாயம்) எண் 1385—ல் உத்தரவு பிறப்பித்துள்ளது. உள்(நவீனமயமாக்கல்) துறையின் 27—2—2001 ஆம் நாளிட்ட அரசாணை எண் 184—ல் பழைய வண்டிகளுக்குப் பதிலாக, 58 புதிய வண்டிகளை மட்டுமே வாங்குவதற்கு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. உள் (நவீனமயமாக்கல்) துறையின் 20—6—2001 ஆம் நாளிட்ட 570 ஆம் எண் அரசாணையில், எஞ்சியுள்ள 368 பழைய வண்டிகளுக்குப் பதிலாக புதிய வண்டிகளை வாங்குவதற்கும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பிரிவுகள் (TSP Battalions) குற்றப் புலனாய்வுத் துறையின் சிறப்புப் பிரிவு (SB CID) தொலைத்தொடர்புப் பிரிவு (PTB), ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (UNDP) வரும் காவல் நிலையம் ஆகியவை பயன்படுத்துவதற்காக 159 புதிய வண்டிகளை வாங்குவதற்கும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. மேற்சொன்ன 527 வண்டிகளை (368+159) வாங்குவதற்காக, ரூபாய் 21.13 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

***1.7.2001 ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாடு காவல் துறையில் உள்ள வண்டிகளின் எண்ணிக்கை வருமாறு :—***

| | | |
|---|---|---|
| 1) | பேருந்து | 143 |
| 2) | சிறிய பேருந்து | 261 |
| 3) | கார் | 340 |
| 4) | ஜீப்பு | 2690 |
| 5) | லாரி | 418 |
| 6) | வேன் | 917 |
| 7) | கைதிகளின் பாதுகாப்பிற்காகச் செல்லும் வண்டி. | 31 |
| 8) | மோட்டார் சைக்கிள் | 2379 |
| 9) | மொபெட் | 142 |
| 10) | ஏனையவை | 85 |
| | மொத்தம் | 7,406 |





### தமிழ்நாடு காவல் துறை போக்குவரத்து பணிமனை

ஆவடியிலுள்ள போக்குவரத்து பணிமனை பயிற்சிப் பள்ளி, கனரக வண்டிகள், இலகு ரக வண்டிகள் ஆகியவற்றில் ஏற்படுகின்ற பெரிய அளவிலான பழுதுகளைச் சரிசெய்வதற்கான வசதிகளுடன்கூடிய பணிமனை ஒன்றையும், காவல் துறையின் வண்டிகளைக் கழுவித் தூய்மைப்படுத்துவதற்கான பணி நிலையம் (Service Station) ஒன்றையும் கொண்டுள்ளது. 2000—2001 ஆம் ஆண்டில், மோட்டார் வண்டிகளைப் பழுதுபார்ப்பதற்காக, ரூபாய் 52 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2001—2002 ஆம் ஆண்டில் ஜூன் திங்கள் வரையில், பழுதுபார்ப்புப் பணிகளுக்காகவும் 548 பணிகளை மேற்கொள்வதற்காகவும் ரூபாய் 18 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இந்தப் பணிமனை, ஓட்டுநர்களாக உள்ள காவலர்களுக்கு, ஒரு திங்கள் கால அளவிற்கு, அடிப்படை எந்திரவியலில் பயிற்சியும் அளிக்கிறது.

திருச்சிராப்பள்ளியிலுள்ள மண்டல காவல் துறை போக்குவரத்து பணிமனைக்கு, பழுதுபார்ப்புப் பணிக்காக ரூபாய் 5.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆவடி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள பணிமனைகளுக்குக் கருவிகளையும், தளவாடங்களையும் வாங்குவதற்காக, 2000—2001 ஆம் ஆண்டுக்கான, காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ், ரூபாய் 16.71 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. காவலர் நலத் திட்டங்கள்

### மானிய விலையில் உணவுப் பொருள் வழங்கும் திட்டம்

மானிய விலையில் உணவுப் பொருள் வழங்கும் திட்டம், 1980 ஆம் ஆண்டில் காவல் துறையின் ஒரு நல நடவடிக்கையாகக் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், காவலர் முதல் காவல் துறை ஆய்வாளர்கள் வரையிலான காவல் துறையினர் பயன்பெறத் தகுதியுள்ளவர்கள் ஆவர்.

உள் (காவல்—12) துறையின் 14—9—92 ஆம் நாளிட்ட அரசாணை எண் 1586—ல் அரிசி, சர்க்கரை, கோதுமை, பாமாயில் ஆகியவற்றுக்கு 50 சதவீதம் மானியம் அளிக்க அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

### தமிழ்நாடு காவலர் நல நிதி

காவல் துறையின் அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகளுக்கு நிதி மற்றும் ஏனைய நிவாரணங்களை அளிப்பதற்காக, 1957 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காவலர் நலநிதி ஏற்படுத்தப்பட்டது. ஆண்டுதோறும் காவல் துறை பணியாளர்கள் தாமாக முன்வந்து அளித்த சந்தாத் தொகையையும் இந்த ஆண்டுக்கான அரசின் மானியமான ரூபாய் 25 இலட்சத்தையும் இந்நிதி கொண்டுள்ளது. இந்நிதி, கீழ்க்காணும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

(அ) காவல் துறையைச் சேர்ந்த மரணமடைந்தவரின் பதவித் தரத்தைக் கருத்தில்கொள்ளாமல் அவருடைய விதவை மனைவிக்கு/அவரைச் சார்ந்திருப்போருக்கு ரூபாய் 10,000 நிவாரணத் தொகை வழங்குதல்.

(ஆ) நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருத்தல், கடுமையான காயமுறுதல் போன்ற அசாதாரணச் சூழ்நிலைகளில், பாதிக்கப்பட்டவரின் குடும்ப உறுப்பினர்களுக்கு, அதிகபட்சமாக ரூபாய் 5,000/— அல்லது கோரப்பட்ட தொகை இவையிரண்டில் எது குறைவோ அத்தொகையை தமிழ்நாடு காவலர் மருத்துவ நலநிதி மற்றும் மருத்துவச் செலவை ஈடுசெய்யும் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோய் நீங்கலாக வேறு நோயைப் பொறுத்தவரையில், அளிக்கப்பட்ட சிகிச்சைக்காக தனிமருத்துவ நிவாரணத் தொகையாக நிதியுதவி அளித்தல்.



(இ) காவல் துறையைச் சேர்ந்த சார்நிலைப் பணியாளர்களின் குழந்தைகள், கல்லூரிகளிலும், பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளிலும் மேற்படிப்பைத் தொடருவதற்காக, படிப்புதவித் தொகையாக ரூபாய் 2,000—லிருந்து ரூபாய் 5,000 வரை ஒருமுறை அளிக்கப்படும் மானியம் வழங்கப்படுகிறது.

2000—2001 ஆம் ஆண்டில், காவல் துறையைச் சேர்ந்த 5079 பணியாளர்களின் குழந்தைகள் பயன்பெறுகின்ற வகையில் ரூபாய் 85,71,500 செலவிடப்பட்டது.

### தமிழ்நாடு காவலர் மருத்துவ நலத் திட்டம்

காவல் துறைப் பணியாளர்களுக்கு, கடுமையான நோய்களுக்குச் சிகிச்சையும் மற்றும் அறுவை சிகிச்சைகளும் செய்துகொள்ள நேரும்போது, அவர்களுக்கு ஏற்படும் நிதி இடர்பாடுகள் குறித்து அரசு கவனத்தில் கொண்டுள்ளது. அவர்களுக்கு ஏற்படும் நிதிச் சுமையைக் குறைக்கும் நோக்குடன் "தமிழ்நாடு காவலர் மருத்துவ நல நிதி"யை அரசு ஏற்படுத்தியது. உள் துறையின் 21—5—1999 ஆம் நாளிட்ட அரசாணை எண் 709—ன்படி, அரசு வழங்கும் மானியத் தொகை ஆண்டொன்றிற்கு ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிதிக்காக, செலுத்தவேண்டிய மாதச் சந்தாத் தொகை ரூ.10/— ஆகும். இந்தியாவில் சிகிச்சை செய்துகொள்ளும் நேர்வில், அதிகபட்ச நிதியுதவியாக அளிக்கப்படும் தொகை ரூ.1 இலட்சம் ஆகும். இந்தியா நீங்கலாக, வேறு நாடுகளில் சிகிச்சை பெறுவதற்கு ரூ.1 இலட்சம் மானியம் வழங்குவதுடன் ஆண்டொன்றிற்கு 10 சதவீதத் தனிவட்டி வீதத்தில் அதிகபட்சம் ரூ.1 இலட்சம் கடன் உதவித் தொகையும் வழங்கப்படும்.

### காவல் துறைப் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான தொகுதி காப்பீட்டுத் திட்டம்

காவல் துறையில் நிலை-II காவலர்கள் பதவித்தரம் முதற்கொண்டு தலைமை இயக்குநர் பதவித்தரம் வரையிலான, அனைத்துக் காவல் துறைப் பணியாளர்களும் ஆரம்பிக்கப்பட்ட தொகுதி காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இதன்மூலம், தற்கொலை / இயற்கையான மரணம் நீங்கலாக ஏனைய வகையில் அவர்கள் இறந்துவிடும் நேர்வில், அவரின் நியமனதாரர் அல்லது சட்டப்படிக்கான வாரிசுதாரர் பின்வரும் வீதங்களில் காப்புறுதி தொகையை பெறுவர். 2000—2001—ல் காவல் துறைப் பணியாளர்களின் 10 குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு அதிரடிப் (Commando Force) படைப் பிரிவில் பணிபுரியும் காவல் துறைப் பணியாளர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கான பெயரிடப்படாத தொகுதிக் காப்பீட்டுத் திட்டம்

தமிழ்நாடு அதிரடிப் படை பயிற்சிப் பள்ளி, அதிரடிப் படைப் பிரிவு, அதிவிரைவு நடவடிக்கை படைப் பிரிவு போன்றவற்றில் பணியாற்றிவரும் காவல் துறைப் பணியாளர்கள், அதிகாரிகள் ஆகியோர், பணியாற்றும்போது, விபத்து காரணமாக இறந்துவிடும் நேர்வில், அவர்களது நியமனதாரர் அல்லது சட்டப்படிக்கான வாரிசுதாரர், காப்பீட்டுத் தொகையாக, ரூ.10 இலட்சம் பெறுவர். நிரந்தரமான இயலாமை ஏற்படும் நேர்வில், ஏற்பட்டுள்ள இயலாமை நிலைக்கு ஏற்ப காப்பீட்டுத் தொகை அளிக்கப்படும்.

## கருணைத் தொகை வழங்குதல்

கூட்டங்களைக் கட்டுப்படுத்தும்போதும், புலனாய்வின்போதும், பலப் பிரயோகம் செய்யவேண்டியுள்ளதால் காவல் துறையினர் அதிக அளவில் கண்டனத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, அதுமாதிரி சமயங்களில், நிறைந்த கட்டுப்பாட்டையும், பொறுமையையும் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகிறது. எதார்த்தத்தில் இதுபோன்ற சமயங்களில் காவல் துறையினர் முழுத்திறனுடன் செயல்பட முடியாத நிலை உள்ளது. இதனால் பாதிக்கப்படும் இவர்களுக்கு காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

அரசு சமீபத்தில், பின்வருமாறு கருணைத் தொகையினை உயர்த்தி ஆணையிட்டுள்ளது:

மரணம் —ரூ.2.00 இலட்சம் முதல் ரூ.5.00 இலட்சம் வரை
நிரந்தர ஏலாமை—ரூ.50,000 முதல் ரூ.1.00 இலட்சம் வரை
கொடுங்காயம் — ரூ.10,000 முதல் ரூ.20,000 வரை
சிறுகாயம் — ரூ.5,000 முதல் ரூ.10,000 வரை

வீரதீரச் செயலில் ஈடுபட்டு காவல் துறைப் பணியாளர் இறந்துவிட நேருமாயின், அவரின் சட்டப்படிக்கான வாரிசுதாரருக்கு, இறந்துபோன காவல் துறைப் பணியாளர் இறுதியாகப் பெற்ற சம்பளத் தொகையை, அவர், வயது முதிர்வு ஓய்வுபெறும் நாள் வரும் வரையில், குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.

குற்றப் புலனாய்வுத் துறையின், தனிப்பிரிவு படையைச் சேர்ந்த பணியாளர்களுக்கு, உள் துறையின் 5—1—1993 ஆம் நாளிட்ட அரசாணை





எண் 7—ன்படி கீழே விவரிக்கப்பட்டவாறு கருணைத் தொகை வழங்கப்படுகிறது:—

| | | |
|---|---|---|
| (அ) | காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் பதவி மற்றும் அப்பதவித் தரத்திற்கு மேல் உள்ளவர்கள் இறந்துவிடும் நேர்வில் | ரூ.5 இலட்சம் |
| | காவலர்கள் முதல் காவல்துறை ஆய்வாளர்கள் வரையுள்ளவர்கள் இறந்துவிடும் நேர்வில் | ரூ.3 இலட்சம் |
| (ஆ) | கை, கால்கள் நிரந்தரமாக முடமாக்கப்படும் நேர்விலும், பார்வை இழப்பு நிரந்தரமாக ஏற்படும் நேர்விலும் காவல்துறை அனைத்து பதவித் தரத்திலுள்ள பணியாளர்களுக்கும் | ரூ.2 இலட்சம் |
| (இ) | உடல் உறுப்புகள் உருக்குலையும் நேர்வில் அனைத்து பதவித் தரத்திலுள்ள காவல்துறைப் பணியாளர்களுக்கு | ரூ.1 இலட்சம் |

மாநில காவல் துறையினரின் நடவடிக்கைகளில் உதவி செய்தபோது கொல்லப்பட்ட மைய பாரா மிலிட்டரி காவல் படையினரின் குடும்பங்களுக்கு கருணைத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாய் வழங்க அரசு, உள் துறையின் 31—10—2000 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1169—ல் ஆணையிட்டுள்ளது.

## தொழிற்படிப்பு கல்லூரிகளில் இட ஒதுக்கீடு

பணிக்காலத்தில் வீரமரணமடைந்த காவல் துறைப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு மருத்துவம், பொறியியல் மற்றும் விவசாயப் படிப்புகளில் சேர ஒவ்வொரு படிப்பிற்கும் மூன்று இடங்களும், சட்டப் படிப்பில் இரு இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## பரிசுத் திட்டம்

ஒவ்வொரு மாவட்டம் / மாநகர்களிலும் பள்ளியிறுதி (S.S.L.C.) மற்றும் மேல்நிலைத் தேர்வுகளில் (+2) முதல் மூன்று இடங்களைப் பெறும் காவலர் முதல் காவல் துறை ஆய்வாளர் வரையிலான பணியாளர்களின் பிள்ளைகளுக்கு முறையே ரூ.6,000/—, ரூ.4,000/—, ரூ.2,000/— எனவும் மற்றும் ரூ.7,000/—, ரூ.5,000/— ரூ.3.000/— எனவும் பரிசுத் தொகை

ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. இவ்வாண்டு, காவல் துறைப் பணியாளர்களின் 227 குழந்தைகளுக்கு ரூ.10,06,000/— பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

### தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு நினைவு படிப்பு உதவித்தொகை

தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு நினைவு படிப்பு உதவித்தொகை நிதி 1962ல் கொண்டு வரப்பட்டது. அரசிதழ் பதிவுபெறாத காவல் துறை மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் தகுதியுள்ள பிள்ளைகள் கல்லூரி அளவில் உயர்கல்வி பெற, படிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வுபெற்ற அல்லது மரணமடைந்த பணியாளர்களின் பிள்ளைகளுக்கும் அவர்கள் ஓய்வுபெற்ற அல்லது மரணமடைந்த நாளிலிருந்து 5 ஆண்டுகள் வரை நேர்விற்கேற்ப இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### சிறப்புப் படிப்புதவித் தொகை நிதி

காவலர் முதல் ஆய்வாளர் பதவி வரையுள்ள காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்குச் சிறப்புப் படிப்பு உதவித் தொகை வழங்க அரசு உள் துறையின் 17—3—1994 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 311—ல் ஆணையிட்டுள்ளது. அரசு அளித்த ரூ.6 இலட்சத்துடன், சிறப்புப் பாதுகாப்புப் படையில் உள்ளவர்கள் அளித்த ரூ.4 இலட்சத்தையும் சேர்த்து மொத்தத் தொகையான ரூ.10 இலட்சமும் தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிதி நிறுவனத்திடம் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து படிப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இந்தப் படிப்பு உதவித் தொகையைத் தொழில் படிப்பு மேற்கொள்ளும் காவல் துறைப் பணியாளர்களின் குழந்தைகள் பெறலாம். இந்தத் தனிப் படிப்பு உதவித் தொகையானது, தலைசிறந்த ஒரு மாணவனுக்கு ரூ.40,000/— எனவும், சிறந்த மாணவர்கள் ஐந்து பேருக்கு தலா ரூ.20,000/— எனவும், வழங்கப்படுகிறது. அரசு பொருத்தமான நிதி அளிப்பதன் மூலம் இதற்கான நிதி ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தப்படும்.

### கருணை அடிப்படையில் பணியமர்த்துதல்

பணியிலிருக்கும்போது இறக்கும் அரசு ஊழியர்களின் சட்டப்படியான வாரிசுகள் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்படுகிறார்கள். ஆண் மற்றும் பெண் காவல் துறை உதவி



ஆய்வாளர்கள் மற்றும் காவலர் பணியிடங்களுக்குக் கருணை அடிப்படையிலான ஆட்தேர்வு மூன்று மாதங்களுக்கொருமுறை செய்யப்படுகின்றது.

### காவல் துறையில் கருணை அடிப்படையில் நியமனம் செய்வதற்குச் சிறப்பு நடவடிக்கைகள்:

கருணை அடிப்படையில், பணி நியமனம் பெற, 1200 நபர்களுக்கு மேற்பட்டோர் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர் என்பது உள் துறையின், 2001 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. காவலர்கள், ஆண்/ பெண் தங்களது பணியை திறம்பட ஆற்றிட, காவலர்களுக்கு தேவைப்படுகிற முக்கியமான தகுதிகளை விட்டுக்கொடுக்காமல், கல்வித் தகுதி, வயது வரம்பு மற்றும் உடற்கூறு தகுதிகள் ஆகியவகையில், சில சலுகைகளை அவர்களுக்கு அளித்து, நிலை—II காவலர்களாக, காத்திருப்போர் பட்டியலிலுள்ள நபர்களை நியமிப்பது குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### தமிழ்நாடு காவல் துறையினர் நலக் கூட்டுறவுச் சங்கங்கள்

காவல் படைத் தலைவர்களின் (Commandants) கட்டுப்பாட்டின்கீழ், பல்வேறு மகளிர் சங்கங்கள், கூட்டுறவுத் தொழிற் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை, பெரும்பாலும் காவல் துறையினருக்கான, சீருடைகளைத் தைக்கும் பணியை மேற்கொண்டு ஆதாயம் ஈட்டுகின்றன. படைப் பிரிவு (Battalion) தலைமையிடங்களில் ஒவ்வொரு வாரமும் காவல் துறையினர் மற்றும் அவர்களுடைய குடும்பத்ினருக்காகத திரைப்படங்கள் காட்டப்படுகின்றன.

### காவல் துறை மருத்துவமனைகள்

தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பிரிவு பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கென்று, ஆவடியில் ஒரு மருத்துவமனையும் திருச்சிராப்பள்ளியில் மற்றொரு மருத்துவமனையுமாக இரண்டு காவல் துறை மருத்துவமனைகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. அனைத்து காவல் துறைப் படைப் பிரிவுகளிலும் காவல் துறைக் காவலர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்கு இலவச மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, பரங்கிமலை, கடலூர், சேலம், வேலூர், மணிமுத்தாறு மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களிலும் காவல் துறை மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனைகள், காவல் துறைப் பணியாளர்களுக்கான நல நடவடிக்கைகளுக்காக மட்டுமே செயல்படுவதோடன்றி காவலர்கள் நல்ல ஆரோக்கியமான நிலையில் இருப்பதற்கு வகை செய்வதன்மூலம், காவல் துறைக்குப் பயன்படும் வகையிலும் செயல்பட்டு வருகின்றன.

காவல் துறை மருத்துவமனைகளை இராணுவ மருத்துவமனைகளுக்கு நிகராக தரமுள்ளதாகப் படிப்படியாக மாற்றுவதற்கும், அதன் மூலம் உயர்ந்த, தரமுள்ள மருத்துவ வசதிகளை இத்துறையின் பணியாளர்களுக்குச் செய்து கொடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### பொழுதுபோக்கு வசதி

காவல் படைப் பிரிவுத் தலைமையிடங்களில் (Battalion Headquarters) ஒவ்வொரு வாரமும், காவல் துறைப பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்குத் திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. இத்துடன், படிக்கும் அறைகளில் மேற்சொன்ன பணியாளர்களுக்கென்று நாளேடுகள், வார இதழ்கள், ஏனைய பத்திரிக்கைகள் வழங்கப்படுகின்றன. அனைத்துப் படைப் பிரிவுகளிலும், காவல் துறைப் பணியாளர்களுக்காக பண்டக சாலைகள் ஏற்படுத்தப்பட்டு அவர்களுடைய தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன.

### குறை தீர்ப்பு

அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறையினர் மாநாட்டில், காவல் துறைப் பணியாளர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக, காவல் துறைக் கண்காணிப்பாளர்கள், காவல் துறைத் துணைத் தலைவர்கள், மற்றும் ஏனைய முதுநிலைக் காவல் துறை அதிகாரிகள் ஆகியோர், ஒவ்வொரு மாதமும் ஒருநாளை ஒதுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்யபட்டுள்ளது. காவல் துறைப் பணியாளர்களின் குறைகளைக் கேட்டறிவதற்காக ஒவ்வொரு காலாண்டிலும் ஒருநாளை இதற்கென்று ஒதுக்குவதென நான் முடிவு செய்துள்ளேன்.



## 10. நியமனமும் பயிற்சியும்

4000 ஆண் காவலர்களைத் தெரிவு செய்யும் பணி 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தொடங்கியது. 6—8—2001—லிருந்து வாய்மொழித் தேர்வு மேற்கொள்ளப்பட்டது. 3500 காவலர்களை நியமிக்கும் பணி 2001—2002 ஆம் ஆண்டில் 15 மையங்களில் நடைபெற உள்ளது.

### பயிற்சி

சென்னையிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரி, காவல் துறை பணியாளர்களுக்கு அடிப்படை பயிற்சி அளிக்கிறது. காவலர் பயிற்சிக் கல்லூரியில் உயர்தொழில் நுட்ப கணினி மையம் 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. நாட்டில் முதல்முறையாக சென்னை, அசோக் நகர் காவலர் பயிற்சிக் கல்லூரி, இங்கிலாந்திலுள்ள பிராம்சில் தேசிய காவலர் கல்லூரியுடன் உயர்கல்வி தொடர்புகளை வைத்து வருகிறது. இத்திட்டம், (பிரிட்டிஷ் கல்விக் குழுவின் ஆதரவில்) 2001—2003 ஆம் ஆண்டு முதற்கொண்டு மூன்றாண்டுகளில் இரண்டு நிறுவனங்களின் உறுப்பினர்கள் கல்விப் பரிமாற்ற வருகைக்கு வகை செய்கிறது. இந்த நடவடிக்கையால், இம்மாநிலத்தில் காவலர் பயிற்சியின் தரம் மிகச் சிறப்பான முறையில் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஆண் பெண் இருபாலரையும் மதித்தல்—புத்துயிர் பயிற்சி

இந்த உலக மகளிர் உரிமை ஆண்டில், இந்தத் துறை முழுவதும் ரூ.2.3 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆண், பெண் இருபாலரையும் மதித்தல் குறித்த புத்துயிர் சிறப்பு பயிற்சித் திட்டம் மேற்கொள்ள உள்ளது, இத்திட்டம், இத்துறையிலுள்ள வல்லுநர்களை ஈர்க்கும். இது உயர்தரம் வாய்ந்ததாக இருக்கும். இந்தப் பயிற்சி மகளிருக்கெதிராக இழைக்கப்படும் குற்றங்களைச் சிறப்பான முறையில் கண்டறிந்து கையாள பெரிய அளவில் உதவிகரமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. காவல் துறை பலப்பிரயோகத்தைப் பயன்படுத்தல், இருபாலரையும் மதித்தல், பல்வகை மனித உரிமைகள் முதலியன தொடர்பான பாடங்கள் பாடத்திட்டங்களில் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கும். எதிர்கால பயிற்சித் திட்டங்களில், இந்தப் பாடங்கள், மிக அவசியமாக இடம் பெற்றிருக்கும்.

பயிற்சியாளர்கள் கடமை உணர்வோடும், திறமையுடனும், பொறுப்பேற்கும் பாங்குடனும் திகழவேண்டுமென்பதை உறுதிசெய்ய, காவலர் பயிற்சிக் கல்லூரி மற்றும் காவலர் பணி நியமன பயிற்சிப்

பள்ளி ஆகியவற்றில் உள்ள பயிற்சியாளர் பதவிகள், ஐதராபாத் சர்தார் வல்லபாய் பட்டேல் தேசியக் காவலர் கழகம் மற்றும் முசோரி லால்பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாகக் கழகம் ஆகியவற்றில் உள்ளதுபோல கூடுதலாக படிகள், வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்து அப்பதவிகளைக் கவர்ச்சிக்கரமானதாக ஆக்க வேண்டும். காவலர் பயிற்சிக் கல்லூரி/ காவலர் நியமன பயிற்சி பள்ளி ஆகியவற்றில் உள்ள உயர்நிலை அதிகாரிகளின் பதவியிடத்தில், சில சிறந்த அதிகாரிகள் நியமனம் செய்யப்படுவர். அப்போதுதான், காவல் படை முழுவதும் அவர்கள் அங்கே அளிக்கக்கூடிய சிறப்பானப் பயிற்சியின்மூலம் பயன் அடையமுடியும்.

## 11. வீட்டுவசதி மற்றும் கட்டடங்கள்

காவல் துறைப் பணியாளர்களின் பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களை வகுத்து நிறைவேற்ற 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ், உள் துறையின் 27—9—1980 ஆம் நாளிட்ட 2500 ஆம் எண் அரசாணையின்படி தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் உருவாக்கப்பட்டது. இது ரூ.100 இலட்சம் செலுத்தப்பட்ட மூலதனத்துடன், 13—4—1981 ஆம் நாள் முதற்கொண்டு செயல்படத் தொடங்கியது. கடந்த ஆட்சியினரால் 31—3—1989 அன்று மூடப்பட்ட இக்கழகமானது 18—11—1991 அன்று மீண்டும் புனரமைக்கப்பட்டது.

காவல் துறைக்காக, ஆண்டொன்றுக்கு முதற்கண் 1000 வாடகைக் குடியிருப்புகள் கட்ட தமிழ்நாடு அரசு ஆணையிட்டது. இந்தக் குடியிருப்புகளின் எண்ணிக்கை அவ்வப்போது அதிகரிக்கப்பட்டது. 2000—2001ல் இந்த எண்ணிக்கை தற்போது 3000 குடியிருப்புகள் ஆகும். அனுமதிக்கப்பட்ட மற்றும் கட்டப்பட்ட குடியிருப்புகளின் விவரம் பின்வருமாறு:

### சொந்த வீடு திட்டம்

காவல் துறைப் பணியாளர்களுக்கு மொத்தத் தொகையைச் செலுத்தி வீடு வாங்குவதற்கான சொந்த வீடு பெறும் திட்டம், 1998—99 ஆம் ஆண்டு முதற்கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. காவல் துறைக்கு வீடுகட்டுவதற்கான முன்பணம் தொடர்பான ஆண்டு ஒதுக்கீட்டு தொகையான ரூ.2 கோடியை தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் முன்பணமாக பயன்படுத்துகிறது. 1998—99 ஆம் ஆண்டில்,





இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.597 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 175 வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டன. 1999—2000 ஆம் ஆண்டில், 138 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, ஒதுக்கீட்டாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 2001 ஏப்ரலில், அரூர் திட்டத்தில், 37 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

### காவலர் பயிற்சிக் கழகம்

வண்டலூர் அருகே ஊனமாஞ்சேரியில் காவலர் பயிற்சிக் கழகத்தை ஏற்படுத்த அரசு ஆணைகள் பிறப்பித்து, ரூ.36.23 கோடி ஒதுக்கியது. (அரசாணை எண். 728 உள்(காவல்—XI) துறை, நாள் 10—7—2000). இதற்காக, வருவாய்த் துறை 132.92 ஏக்கர் நிலத்தை ஒதுக்கியது. இதனைக் காவல் துறை இயக்குநர் (பயிற்சி) திட்டத்தை நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொண்டுள்ளார். இதற்கான வடிவமைப்பு மற்றும் அது தொடர்பான மதிப்பீடுகளைக் கட்டட அமைப்பு ஆலோசனை நிறுவனம் அளிக்க வேண்டியுள்ளது. அதன்பிறகு தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம், ஒப்பந்தப்புள்ளிகளை கோரி பெற்று, பணிகளை நிறைவேற்றும்.

### கடலோரக் காவல் படைக்கான கட்டடம்

மொத்தம் ரூ.3.25 கோடி மதிப்பீட்டுச் செலவில் சென்னையில் தலைமையிட அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கும், தூத்துக்குடி, நாகப்பட்டினம், வேதாரண்யம், பட்டுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் 5 மண்டல அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கும், கடலோரக் காவல் படை அமைப்பிற்காக பல்வேறு இடங்களில் 60 சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தவும் ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. இதில், சென்னையில் நிருவாக அலுவலகக் கட்டடத் தொகுதி முடிவடையும் நிலையில் உள்ளது. இது விரைவில் ஒப்படைக்கப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5 மண்டல அலுவலகங்களில், தூத்துக்குடி, இராமநாதபுரம், வேதாரண்யம் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள மண்டல அலுவலகங்கள் கடலோர காவல் படையிடம் ஒப்படைக்கப்பட்டன. எஞ்சியவை அதாவது, பட்டுக்கோட்டையில் உள்ள அலுவலகத்தில் முதல் மாடி கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. இது விரைவில் முடிக்கப்படும்.

60 சோதனைச் சாவடிக் கட்டடங்களில் 53 இடங்களில் கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டன. கடலோர காவல்படை அவற்றை எடுத்துக்கொண்டன. 5 இடங்களில் (அதாவது, கிள்ளை, சாயல்குடி, வல்லம்புதுகை, என்பகோட்டை மற்றும் கொளச்சல்) பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சிய 2 இடங்களில் அதாவது (பாம்பன், முட்டம்) நிலம் கண்டறியப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### ஏழு காவலர் நியமனப் பயிற்சிப் பள்ளிகளின் மேம்பாடு

ஏழு காவலர் நியமனப் பயிற்சிப் பள்ளிகளில் ஏற்கெனவே உள்ள கட்டடத்தின் மேல் கூடுதலாக தளம் கட்டுவதற்கும், மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, வேலூர், சேலம், கோயம்புத்தூர், ஆகிய இடங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், ரூ.8.00 கோடி வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. 5 காவலர் நியமனப் பயிற்சிப் பள்ளிகளில் மேம்பாட்டுப் பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டு, கட்டடங்கள் சம்பந்தப்பட்ட பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. கோயம்புத்தூரில் பணிகள் முடிக்கப்பட்டு, 19—7—1999 ஆம் நாளன்று ஒப்படைக்கப்பட்டது. வேலூரில் காவலர் நியமனப் பள்ளி 12—5—2001 ஆம் நாளன்று ஒப்படைக்கப்பட்டது.

### சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகளுக்கான பராமரிப்பு

1999—2000 ஆம் ஆண்டிற்கு, பழுதுபார்ப்புப் பணிகளுக்காக ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதிலும் பரவி உள்ள 5267 காவலர் குடியிருப்புகள் / காவல் துறைக் கட்டடங்களில் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 2000—2001 ஆம் ஆண்டிலிருந்து, பழுதுபார்ப்புப் பணிகள், இக்கழகத்தின் அக நிதிவாயில்களை திரட்டுவதன்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகம், அதன் சொந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்காக, பூந்தமல்லி நெடுஞ்சாலையில், கீழ்பாக்கம் காவல் நிலையத்திற்கு அருகே 4 கிரவுண்டு 1902 சதுர அடி நிலத்தைக் குத்தகைக்கு எடுப்பதற்கான ஒரு செயற்குறிப்பை அரசு ஏற்றுக்கொண்டது. ரூ.4.50 கோடி மதிப்பீட்டுச் செலவில், பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்தொகை, இக்கழகத்தின் நிதியிலிருந்து அளிக்கப்பட வேண்டியுள்ளது.



## 12. பொது மக்கள் ஒத்துழைப்பு

முறையான அடிப்படையில், பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெற்று, பொதுமக்களிடம் நற்பெயரை ஈட்ட வேண்டுமென்ற நோக்கத்தில், காவலர் பொதுமக்களிடையே நல்லுறவை வளர்க்க, காவலர் நண்பன் (காந) என்ற பெயரில் ஒரு தொண்டு இயக்கம் தொடங்கப்பட்டது. இந்த இயக்கம் முதற்கண் இராமநாதபுரம் மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. இது ஏனைய மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. காவலர் நண்பர்கள், குற்றம் அடிக்கடி நடக்கும் பகுதிகளில் இரவு நேரங்களில், குறிப்பாக இருள் சூழ்ந்த இரவு நேரங்களில் இரவு சுற்றுக்காவல் பணிகளில் உள்ளூர் காவலர்களுக்கு உதவுகின்றனர். மேலும், இவர்கள், நெரிசல் மிகுந்த நேரங்களில் நெரிசலான பகுதிகளில், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், முக்கியமான பண்டிகைகள்/ நிகழ்ச்சிகளில் கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும் உதவுகின்றனர். சமுதாயம் காவலர் நல்லுறவு என்ற ரீதியில் இத்திட்டம், இணைய தளத்தில் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் போன்ற மாநகரங்களில், அந்த மாவட்ட காவல் துறை, குடிசைப் பகுதியில் குடிசைவாசிகளின் உடல்நலன், சுகாதாரம் மற்றும் நலன் ஆகியவற்றை மேம்படுத்த அத்தகைய குடிசைப் பகுதிகளைத் தன்பொறுப்பில் எடுத்துக் கொண்டுள்ளது. காவல் துறை பணியாளர்கள் இப்பணியில் ஈடுபட்டு மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்தனர். இலவச மருத்துவச் சோதனை குடிசைவாசிகளுக்கும், தேவையான ஏழை மக்களுக்கும் அளிக்கப்பட்டன.

## 13. விளையாட்டுகளும் விளையாட்டுப் போட்டிகளும்

இந்திய காவல் படையில் தொழில்முறை தரத்தை மேம்படுத்தவும் விளையாட்டுத் திறனை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் அனைத்திந்திய காவலர் விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன.

44—வது அனைத்திந்திய காவலர் விளையாட்டுப் போட்டிகளை, 18—9—2000 முதல் 23—9—2000 வரையில், சென்னையில் தமிழ்நாடு காவல் துறை நடத்தியது. பல்வேறு மாநிலங்கள், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள், மத்திய காவல் அமைப்புகள் ஆகியவற்றைச் சேர்ந்த 26 குழுக்கள் இந்த 44வது அனைத்திந்திய காவலர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டன. தமிழ்நாடு 9 தங்கம், 7 வெள்ளி, 5 வெண்கல பதக்கங்களைப் பெற்று ஒட்டுமொத்த முதல் இடத்தைப் பெற்றது.

தமிழ்நாடு கமாண்டோ படை மற்றும் தமிழ்நாடு கமாண்டோ பள்ளியைச் சேர்ந்தவர்கள் 2000—ம் ஆண்டு நடைபெற்ற மாநில காவல் திறன் போட்டிகளில் 17 தங்கம், 9 வெள்ளி, 9 வெண்கல பதக்கங்களையும், 3 ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் டிராபிகளையும், 2000—ம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய திறன் போட்டிகளில் தடகளம், நீச்சல், நீண்டதூர ஓட்டம், துப்பாக்கி சுடுதல் போன்றவற்றில் ஒரு தங்கப் பதக்கத்தையும் வென்றது.

வெடிகுண்டு கண்டுபிடிப்பு, செயல் இழக்கச் செய்யும் படைப் பிரிவு பணியாளர்கள், 2000 ஆம் ஆண்டு, மாநில காவலர் போட்டி விளையாட்டுகளில், ஒரு வெள்ளி பதக்கத்தையும், ஒரு ஒட்டுமொத்த முதல் இடத்தையும் பெற்றனர். மேலும், இப்பிரிவு, சதித்திட்டத்தை சோதனையிட்டு கண்டுபிடிக்கும் நிகழ்வில், 2000 ஆம் ஆண்டு அனைத்து இந்திய காவலர் போட்டி விளையாட்டுகளில், ஒரு வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றது.

தமிழ்நாடு அதிரடிப் படை பள்ளியின் நாய்ப் படை, 2000 ஆம் ஆண்டு, மாநில காவலர் போட்டி விளையாட்டுகளில், 2 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம் பதக்கங்களை வென்றது. மேலும், இப்படை 2000 ஆம் ஆண்டு அனைத்திந்திய காவலர் போட்டி விளையாட்டுகளில் 1 தங்கம், 2 வெள்ளி பதக்கங்களை வென்றது.

## 14. புதிய திட்டங்களும் கொள்கை முயற்சிகளும்

மத்திய அரசு, 2001 ஆம் ஆண்டினை மகளிர் உரிமை அளிப்பு ஆண்டாக அறிவித்துள்ளது. மகளிருக்கு எதிரான குற்றங்களை மிகவும் திறம்பட கையாளும் வகையில், மகளிர் காவலர்கள் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் குறித்து சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அனைத்து மகளிர் காவல் நியைங்களில் நியமிக்கப்படுகின்ற காவலர்களுக்கு ஆண், பெண் இருபாலரையும் மதித்தல், குற்றப் புலனாய்வு, துயருற்ற மகளிர் தொடர்பான பிரச்சினைகள் ஆகியவற்றில் புத்துயிர் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இவற்றுடன், அனைத்துக் காவல் படைக்கும், ஆண், பெண் இருபாலரையும் மதித்தல் புத்துயிர் பயிற்சி அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் ரூ.1.08 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போதுள்ள, 58 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்துகொடுக்கப்படும்.



மீதமுள்ள துணைக் கோட்டங்களில் ஏற்படுத்தப்படவிருக்கும் 126 அனைத்து மகளிர் காவல் நிலையங்களில், 184 துணைக் கோட்டங்களில், நடப்பாண்டில் 50 புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் திறக்கப்படும். அவற்றுக்கு அனைத்து வசதிகளும் அளிக்கப்படும். அனைத்து மகளிர் காவல் நிலையங்களும், பணிகளின் அங்கமாக உதவி நல்குகிற, ஆலோசனை வழங்குகிற அமைப்புகளைக் கொண்டிருக்கும். இவை, துயருற்ற மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் அளிக்க முயலும். இதற்கு ரூ. 9.55 கோடி செலவாகும்.

ஆண் காவலர்களை மட்டுமே கொண்டுள்ள காவல் நிலையத்திற்குப் பெண்கள் வந்து புகார் கொடுப்பதற்குத் தயக்கம் காட்டுகின்றனர். எனவே, மாநிலத்திலுள்ள 1217 காவல் நிலையங்களிலும் மகளிர் உதவி ஆய்வாளர் ஒருவரும், இரண்டு மகளிர் காவலர்களும் இருக்குமாறு அடுத்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பாடு செய்யப்படும். மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள நோக்கத்தை அடைவதற்காக, 1119 மகளிர் உதவி ஆய்வாளர் பதவிகளுக்கும், 1638 மகளிர் காவலர் பதவிகளுக்கும் கூடுதலாக அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதற்கு, ஆண்டொன்றுக்கு ரூ.25.09 கோடி தொடரினச் செலவு ஏற்படும்.

இரயில்வே காவல் துறையின் மகளிர் பணியாளர்களின் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு ரூ.58 இலட்சம் செலவில் அதிகரிக்கப்பட்டு வருகின்றது.

பணியைச் செய்யும்போது ஆண் காவலர்களுக்கு அளிக்கப்படுவதைப் போன்றே பெண் காவலர்களுக்கும் படைக்கலங்களும் ஆயுதங்களும் கொடுக்கப்படும். மகளிர் காவலர்களுக்கு சேர்ஜ் (Searge) தொப்பிகளும், மகளிர் காவல் அதிகாரிகளுக்கு பீக் (Peak) தொப்பிகளும் வழங்கப்படும்.

துயருற்றவர்களுக்குத் துயர் நிவாரண நிதியிலிருந்து ரொக்க உதவி அளிக்கப்படுகிறது. இந்த நிதி துயரால் பாதிக்கப்பட்ட மகளிருக்கு மட்டுமல்லாமல் துயரால் பாதிக்கப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் அளிக்கப்படுகிறது. இந்த நிதி, ரூ.1 கோடியிலிருந்து ரூ.2 கோடியாக உயர்த்தப்படுகிறது.

கோயில் பாதுகாப்புப்படை, கோயில்களிலிருந்து கடவுளர் சிலைகள் திருடப்படாமல் தடுப்பதிலும், அவற்றிற்குப் பாதுகாப்பு அளிப்பதிலும் சமுதாயத்திற்கு தொண்டாற்றி வந்துள்ளது. அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊதியமும் உயர்த்தப்படும். கோயில் பாதுகாப்புப் படையில் பணிபுரிபவர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதச் சம்பளம்

ரூ.1210/—லிருந்து ரூ.1500/— ஆக உயர்த்தப்படும். இதனால் அரசிற்கு ஆண்டொன்றிற்கு ரூ.1.04 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். மாவட்டங்களில் உள்ள அனைத்து சரகங்களின் காவல் துறைத் துணைத் தலைவர்களுக்கும் (DIGs) காவல் துறைக் கண்காணிப்பாளர்களுக்கும் (SPs) செல்லிடத் தொலைபேசிகள் (Cell Phone) அளிக்கப்படும்.

மக்களுக்குக் காயங்களை ஏற்படுத்தக்கூடிய காவல் துறையினரின் துப்பாக்கிச் சூடு, தடியடிப் பிரயோகம் மற்றும் கூட்டத்தைக் கலைக்கக் கையாளும் ஏனைய நடவடிக்கைகள் தவிர்க்கப்படுவது அவசியமென அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக, கடைசி முயற்சியாகவே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட வேண்டும். இத்தகைய சமயங்களில் காவல் துறை மாற்று வழிகளை கையாள வேண்டும். எனவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ரூ.8.96 கோடி செலவில், தண்ணீர் பீச்சியடிக்கும் (Water Canon) வண்டியான வருணா வழங்கப்படும்.

1—1—2001 நிலவரப்படி, தமிழ்நாட்டில் ஓட்டப்படுகின்ற அனைத்து வகை வண்டிகளின் எண்ணிக்கை 50.12 இலட்சமாக இருப்பதால், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டச் சாலைகள், முதலியவற்றில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. இதன் காரணமாக, எண்ணற்ற சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன. 1996 ஆம் ஆண்டிலிருந்து, ஒவ்வோர் ஆண்டும் சாலை விபத்துக்களில் சுமார் 9000 பேர் மரணம் அடைகின்றனர். சாலைப் பாதுகாப்பு நிதியைப் பயன்படுத்தி, சாலைப் பாதுகாப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. காவல் துறையை நவீனப்படுத்தல் திட்ட நிதியின் கீழ் இதற்கென ரூ.2.15 கோடி உள்ளது. மேலும், மாவட்ட அளவில், சாலைப் பாதுகாப்புக் குழுக்கள் உள்ளன. சாலை விபத்து தொடர்பான பிரச்சினைகளையும், போக்குவரத்தை மேம்படுத்துவதையும் கவனிப்பதற்காகவே, காவல் துறை தலைமை இயக்குநரின் அலுவலகத்தில் சாலைப் பாதுகாப்புப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பல சந்தர்ப்பங்களில், ஒரு சாலை விபத்து, சாலையில் தடை ஏற்படுத்துகிற வாகனத்தினால், சீரான போக்குவரத்தை நிறுத்திவிடும். மக்கள் பயன்படுத்துகிற சாலைக்கு இடையூறு ஏற்படுத்துவதைத் தவிர்க்க, விரைந்து சாலையை ஒழுங்குபடுத்துவது அவசியமாகும். போக்குவரத்து நெரிசல்மிக்க தேசிய நெடுஞ்சாலைகள், பெரிய சாலைகளில்



போக்குவரத்து உதவி மையங்கள், அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்படவிருக்கின்றன. இந்த மையங்களுக்குக் கனரக வாகன தூக்கிகள், மீட்பு வண்டிகள், அவசர சிகிச்சை ஊர்திகள் வழங்கப்படும். விபத்து சிகிச்சை கவனிப்பு மையங்கள், மருத்துவமனைகளுடன் இந்த மையங்கள் ஒருங்கிணைந்து பணிபுரியும்.

நம்மிடம் உள்ள காவல் படைப் பிரிவு வகையைத் தீர்மானிப்பதில், ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி அளித்தல் ஆகிய இரண்டும் மிக முக்கியமான துறைகளாகும். காவல் துறை, தீயணைப்புத் துறை மற்றும் சிறைத் துறைப் பணியாளர்களுக்கும் இத்தகைய பொதுவான ஆட்சேர்க்கும் முறை ஒன்றுடன், வாய்மொழித் தேர்வு மற்றும் உடல்திறன் தேர்வுகளுக்கான அடிப்படைத் தகுதிகள் குறைக்கப்பட்டு அதற்கு நிகராக எழுத்துத் தேர்விற்கான அடிப்படைத் தகுதிகள் அதிகரிக்கப்படும். காவல் பணியாளர் நியமனத் தேர்வில் ஏற்படும் முறைகேடுகளைத் தடுப்பதற்கு நீண்டகாலம் பிடிக்கும்.

அவர்களை நல்ல காவலர்களாக உருவாக்கி, அவர்களுடைய திறன்களை மேம்படுத்த அளிக்கப்படுகின்ற இப்பயிற்சியானது, நவீனமயமாக்கப்பட்ட காவல் படை ஒன்றினுக்கு நுணுக்கம் வாய்ந்த ஒரு தேவைப் பொருளாகும். பயிற்சியாளர்களின் பயிற்சி, பொறுப்பு ஏற்கத்தக்க மற்றும் திறமை வாய்ந்த அதிகாரிகளை நியமித்தல், பயிற்சியாளர்களை ஊக்குவித்தல் ஆகியவை குறித்து அளிக்கப்படுகின்ற தனி முக்கியத்துவம் பயிற்சியின்போது மேற்கொள்ளப்படும் உடன்பாடான நடவடிக்கைகளில் அடங்கும்.

இவ்வாண்டிற்கான ஏனைய புதிய திட்டங்கள் வருமாறு:

❖ சென்னை — காவல் துறை ஆணையாளருக்கான நவீன மின்னணுவியல் முறைக்காவல் ஏற்பாடு — ரூ.14.50 இலட்சம்.

❖ அலுவலகக் கண்காணிப்பாளர் பதவியிடங்களைத் திருப்பி ஒப்படைப்பதன்மூலம் காவல் துறையில் 72 நேர்முக உதவியாளர் (நிருவாகம்) பணியிடங்களை உருவாக்குதல் — ஆண்டொன்றுக்கு ரூ.66.00 இலட்சம்.

❖ காவல் நிலையம் ஒவ்வொன்றிலும் ஒளிநகல் (Xerox) இயந்திரத்திற்கு வகை செய்தல். (ரூ.35.00 இலட்சம்)

*2001—2002 ஆம் ஆண்டின்போது பின்வரும் பகுதி-II திட்டங்களும் எடுத்துக் கொள்ளப்படும்.*

| தொடர் எண் | விபரம் | செலவினம் |
|---|---|---|
| 1. | புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டங்கள்/காவல் படைப் பிரிவுகள்/ காவல் துறை ஆணையாளர் அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு 'பேண்ட்' வாத்தியக் கருவிகளும் சீருடைகளும் புதிதாக வாங்கி வழங்குதல் | ரூ.18.48 இலட்சம் |
| 2. | அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் 6 உட்பட 26 காவல் நிலையங்களுக்கு அரசுக் கட்டடங்கள் கட்டுதல் | ரூ.1.46 கோடி |

எல்லா மாவட்டங்களிலும் காவலர் ஓய்வில்லங்கள் கட்டப்படும். நடப்பாண்டில், விழுப்புரம், தூத்துக்குடி, திண்டுக்கல், கோயம்புத்தூர், விருதுநகர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களிலுள்ள மாவட்டக் காவல் துறை அலுவலகங்களில் (DPOs) ரூ.36.00 இலட்சம் செலவில் 6 ஓய்வில்லங்கள் கட்டப்படும்.

இராணுவ மருத்துவமனைகளுக்கு இணையான தரத்தில் காவலர் மருத்துவமனைகளின் நிலை உயர்த்தப்படும்.

பணியில் இருக்கும்போது மரணம் அடைந்த பணியாளரைச் சார்ந்திருப்போருக்கு கருணை அடிப்படையில் காவலர் பதவியில் நியமிக்கும் வகையில் அதற்கான சில விதிகள் தளர்த்தப்படவுள்ளன.


மொத்தத்தில் தமிழ்நாடு காவல் துறையினர், நெருக்கடி மிக்க பகுதிகளிலும், சிக்கலான நேரங்களிலும் மாநிலத்தின் சட்டம்—ஒழுங்கைப் பராமரிப்பதில் முன்மாதிரியாகப் பங்காற்றியுள்ளனர். தீவிரவாதக் குழுக்களைக் கட்டுப்படுத்துவதில் அதன் பங்கு குறிப்பிடத்தக்கதாக உள்ளது. சீர்பெருமக்கள் (VIP) உயர் சீர்பெரு மக்களுக்குப் (VVIP) பாதுகாப்பு அளிப்பதில் காவலர்களின் தொழில் முறை தேர்ச்சித் திறன் தலை சிறந்ததாக உள்ளது. தமிழக காவல் துறை விரைவான நடவடிக்கை திட்டமிடல், செயல்படுத்தல் ஆகியவற்றில் முழுமையான தேர்ச்சித் திறனும், செயல்திறனும் பெற்றுள்ளது. இம்மாநிலத்தில் சட்டத்தைப்





பின்பற்றுகின்ற குடிமக்களைப் பாதுகாப்பதில், தமிழ்நாடு காவல் துறையினரின் வீரம், செயல்நோக்கம், தியாகம் ஆகியவை அனைவரும் அறிந்த ஒன்றாகும். எனினும், காவல் துறையினர் வெற்றிகரமாகச் செயல்படுவது, பொதுமக்களின் செவ்விய ஒத்துழைப்பு, பொதுமக்களுக்கும் காவல் துறையினருக்குமிடையே நெருக்கமான ஒருங்கிணைப்பு ஆகியவற்றையே பெரிதும் சார்ந்திருக்கிறது. தமிழ்நாடு காவல் துறையை தொழில் முறையில் சிறந்ததாகவும், தகுதிவாய்ந்ததாகவும் ஆக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும். நாட்டிலேயே குடிமக்களுடன் நட்பாக உள்ள படை தமிழ்நாடு காவல் படைதான் என்ற நிலை ஏற்படுவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

# காவல் துறை நிருவாக அமைப்பு வரைபடம் (செயல்முறை)



# இணைப்புகள்

## தமிழ்நாடு காவல் துறையின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை

## (31–7–2001)

| தொ. எண் | பதவிகளின் பெயர் | அனுமதிக்கப் பட்ட பதவிகள் | பதவியில் உள்ளவர் கள் | காலியி டங்கள் |
|---|---|---|---|---|
| 1. | **காவல்துறைத் தலைமை இயக்குநர்** | 5 | 5 | 0 |
| 2. | காவல்துறைக் கூடுதல் தலைமை இயக்குநர் | 18 | 15 | 3 |
| 3. | காவல்துறைத் தலைவர் | 27 | 24 | 3 |
| 4. | காவல்துறைத் துணைத் தலைவர் | 35 | 32 | 3 |
| 5. | காவல்துறைக் கண்காணிப்பாளர் | 102 | 99 | 3 |
| 6. | காவல்துறைத் துணை ஆணையாளர் (ஆயுத சேமக் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் வகை-II) | 5 | 5 | 0 |
| 7. | கமாண்டண்ட் | 12 | 12 | 0 |
| 8. | காவல்துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் (வகை-I) | 85 | 69 | 16 |
| 9. | காவல்துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் (வகை-II) | 7 | 4 | 3 |
| 10. | துணைக் கமாண்டன்ட் | 11 | 8 | 3 |
| 11. | காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் (வகை-I) | 482 | 460 | 22 |
| 12. | காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் (வகை-II) | 57 | 54 | 3 |
| 13. | உதவிக் கமாண்டன்ட் (தொ.நு.ப.) | 41 | 34 | 7 |
| 14. | காவல்துறை ஆய்வாளர் (வட்டம்) | 2147 | 2132 | 15 |
| 15. | காவல்துறை ஆய்வாளர் (தொ.நு.ப.) | 123 | 108 | 15 |

| தொ. எண் | பதவிகளின் பெயர் | அனுமதிக்கப் பட்ட பதவிகள் | பதவியில் உள்ளவர் கள் | காலியி டங்கள் |
|---|---|---|---|---|
| 16. | காவல்துறை ஆய்வாளர் (ஆசே.கா.) | 166 | 166 | 0 |
| 17. | காவல்துறைத் துணை ஆய்வாளர் | 4516 | 4460 | 56 |
| 18. | காவல்துறைத் துணை ஆணையாளர் (ஆசேகா) | 726 | 706 | 20 |
| 19. | காவல்துறைத் துணை ஆய்வாளர் ( தொ.நுட ) | 405 | 388 | 17 |
| 20. | தலைமைக் காவலர் (H.C.) (வட்டம் அசேகா) | 10337 | 10270 | 67 |
| 21. | ஹவில்தார் (தொ.நுட ) | 1040 | 951 | 89 |
| 22. | காவலர் (நிலை-I)/காவலர் (நிலை-II) | 56917 | 48855 | 8062 |
| 23. | நாயக் (தொ.நுட ) | 1406 | 1145 | 261 |
| 24. | காவலர் ( (நிலை-II) (தொ.நுட ) | 8329 | 6952 | 1377 |
| 25. | காவல்துறை ஆய்வாளர் (மகளிர்) | 72 | 72 | 0 |
| 26. | காவல்துறைத் துணை ஆய்வாளர் (மகளிர்) | 265 | 115 | 150 |
| 27. | தலைமைக் காவலர் (மகளிர்) | 555 | 483 | 72 |
| 28. | காவலர் (மகளிர்) (நிலை-I) | 547 | 464 | 83 |
| 29. | காவலர் (மகளிர்) (நிலை-II) | 3052 | 3052 | 0 |
| **மொத்தம்** | | **91490** | **81140** | **10350** |





## தமிழ்நாடு காவல் துறையிலுள்ள அலுவலகப் பணியாளர்களின் எண்ணிக்கை

**(31–7–2001 அன்றுள்ளபடி)**

| தொ. எண் | வகை | அனுமதிக் கப்பட்ட பதவிகள் | பதவியில் உள்ளவர்கள் | காலி இடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | தலைமை நிருவாக அதிகாரி | 1 | 0 | 1 |
| 2. | நிதிக் கட்டுப்பாட்டாளர் | 1 | 1 | 0 |
| 3. | முதுநிலை நிருவாக அதிகாரி | 18 | 16 | 2 |
| 4. | மக்கள் தொடர்பு அதிகாரி | 1 | 0 | 1 |
| 5. | நேர்முக உதவியாளர் | 100 | 89 | 11 |
| 6. | சட்ட ஆலோசகர் | 9 | 8 | 1 |
| 7. | உதவி இயக்குநர் (புள்ளி விவரம்) | 1 | 1 | 0 |
| 8. | முதுநிலை சிஏ. (சிபி சிஐடி) | 1 | 1 | 0 |
| 9. | உதவி இயக்குநர் (தணிக்கை) | 1 | 1 | 0 |
| 10. | புள்ளிவிவர அதிகாரி | 1 | 1 | 0 |
| 11. | புள்ளிவிவர ஆய்வாளர் | 1 | 1 | 0 |
| 12. | கண்காணிப்பாளர் | 861 | 846 | 15 |
| 13. | உதவியாளர் | 1459 | 1345 | 114 |
| 14. | சுருக்கெழுத்து-தட்டச்சர் | 101 | 88 | 13 |
| 15. | இளநிலை உதவியாளர் | 1195 | 1142 | 53 |
| 16. | தட்டச்சர் | 270 | 185 | 85 |
| 17 | பதிவுரு உதவியாளர் | 3 | 3 | 0 |
| 18. | பதிவுரு எழுத்தர் | 112 | 98 | 14 |
| 19. | அலுவலக உதவியாளர் | 1012 | 962 | 50 |
| | **மொத்தம்** | **5148** | **4788** | **360** |

[2001 செப்டம்பர் 1

**காவல் துறையின் தொலைத் தகவல் தொடர்பு பிரிவிலுள்ள பணியாளர் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்**

**(31–07–2001 அன்றுள்ளபடி)**

**தொழில்நுட்பம் சாராத பணியாளர் (நிருவாகம்)**

| | | |
|---|---|---|
| 1. | காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் | 2 |
| 2 | காவல் துறை ஆய்வாளர் | 36 |
| 3. | காவல் துறைத் துணை ஆய்வாளர் | 218 |
| 4 | தலைமைக் காவலர் | 252 |
| 5 | காவலர் (நிலை-I) | 161 |
| 6 | காவலர் (நிலை-II) | 322 |

**தொழில்நுட்பப் பணியாளர்**

| | | |
|---|---|---|
| 1. | காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் | 14 |
| 2. | காவல் துறை ஆய்வாளர் | 57 |
| 3. | காவல் துறைத் துணை ஆய்வாளர் | 555 |

**ஏனையோர்**

| | | |
|---|---|---|
| 1. | நேர்முக உதவியாளர் | 2 |
| 2. | கண்காணிப்பாளர் | 12 |
| 3. | உதவியாளர் | 20 |
| 4. | இளநிலை உதவியாளர் | 21 |
| 5. | தட்டச்சர் | 3 |
| 6. | சுருக்கெழுத்து—தட்டச்சர் | 2 |
| 7. | ஏனையோர் | 43 |
| | | 1720 |



2001 செப்டம்பர் 1]

**ஒருபடைப் பிரிவில் உள்ளோர் எண்ணிக்கை**

**ஆயுதப் படை**

- ஒரு பிளட்டூனில் உள்ளோர் எண்ணிக்கை 64
- தலைமையிடத்து பிளட்டூனில் உள்ளோர் எண்ணிக்கை 114

**தமிழ்நாடு சிறப்புக் காவல் படை**

- ஒவ்வொரு படைப் பிரிவும் ஆறு செயல் குழுமங்களையும் ஒரு தலைமையிடத்துக் குழுமத்தையும் கொண்டிருக்கும்.
- ஒவ்வொரு செயல் குழுமமும் மூன்று பிளட்டூன்களைக் கொண்டதாகும்.
- ஒவ்வொரு பிளட்டூனும் மூன்று பிரிவுகளைக் கொண்டிருக்கும்.
- ஒரு பிரிவில் உள்ளோர் எண்ணிக்கை 13
- ஒரு பிளட்டூனில் உள்ளோர் எண்ணிக்கை 40
- ஒரு செயல் குழுமத்திலுள்ளோர் எண்ணிக்கை 125
- ஒரு படைப் பிரிவிலுள்ளோர் எண்ணிக்கை 912
- தலைமையிடத்து குழுமத்திலுள்ளோர் எண்ணிக்கை 96

## இணைப்பு -II

(38 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 16 – தீயணைப்புப் பணிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2001–2002

### I. பணிகள்–ஒரு கண்ணோட்டம்:

தீயின் பலன்கள் அளவிடற்கரியது. அது நாகரிக வாழ்க்கைக்கு இன்றியமையாதது. ஆனால், கவனமாகக் கையாளப்படாத நேர்வுகளில், தீயானது அபாயகரமானது; அழிக்கும் தன்மையுடையது; பேராபத்து விளைவிக்கக்கூடியது. தீ விபத்துகளும், அதனால் விளையும் இன்னல்களும், உயிருக்கும், உடைமைக்கும் தொடர்ந்து அபாயத்தையும் அச்சத்தையும் அளித்து வருகின்றன. ஈடுசெய்ய இயலாத இழப்புகள், அளவிட முடியாத அழிவுகள், சொல்லொண்ணா துன்பங்கள் ஆகியன தீ விபத்துகளால் ஏற்படுகின்றன. மேலும் சமீப காலத்தில், மாநகரங்கள் மற்றும் நகரங்களின் வளர்ச்சியால் தீப்பற்றுதலும், பரவுதலும் அதிகமாகிவிட்டன. இத்தகு சூழ்நிலையில், போதிய தீயணைப்புப் பாதுகாப்பு என்பது, தீத்தடுப்புக்கு மட்டுமின்றி, தீயின் சீற்றத்திலிருந்து உயிருக்கும், உடைமைக்கும் போதுமான பாதுகாப்பு அளிப்பது இன்றியமையாததாகிறது. தீ அபாயங்களைத் தடுப்பதற்கும் அதனைக் கட்டுக்குள் வைப்பதற்கும், திறமையான நல்ல அமைப்பு கொண்ட தீயணைப்புத் துறை பெரிதும் உதவுகிறது. தீயணைப்புத் துறையின் பணியானது தீயின் அழிவிலிருந்து உயிர் மற்றும் உடைமைகளைக் காப்பதோடு மட்டுமல்லாமல் இயற்கைச் சீற்றங்களான புயல், வெள்ளம், பூகம்பம், நிலச்சரிவு, கலகங்கள், வெடிவிபத்து மற்றும் பிற விபத்துகள் போன்றவற்றிலிருந்து மீட்பு மற்றும் இடர் உதவிப் பணிகளையும் மேற்கொள்வதாகும். அதனால்தான், இத்துறையை "தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை" என அரசு பெயர் மாற்றம் செய்துள்ளது.

### II. குறிக்கோள்:

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, நாட்டில் உள்ள பெரிய, திறமை மிக்க அமைப்புகளில் ஒன்றெனப் புகழ் பெற்றுள்ளது. சேவையை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் இத்துறையின் பணிகள் பல்வேறு வகைப்பட்டதாகவும், முதன்மையானதாகவும் உள்ளன. இச்சேவையைத் தவிர, தீத்தடுப்பு

குறித்த சட்டரீதியான பணிகள் மற்றும் ஆலோசனை நல்குதல் போன்ற பணிகளையும் இத்துறை ஆற்றுகிறது. தீயணைப்புப் பணியைப் பொறுத்தவரையில், தீ மற்றும் இதர விபத்துகளால் ஏற்படும் அபாயம், சேதம் மற்றும் அழிவிலிருந்து உயிர்களையும், உடைமைகளையும் காப்பாற்றுவதே இத்துறையின் முக்கிய குறிக்கோள். தேர்தல்கள், கலவரங்கள், பொருட்காட்சிகள், திருவிழாக்கள், முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு ஆகியவற்றில் காவல் துறைக்கும், தொற்று நோய் பரவும் காலங்களில் பொது சுகாதாரத் துறைக்கும், இத்துறை உதவுகிறது. நோயுற்றவர்களையும், காயமுற்றவர்களையும் உடனடியாக மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல இத்துறையில் உள்ள நோயாளர் ஊர்திகள் பயன்படுத்தப்படுகின்றன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி அழைப்புகளைத் தவிர, பலமாடிக் கட்டடங்கள், தொழிற்சாலைகள், பொதுமக்கள் கூடுமிடங்கள், பொருட்காட்சிகள், திருவிழாக்கள் ஆகியவற்றிற்கு தீத்தடுப்பு ஏற்பாடுகள் குறித்தும், பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின்கீழ் இத்துறை ஆலோசனை வழங்குகிறது.

## III. நிறுவன மற்றும் நிருவாக அமைப்பு:

இணைப்பு I—ல் உள்ள அட்டவணை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிறுவன அமைப்பு குறித்த விவரத்தைத் தெரிவிக்கிறது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, தமிழ்நாடு அரசின் உள் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் இயக்குநர், இத்துறையின் தலைவராக உள்ளார். நான்கு மண்டலங்களின் தலைமைப் பொறுப்பு வகிக்கும் நான்கு துணை இயக்குநர்கள் இவருக்கு உதவியாக உள்ளனர். ஒவ்வொரு மண்டலத்திலும் 4 முதல் 9 கோட்டங்கள் உள்ளன. 28 கோட்டங்கள், கோட்ட அலுவலர்களின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றன. ஒவ்வொரு கோட்டத்திலும் 4 முதல் 16 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அதன் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையமும் ஒரு நிலைய அலுவலரின் பொறுப்பின்கீழ் செயல்பட்டு வருகிறது. 12 கோட்டங்களில் தீத்தடுப்புக் குழுக்கள் உள்ளன. இதுதவிர, தாம்பரத்தில் ஒரு மாநிலப் பயிற்சி மையம், துணை இயக்குநர் பதவித் தரத்தில் உள்ள இயக்குநர் (பயிற்சி) அவர்களது கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள மாநிலப் பட்டறையும் இவருடைய கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது.



## IV. ஒருங்கிணைக்கப்பெற்ற செயல்பாடு அணுகுமுறைகள்:

### (அ) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள்:

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் இத்துறையின் அடிப்படை அமைப்பாகும். மாநிலத்தில் தற்பொழுது 280 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் உள்ளன. ஒரு பகுதியில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஏற்படுத்தப்பட வேண்டுமானால் அவ்விடத்தைச் சுற்றி 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு வேறு நிலையம் இருக்கக் கூடாது, குறைந்தபட்சம் மக்கட்தொகை 50,000 இருக்க வேண்டும், ரூ.50,000/—க்குக் குறைவில்லாத இழப்புகள் இருக்க வேண்டும். நாட்டில் உள்ள சுமார் 2000 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில், ஏழில் ஒரு பங்கு நிலையங்கள் தமிழகத்தில் உள்ளன.

### ஆ) ஒருவருக்கொருவர் உதவி:

அவசரக் காலங்களில், இதர தீயணைப்புப் படைகள், தற்போதுள்ள வசதிகளைக் கொண்டு பொதுமக்களுக்கு ஆற்றிடும் சேவையின் ஆற்றலை உயர்த்திடும் வகையில் ஒருவருக்கொருவர் உதவிபுரிய வரவேண்டுமென மீண்டும் வலியுறுத்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## V. துறையில் உள்ள அடிப்படை வசதிகள்:

### அ) மனித ஆற்றல்:

இத்துறையின் செயல் மற்றும் நிருவாகப் பணியாளர்களின் எண்ணிக்கை 6603 ஆகும். பதவி வாரியான எண்ணிக்கை விவரங்கள் இணைப்பு—II மற்றும் III—ல் அளிக்கப்பட்டுள்ளன. கோட்ட அலுவலர், தானியங்கிப் பொறியாளர் (மாநிலப் பட்டறை), நிலைய அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பதவிகளுக்கான நேரடி நியமனம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் செய்யப்படுகிறது. தீயணைப்போர் பதவிக்கான நேரடி நியமனம் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் செய்யப்படுகிறது.

### ஆ) ஊர்திகளும், சாதனங்களும்:

தீ விபத்துகள் மற்றும் இயற்கைச் சீற்றங்களினால் விளையும் இடர்களின்போது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையின் பணி

பல்வேறுபட்டதாகும். இத்தகைய நிகழ்வுகளில், விரைந்து சிறப்பாகச் செயல்படுவதற்காக, இத்துறையில் 326 நீர்தாங்கி ஊர்திகளும், 79 நோயாளர் ஊர்திகளும், 13 சிறு நுரை தகர்வு ஊர்திகளும், 5 அவசரகால மீட்பு ஊர்திகளும், 1 ஹைட்ராலிக் பிளாட்பார்ம் (இங்கிலாந்து—சைமன் ஸ்நார்கல்) ஊர்தி, 1 சுழல் மேஜை ஏணி ஊர்தி (இசுசூ மோரிடா ஜப்பான் தயாரிப்பு), 37 மீட்டர் மற்றும் 42 மீட்டர் உயரம் செல்லக்கூடிய 2 ஹைட்ராலிக் ப்ளாட்பார்ம் மற்றும் சுழல் மேஜை ஏணி ஊர்திகள் (பிராண்டோ ஸ்கைலிப்ட்—பின்லாந்து தயாரிப்பு), 1 நீர்விடுகுழாய் ஊர்தி, 36 தண்ணீர் லாரிகள், 1 ரெக்கர் மற்றும் 2 நடமாடும் பழுது பார்க்கும் ஊர்திகள், 228 அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ள எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய பம்புகளும், 93 மிதவைப் பம்புகளும் தகுந்த தொழில்நுட்பப் பணியாளர்களுடன் பயன்படுத்தப்படுகின்றன. பணி உதவிகளுக்காக கம்பியில்லாத தந்தி ஊர்திகள், ஈப்புகள், பேருந்து, மோட்டார் சைக்கிள்கள் போன்ற 61 துணை ஊர்திகளும் இயங்கி வருகின்றன.

இவையன்றி, சில முக்கியமான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு நவீன உபகரணங்களான, உயர்த்தும் பைகள், புகை வெளியேற்றும் கருவிகள், நச்சு வாயுக் கண்டுபிடிப்பான்கள், ஜெனரேட்டர்கள் மற்றும் கோம்பி—டூல்ஸ் என்று அழைக்கப்படும் சிறிய மீட்பு உபகரணங்கள் போன்ற நவீன கருவிகள் மீட்புப் பணிகளுக்கென வழங்கப்பட்டு அவை பயன்பாட்டில் உள்ளன. மேலும், இத்துறையில் 3 பைபர் படகுகள், 1 தலைக்கவசமாக அணிந்து பயன்படுத்தக்கூடிய வெப்பதத்துவ நிழற்படக் கருவி, 2 கையில் எடுத்து பயன்படுத்தக்கூடிய வெப்பதத்துவ நிழற்படக் கருவிகள், 2 உயிர் கண்டுபிடிப்புக் கருவிகள் மற்றும் 2 பல்வகை வாயுக் கண்டுபிடிப்பான்கள் போன்ற உபகரணங்களும் உள்ளன.

### VI. தகவல் தொடர்பு:

#### (அ) தொலைபேசி மற்றும் கம்பியில்லாத் தந்திக் கருவிகள் பொருத்துதல்:

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளைச் செவ்வனே செய்வதற்கு உரிய நேரத்தில் சேவை செய்தல் இன்றியமையாததாகும். இதற்கு உதவும் வகையில் ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கும் தொலைபேசி வசதி வழங்கப்பட்டுள்ளதால், அதன் மூலம் உடனடியாக தீயழைப்புகள் மற்றும் மீட்பு அழைப்புகள் பெறப்பட்டு,





மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, கம்பியில்லாத் தந்திக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. சென்னை நகருக்கு, வாக்கிடாக்கிகள், ரிபீட்டர் செட்டுகள் உள்பட 122 கம்பியில்லாத் தந்திக் கருவிகள் மற்றும் ஒரு அதி நுண் அலைவரிசைக் கருவி ஆகியவையும் வழங்கப்பட்டுள்ளன. 32 அதிநுண் அலைவரிசைக் கருவிகள் மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு அவை செயல்பாட்டில் உள்ளன. தற்போது, சென்னை மாநகரம், திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்கள் மற்றும் கோயம்புத்தூர் மாநகரம் ஆகியவற்றில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் கம்பியில்லாத் தந்திக் கருவிகள் உள்ளன. பிற மாவட்டங்களில் உள்ள அனைத்துத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் பொருத்தும் வகையில் 233 நிலையான, 263 ஊர்தியில் பொருத்தக்கூடிய மற்றும் 233 எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய கம்பியில்லாக் கருவிகள், ரூ. 2.05 கோடி செலவில் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விரைவாக தகவல் பரிமாற்றம் செய்ய முடியுமென்பதுடன், நீர்தாங்கி வண்டிகள் உடனடியாக தீ விபத்து இடத்திற்கு விரைந்து சென்று பணியாற்ற முடியுமென்பதுடன், மேற்கொண்டு உதவி தேவைக்கு தகவல் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்புகொள்ள இயலும்.

#### ஆ) விபத்து அழைப்பு—பதில் செயல்பாடு நேரம் (Response Time):

விபத்து அழைப்பு பெறப்பெற்றதும் தீயணைப்பு ஊர்தி விபத்து இடத்தை அடைய எடுத்துக்கொள்ளும் நேரம் பதில்செயல்பாடு நேரமாகும். பொதுவாக இது சென்னை மாநகரில் 10 நிமிடங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. விரைவில் செய்திப் பரிமாற்றம் பெற்றிடவும், இந்நேரத்தைக் குறைக்கவும் உதவும் வகையில், தனியாக தகவல் தொடர்பு மையம் சென்னையில் உள்ளது. பல வழிமுறைகள் கண்டறியப்பட்டு, அதன் மூலம் இந் நேரத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலையான தீத்தடுப்பு ஆலோசனைக் குழுவானது சராசரி பதில்செயல்பாடு நேரம் 20 நிமிடம் என நிர்ணயம் செய்திருந்தாலும், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பதில்செயல்பாடு நேரம் இக் குழு நிர்ணயித்துள்ள நேரத்தைவிடக் குறைவாக உள்ளது.

#### இ) இணைய தளம்:

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கென இணைய தளம் தேசிய தகவல் தொடர்பு மையத்தினரால் உருவாக்கப்பட்டு பொதுமக்களுக்காக பயன்பாட்டில் வைக்கப்பட்டுள்ளது.

இணையதளத்தினைப் பார்வையிடுவதற்கான குறியீடு, http://www.tn.gov.in/fireservice (or) http://www.tn.nic.in/fireservice என்பதாகும். தொடர்புகொள்ளும் பொதுமக்களுக்கு இது தேவையான அனைத்து விவரங்களையும் அளிக்கும்.

## VII. பயிற்சி வசதிகள்:

பொதுமக்களுக்குச் சிறப்பான சேவை செய்ய வேண்டியதை அடிப்படைக் கருத்தாகக் கொண்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, தனது பணியாளர்களுக்கு அனைத்து அளவிலும் பயிற்சியளிப்பதில் கவனம் செலுத்துகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியில் சேரும் ஆரம்ப கட்டத்திலேயே மிகச் சிறந்த பயிற்சி அளிக்கப்படுகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் திறனை மேம்படுத்தவும், நவீன முறைகளைக் கையாளவும் ஒரு செயலாக்கத் திட்டத்தின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கெனவே தாம்பரத்தில் செயல்பட்டுவரும் பயிற்சி மையம், தரம் உயர்த்தப்பட்ட மாநிலப் பயிற்சி மையமாகச் செயல்பட்டு வருகிறது. பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதற்கென பயிற்றுவிப்பு உபகரணங்கள், அவசரகால மீட்பு ஊர்தி, இழுத்துச் செல்லக்கூடிய கம்பத்தில் அமைக்கப்படும் விளக்கு (டிராலி டைப் லைட் டவர் மாஸ்ட்), கணினிகள், வாயு விளக்குகள், ரசாயன அங்கிகள், நீர்மூழ்கி கவச உடைகள், மல்டி மீடியா புரஜெக்டர், நடமாடும் பழுது பார்க்கும் ஊர்தி மற்றும் உடற்பயிற்சிக் கருவிகள் போன்றவை இந்நிலையத்தில் உள்ளன. பயிற்சி நிலையங்களில் மட்டுமில்லாமல், வெளியில் பயிற்சியளிப்பது பணியாளர்களின் மனவளம் மற்றும் பணித்தரம் ஆகியவற்றை மேம்படுத்த உதவும் என்பதால், நாட்டிலுள்ள பல்வேறு பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். மாநிலப் பயிற்சி மையத்திற்கு ஓர் ஆண்டிற்கான சிறப்புப் பயிற்சித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அல்லாத அரசுத் துறை நிறுவனங்கள் உள்ளிட்ட பிற துறைகளின் பணியாளர்கள் மற்றும் தனியார்களுக்கும் தீயணைப்புப் பயிற்சியினை இப்பயிற்சி மையம் அளிக்கிறது.

## VIII. பட்டறை:

துறை ஊர்திகள் மற்றும் சாதனங்களில் ஏற்படும் பெரும் பழுதுகளைச் செப்பனிடுவதற்காக சென்னையில் மாநிலப் பட்டறை ஒன்று இயங்கி வருகிறது. இப்பட்டறையின் தானியங்கிப் பொறியாளருக்கு, மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் உள்ள தானியங்கிப்



பொறியாளர்களுக்கு உள்ள அதிகாரத்தினைப் போன்று ஊர்திகளின் பழுது செப்பனிடும் தொகை ரூ. 2,500/—க்கு மிகைப்படும் இனங்களில் மதிப்பீடுகளைப் பரிசீலித்து தொழில்நுட்பச் சான்று வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## IX. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையக் கட்டடங்கள் கட்டுதல்:

மாநிலத்தில் தற்பொழுது செயல்பட்டுவரும் 280 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில், 109 நிலையங்கள் அரசுக் கட்டடங்களிலும் (கட்டுமானத்தில் உள்ள 10 கட்டடங்களையும் சேர்த்து), 42 நிலையங்கள் அரை நிரந்தரக் கட்டடங்களிலும், 129 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

பதினொன்றாவது நிதிக் குழு உதவித் தொகையான ரூ. 8 கோடியிலிருந்து, ரூ. 6 கோடி செலவில் 2001 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு முடிய இணைப்பு—IV—ல் குறிப்பிட்டுள்ள 34 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்குக் கட்டடம் கட்டித்தர கருதப்பட்டுள்ளது.

## X. ஆற்றிய பணிகள்:

### அ) தீத்தடுப்பு:

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அடிப்படைப் பணி தீத்தடுப்பு ஆகும். தீத்தடுப்புப் பணிகளைத் தீவிரப்படுத்துவதற்கென 12 கோட்டங்களில் தீத்தடுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தீ விபத்தின் இடர்ப்பாடுகளைக் குறைப்பதற்கு ஏதுவாக ஊரக மற்றும் நகர்ப்புற மக்களுக்குத் தீத்தடுப்பு முறைகளைப் பரப்புதல் மற்றும் பயிற்றுவித்தல் போன்ற பணிகளை இக்குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன. சென்னை நகரில் உள்ள இரண்டு தீத்தடுப்புக் குழுக்களுக்கு இரண்டு புகைப்படப் பிரிவுகள் உபயோகத்தில் உள்ளன.

மாநிலம் முழுவதும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தினரால் அனுப்பி வைக்கப்படும் சுய சேவைப் பிரிவு. மகளிர்களுக்கு தீத்தடுப்பு முறைகள் குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது. தீபாவளி சமயத்தில் பட்டாசுகள் வெடிக்கும்போது அனுசரிக்க வேண்டிய தீப்பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை எக்ஸ்னோரா, லயன்ஸ் கிளப் போன்ற நன்மதிப்பு பெற்ற பல்வேறு அரசு சாரா பொதுத் தொண்டு நிறுவனங்களும் செய்கின்றன.

**ஆ) புறத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள்:**

குடிசைப் பகுதியில் ஏற்படும் தீ விபத்துக்களைச் சமாளிக்கவும், தீயினை விரைந்து அணைக்கவும் சென்னை மாநகரில் 18 இடங்களில் புறத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்நிலையங்களில், உயர் கொள்ளளவு கொண்ட நீர்த் தொட்டிகள் அல்லது சுருங்கும் நீர்த் தொட்டிகள், எளிதில் தூக்கிச் செல்லத்தக்க நீர்விடு குழாய்களுடன்கூடிய பம்புகள், வான்தந்திக் கருவிகள் ஆகியவை வைக்கப்பட்டுள்ளன. அப்பகுதிகளில் பணியாளர்களின் முழுநேர விழிப்புடன் இப்புறத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் எந்நேரமும் செயல்படுகின்றன. அணுகு சாலை வசதி இல்லாத குடிசைப் பகுதிகள் எனக் கண்டறியப்பட்டுள்ள 27 இடங்களில், 5 குடிசைப் பகுதிகளுக்கு அணுகு சாலை வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் 12 குடிசைப் பகுதிகளுக்கு குடிசைகளை மாற்றி அதற்குப் பதிலாக தீப்பிடிக்காத வீடுகள் கட்டித்தர நடவடிக்கை எடுத்து வருகிறது. எஞ்சியுள்ள 10 இடங்களில் புறத் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை குடிசைப் பகுதிகளில் 1999—ம் ஆண்டில் 42 தீ விபத்துக்களும், 2000—ம் ஆண்டில் 22—ம், ஜூன் 2001 வரையில் 14 தீ விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன.

**இ) திரையரங்குகளில் தீத்தடுப்பு:**

பொதுமக்கள் கூடுமிடமான திரையரங்குகளில் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், தமிழ்நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளை ஆண்டு தோறும் ஆய்வு செய்ய பல்துறைக் குழு ஒன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரது தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது திரையரங்குகளை ஆய்வு செய்து, இனி வருங்காலங்களில் விபத்துகள் ஏதும் ஏற்படாமல் இருப்பதற்கான ஆலோசனைகளை வழங்கி வருகிறது. இக்குழு 2000 ஆம் ஆண்டில் 312 திரையரங்குகளை ஆய்வு செய்தது. ஜூன் 2001 வரை 1103 திரையரங்குகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

**ஈ) தீ விபத்து குறித்த அழைப்புகள்:**

கடந்த இரண்டு ஆண்டுகளில் அதாவது 1999 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் முறையே 16,367 மற்றும் 16,987 தீ விபத்து அழைப்புகள் வரப்பெற்றன. 1999 ஆம் ஆண்டில் உயிரிழந்தவர்கள் 72 பேர்; காப்பாற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை 78. 2000 ஆம் ஆண்டில் தீ



விபத்தில் 47 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. 77 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். 1999—ல் ஏற்பட்ட பொருட் சேதத்தின் மதிப்பு ரூ.13.64 கோடியாகும். காப்பாற்றப்பட்ட உடைமைகளின் மதிப்பு ரூ 131.49 கோடியாகும். 2000 ஆம் ஆண்டில் உடைமைகளின் இழப்பு மதிப்பு ரூ.13.99 கோடியும், மீட்கப்பெற்ற உடைமைகளின் மதிப்பு ரூ. 157.24 கோடியுமாகும். சென்னை மாநகரில், 1999 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 1603 தீ விபத்து அழைப்புகளின் எண்ணிக்கை, 2000 ஆம் ஆண்டில் 1570 ஆகக் குறைந்துள்ளது. சென்னை மாநகரில் தீயணைப்புப் பணிகளை முனைப்புடன் செயலாற்றிட ஏதுவாக, தீயணைப்பு ஊர்திகளுக்கு தண்ணீர் வழங்கும் பொருட்டு, குடிநீர் வடிகால் வாரியத்தினரால் தீ விபத்து இடங்களுக்கு தண்ணீர் லாரிகள் இலவசமாக உதவிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இது உயிர்களையும் மற்றும் பொதுமக்களின் உடைமைகளையும் தீயின் அழிவிலிருந்து காப்பாற்ற பெரிதும் உதவிகரமாக உள்ளது. இத்துறை மேற்கொண்ட தீயணைப்புப் பணிகளில் குறிப்பிடத்தக்கது, 16.05.2001 அன்று செங்குன்றத்தில் எடப்பாளையம் அம்பேத்கர் நகரில் ஏற்பட்ட குடிசைப் பகுதி தீயானது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினரால் நெல் மூட்டைகள் சேமித்து வைக்கப்பட்டிருந்த சேமிப்புக் கிடங்கினை நெருங்கியது. சேமிப்புக் கிடங்கின் ஒரு பகுதி கூரையினால் அமைந்தது என்பதால், அப்பகுதியில் தீ வேகமாகப் பரவியது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்கள் தீ விபத்து இடத்திற்கு மிக விரைவாகச் சென்றதுடன், கடுமையாகப் போராடியபின், தீ முற்றிலும் அணைக்கப்பட்டது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்கள் திறமையுடன் உரிய நேரத்தில் தீயை அணைத்ததன் காரணமாக ரூ 3 கோடிக்கு மேல் மதிப்புடைய நெல் மூட்டைகள் தீயின் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டன.

**உ) மீட்பு அழைப்புகள்:**

மீட்பு அழைப்புகள் பெரும்பாலும், சாலை விபத்து மற்றும் இரயில் விபத்துகளில் சிக்குண்டவர்கள், கிணறுகளில் தவறி விழுந்தவர்கள், நச்சு வாயுக்களை சுவாசித்தவர்கள், கட்டட இடிபாடுகளில் சிக்குண்டவர்கள், வெள்ளம் மற்றும் புயலில் சிக்குண்டவர்கள் மற்றும் இயற்கையின் அழிவில் சிக்குண்டவர்களைக் காப்பாற்றக்கோரும் அவசர அழைப்புகளாகும்.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆற்றிய மீட்புப் பணியில் குறிப்பிடத்தக்கவை:—

(1) ஜனவரி 2001—ல் குஜராத்தில் ஏற்பட்ட பூகம்பப் பேரழிவின்போது, மீட்புக் குழு ஒன்று தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் உள்ள உயிர் கண்டுபிடிப்பான் என்ற அதிநவீன கருவியுடன், அகமதாபாத் நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு உயிர் மீட்புப் பணிகளில் திறம்படப் பணியாற்றியுள்ளனர். இவர்களது இப்பணி குஜராத் மாநில அரசால் வெகுவாகப் பாராட்டப்பட்டது.

(2) 06—07—2001 அன்று சென்னை நீலாங்கரை என்ற இடத்தில் முரளி என்ற பெயருடைய ஒன்றரை வயது குழந்தை, ஓர் ஆழ்குழாய் பள்ளத்தில் விழுந்துவிட்டபோது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் அக்குழந்தையை உயிருடன் மீட்டுத் தந்தனர். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரின் தீரச் செயலினைப் பொதுமக்கள் அனைவரும் பாராட்டினர்.

**எ) கட்டண அழைப்புகளும் நோயாளர் ஊர்தி அழைப்புகளும்:**

79 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் உள்ளன. நியாயமான கட்டணத்தினை வாடகையாகப் பெற்றுக்கொண்டு, நோயுற்றவர்களும், காயமுற்றவர்களும் சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். 2000 ஆம் ஆண்டில், 2006 அழைப்புகளை ஏற்று, நோயாளர் ஊர்திகள் செயல்பட்டுள்ளன. இவற்றுள் 1610 வாடகைக் கட்டண அழைப்புகளாகும். வாடகைக் கட்டண அழைப்புகளை மேற்கொண்ட வகையில் ரூ.2,26,875/- கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**ஏ) பொது நலன் கருதி ஆயத்த நிலை நிறுத்தப் பணி:**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் வாகனங்கள் முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போதும், முக்கிய கருத்தரங்குகள் மற்றும் பொதுக் கூட்டங்களின்போதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் ஆயத்த நிலை நிறுத்தப்பணி ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இது தவிர தனியார்களின் விழாக்களுக்கென ஆயத்தநிலை தீயணைப்பு ஊர்தி நிறுத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2000—2001 ஆம் ஆண்டில் ரூ.16,15,318/— கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**XI. ஊக்குவித்தலும் ஊக்கத் தொகைகளும்:**

இத்துறைப் பணியாளர்களை மேலும் திறம்படப் பணிபுரிய ஊக்குவிப்பதற்காகவும், இத்துறையின் நோக்கங்களை அடைவதற்கு





ஏதுவாகவும், பின்வரும் ஊக்கத் தொகைகள் அளிக்கப்படுவதுடன், நலத் திட்டங்களும் உதவித் தொகைகளும் அளிக்கப்படுகின்றன:—

**1) ஊக்கத் தொகைகள்:**

**அ) விருதுகளும், வெகுமதிகளும்:**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் போற்றத்தக்க வகையில், கடமை உணர்வுடனும், அஞ்சா நெஞ்சத்துடனும் ஆற்றிய பணியினைப் பாராட்டும் வகையில், மாநில அரசு ஏற்படுத்திய, பின்வரும் விருதுகள், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன:—

*1. தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்):*

இப்பதக்கம் பெற்றவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப ரூ.2000/— முதல் ரூ.5000/—வரை ஒட்டுமொத்த மானியம் பெறத் தகுதியுடையவராவார்கள்.

*2. தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பதக்கம் (பொங்கல் தினத்தன்று வழங்கப்படுவது):*

இப்பதக்கம் பெறும் தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவியில் உள்ளோர் ஒவ்வொருவருக்கும் மாதாந்திர ரொக்கப்படியாக ரூ.40/—ம், முன்னணித் தீயணைப்போர்/இயந்திரக் கம்மியர் ஓட்டுநர், தீயணைப்போர் ஓட்டுநர், தீயணைப்போர்—இயந்திரக் கம்மியர் ஆகிய ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ.50/—ம் வழங்கப்படுகிறது.

3. மாநில விருதுகள் தவிர, தீயணைப்புப் பணியாளர்களுக்கு மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட விருதுகளும் வழங்கப்படுகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:—

அ) சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பதக்கம்

ஆ) குடியரசு தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பதக்கம்

இ) குடியரசு தினத்தன்று வழங்கப்படும் தகைசால் பணிக்கான தீயணைப்புப் பதக்கம்

**ஆ) நலத் திட்டங்கள்:**

**1) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை நல நிதி:**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் துயருக்கு ஆளாகும் நிலையிலுள்ள பணியாளர்களுக்கு நிதி உதவி செய்வதற்கென 1962 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத் துறை நல நிதி ஏற்படுத்தப்பட்டது. இந்நிதி அவர்களது நலனை மேம்படுத்துகிறது. இதன் உறுப்பினர்களுக்குப் பின்வரும் தேவைகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது:

அ) காசநோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் அவதியுறும் தீயணைப்புப் பணியாளர்களுக்கும் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் சத்துணவு வாங்க;

ஆ) அவர்களுடைய குழந்தைகளின் உயர் கல்விச் செலவிற்கு;

இ) மரணமுற்ற உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க;

ஈ) உறுப்பினர்களோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால், அவர்களது ஈமச் சடங்கு செலவிற்கு;

இத்திட்டத்தில் 5,493 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்களிடமிருந்து சந்தாத் தொகையாக ரூ.1,98,263,/— வசூலிக்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் அரசு 3,00,000/— ரூபாயை மானியமாக வழங்கி வருகிறது. 2000—2001 ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிவாரணத் தொகை ரூ. 4,87,115 ஆகும்.

**2. குடும்ப நல நிதித் திட்டம்:**

பணியிலிருக்கும்போது உயிர் துறக்கும் பணியாளர் குடும்பத்தினருக்கு குடும்ப நல நிதித் திட்டத்தின்கீழ் அரசு அளிக்கும் நிவாரணத் தொகை ரூ.1,00,000/— தவிர, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு பின்வரும் நிவாரணம் வழங்கப்படுகிறது:—

| | |
|---|---|
| (அ) பணியிலிருக்கும்போது உயிர்துறக்கும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பணியாளர்களின் குடும்பத்திற்கு | ரூ.2,00,000/- |





| | |
|---|---|
| (ஆ) பணியிலிருக்கும்போது நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளவர்களுக்கு | ரூ.50,000/- |
| (இ) பணியிலிருக்கும்போது கடுமையாகக் காயமடைந்தவர்களுக்கு | ரூ.10,000/- |
| (ஈ) பணியிலிருக்கும்போது சிறு காயமடைந்தவர்களுக்கு | ரூ.5,000/- |

**3. தொகுதிக் காப்புறுதித் திட்டம்:**

பணியிலிருக்கும்போது உயிர்துறக்கும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளரின் குடும்பத்திற்கு நிவாரணம் அளிப்பதற்காக, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் முதல் தீயணைப்போர் வரையிலானவர்களுக்கு (அமைச்சுப் பணியாளர்கள் நீங்கலாக) அனைவரும் பயனடையும் வகையில் தொகுதிக் காப்புறுதித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உயிர் துறக்கும் பணியாளரின் குடும்பத்திற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.1,00,000/— அளவிற்கு நிவாரணம் அளிக்கப்படுகிறது.

**4. உணவுப் பொருட்களை மானிய விலையில் வழங்கும் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ், உதவிக் கோட்ட அலுவலர் பதவித் தாம் வரையிலான பணியாளர்களுக்கு அரிசி, கோதுமை, ரவை/மைதா, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இதற்காக ஆண்டொன்றுக்குச் சராசரியாக 52 இலட்ச ரூபாயை அரசு செலவிடுகிறது.

**5. குடியிருப்புகள் கட்டுதல்:**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் செயல் திறன் குறையாமல் இருக்கவும், தேவை ஏற்படும்போது அவர்களை விரைவாகப் பணிக்கு அழைக்கவும், அவர்களுக்குத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் அருகிலேயே குடியிருப்புகள் அளிப்பது இன்றியமையாததாகும். தற்போது அரக்கோணம், உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி, அசோக் நகர், வண்ணாரப்பேட்டை, நந்தனம், பெரம்பலூர், நாகப்பட்டினம், அண்ணா நகர் (மேற்கு), மயிலாப்பூர், தாம்பரம், தர்மபுரி, மதுரை, மணலி, விழுப்புரம், திருவல்லிக்கேணி, பெரியகுளம், கோயம்புத்தூர் (தெற்கு), நுங்கம்பாக்கம்,

தேனாம்பேட்டை, ஜெயங்கொண்டசோழபுரம், பாளையங்கோட்டை, ஈரோடு, செங்கல்பட்டு, திண்டுக்கல் மற்றும் ஆத்தூர் ஆகிய 27 இடங்களில் குடியிருப்புகள் உள்ளன. மேலும் தூத்துக்குடி, திருப்பூர், திண்டிவனம், கடலூர், மற்றும் தங்கசாலை ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கு முன்னர் ஆண்டொன்றுக்கு 100 குடியிருப்புகள் வீதம் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் கட்டித்தருவதென அரசு கொள்கை முடிவெடுத்திருந்தது. இலவசமாக குடியிருப்பு வசதி பெறத் தகுதிபெற்ற 6228 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, 777 குடியிருப்புகளே உள்ளன. ஏறத்தாழ 47 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்குக் குடியிருப்புகள் கட்டித்தர நிலம் உள்ளதாகக் கண்டறியப்பட்டு, அந்த இடங்களில் அடுத்த ஐந்தாண்டு காலத்தில் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத் தலைவரால் எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது 12.48 விழுக்காடு குடியிருப்புகள் தேவை மட்டும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் குடியிருப்புகள் கட்டித்தர நீண்டகாலம் ஆகுமென்பதால், தற்போது 2001—2002 ஆம் ஆண்டிலிருந்து 100 குடியிருப்புகளுக்குப் பதிலாக 200 குடியிருப்புகள் கட்டித்தர அரசு முடிவெடுத்துள்ளது.

## XII. பகுதி–II திட்டம் 2001-2002:

பொதுக் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட கடன் தொகையிலிருந்து, 1995—96—ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ.5.00 கோடியில், சென்னை மாநகரில் தற்போது இருக்கும், கட்டப்பட்டுவரும் உயர்ந்த கட்டடங்களுக்கு தீயிலிருந்து பாதுகாப்பு அளிப்பதற்காக இரண்டு ஹைட்ராலிக் பிளாட்பாரம் மற்றும் சுழல் மேஜை ஏணி ஊர்திகள் (37 மீட்டர் மற்றும் 42 மீட்டர் உயரம் செல்லக்கூடியது) ஜூன் 1998—ல் வாங்கப்பட்டன. மிக விலை உயர்ந்த இவ்வூர்திகள் பழுதடையாமல் இருக்கவேண்டும் என்றால் இவை தக்கமுறையில் பாதுகாக்கப்பட வேண்டும் என சொல்லத் தேவையில்லை. எனவே, இவ்வூர்திகளை நிலை நிறுத்துவதற்காக தேவையான இடத்தைக் கொண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் கொட்டகை ஒன்று கட்டுவது இன்றியமையாததாகும். எனவே, 2001—2002 ஆம் ஆண்டுக்கான பகுதி—2 திட்டத்தின்கீழ், சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் கொட்டகை ஒன்று கட்டுவதற்கு ரூ.12.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## XIII. புதிய திட்டங்களும் புதிய முயற்சிகளும்:

### 1. துறைப் பணியாளர்களின் நலத்திற்காக:

(i) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுக் கட்டணமான ரூ. 9/—ஐ காவல் துறைப் பணியாளர்களுக்கு நிகராக, ரூ.50/— ஆக உயர்த்தவும்;

(ii) ரூ.1.13 கோடி செலவில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உபரிப் பணிப் படி ரூ. 10/—ஐ காவல் துறைப் பணியாளர்களுக்கு நிகராக, ரூ.50/—ஆக உயர்த்தவும்;

(iii) தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நல நிதிக்கு அரசு தற்போது வழங்கும் மானியத் தொகை ரூ.3.00 இலட்சத்தை ரூ.4.00 இலட்சமாக உயர்த்தவும்;

(iv) பணிபுரியும்போது மாணமடையும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கு குடும்ப நல நிதியிலிருந்து அரசால் வழங்கப்படும் ஒரு இலட்ச ரூபாயுடன் தற்போது வழங்கப்பட்டுவரும் நிவாரணத் தொகையை கீழ்க்கண்டவாறு உயர்த்தவும் அரசு முடிவெடுத்துள்ளது:—

| | |
|---|---|
| (அ) பணியிலிருக்கும்போது உயிர் துறக்கும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பணியாளர்களின் குடும்பத்திற்கு | ரூ.5,00,000/— |
| (ஆ) பணியிலிருக்கும்போது நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளவர்களுக்கு | ரூ.1,00,000/— |
| (இ) பணியிலிருக்கும்போது கடுமையாகக் காயமடைந்தவர்களுக்கு | ரூ.20,000/— |
| (ஈ) பணியிலிருக்கும்போது சிறு காயமடைந்தவர்களுக்கு | ரூ.10,000/— |

2. கருணை அடிப்படையில் வேலை வாய்ப்புக் கோரி காத்திருப்போர் பட்டியலில் அதிகமான நபர்கள் உள்ளதைக் கருத்தில் கொண்டு, தீயணைப்போராக நியமனம் செய்யத் தகுதி பெற்ற நபர்களுக்கு, ஒரு சிறப்பு நேர்வாக தீயணைப்போராக நியமனம் வழங்க, அரசு ஆணை எண் 514, உள் (காவல் 17) துறை, நாள் 25—5—2001—ல் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநருக்கு அரசினரால் அனுமதி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

3. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களை மேலும் திறம்படப் பணிபுரிய ஊக்குவிப்பதற்காக, இவ்வரசு, அரசு ஆணை எண்.630, உள் (கடும் மந்தணம்) துறை, நாள் 5—7—2001—ல் "சிறந்த திறமைக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம்" ஒன்றை புதியதாக உருவாக்கியுள்ளது. இப்பதக்கமானது, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளின்போது, அதிக திறமையினையும் மற்றும் சிறந்த பணியினையும் வெளிப்படுத்தும் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்நிலைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும். ஆண்டு தோறும் 3 பதக்கங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பதக்கமும் 8 கிராம் எடையுடைய 22 காரட் தங்கத்தினால் செய்யப்பட்டதாகும். மேலும், இப்பதக்கம் பெறுபவர்களுக்கு, தரத்திற்கேற்ப ஒட்டுமொத்த மானியம் பின்வருமாறு வழங்கப்படும்:—

| பதவி | ஒட்டுமொத்த மானியத் தொகை |
|---|---|
| 1. நிலைய அலுவலர் மற்றும் அதற்குச் சமமான பதவிகளில் உள்ளவர்கள் | ரூ.3000/— |
| 2. முன்னணி தீயணைப்போர் மற்றும் அதற்குச் சமமான பதவிகளில் உள்ளவர்கள் | ரூ.2500/— |
| 3. தீயணைப்போர் மற்றும் அதற்குச் சமமான பதவிகளில் உள்ளவர்கள் | ரூ.2000/— |

4. அரசு ஆணை எண்.618, உள் (காவல்—17) துறை, நாள் 2—7—2001—ல், துறையின் பெயர் தமிழ்நாடு தீயணைப்புத் துறை என்றிருந்ததினை "தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை" என மாற்றியமைத்தும் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் உள்ள சில பதவிகளின் பெயர்களையும் பின்வருமாறு மாற்றி ஆணை வழங்கியுள்ளது. இதனால், பொதுமக்கள், துறையின் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளைச் சரியாக அறிந்து கொள்வதுடன் பாராட்டுவார்கள்:





| வரிசை எண் | பதவியின் தரம் | |
|---|---|---|
| | ஏற்கெனவே வழக்கத்திலுள்ள பெயர் | மாற்றியமைக்கப்பட்டுள்ள பெயர் |
| 1. | தீயணைப்புத் துறை இயக்குநர் | இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள். |
| 2. | தீயணைப்புத் துறை துணை இயக்குநர் | துணை இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் |
| 3. | கோட்டத் தீயணைப்பு அலுவலர் | கோட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் |
| 4. | உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர் | உதவி கோட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் |
| 5. | நிலையத் தீயணைப்பு அலுவலர் | நிலைய அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் |
| 6. | உதவி நிலையத் தீயணைப்பு அலுவலர் | உதவி நிலைய அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் |

## XIV. முடிவுரை:

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையை, 21 ஆம் நூற்றாண்டின் எதிர்பார்ப்புகளை எதிர்கொள்ளும் வகையில் முடுக்கிவிடப்பட்டு தீயணைப்பு மற்றும் மீட்பு அழைப்புகளில் திறம்படச் செயல்படும் வகையில் தீயணைப்புப் பணியாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் அளிக்கப்படும் பயிற்சியின் தரமும் மேம்படுத்தப்பட்டுள்ளது. துறையினை கணினிமயமாக்குதல் மூலமும், கணினி மற்றும் தகவல் தொடர்புடைய ஒரு தனி அமைப்பை உருவாக்குவதன் மூலமும் இத்துறையின் சேவை மேலும் முன்னேற்றமடைய உள்ளது. தீயணைப்பிற்குச் செல்லும் நேரத்தைக் குறைக்க உரிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தீ விபத்தினைத் தடுக்கவும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படும். பலமாடிக் கட்டடங்கள், திரையரங்குகள், பொதுமக்கள் கூடுமிடங்கள், தொழில் நிறுவனங்கள், குடிசைப் பகுதிகள், அலுவலகங்கள் மற்றும் வீடுகளில் தீத்தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள சிறப்புக் கவனம் செலுத்தப்படும். இதன் மூலம் தீ விபத்தால் ஏற்படும் உயிர் சேதத்தையும் பொருட் சேதத்தையும் தடுப்பதோடு குறைக்கவும் முடியும்.

## இணைப்பு – 1
### நிருவாக அமைப்பு

**இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**

| துணை இயக்குநர், வட மண்டலம்,சென்னை | துணை இயக்குநர், மத்திய மண்டலம், திருச்சி. | துணை இயக்குநர், தென் மண்டலம், மதுரை. | துணை இயக்குநர், தெற்கு மண்டலம், கோயம்புத்தூர். |
|---|---|---|---|
| கோட்ட அலுவலர் | கோட்ட அலுவலர் | கோட்ட அலுவலர் | கோட்ட அலுவலர் |
| உதவி கோட்ட அலுவலர் | உதவி கோட்ட அலுவலர் | உதவி கோட்ட அலுவலர் | உதவி கோட்ட அலுவலர் |
| நிலைய அலுவலர் | நிலைய அலுவலர் | நிலைய அலுவலர் | நிலைய அலுவலர் |

**இயக்குநர் அலுவலகம்**

1. துணை இயக்குநர் (நிருவாகம்)
2. நேர்முக உதவியாளர் (நிருவாகம்)
3. நேர்முக உதவியாளர் (பண்டகசாலை)
4. பணியாளர் அமைப்புப் பிரிவு
5. கணக்குப் பிரிவு
6. பொதுப் பிரிவு
7. தணிக்கைப் பிரிவு

| | தீமீநி | தீதகு | பிற |
|---|---|---|---|
| 1.வட சென்னை | 14 | 1 | 1' |
| 2.தென் சென்னை | 11 | 1 | 1' |
| 3.காஞ்சிபுரம் | 9 | 1 | – |
| 4.திருவள்ளூர் | 13 | – | – |
| 5.மா.ப.மை. | – | – | – |
| 6.வட மண்டலம் | | | 2' |
| மொத்தம் | 47 | 3 | 4 |

| | தீமீநி | தீதகு |
|---|---|---|
| 1.திருச்சிராப்பள்ளி | 8 | 1 |
| 2.புதுக்கோட்டை | 11 | 1 |
| 3.தஞ்சாவூர் | 9 | – |
| 4.நாகப்பட்டினம் | 9 | – |
| 5.கடலூர் | 14 | – |
| 6.விழுப்புரம் | 11 | – |
| 7.கரூர் | 4 | – |
| 8.பெரம்பலூர் | 6 | – |
| 9.திருவாரூர் | 10 | – |
| மொத்தம் | 82 | 2 |

| | தீமீநி | தீதகு |
|---|---|---|
| 1.மதுரை | 9 | – |
| 2.திருநெல்வேலி | 13 | – |
| 3.கன்னியாகுமரி | 7 | – |
| 4.தூத்துக்குடி | 9 | – |
| 5.விருதுநகர் | 8 | 1 |
| 6.இராமநாதபுரம் | 16 | – |
| 7.தேனி | 8 | – |
| மொத்தம் | 70 | 1 |

| | தீமீநி | தீதகு |
|---|---|---|
| 1.கோயம்புத்தூர் | 14 | 1 |
| 2.ஈரோடு | 10 | 1 |
| 3.சேலம் | 8 | 1 |
| 4.தர்மபுரி | 10 | 1 |
| 5.திண்டுக்கல் | 8 | 1 |
| 6.வேலூர் | 15 | 1 |
| 7.திருவண்ணாமலை | 12 | – |
| 8.நாமக்கல் | 4 | – |
| மொத்தம் | 81 | 6 |

**மொத்த தீயணைப்பு (ம) மீட்புப் பணி நிலையங்கள் – 280**

*குறிப்பு*

தீமீநி – தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையம்

தீதகு – தீத்தடுப்புக் குழு

பிற – *புகைப்படப் பிரிவு

**தீக்கட்டுப்பாடு அறை மற்றும் கம்பியில்லா தந்தி பிரிவு

| மற்ற அலுவலகம் | |
|---|---|
| மாநிலப் பயிற்சி மையம் | 1 |
| மாநிலப் பணிமனை | 1 |
| இசைக் கருவிக் குழு | 1 |

## இணைப்பு—II

### நிருவாகப் பதவிகளின் விவரங்கள்

| தொடர் எண் | பதவியின் பெயர் | மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 1 |
| 2 | துணை இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 4 |
| 3 | இயக்குநர் (பயிற்சி) — துணை இயக்குநர் தரம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 1 |
| 4 | துணை இயக்குநர் (பயிற்சி) — கோட்ட அலுவலர் தரம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 1 |
| 5 | டெல்லர் இன்ஜினியர் — கோட்ட அலுவலர் தரம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 1 |
| 6 | கோட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 29 |
| 7 | உதவிப் பொறியாளர் (உந்தூர்தி) | 1 |
| 8 | உதவிக் கோட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 43 |

[2001 செப்டம்பர் 1

| | | |
|---|---|---|
| 9 | விரிவுரையாளர் — உதவிக் கோட்ட அலுவலர் தரம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 1 |
| 10 | நிலைய அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 308 |
| 11 | நிலைய அலுவலர், (போக்குவரத்து) | 13 |
| 12 | உதவி நிலைய அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 16 |
| 13 | முன்னணித் தீயணைப்போர் | 719 |
| 14 | எந்திரக் கம்மியர் ஓட்டுநர் | 249 |
| 15 | தீயணைப்போர் ஓட்டுநர் | 1032 |
| 16 | தீயணைப்போர் மற்றும் அதற்கு சமமான பதவிகள் | 3869 |
| | மொத்தம் | 6288 |



2001 செப்டம்பர் 1]

## இணைப்பு—III

### அமைச்சுப் பணியாளர்களின் விவரங்கள்

| தொடர் எண் | பதவியின் பெயர் | மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துணை இயக்குநர் (நிருவாகம்) | 1 |
| 2. | இயக்குநரது நேர்முக உதவியாளர் (நிருவாகம்) | 2 |
| 3 | நிருவாக அலுவலர் | 1 |
| 4 | கண்காணிப்பாளர் | 33 |
| 5. | உதவியாளர் | 92 |
| 6. | சுருக்கெழுத்துத் தட்டச்சர் | 6 |
| 7. | இளநிலை உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் தட்டச்சர் | 61 |
| 8. | தட்டச்சர் | 33 |
| 9. | பதிவுரு எழுத்தர் | 31 |
| 10. | அலுவலக உதவியாளர் மற்றும் இதர கடைநிலை ஊழியர்கள் | 55 |
| | மொத்தம் | 315 |

[2001 செப்டம்பர் 1

## இணைப்பு–IV

**2001–2002–ல் பதினோராவது நிதிக் குழு அளித்த நிதியைக் கொண்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள இடங்கள்**

| வரிசை எண். | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தின் பெயர் | சார்ந்துள்ள கோட்டம் |
|---|---|---|
| 1 | தாம்பரம் | காஞ்சிபுரம் |
| 2 | நிலக்கோட்டை | திண்டுக்கல் |
| 3 | வேப்பூர் | கடலூர் |
| 4 | திருமுட்டம் | கடலூர் |
| 5 | ராசிபுரம் | நாமக்கல் |
| 6 | திருச்செங்கோடு | நாமக்கல் |
| 7 | ஸ்ரீ வில்லிபுத்தூர் | விருதுநகர் |
| 8 | சாத்தூர் | விருதுநகர் |
| 9 | செஞ்சி | விழுப்புரம் |
| 10 | பொன்னமராவதி | புதுக்கோட்டை |
| 11 | கமுதி | இராமநாதபுரம்—சிவகங்கை |
| 12 | பொன்னேரி | திருவள்ளூர் |
| 13 | ஜெகதாப்பட்டிணம் | புதுக்கோட்டை |
| 14 | நான்குநேரி | திருநெல்வேலி |
| 15 | ஆற்காடு | வேலூர் |
| 16 | செங்கோட்டை | திருநெல்வேலி |
| 17 | சேரன்மகாதேவி | திருநெல்வேலி |



001 செப்டம்பர் 1]

| | | |
|---|---|---|
| 18 | வேட்டவலம் | திருவண்ணாமலை |
| 19 | வத்திராயிருப்பு | விருதுநகர் |
| 20 | கன்னியாகுமரி | நாகர்கோவில் |
| 21 | திட்டக்குடி | கடலூர் |
| 22 | பரங்கிப்பேட்டை | கடலூர் |
| 23 | தேவக்கோட்டை | இராமநாதபுரம்—சிவகங்கை |
| 24 | இராயபுரம் | வடசென்னை |
| 25 | பேட்டை | திருநெல்வேலி |
| 26 | வியாசர்பாடி | வடசென்னை |
| 27 | வால்பாறை | கோயம்புத்தூர் — நீலகிரி |
| 28 | ஜவ்வாதுமலை | திருவண்ணாமலை |
| 29 | குடியாத்தம் | வேலூர் |
| 30 | பழனி | திண்டுக்கல் |
| 31 | திருப்பத்தூர் | வேலூர் |
| 32 | கோயம்புத்தூர் (வடக்கு) | கோயம்புத்தூர் — நீலகிரி |
| 33 | நாகர்கோவில் | நாகர்கோவில் |
| 34 | மன்னார்குடி | திருவாரூர் |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223950
சென்னை-600 008
நூலகம்